இந்திய
சரித்திரச் சுருக்கம்

A BRIEF INDIAN HISTORY
(BOOK I FOR FORM IV)

PROF. M. VENKATARANGAIYA, M.A.

M. SESHACHALAM & CO.
PUBLISHERS
MASULIPATAM :: MADRAS

As. 12

இந்திய
சரித்திரச் சுருக்கம்

ஆந்திர ஸர்வ கலாசாலைச் சரித்திரப் பேராசிரியர்
M. வெங்கட்ரங்கய்யா, M.A.,
பதிப்பித்து

சென்னை திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல்
உதவி ஆசிரியர்
V. K. சௌரிராஜன், M.A., L.T., Dip. Econ.,
தமிழில் மொழி பெயர்த்தது.

M. சேஷாசலம் அண்ட் கம்பெனி
மசூலிப்பட்டணம் :: சென்னை

விலை அணா 12.

FIRST PRINTED 1939

Printed at The Liberty Press, Madras.

பொருளடக்கம்



அஜந்தா குகையிலுள்ள ஒரு சித்திரம்

ஸ்ரீ

இந்திய சரித்திரச் சுருக்கம்

அத்தியாயம் 1.

சரித்திரத் தொடக்கம்

முக்கிய விஷயங்கள் :—பழங்குடிகள் - கற்கால ஜனங்கள் - திராவிடர்கள் ; ஆரியர்கள், வேத காலம் - ஆரியர்கள்பரவுதல், வேதகால நாகரிகம் ; சமூக வாழ்க்கை, மதம், ஆட்சி முறை.

1. பழங்குடிகள்

நெடுங்காலமாக நம் தேசத்தில் ஜனங்கள் வசித்து வந்துள்ளனர். முதன் முதலில் இங்கு வசித்தவர் யார் என்றும் அவர்கள் நாகரிகம் எவ்வகைப்பட்டது என்றும் நமக்குத் தெரியவில்லை. சரித்திர அறிவாளிகள் பழங் காலக் குடிகள் கையாண்டுவந்த சிற்சில பொருள்களைக் கொண்டு அவர்களை பழங் கற்காலத்தவர், புது கற்காலத் தவர் என இரு வகையினராகப் பிரித்துள்ளனர்.

பழங் கற்காலத் தவர்.

நம் தேசத்தின் பூர்வீக குடிகள் பழங் கற்காலத் தவரே. அவர்கள் உபயோகப்படுத்திய ஆயுதங்கள் கற்களால் செய்யப்பட்டவை. அவ்வாயுதங்கள் கரடு முரடானவை. அவர்கள் நதிக் கரைகளிலும், குகைகளிலும் வசித்து வந்தனர். அவர்களுக்கு நெருப்பு

உண்டாக்குவதும் அதை உபயோகிக்கும் விதமும் தெரியாது. ஆதலால் அவர்கள் மீன் பிடித்தோ மிருகங்களை வேட்டையாடியோ மாமிசத்தை உண்டு வசித்துவந்தனர். அவர்கள் பிணங்களை புதைக்கவில்லை.

புதிய கற்காலத்தவர். பழங் கற்காலத்தவருக்கு வெகுகாலத்துக்குப் பின்பு மற்றொருவகையான ஜனங்கள் வசிக்கலாயினர். சரித்திர அறிவாளிகள் இவர்களை புதிய கற்காலத்தவர் என்று அழைக்கின்றனர். இவர்களும் கற்களால் செய்த ஆயுதங்களை உபயோகப்படுத்திய போதிலும், அவ்வாயுதங்கள் முற்காலத்தனவற்றைப் போல் கரடுமுரடாக இல்லாமலிருந்தன. இவர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்குத் தெரியாமலிருந்தபோதிலும், மிருகங்களைப் பழக்கி வளர்ப்பதற்கு தெரிந்ததாகத் தோன்றுகிறது; விவசாயமும் செய்து வந்தனர். நாளடைவில் உலோகங்களை வெட்டி யெடுத்து உபயோகிக்கும் அறிவையும் அடைந்தனர். இவர்கள் பிணங்களைப் பெரிய மண்பாண்டங்களிலிட்டுப் புதைத்து வந்தனர். இவ்வித மண்பாண்டங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் பல கிடைத்துள்ளன. இக்காலத்திலும் நாகரிகம் குறைந்து ராஜபுதனத்தில் வாழும் பில்லவர்களும் நீலகிரியில் வாழும் தோதவர்களும் புதிய கற்காலத்தவர்களின் சந்ததியார்களென கருதப்படுகிறது. இவர்கள் முண்டா பாஷையைப் பேசி வந்தனர்.

திராவிடர்கள். புதிய கற்காலத்தவருக்குப் பிறகு நம் தேசத்தில் திராவிடர்கள் குடியேறினர். சரித்திர அறிவாளிகளில் சிலர் திராவிடர் தெற்கிலிருந்து வந்ததாகவும், மற்றும் சிலர் இவர்கள் வடக்கிலிருந்து வந்ததாகவும் கருதுகின்றனர்.

ஆரியர்கள் நம் நாட்டில் குடியேறியபோது திராவிடர்கள் கன்னியாகுமரி முனை முதல் ஹிமயமலை வரையில் தேசம்



ஹரப்பாவில் கிடைத்த சில ஆயுதங்கள்.

முழுவதும் பரவியிருந்தனர். திராவிடர் தேகபல முள்ளவர்கள்; புத்திசாலிகள்; நாகரிகம் வாய்ந்தவர்கள். அவர்

கள் கூட்டங் கூட்டமாக வசித்து வந்தார்கள். அரசாங்க முறை அவர்களுக்குத் தெரியும். பட்டணங்களை ஏற்படுத்தி அவற்றில் வசித்து வந்தனர். அவர்களுக்கு மத விஷயங்களைப்பற்றிய அறிவும் கொஞ்சம் உண்டு. திராவிட அரசர்கள் ஆட்சிசெய்த காலத்தில் கோட்டை கொத்தளங்களுடன் கூடிய பல நகரங்கள் ஏற்பட்டிருந்தன. கப்பல் பிரயாணம் செய்வதும் அக்காலத்திய திராவிடர்களுக்குத் தெரிந்திருந்த தென்பதற்கு பல அத்தாக்ஷிகள் உள்ளன. இக்காலத்தில் ஸிந்து மாகாணத்திலும் பஞ்சாபிலும் முறையே மோஹெஞ்சோ தாரோ, ஹரப்பா என்னும் பூமியில் புதைந்துள்ள புராதன நகரங்களை அரசாங்கத்தார் வெட்டி யெடுத்துள்ளனர். திராவிடர்கள் இப்பட்டணங்களை மிகுந்த சாமர்த்தியத்துடன் அமைத்திருக்கின்றனர்; அகன்ற தெருக்கள், மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய நலன்கள் எல்லாம் உள்ளன. இவைகளைக் கண்டால் ஆச்சரியமாகவிருக்கும். இப்பட்டணங்கள் சுமார் கி. மு. 5,000 வருஷங்களுக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்டவையென்று அறிவாளிகள் கருதுகின்றனர். திராவிடர்களே இப்பட்டணங்களை அமைத்தார்களென்று கருதப்படுகிறது.

2. வேத கால நாகரிகம்

ஆரியர்கள் வருகை.

திராவிடர்களுக்குப் பிறகு ஆரியர்கள் நம் தேசத்திற்கு வந்தனர். ஆரியர் என்னும் சொல்லுக்கு பெரியோர் எனப் பொருள். இவர்கள் முதன் முதலில் வசித்தவிடம் எதுவென்பதை நிலையாகச் சொல்ல முடியாது. இவர்கள் வசித்த இடம் மத்திய ஆசியா என்றும் ஆர்க்டிக் சமுத்திரக்கரை என்றும்

ஐரோப்பாவிலுள்ள ஹங்கரி என்றும் நம் தேசத்தில் சரஸ்வதி நதிக்கரை என்றும் பலவித அபிப்பிராயங்கள் உள்ளன. மத்திய ஆசியாவே இவர்கள் வசித்தவிடமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

ஆரியர்கள்.

ஆரியர்கள் பலசாலிகள்; உயரமானவர்கள்; அழகு வாய்ந்தவர்கள். பசுக்கூட்டங்களே அவர்களின் செல்வம். தற்கால மனிதர்களைவிட சாமர்த்தியம் மிகுந்தவர்கள். தைரியமும் விடா முயற்சியும் பொருந்தியவர்கள். அவர்கள் பேசிய பாஷை தற்கால சம்ஸ்கிருத பாஷைக்கு மூலமானது. அவர்கள் நாகரிகம் வாய்ந்தவர். அக்காலத்தில் அவர்களுக்குத் தெரியாமலிருந்த விஷயங்கள் ஒன்றும் கிடையாதெனத் தோன்றுகிறது.

வேதங்கள்: வேத காலம்.

ஆரியர்களின் வாழ்க்கையையும் நாகரிகத்தையும் பற்றி நாம் வேதங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆதலால் அவர்கள் வசித்த காலத்துக்கும் நாகரிகத்துக்கும் வேதகாலமென்றும் வேதகால நாகரிகமென்றும் பெயர் வந்தது. ரிக், சாமம், யஜுர், அதர்வணம் என நான்கு வேதங்கள் உள்ளன. ஒவ்வொரு வேதத்திலும் மூன்று பாகங்கள் உண்டு; அவை ஸம்ஹிதம் (மந்திரபாகம்), பிராம்மணம் (கிரதுபாகம்), அரண்யகம் அல்லது உபநிஷத்து (வேதாந்த பாகம்). வேதங்களுள் பழமையானது ரிக்வேதம். மிகவும் பிரபலமானது யஜுர் வேதம். ரிக்வேத பாடல்களைப் பாடியதால் ஏற்பட்ட வேதம் சாமவேதம். இவைகளினின்றும் அதர்வண வேதம் வேறுபட்டது. விரோதிகளைக் கொல்வதற்கும், நேசர்களை சம்பாதித்துக்கொள்வதற்கும் உலகத்தில் எல்லா விஷயத்திலும் மனிதன் சுக வாழ்க்கை நடத்துவதற்கும் வேண்

டிய மந்திரங்கள் அதர்வண வேதத்திலுள்ளன. பெரியோர்கள் இதை முக்கியமான வேதமாகக் கருதுவதில்லை.

ரிக்வேதகாலம்-ஆரியர்கள் பரவுதல்.

ரிக்வேத காலத்தில் (கி. மு. 1400 வரையில்) ஆரியர்கள் ஸிந்துநதி தீரத்தின் ஆரம்ப பாகத்திலுள்ள சமவெளிகளை ஜயித்து கிழக்கே யமுனாநதி வரையில் வசித்து வந்தனர். நாளடைவில் அவர்கள் கங்காநதி பாயுமிடங்களையும் கைப்பற்றிக் கொண்டு பல ராஜ்யங்களை ஏற்படுத்தினர். இவர்கள் பரவும்போது, அவ்வவ்விடங்களில் வசித்துவந்த புராதன ஜனங்களுடன் பல போர்கள் புரிந்து அவர்களை வென்றனர். அங்கு வசித்த பழங் குடிகளை தஸ்யூக்கள் என்றும் ராக்ஷஸர்கள் என்றும் அழைத்தனர்.

ஆரியர்களின் ஆட்சி முறை.

முதன் முதலில் ஆரியர்கள் கூட்டங் கூட்டமாக வசித்து வந்தனர். சில குடும்பங்கள் ஒன்றாய்ச் சேர்ந்ததால் ஒரு கிராமம் ஏற்பட்டது. சில கிராமங்கள் சேர்ந்ததற்கு ஒரு கூட்டமென்று பெயர். நாளடைவில் ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தலைவன் ஏற்பட்டான். இத்தலைவன் யுத்தகாலங்களில் தளகர்த்தனாகவும், நியாய விசாரணை சபையில் நியாயாதிபதியாகவும் இருந்தான். அரசன் கூட்டத்தாருக்கு முக்கியமே ஒழிய ஆட்சிசெய்த நிலத்திற்காகவில்லை. யுத்தத்தில் ஜயமடைந்தால் பகைவர்களிடத்திலிருந்து கிடைத்த நிலத்தில் ஒரு பாகமும், ஜனங்கள் கொடுத்த காணிக்கையும், பசுக் கூட்டங்களுமே அரசர்களுடைய செல்வம். அரசன் சுயேச்சாதிகாரம் பொருந்தியவனல்ல. ஒவ்வொரு ஜனக் கூட்டத்திலும் ஒரு மஹாசபை இருந்தது. அச்சபையின் தீர்மானங்களின்படியே அரசன் ஆட்சி செய்து வந்தான்

பகைவர்களின் மத்தியில் வசிக்க ஏற்பட்டதால் மதச் சடங்குகளை செய்ய சிலரும், சண்டை செய்து எல்லா ஜனங்களையும் பாது காக்க சிலரும், விவசாயம் செய்யச் சிலரும் தயாராக இருக்கவேண்டிய தாயிற்று. அதனால் பிராம்மணரென்றும் க்ஷத்திரியரென்றும் வைசியரென்றும் தொழில் புரியும் ஜாதிகள் ஏற்பட்டன. ஆனால் ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரோடு கலியாண சம்பந்தங்கள் செய்துகொண்டு வந்தனர். தஸ்யூக்களின் சந்ததியார் சூத்ர ஜாதியாக கருதப்பட்டனர். நிறத்திலும் இந்த ஜாதியார்களுக்கு வித்தியாசம் உண்டு. தஸ்யூக்கள் கறுத்தவர்கள். ஆரியர் வெண்மை வாய்ந்தவர்கள். ஆரியர்களுக்கும் தஸ்யூக்களுக்கும் கலியாண சம்பந்தம் ஏற்பட்டது. ஒவ்வொரு குடும்பத்திலும் தகப்பனே மற்றோர்களின் மீது அதிகாரம் செலுத்திவந்தான். குடும்பங்களெல்லாம் பொது குடும்பங்களாகவே இருந்து வந்தன. குடும்பத்தில் குற்றம் செய்தவர்களை விசாரணை செய்து தண்டிக்கும் அதிகாரம் தகப்பனுக்கு இருந்தது. ஆரியர்கள் பால், நெய், காய் கனிகள், மாமிச வகைகள் முதலியவற்றை உண்டு வந்தனர். கோதுமையும் வார் கோதுமையுமே அவர்களுக்குத் தெரிந்த தானியங்கள்.

சமூகவாழ்க்கை.

அக்காலத்தில் பெண் மக்கள் அதிக சுதந்திரத்தையும் கௌரவத்தையும் அநுபவித்தார்கள். அக்கால பெண்மக்கள் சபைகளில்கூட வேதங்களைப்பற்றி வாதம் செய்தார்களென்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. ஆகையால் ஸ்திரீகள் கல்வியில் தேர்ந்து ஆண் மக்களுக்குப் பல விதத்திலும் உதவிபுரிந்து வந்தனர்.

இயற்கைத் தோற்றங்களையே தெய்வங்களாகக் கொண்டு ஆரியர்கள் அவைகளை வணங்கி வந்தனர்.

நாளடைவில் இந்ததெய்வங்களெல்லாம் ஒன்றே என்றும் ரிஷிகள் இவர்களின் வெவ்வேறு குணங்களைப் போற்றினர்களென்றும் தெரிந்துகொண்டனர். கடைசியாக கடவுள் ஒருவரே என்னும் விஷயத்தை அறிந்து கொண்டார்கள்.

மதம்.

ஆரியர்கள் கடவுளை ஒவ்வொருநாளும் வழிபட்டு வந்தனர். அவ்விதம் செய்ததில் துதி என்றும் ஹோமம் என்றும் இரண்டு பாகங்கள் உண்டு. அக்காலத்தில் தெய்வங்களை வணங்குவதற்கு கோயில்கள் கிடையாது. ஒவ்வொரு வீட்டிலும் அக்னியை வளர்த்து வந்தனர். அந்த அக்னியில் தாம் உண்பதற்கு முன், அவரவர் உண்ணும் உணவை ஹோமம் செய்து வந்தனர். அப்படி ஹோமம் செய்த பதார்த்தங்களை அக்னி தேவர் அந்தந்த தேவதைகளுக்குச் சேர்ப்பாரென்றும் அதனல் தேவதைகள் திருப்தியடைந்து தம் கோரிக்கைகளை நிறைவேற்றுவாரென்றும் ஆரியர் நம்பினர்கள்.

கடவுள் வழிபாடு.

நாளடைவில் அரசாங்கமுறையிலும் சமூக வாழ்க்கையிலும் பல மாறுபாடுகள் ஏற்பட்டன. முன்பு இருந்ததைவிட ராஜ்யங்கள் விரிவடைந்ததால் அரசனுக்கும் அதிகாரம் பெருகியது. அரசாங்க உத்தியோகஸ்தர்களின் தொகை அதிகரித்தது. மதபேதங்கள் அதிகமானபோதிலும் ஒவ்வொருவனும் தனக்கு இஷ்டமான தொழிலைச் செய்து பிழைக்கலாம் என்பதும் ஏற்பட்டது. கடவுள் வழிபாட்டில், வழிபடும் சடங்குகளுக்கு அதிக முக்கியம் ஏற்பட்டது.

அத்தியாயம் 2.

பண்டைக்கால ராஜ்யங்கள்

முக்கிய விஷயங்கள் :—ராஜ்யங்கள் ஏற்படுத்த முயற்சி; குரு, விதேஹ, காசி ராஜ்யங்கள் - மகத ராஜ்யம் - அது பரவுதல் - சைசுநாக, நந்த வம்சங்கள் - அலெக்ஸாண்டரின் படையெழுச்சி - ஜைன பௌத்த மதங்கள்; அவைகளின் போதனைகள்.

3. ராஜ்யங்கள் ஏற்படுத்த முயற்சி

நமது தேசத்தில் பண்டைக்காலத்தில் பல சிறு ராஜ்யங்கள் இருந்தன. இச்சிற்றரசர்களுள் ஒருவர் மற்ற சிறு ராஜ்யங்களை ஜயித்து ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த முயல்வது வழக்கமாக விருந்தது. இவ்விதம் முதலாக ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தி அதை வெகு காலம் ஆட்சி செய்தவர்கள் குரு ராஜ்யத்தையாண்ட கௌரவர்கள்.

குரு ராஜ்யம். பாரத யுத்தம் முடிந்த பிறகு குரு ராஜ்யம் சிதைவடைந்தது. பிறகு பரிக்ஷித்து, ஜனமேஜய சக்ரவர்த்திகளின் காலத்தில் மறுபடியும் கொஞ்சம் பலமடைந்தது. இவர்களுக்குப் பிறகு ராஜ்யம் மறுபடியும் சிதைவுண்டது. இவர்களின் தலைநகரம் ஹஸ்தினபுரம். சில காலத்திற்குப் பிறகு ஹஸ்தினபுர நகரம் எக்காரணத்தாலோ பாழடைந்தது. அப்போது கௌரவ ராஜ குடும்பத்தில் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன. ஒரு பிரிவினர் ஹஸ்தினபுரத்துக்கு கிழக்கே கௌசாம்பியைத் தலை

நகராகக்கொண்டு ஆளத் தொடங்கினர். மற்றொரு பிரிவினர் இந்திரப்ரஸ்தத்திலிருந்து ஆட்சி செய்ய ஆரம்பித்தனர்.

விதேஹ ராஜ்யம்.

கௌரவர்களுக்குப் பிறகு ராஜ்யத்தை ஏற்படுத்தியவர் விதேஹ தேசத்து அரசர்கள். இவர்களுள் ஒருவர் சீதாதேவியின் தகப்பனான ஜனக மஹாராஜா. இவர் காலத்துக்குப் பிறகு விதேஹ ராஜ்யம் பரவியது. கொஞ்ச காலத்துக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த அரசர்கள் குரூரமாக ஆட்சி செய்ததனால், ஜனங்கள் மன்னர் ஆட்சியை வெறுத்து ராஜ குடும்பத்தாரை நாட்டை விட்டுத் துரத்தி, குடியரசை ஏற்படுத்தினார்கள். கௌதம புத்தர் காலத்தில் விதேஹ ராஜ்யம் பெருமையும் செல்வமும் வாய்ந்திருந்தது. அதனால் அதைச் சுற்றியுள்ள ராஜ்யங்களிலுள்ளவர்களெல்லாம் அதைக் கண்டு பொறாமை கொண்டிருந்தனர்.

காசி ராஜ்யம்.

விதேஹ ராஜ்யத்திற்குப் பிறகு காசி ராஜ்யம் ஏற்பட்டது. அதை பரத வம்சத்தைச் சேர்ந்த பிரம்ம தத்த வம்ச அரசர்கள் ஸ்தாபித்தார்கள். அந்த ராஜ்யம் சிறிது காலம்தான் உன்னத நிலையிலிருந்தது. கடைசியாக காசி ராஜ்யத்தைக் கோசல தேச அரசர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

மகதராஜ்யம்—பிம்பிசாரர்.

மகத ராஜ்யம் மிகவும் பழமையானது. மௌரிய அரசர்களுக்கு முன்பு இந்த ராஜ்யத்தை முறையே பிரிஹத்ரத, ஹரியங்க, சைசுநாக, நந்த வம்சத்து அரசர்கள் ஆட்சி செய்தனர். கௌதம புத்தர் காலத்தில் மகத ராஜ்யத்தை ஆட்சி செய்தவர் பிம்பி



ஆரியர்கள் பஞ்சாபிலிருந்து கங்கை நதி பள்ளத்தாக்கில் பரவியதால் பல ராஜ்யங்கள் ஏற்பட்டதை கவனிக்கவும்.

சாரர். அவர் ஹரியங்க வம்சத்தை ஸ்தாபித்தவர்; ஜைன மதத்தைச் சேர்ந்தவர். ஆயினும் புத்தரிடம் நேசம் பாராட்டினார். மிகவும் பலமுள்ளவர். சுற்றிலுமுள்ள அரசர்கள் பலவான்களாக விருந்ததால் அவர்களோடு கலியாண சம்பந்தஞ் செய்துகொண்டு நேசம் பாராட்டினார். அங்க தேசத்தோடு போர்புரிந்து அந்த ராஜ்யத்தைத் தம் வசப் படுத்திக்கொண்டார். இவர் மரண மடையும் காலத்தில் மகத ராஜ்யம் 80,000 கிராமங்கள் அடங்கிய தாக விருந்தது. இவரிடத்தில் தேர்ச்சிபெற்ற படை இருந்தது. இவரே மகத சாம்ராஜ்யம் ஏற்படுவதற்கு அடிப்படை கோலியவர்.

4. மகத சாம்ராஜ்யம்

அஜாதசத்ரு
கி. மு. 554-527

அஜாதசத்ரு என்பவர் தம் தகப்பனை பிம்பிசாரரைக் கொன்றுபட்டத்தைஅடைந்தார். இவர் ஹரியங்க வம்ச அரசர்களுக்குள் மிகவும் பிரபலம் அடைந்தவர். புஜபலமும் புத்தியும் பொருந்தியவராதலால் மகத ராஜ்யத்தின் விஸ்தீர்ணத்தைப் பெருக்கினார்.

மகத ராஜ்யம் பரவுதல்.

அஜாதசத்ரு பலவானாகை இருப்பதைக் கண்டு காசி, கோசலம், வைசாலி முதலிய தேசத்தரசர்கள் ஒன்று சேர்ந்து மகத தேசத்தோடு போர் புரியத்தயாரானார்கள். அஜாதசத்ரு அவர்களோடு தனித் தனியே சண்டை செய்தும், அவர்களுக்குள் விரோதம் ஏற்படுத்தியும், அந்த ராஜ்யங்களெல்லாவற்றையும் தம் வசப்படுத்திக்கொண்டு மகத ராஜ்யத்தைப் பரவச் செய்தார்.

உதயணன்.

அஜாதசத்ருவுக்குப் பிறகு அவருடைய குமாரன் உதயபத்ரன் அரசரானார். தகப்பனிடமிருந்து தமக்குக் கிடைத்த ராஜ்யத்தை சரியாக ஆட்சி செய்தார். தம் ராஜ்யம் அதிகமாகப் பரவியதால் கிரிவிரிஜ புரத்திற்குத் தெற்கில் சோணையாறும் கங்கையும் சந்திக்குமிடத்தில் பாடலிபுத்திரம் என்னும் தலை நகரத்தை ஏற்படுத்தினார். இவர் ஆட்சி செய்த காலத்தில் (சுமார் கி. மு. 516) பாரவீகர்கள் ஸிந்துநதிப் பிரதேசத்தின்மீது படையெடுத்து அதைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டனர்.

மஹாபத்ம நந்தர்.

ஹரியங்க வம்சத்தினருக்குப் பிறகு சைசுநாக வம்சத்தினர் ஆண்டனர். அவ் வம்சத்தை ஸ்தாபித்தவர் சைசுநாகர். அவர் அவந்தி, கௌசாம்பி முதலிய ராஜ்யங்களை ஜயித்தார். சைசுநாக வம்சத்தினருக்குப் பிறகு நந்த வம்ச அரசர்கள் மகத ராஜ்யத்தை ஆட்சி செய்தனர். நந்த வம்சத்து முதல் அரசர் மஹாபத்ம நந்தர். இவர் புஜபல முள்ளவர். தன் ராஜ்யத்திற்குத் தெற்கிலுள்ள கலிங்க தேசத்தின்மீது படையெடுத்துச் சென்று அதை வென்று மகத சாம்ராஜ்யத்தோடு இணைத்தார். அதனுடன் சலிப்படையாமல் தன்னுடைய ராஜ்யத்தை கோதாவரி ஆறு வரையிலும் பரவச்செய்தார்.

அலெக்ஸாண்டரின் படை யெழுச்சி கி. மு. 326.

மஹாபத்மநந்தர் குமாரரான தனநந்தர் ஆட்சி செய்தபொழுது (சுமார் கி. மு. 326) கிரேக்க அரசராகிய அலெக்ஸாண்டர் நம் தேசத்தின்மீது படையெடுத்து வந்தார். அவர் கி. மு. 326-ம் வருஷத்தில் ஸிந்து நதியைக் கடந்து ஜீலம் நதிவரையிலுள்ள பிர

தேசங்களைத் தம் வசப்படுத்திக்கொண்டு அந்நதிக்கரையில் புரு வம்சத்தைச் சேர்ந்த புருஷோத்தமன் என்ற அரசரைத் தோற்கடித்தார். பிறகு அவருடன் சமாதானம் செய்துகொண்டு அவரைத் தமக்குக் கீழ்ப்படிந்த ஒரு சிற்றரசராக்கிக்கொண்டார். அதற்குப் பிறகு பியஸ் நதி வரையிலுமுள்ள தேசங்களை ஜயித்து தம் தேசத்துக்குத் திரும்பினார். இந்தப் படையெழுச்சியால் பஞ்சாபும் ஸிந்து பிரதேசமும் அந்நிய நாட்டினர் வசமாயிற்று. ஆயினும் அப் பிரதேசங்களில் கிரேக்கர்கள் பலர் குடியேறியதால் அவர்களிடமிருந்து இந்தியர்கள் சில முக்கிய சாஸ்திர சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்து கொண்டனர். அதே விதமாக கிரேக்கர்களும் இந்தியரிடமிருந்து சில விஷயங்களை அறிந்து கொண்டனர்.

5. ஜைன பௌத்த மதங்கள்

ஆரியர் மதத்தின் குறைகள்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு ஆரியர்களின் மதக் கொள்கைகளில் மூடபக்தி முதல் நுட்பமான தத்துவங்கள்வரையில் இருந்தன. அக்கால ஜனங்கள் முக்திபெற இரண்டு வழிகள் உண்டென்று கருதினர். அவற்றுள் ஒன்று பிராணிகளைக்கொன்று யாகங்கள் செய்வது, மற்றொன்று குடும்பத்தை விட்டு காட்டுக்குச் சென்று கடுந்தவம் புரிவது. யாகங்கள் செய்வதற்கு பணச்செலவு அதிகம். தவம் செய்வதற்கு உள்ளமும் உடலும் திடமாக இருக்கவேண்டும். ஆதலால் பணக்காரர்களுக்கும் புத்திமான்களுக்கும் மாத்திரந்தான் முக்திபெற வழி இருந்தது என்று தெரிகிறது. இவ்விரு வழிகளும் பிராணிகளுக்கு துன்புறுத்துவதாக விருந்தன. ஆத

லால் பொது மக்களுக்கு முக்திபெற வழியில்லாமல் போயிற்று.

இவ்விஷயம் புத்திமான்களுடைய சிந்தையைக் கலக்கிற்று. அவர்கள் முக்திபெற இவ்விரண்டு முறைகள்



கௌதம புத்தர்

தான் உண்டா—வேறு எவ்வழியும் கிடையாதா? உபநிஷத்துகள் போதிக்கும் நீதிகள்தான் முக்தி அடைய வழியா? என்று ஆலோசிக்கத் தொடங்கினர். இவ்வித பெரியோர்களில் சிலர் க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்த

வர். அவர்களுள் முக்கியமானவர்கள் மஹாவீரரும் கௌதம புத்தரும்.

ஜைன பௌத்த மதங்கள்.

வர்த்தமான மஹாவீரர் விதேஹ நாட்டைச்சேர்ந்த வைசாலி அரசகுமாரர். சிறிது காலம் இல்வாழ்க்கை நடத்தி பிறகு காட்டுக்குச்சென்று தவம் புரிந்து ஞானம் அடைந்தார். இவர் ஏற்படுத்திய மதத்திற்கு ஜைனமதம் என்று பெயர். சாக்கிய வம்சத்தில் கபில வஸ்து நகரத்திற் கருகில் சித்தார்த்தர் பிறந்தார். இளவயதிலேயே வாழ்க்கைத் துன்பங்களைக்கண்டு வருந்தி இல்லற வாழ்க்கையைத்துறந்து, காடுகளில் திரிந்து கடைசியாக ஞானோதயம் அடைந்தார். பிறகு அவருக்கு புத்தர் என்னும் பெயர் உண்டாயிற்று. இவரால் ஏற்படுத்தப்பட்ட மதத்திற்கு பௌத்த மதமென்று பெயர். இவ்விரண்டு மதங்களுக்கும் வித்தியாசங்கள் குறைவு. மஹாவீரர் முப்பது வருஷகாலம் மகத விதேஹராஜ்யங்களில் சஞ்சரித்து தம் மதக் கொள்கைகளை ஜனங்களுக்கு போதித்து 14,000 சிஷ்யர்களை சம்பாதித்தார். அவ்வாறே புத்தரும் நாற்பத்தைந்து வருஷகாலம் தேச சஞ்சாரம்செய்து ஆயிரக்கணக்கான ஜனங்களை பௌத்த மதத்தைத் தழுவும்படியாக செய்து பிம்பிசாரர், அஜாதசத்ரு முதலிய மன்னர்களின் ஆதரவைப் பெற்றூர்.

ஜைன பௌத்த மதக் கொள்கைகள்.

வர்த்தமான மஹாவீரர் ஜீவஹிம்சை செய்யக் கூடாது, திருடக்கூடாது, ஆஸ்தி சேர்க்கக்கூடாது, உண்மையே பேச வேண்டும், பெண்கள் பதிவிரதைகளாகவும் ஆண்கள் ஒரே மனைவியுடனும் இருக்கவேண்டுமென்றும் ஜனங்களுக்கு போதித்தார். புத்தர் பிராணிகளிடம் தயையுடன் இருக்க

வேண்டுமென்றும், திருடக்கூடாது என்றும் உண்மையே பேசவேண்டுமென்றும் சாத்வீகமான பொருள்களையே உட்கொள்ள வேண்டுமென்றும் தேகம், உள்ளம், பேச்சு மூன்றிலும் சுத்தி இருக்கவேண்டு மென்றும் போதனை செய்தார். இவ்விரு போதகர்களும் ஜீவஹிம்சை கூடா தென்றும் நற்குணத்தைவிட உயர்ந்த மதமில்லை யென்றும் இவைகளை மேற்கொண்டு நடப்பவர்களுக்கு முக்தி கிடைக்குமென்றும் போதித்தார்கள். இருமதத்தினருக்கும் வேதங்களிலும் ஜாதிபேதங்களிலும் நம்பிக்கை கிடையாது.

இவ்விரண்டு மதகுருமார்கள் புத்திமான்களாக விருந்ததாலும், கௌரவம் வாய்ந்த குடும்பத்தினராத லாலும் இவர்களுடைய மதம் மிக சீக்கிரத்தில் வட இந்தியா முழுவதும் பரவியது. இவ்விரண்டினுள் ஜைனமதத்தைக் காட்டிலும் பௌத்த மதமே அதிக சீக்கிரமாகவும் அதிக விடங்களிலும் பரவியது.

அத்தியாயம் 3.

மௌரிய சாம்ராஜ்யம்

முக்கிய விஷயங்கள்:—மௌரிய சந்திரகுப்தர் - அசோக சக்ரவர்த்தி - அவர் பௌத்த தர்மத்தை நிலைநாட்டுதல் - மௌரிய அரசாங்க முறை: தலை நகர பரிபாலனம் - நாட்டு ஆட்சி - சமூக வாழ்க்கை - இலக்கியம் - சில்பங்கள்.

6. மௌரிய சந்திரகுப்தர்

சந்திரகுப்தர்
கி. மு. 321-298

இந்தியாவில் சாம்ராஜ்யங்கள் ஏற்படுத்தியவர்களுக்குள் முதலானவர் மௌரிய வம்சத்தைச் சேர்ந்த சந்திரகுப்தர். இவர் நந்த அரசர்களுக்குள் ஒருவருக்கும் முறை என்ற ஸ்திரீக்கும் புதல்வரென்று சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலர் ஹிமயமலை அடிவாரத்திலுள்ள க்ஷத்திரிய வம்சங்களுக்குள் மௌரிய வம்சம் என்று ஒன்று இருந்ததாகவும், அவ்வம்சத்தார் நந்த அரசர்களுக்கு கீழ்பட்டிருந்ததாகவும் சந்திரகுப்தர் அவ்வம்சத்தைச் சேர்ந்தவரென்றும் சமீப கால ஆராய்ச்சிகளால் தெரிகிறதென்று அபிப்பிராயப்படுகின்றனர். எவ்வம்சத்தைச் சேர்ந்தவராயினும் சந்திரகுப்தர், சாணக்கியன் என்னும் விஷ்ணுகுப்தருடைய உதவியால் நந்த வம்சத்தை அழித்து மகத ராஜ்ய மகுடத்தை அடைந்தார் என்ற விஷயத்தை எல்லாரும் ஒப்புக்கொள்கின்றனர். சந்திரகுப்தரும் சாணக்கியரும் காட்டில் வசித்த சில சிற்றரசர்களின் உதவியைக்கொண்டு

ஒரு பெரிய சேனையுடன் நந்தர்களைத் தாக்கினர். அவ்வரசர் கீழ்பட்ட ஜாதியினராதலாலும் குரூரமாக ஆட்சி செய்ததனாலும் அவருக்கொருவரும் ஒத்தாசை செய்யவில்லை. ஆதலால் மகத சாம்ராஜ்யம் சந்திரகுப்தர் வசம் சேர்ந்தது.

பஞ்சாபை ஜயித்தல்.

அலெக்ஸாண்டர் பஞ்சாபிலிருந்து திரும்பிப் போகும்போது அந்நாட்டுக்கு ஒரு அதிபதியை நியமித்தார். அலெக்ஸாண்டர் இறந்தார் என்ற விஷயம் தெரிந்தவுடன் பஞ்சாபிலுள்ள ஜனங்கள் கிரேக்க பிரதிநிதியை எதிர்த்துச் சண்டை செய்யலாயினர். இதுவே தக்க சமயமென்று நினைத்து சந்திரகுப்தர் ஒரு பெரிய சேனையுடன் பஞ்சாபுக்குச் சென்று அவ்விடத்திலுள்ள கிரேக்க சேனைகளைத் துரத்திவிட்டு அப்பிரதேசத்தை தம் வசமாக்கிக்கொண்டார்.

ஸெல்யூக்கசுடன் சண்டை

இதற்குப் பின்பும் சந்திரகுப்தர் கிரேக்கர்களோடு சண்டையிட நேர்ந்தது. அலெக்ஸாண்டர் மரணமடைந்த பிறகு அவருடைய சேனாதிபதிகள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டு அவருடைய சாம்ராஜ்யத்தைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டனர். அதன் கிழக்கு பாகம் ஸெல்யூக்கஸ் நிக்கேடர் என்னும் சேனாதிபதிக்கு கிடைத்தது. பஞ்சாபிலிருந்த கிரேக்கர்களைத் துரத்தியதையே காரணமாக வைத்துக்கொண்டு ஸெல்யூக்கஸ் சந்திரகுப்தரோடு சண்டைக்குத் தயாரானார். அந்தச் சண்டையில் ஸெல்யூக்கஸ் தோல்வியடைந்து சமாதானம் செய்துகொண்டார். அதன்படி தன் மகளை சந்திரகுப்தருக்குக் கலியாணம் செய்துவைத்தது மாத்திரமன்றி ஹீரட், காபூல், காண்டஹார், மக்ரான் முதலிய பிர

தேசங்களை அவருக்குக் கொடுத்தார். சந்திர குப்தர் ஸெல்யூக்கஸுக்கு 500 யானைகளைக் கொடுத்தார். இந்த யுத்தத்தின் பிறகு மகத சாம்ராஜ்யத்தின் மேற்கு எல்லை பாரஸீகம் வரையிலும், வட எல்லை ஹிந்துகுஷ்மலை வரையிலும் எட்டியது. பிறகு சந்திர குப்தர் கூர்ஜ்ஜரத்தின் பேரில் படை எடுத்து அதையும் தன் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்.

சந்திரகுப்தரின் மரணம்

சந்திரகுப்த சக்ரவர்த்தி ஆட்சிசெய்தல் பாபம்செய்வதற்குக் காரணமாக விருக்கிறதென்று அறிந்து அதன் பரிகாரத்திற்காக குடும்பத்தை விடுவதே நலமென்று அக்காலக் கொள்கைகளின்படி நினைத்தார். அவர் ஜைன மதத்தைத் தழுவினர். அவர் ஆட்சிசெய்த காலத்தில் மகத ராஜ்யத்தில் கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அதன் துன்பங்களைத் தாங்கமுடியாமல் மகத ராஜ்யத்தில் வசித்து வந்த பல ஜைனர்கள் தென் இந்தியாவுக்குச் சென்றனர். அதுவே தக்க சமயமென்று எண்ணி சந்திரகுப்தர் தன் மகன் பிந்துசாரருக்கு மகுடஞ்சூட்டி தாம் ராஜ்யத்தை விட்டு விலகி மைசூரிலுள்ள ஸ்ராவண பெல்கோலாவில் சில காலம் வசித்தார். பிறகு ஆறு நாட்கள் பட்டினி கிடந்து உயிர் துறந்தார். இவ்விதம் உயிர் துறத்தல் விசேஷம்என்பது ஜைனர்களின் கருத்து.

பிந்துசாரர் கி.மு. 298-273

பிந்துசாரர் தனக்கு கிடைத்த ராஜ்யத்தை ஜாக்கிரதையாக ஆட்சிசெய்ததாகவும் அவர் காலத்தில் தக்ஷசில நகரத்தில் ஏற்பட்ட கலகத்தை அடக்கிய தாகவும் மாத்திரம் தெரிகிறது. தகப்பனைப் போலவே பிந்துசாரரும் கிரேக்கர்களிடம் நேசம்

பாராட்டி வந்தார். இவருடைய ராஜசபையில் கிரேக்க தூதர் ஒருவர் ஆதரிக்கப்பட்டு வந்தார். பிந்துசாரருக்கு அமித்ரகாதகர் (விரோதிகளைக் கொல்பவர்) என்ற பட்டம் உண்டு. தக்காணத்தில் இரு சமுத்திரங்களுக் கிடையி லுள்ள பிரதேசமெல்லாவற்றையும் பிந்துசாரர் ஜயித்த தாகவும் சிலர் கருதுகின்றனர்.

7. அசோக சக்ரவர்த்தி

அசோகர் பிந்துசாரருடைய குமாரர். இவர் பலரைக் கொன்று பட்டத்தைப் பெற்ருர் என்னும் வதந்தி தவறு. ஆனல் அவர் ராதா குப்தன் என்பவரின் உதவியுடன் தன் அண்ணனை சுதீனன் என்பவருடன் மாத்திரம் சண்டையிட்டு அவரைத் தோற்கடித்துக் கொன்றதாக ஏற்படுகிறது. அசோகர் சக்ரவர்த்தியான போது ராதாகுப்தன் என்பவரே மந்திரியானர்.

கலிங்க யுத்தம்
கி.மு. 262-261.

அசோகர் முப்பத்தேழு வருஷங்கள் ஆட்சி செய் தார். அக்காலத்திற்குள் அவர் ஒரு முறையே போர் புரிந்தார். அது கலிங்க தேசத்துடன் ஏற்பட்டது. மஹா நந்தரின் காலத்தில் கலிங்க தேசம் மகத ராஜ்யத்துக் குட்பட்டிருந்தது. பிறகு மகத அரச குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பத்தினல் கலிங்க தேசம் சுயேச்சையை யடைந்தது. அந்நாட்டு மன்னர்கள் திரளாக வீரர்களைச் சேகரித்துக்கொண்டு அண்டை நாட்டவரைத் துன்புறுத்தலாயினர். இவ்வித வலிமை பொருந்திய பிரதேசம் தன் நாட்டிற்கு சேர்ந் தாப்போல் இருப்பது தீமையெனக் கருதி அசோகர் ஒரு சேனையைத் திரட்டிக்கொண்டு கலிங்க நாட்டின்மேல் படை யெடுத்துச் சென்ருர். அச் சண்டையில் ஆயிரக்



அசோகர் ராஜ்யத்தின் எல்லையை கவனிக்கவும்.

கணக்கான ஜனங்கள் மாண்டனர். இன்னும் அநேகர் பலவித துன்பங்களை அடைந்தனர். அசோகர் ஜய மடைந்ததனால், கலிங்க தேசம் மகத ராஜ்யத்தோடு இணைக்கப்பட்டது. கலிங்கத்துக்கு, தோசலி நகரத்தை தலை நகரமாக்கி அந்நாட்டை ஆட்சிசெய்ய ஓர் அரச குமாரனை நியமனம் செய்தார்.

போரில் வென்றும், ராஜ்யத்தைப் பெருக்கியும் அசோகருக்கு மனவமைதி ஏற்படவில்லை. பலர் பட்ட கஷ்டங்களைக்கண்டு மனம் இளங்கினார். விஸ்தாரமான ராஜ்யத்தை ஆட்சி செய்வதில் அவருக்கு மன வெறுப்பு தான் ஏற்பட்டது. இனி போர் புரியலாகாது என்றும் ஜீவ வதை செய்யலாகாது என்றும் மன உறுதி கொண்டார். போர் புரிந்து ராஜ்யத்தைப் பரவச் செய்வதை விட தம் ஜனங்களின் மனதை நல்ல வழிகளில் செல்லும் படி செய்வதே தகுதியானது என்று எண்ணங் கொண்டார். அவருக்கு பௌத்த மதக் கொள்கைகளில் பற்று தல் ஏற்பட்டு அம்மதத்தைத் தம் குடிகளிடம் பரவச் செய்ய முன் வந்தார்.

அசோகர் புத்த மத நீதிகளை பரவச் செய்தல்.

அசோகரைப் போல் பௌத்த மதக்கொள்கைகளை பரவச் செய்த அரசர் உலகத்தில் வேறொருவரும் இல்லையென்றே சொல்லலாம். அவர் சில முக்கிய கொள்கைகளைப் பிரசுரம் செய்து அவைகளின்படி ஜனங்கள் நடந்துகொள்ள வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். மக்கள் அக்கொள்கைகளை மேற்கொண்டு வாழ்கின்றனரென்பதைக் கவனித்துவர தர்ம மஹா மாத்திரர்கள் என்ற அதிகாரிகளை நியமித்தார். தாய், தகப்பன், குரு முதலியவர்களிடம் பக்தியுடன் நடக்கவேண்டும். உறவினர்களையும் நேசர்களையும்

ஆதரிக்க வேண்டும். உயிருள்ள எல்லா பிராணிகளிடமும் கருணை வேண்டும் என்று அசோகர் தம் ஜனங்களுக்குப் போதித்தார். அந்தக் கொள்கைகளை பாறைகளின்பேரிலும் கற்றூண்களிலும் ஜனங்களின் தாய் பாஷையில் கல்வெட்டுகளாகச் செதுக்கி தூண்களை சாம்ராஜ்யத்தின் பல பாகங்களில் நாட்டும்படி ஏற்பாடுகளைச் செய்தார். இவ்விதம் செய்ததின் காரணம் ஜனங்கள் அவைகளைப் படித்து நல்வழியில் நடப்பார்கள் என்ற நம்பிக்கையேயாகும். இவ்வித தூண்கள் வடமேற்கே பஞ்சாப் முதல், தெற்கே மைசூர் வரையிலும் காணப்படுவதால் அசோகர் ராஜ்ய விஸ்தீரணத்தை கூடதெரிந்துகொள்வதற்கு அவைகள் ஆதாரமாக விருக்கின்றன.

கல் தூண்களும் சாஸனங்களும்.

கல்தூண்கள் மாத்திரமன்றி ஸ்தூபிகளையும் சந்நியாசிகள் வசிக்க மடங்களையும் ஏற்படுத்தி பௌத்த மதக் கொள்கைகளை பரவச் செய்தார். உயிருள்ள பிராணிகளிடமெல்லாம் கருணை யுள்ளவராக இருக்கவேண்டும். எண்ணம், பேச்சு, செய்கை ஒன்றுபட்டிருக்க வேண்டும். உண்மை பேசவேண்டும், பெரியோர்களை கௌரவமாக நடத்தவேண்டும், பிறசமயத்தாரிடம் நேசமாக வசிக்கவேண்டும் என்று எச்சரிக்கை செய்தார். சில பாறைகளின்பேரிலும் பௌத்த நீதிகளை கல்வெட்டுகளாகச் செய்தார். அவைகளில் பாப்ரு, (பெய்ருத்து) கலிங்க சாஸனங்கள்,ஸாஞ்சி ஸ்தூபம், கௌசாம்பி, சாரநாத் கற்றூண்கள் மிக முக்கியானவை. இவைகளிலிருந்து அசோகரின் நற்குணம், பரந்த நோக்கம், தர்மத்தைப் பரவச்செய்யும் இயல்பு, ஆட்சியின் தேர்ச்சி முதலியவைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

கொள்கைகளை நிறைவேற்றிய விதம்.

அசோகர் தம் அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவிலும் தர்ம மஹாத்திரர் என்னும் அதிகாரிகளை நியமித்து அவர்களின் உதவியால் தம் கொள்கைகள் நிறைவேறும்படி யத்தனம் செய்தார். தானும் அவ்வப்பொழுது அவர்களுக்கு உதவி செய்தார். தன் எண்ணம் முழுவதும் நிறைவேற வேண்டும் என்று நினைத்து எப்பொழுதும் தன் நாடு முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்தும் ஜனங்களுடன் கலந்தும், மத சம்பந்தமான விழாக்களைக் கொண்டாடியும் மக்கள் தர்மத்தை அநுசரிக்கும்படி செய்தார். அரசாட்சியிலும் அம்முறைகளையே கையாண்டார். புலாலுண்ணாமையை மேற்கொண்டார். அரச மாளிகையிலும், தர்ம மஹாமாத்திரர்களை நியமித்தார். நாட்டில் பாதைகளை அமைத்தும், அவைகளி னிருபுரங்களிலும் மரங்களை நட்டும், ஆங்காங்கே கிணறுகளை வெட்டியும், பிரயாணிகள் தங்க சத்திரங்களைக் கட்டியும், மனிதர்கள், மிருகங்கள், பக்ஷிகள் முதலியவைகளுக்குக்கூட தர்ம வைத்தியசாலைகளை ஏற்படுத்தியும், சாம்ராஜ்யத்திலுள்ள ஜீவராசிகளை அன்புடன் ஆதரித்து வந்தார். அவருக்குப்பிறகு, அவ்வித அரசரும் தன் சொல்படி நடந்து கொண்டவரும் எவருமில்லை என்றே சொல்லலாம். அரசர்களுக்குள் ரிஷியாகவும் மானிடர்களுக்குள் மிக உத்தமனுகவும் அவர் விளங்கினுர்.

இவர் பௌத்த மத தர்மங்களை மேற்கே சிரியா, எகிப்து, கிரீஸ் தெற்கே சிம்மளம், கிழக்கே சீனு முதலிய நாடுகள் வரையில் பரவும்படி செய்தார். இத்தேசங்களுக்குத் தன் உறவினர்களையாவது நேசர்களையாவது சந்நியாசிகளையாவது அனுப்பி மதத்தை பரவும்படி ஏற்பாடு செய்தார்.

8. மௌரியர்களின் ஆட்சிமுறை

ஆட்சி முறை. மௌரிய சாம்ராஜ்யத்தில் அரசரே தலைமை அதிகாரி. அவருக்கு உதவிபுரிய மந்திரி, புரோகிதர், யுவராஜா (இளவரசர்) சேனாதிபதி என்ற நான்கு முக்கிய உத்தியோகஸ்தர்கள் இருந்தனர். சாதாரணமாக இவ்வதிகாரிகளின் அபிப்ராயத்தையொட்டியே அரசர் ஆட்சி நடத்தி வந்தார். மிகவும் முக்கிய விஷயங்களை கவனிக்க மந்திரிகளைத் தவிர இதர உத்தியோகஸ்தர்களையும் சபையாகக் கூட்டி அவர்களின் புத்திமதி பிரகாரம் நடந்து வந்தார்.

மாகாண ஆட்சி. சாம்ராஜ்யத்தை மாகாணங்களாகவும், மாகாணங்களை ஜில்லாக்களாகவும் பிரித்திருந்தனர். மாகாணங்களின் அதிபதிக்கு ராஜப்பிரதிநிதி என்றும் சிறிய மாகாண அதிபதிக்கு ஸ்தானிகர் என்றும் பெயர். ஒவ்வொரு கிராமமும் அதன் அதிகாரிக் குட்பட்டிருந்தது. இவர்களெல்லாரையுந் தவிர தர்மமஹாமாத்திரர் என்ற அதிகாரிகள் இருந்தனர். இவ்வதிகாரிகள் எல்லாரும் மக்களின் வாழ்க்கை நலத்தைக்கோரி ஆட்சிபுரிந்து வந்தனர். அதிகாரிகள் தங்கள் கடமைகளை செவ்வனே செய்கிறார்களா என்பதைக் கவனிக்க ஒற்றர்கள் இருந்தனர். அவர்கள் அவ்வப்போது நடக்கும் விஷயங்களை ரகசியமாக சக்ரவர்த்திக்கு தெரிவித்தனர். மௌர்யர்களுடைய படையில் 80,000 குதிரை வீரர்களும் 2 லக்ஷம் காலாட் படையும் 8,000 இரதங்களும் 6,000 யானைகளும் இருந்தன.

பாடலி புத்திர நகரத்தை ஆட்சி செய்வதற்கு முப்பது அங்கத்தினர்கள் இருந்தனர். இவர்களை 5 பேர்

கொண்ட 6 பஞ்சாயத்துகளாகப் பிரித்தனர். இவர்கள் வேலையை மேல்பார்வை செய்ய ஒரு நகரத் தலைவர் இருந்தார். ஒவ்வொரு பஞ்சாயத்து சபையாரும் ஒரு முக்கிய விஷயத்தை கவனித்து வந்தனர்—அவைகள் கைத்தொழில் அபிவிருத்தி, அந்நிய நாட்டாரின் சௌகரியம், ஜனன மரண பதிவு, வர்த்தக விஷயங்கள், விற்பனை, சுங்க வசூல்.

பாடலி புத்திர நகர ஆட்சி.

அக்காலத்தில் மக்கள் உண்மையையே பேசுபவர்களாயும், தைரியசாலிகளாகவும் கபடமற்றவர்களாயும் அறஞ்செய்யும் இயல்புள்ளவர்களாகவும் இருந்தனர் என்று பாடலிபுத்திரத்தில் வசித்த கிரேக்க தூதரான மெகாஸ்தனீஸ் எழுதியுள்ளார். யுத்தம் செய்தல், அரசாங்க உத்தியோகம், வியாபாரம், விவசாயம் முதலியன மக்களின் முக்கியத் தொழில்கள். ஜாதிபேதங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் அவைகளின் கட்டுப்பாடுகள் மிக வதிகமாக ஏற்படவில்லை. தேச பரிபாலனத்தில் தாய் பாஷையான பாளி முதன்மையைப் பெற்றது.

மக்கள் நிலை.

சில்பகலை மௌரியர் காலத்தில் அதிகமாக விருத்தியடைந்தது. பாரஸீகர்களிடமிருந்தும் கிரேக்கர்களிடமிருந்தும் தெரிந்துகொண்ட விஷயங்களை ராஜ அரண்மனை கட்டியதிலிருந்தும் அசோகர் காலத்தில் கல்தூண்கள் நாட்டியதிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். அக்காலத்தில் ஆரியரின் புராதன மதமும் ஜைன பௌத்த மதங்களும் நாட்டில் பரவி இருந்தன. ஆனால் ஆசோகரால் பௌத்த மதம் விசேஷமாகப் பரவச் செய்யப்பட்டதால்

சில்ப கலை.

நாடெல்லாம் கல் தூண்களாலும் மடங்களாலும் நிறைக்கப்பட்டிருந்தது.

பௌத்த மதக் கொள்கைகளை மேற்கொண்டதால் மக்கள் ஜீவகாருண்யத்தை ஆதரித்தனர். ஆதலால் ஜனங்கள் யுத்தம் செய்தலையும், தைரியமாக இருத்தலையும் மறந்தனர். இதனால் தேசத்திற்கு கஷ்டங்கள் ஏற்பட்டன.

அத்தியாயம் 4.

மௌரிய சாம்ராஜ்யத்தின் சிதைவு

முக்கிய விஷயங்கள் :—ராஜ்யம் சிதைவுண்டதின் காரணங்கள் - சுங்கர்கள்-ஆந்திரர்கள் - யவனர்கள்-சாகர்கள்-குஷான் ராஜ்யம் - கனிஷ்கர் - குஷானர்கள் காலத்தில் மக்கள் நிலே.

9. மௌரிய ராஜ்யத்தின் சிதைவு

அசோகர் இறந்த 80 வருஷங்களுக்குள் மௌரிய ஆட்சி முடிவடைந்தது. அசோகர் படைகளைப் பற்றி விசேஷமாக கவனிக்காததனல் ஜனங்கள் யுத்தம் செய்தலேயும், தைரியமாக இருத்தலேயும் மறந்தனர். சிற்றரசர்களுக்கு அதிகாரம் அதிகமாகக் கொடுத்திருந்ததனல் அசோகர் மரணமடைந்தவுடன் இவர்களெல்லோரும் சுயேச்சையடைந்தனர். கலிங்க நாட்டையும் ஆந்திர தேசத்தையும் முழுமையும் தோற்கடிக்காததாலும் இவ்விராஜ்யங்கள் தலேநகருக்கு வெகுதூரத்தி லிருந்ததாலும் அவ்விரு தேசத்தினரும் சுயேச்சை யடைந்தனர். அசோகருக்குப் பிறகு ஏற்பட்ட அரசர்கள் காலத்தில் ராஜ்யம் மூன்று பிரிவுகளாயிற்று. அப்பிரிவுகள் : ஒன்று காபூல், காஷ்மீரம் ; இரண்டாவது உஜ்ஜயினியும் அதற்கருகிலுள்ள பிரதேசங்களும் ; மூன்ருவது மகத ராஜ்யம். இவைகளே அசோகருடைய இரு பிள்ளேகளும் ஒரு பேரனும் பங்கிட்டுக்கொண்டு ஆட்சி செய்ததாகத் தெரிகிறது.

ராஜ்யம் சிதைவடைந்த காரணங்கள்

பாடலிபுத்திரத்தை சம்பிராதி என்னும் குமாரன் ஆட்சி செய்ய ஆரம்பித்தான். சில காலத்திற்கு பிறகு அசோகரின் பேரப்பிள்ளையான பிரஹத்ரதன் பட்டத்துக்கு வந்தார். அவர் காலத்தில் சேனைத்தலைவர் புஷ்யமித்ரன். கி.மு. 185-ம் வருஷத்தில் சேனைத்தலைவரான புஷ்யமித்திரன் அரசனைக் கொன்று தாமே பட்டத்துக்கு வந்தார். அவர் ஏற்படுத்திய வம்சத்துக்கு சுங்க வம்சம் என்று பெயர்.

சுங்கர்கள்

சுங்க அரசர்கள் பிராமணர்கள். புஷ்யமித்ரன் ஆட்சி செய்த காலத்தில் யவனர்கள் என்ற கிரேக்கர்களின் அரசன் ஒருவன் நம் நாட்டின்மீது படை எடுத்தான். ஆனால் அவனைத் தோற்கடித்து தேசத்தைவிட்டு துரத்தினர். தோல்வியடைந்த யவனர்கள் கொஞ்ச காலத்திற்குப் பிறகு மறுபடியும் படையெடுததுவந்து பஞ்சாப் பிரதேசத்தில் ஸாகலா (இக்கால ஸியால்கோட்) என்னும் நகரத்தை தலை நகரமாக்கிக்கொண்டு ஆளத் தொடங்கினர். சுங்கர்கள் காலத்தில் ஆரிய மதக் கொள்கைகள் முக்கியமடைந்தன. பாணினி என்பவர் ஸம்ஸ்கிருத பாஷையில் இலக்கணம் ஒன்று எழுதினர். அவர் எழுதிய சூத்திரங்களின் பயனாக ஸம்ஸ்கிருத பாஷை விருத்தியடைந்தது. அக்காலத்தில் சில்பகலை அதிக முன்னேற்றமடைந்திருந்தது என்பதற்கு பார்ஹூட் பட்டண ஸ்தூபிகளே அத்தாக்ஷிகள்.

மகத ராஜ்யம் அழிந்தபின் ஆந்திரர் தேசம் முதன்மையானதாயிற்று. அங்கு ஆண்ட அரசர்களுக்கு சாதவாஹன வம்சத்தவர்என்று பெயர். அவர்கள் முதன்

முதலாக வட இந்தியாவில் மத்திய தேசத்தின் தென் கோடியில் இருந்தனர். நாளடைவில் தெற்கு நோக்கிவந்து கிருஷ்ணா நதிக் கரையில் ஓர் அரசாங்கத்தை நிலை நாட்டினர். அந்த ராஜ்யத்தை விஸ்தரிக்கச் செய்து முந் நூறு வருஷகாலம் ஆண்டுவந்தனர். முதன்முதலாக ஸ்ரீகாகுளம் அவர்களின் தலைநகரம். சாதகர்ணி என் னும் அரசர் பிரதிஷ்டானபுரத்தை (தற்கால பைதான்) தலைநகராக்கிக்கொண்டு மஹாராஷ்டிர பிரதேசத்தை ஜயித்து உஜ்ஜயினி, விதிசா நகரங்களைத் தம் ராஜ்யத்தில் சேர்த்து ஆந்திரர் ஆதிக்கத்தைப் பெருக்கினர். சாத வாஹன அரசர்கள் காலத்தில் வாணிபம், சில்பகலை, மதவிஷயங்கள் முதலியன விருத்தியடைந்தன.

ஆந்திரர்கள்

கி. மு. 200 முதல் கி. பி. 200-க்குள்ளாக ஆந்திர நாடுமாத்திர மன்றி இதர நாடுகளிலும் சில, மேன்மை யடைந்திருந்தன. இவை களுள் முக்கியமானவை யவனர்கள் ராஜ்யமும் சாகர்கள் ராஜ்யமுமாகும். யவனர்கள் ராஜ்யங்களுள் ஒன்று பாக்டிரியா பிரதேசத்தி லிருந்தது. அதற்குள் கபிசா, காந்தார நாடுகள் அடங்கி இருந்தன. அது மாத்திரமல்லாமல் ஸாகலாவை தலை நகரமாகக் கொண்ட மற்றொரு யவனராஜ்யமு மிருந் தது. அவ்விரண்டு ராஜ்யங்களிலும் ஆட்சி புரிந்த அர சர்கள் அழகிய நாணயங்களை வெளியிட்டனர் என் பதை ஒழிய மற்றொன்றும் நமக்கு அவர்களைப் பற்றித் தெரியவில்லை. அவ்வரசர்கள் பெருத்த வீரர்களாயும் குரூரம் பொருந்தியவர்களாகவு மிருந்தனர். அவர்கள் படையெழுச்சியால் நம்நாட்டில் பல கஷ்டங்களேற்பட் டனவென்று நம் தேச பண்டைக்கால நூல்களிலிருந்து

யவனர்கள் — மினண்டர்.

தெரிகிறது. யவன அரசர்களுள் மிகவும் பெருமை வாய்ந்தவர் மினண்டர். முதலில் அவர் காபூல் பட்டணத்தைத்தலை நகராகக் கொண்டு ஆட்சிசெய்து வந்தார். பிறகு அவர் ஸாகலாவை தலைநகராக்கிக்கொண்டு அலெக்ஸாண்டரைப்போல் வடஇந்தியாவின்மீது படை எடுத்தார். அவர் காபூல், கத்தியவார், வடமதுரை, அயோத்யை, ராஜபுதனத்தில் சில பிரதேசங்கள் முதலியனவற்றை ஜயித்தார். ஆனால் மினண்டர் பாடலிபுத்திரத்தின்மீது படையெடுத்துச் சென்றபோது புஷ்யமித்திரர் அவரைத் தோற்கடித்துத் துரத்திவிட்டனர். மினண்டர் ஒரு பெரிய தத்துவ ஞானி. பௌத்த நூல்களில் மிலிந்தர் என்று கூறப்படுபவர் இவர்தான். இவரை நாகசேனன் என்னும் பௌத்த சன்னியாசி அம்மதத்தைத் தழுவும்படி செய்தார். பௌத்தரான பிறகு மினண்டர் மிகவும் நற்குணமுள்ளவரானர்.

யவனர்களின் ராஜ்யத்தை சாகர் என்னும் மத்திய ஆசியா ஜனங்கள் நாசமாக்கினர். சாகர்கள் முதலில் பாக்டிரியாவைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வசித்து வந்தனர். அவர்கள் அவ்விடத்திலிருந்து யூச்சிவகை ஜனங்களால் துரத்தப்பட்டனர். அப்போது அவர்கள் பாக்டிரியாவிலுள்ள யவனர்களைத் தோற்கடித்து அதைத் தங்கள் வசமாக்கிக்கொண்டனர். அங்கும் யூச்சி ஜனங்கள் தொடர்ந்ததால் சாகர்கள் பாக்டிரியாவைவிட்டு கபிஸ்தானத்தில் புகுந்தனர். அங்கிருந்து இந்தியாவின் மேல் படையெடுத்து ஸிந்துநதி தீரத்திலிருந்த யவன ராஜ்யத்தை அழித்து யமுனநதி பாயும் நிலம்வரையில் தங்கள் ஆதிக்கத்தைப் பரவும்படி செய்தனர். சில சாக சத்ரபதிகள் (ராஜப் பிரதிநிதிகள்) தற்கால ஸிந்து மாகாண பிரதேசத்திலும் கூர்ஜ்ஜரம், மாளவம் நாடுகளி

லும் ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு ஆள ஆரம்பித்தனர்.

10. குஷான் ராஜ்யம்—கனிஷ்கர்

குஜால காட்பைஸஸ் கி. பி. 15 - 48.

குஷானர்கள், யூச்சிவகை ஜனத் தொகுதியைச் சேர்ந்தவர்கள். குஷானர் அரசனை குஜாலர் என்பவர் மற்ற வகுப்பினரைத் தோற்கடித்து ஓர் ராஜ்யத்தை ஏற்படுத்தினர். அவர் ஆப்கானிஸ்தானத்தில் வசித்து வந்த பஹ்லவர்களைத் தோற்கடித்து அந்த ராஜ்யத்தையும் தன் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார்.

வீமா காட்பைஸஸ் கி. பி. 55-78.

குஜாலருக்கு பிறகு அவர் மகன் வீமா காட்பைஸஸ் அந்நாட்டை ஆளத்தொடங்கினர். தம் தகப்பனைப்போலவே இவரும் பெருமை வாய்ந்த அரசர். இவர் கபிஸ்தானம், காந்தாரம் முதலிய பிரதேசங்களை ஜயித்ததாகத் தெரிகிறது. ஆனல் சீன தேசத்தோடு செய்த யுத்தத்தில் இவர் தோல்வியடைந்தார்.

கனிஷ்கர் கி.பி. 78 - 123

வீமா காட்பைஸஸுக்குப் பிறகு கனிஷ்கர் ஆளத் தொடங்கினர். கனிஷ்கர் காட்பைஸஸ் சந்ததியைச் சேர்ந்தவரல்ல. குஷானர்களில் ஒரு தொகுதியின் சிற்றரசன். கனிஷ்கர் பலவிதத்திலும் சமர்த்தர். இவர் ஆட்சி முழுவதிலும் பல போர்கள் நடந்தன. சிந்து மைதானத்தின் வடபாகம், காஷ்மீரம், கங்கா நதி தீரத்தில் பாடலிபுத்திரம் வரையிலும் இவர் ஜயித்தார். பிறகு காஷ்மீரத்தின் வழியாக ஹிமயமலையைக் கடந்து கோட்டான், யார்க்கண்டு, காஷ்கர் முதலிய பிரதேசங்களை



கனிஷ்கர் ராஜ்யத்தின் எல்லைகளையும் அக்கால இதர ராஜ்யங்களையும் கவனியுங்கள்

வென்று தம் ஆட்சிக்குட்படுத்தினர். மேற்கில் இவர் ராஜ்யம் பாரஸீகம் வரையில் விஸ்தரித்திருந்தது. இப் பெரிய ராஜ்யத்திற்கு புருஷபுரத்தை (இக்கால பெஷாவர்) தலைநகராக்கி பரிபாலனம் செய்துவந்தார். பல போர்கள் புரிந்ததனால் வெறுப்புண்ட சேனைத் தலைவர்கள் தகுந்த சமயத்தைப் பார்த்து கனிஷ்கரை ஒருநாள் கொன்றுவிட்டனர்.

கனிஷ்கரின் செயல்கள்.

கனிஷ்கர் போர்வீரர் மாத்திரமன்றி ஒரு சிறந்த பௌத்த தத்துவ ஞானி. அக்காலத்தில் பௌத்தர்களுக்குள் இரு பிரிவுகள் ஏற்பட்டன. ஒரு பிரிவினர் புத்தரை தெய்வமாகக் கருதி விக்ரஹ ஆராதனை செய்ய வேண்டுமென்றனர். மற்றொரு பிரிவினர் அவ்விதம் செய்யலாகாதென்றனர். இவ்விதம் இவர்களுக்குள் சச்சரவு ஏற்படாது. இப்பிரிவினரின் சச்சரவுகளை நீக்க கனிஷ்கர் கி. பி. 115-ம் வருஷத்தில் பௌத்த சந்நியாசிகளை ஒரு மகாநாட்டில் கூட்டி விஷயங்களைத் தீர்மானம் செய்தார். அத்தீர்மானங்களைச் செப்புத் தகடுகளில் செதுக்கி அவற்றின் பேரில் ஒரு ஸ்தூபியைக் கட்டினார்.

யுத்தத்திலும் மதத்திலும் மாத்திரமன்றி சில்ப கலைகளிலும் கனிஷ்கர் ஆட்சி முதன்மை பெற்றது. இவர் ராஜ சபையில் அஸ்வகோஷர், சரகர், நாகார்ஜுனர், வசுமித்ரர் முதலிய கல்விமான்கள் ஆதரிக்கப்பட்டனர்.

நமது தேசத்தில் ஆட்சி செய்த பிரபலமான அரசர்களுள் இவரை ஒருவராகச் சொல்லலாம். கனிஷ்கருக்குப் பிறகு ஆண்ட குஷான அரசர்களுள் வாசுதேவர்தான் முக்கியமானவர். அவர் கி. பி. 176-ம் வருஷம் வரையிலும் அப்பேரரசை சீர்குலையாமல் ஆட்சி செய்தனர்

அவருக்குப் பின் அந்த ராஜ்யம் நான்கு பிரிவுகளாயின. பாக்டிரியா, காபூல், கபிஸ்தானம், இந்தியா முதலிய விடங்களில் கனிஷ்கரின் சந்ததியார் தனித்தனி சிற்றரசுகளை ஏற்படுத்திக்கொண்டு ஆட்சி செய்தனர்.

அந்நிய நாடுகளிலிருந்து படை எடுத்து வந்த சாகர், குஷானர், பஹ்லவர் முதலியோர் தேச ஜனங்களோடு கலியாண சம்பந்தங்கள் செய்துகொண்டு ஹிந்து மதத்தைத் தழுவினுர்கள். ஆகையால் ஆதிகாலத்தது ஆரிய மதத்தில் மறுபடியும் மாறுதல்கள் ஏற்பட்டன. இது மாத்திரமன்றி ரோமானியர், கிறிஸ்துவர் முதலியவர்களோடு கலந்ததனுல் பௌத்த மதக் கொள்கைகளில் கூட மாறுபாடுகள் ஏற்பட்டு அவர்களும் விக்ரஹ ஆராதனைகள் செய்யத் தொடங்கினர். இம்மாதிரி மாறுபாடடைந்த பௌத்த மதத்திற்கு மஹாயானம் என்றும் புராதன பௌத்த மத கோட்பாட்டிற்கு ஹீனயானம் என்றும் பெயர் ஏற்பட்டது. ஹீனயான மதக் கொள்கைகள் நம் நாட்டில் ஆங்காங்கு அநுசரிக்கப்பட்டு வந்தன. ராஜ்ய ஆட்சி முறையில் அதிக மாறுபாடுகள் ஒன்றும் ஏற்படாமல் மௌரியர் காலத்தில் இருந்தமாதிரியே அரசாங்கம் நடந்துவந்தது என்று சொல்லலாம்.

அத்தியாயம் 5

குப்த ராஜ்யம்

முக்கிய விஷயங்கள் :—குப்த சந்திரகுப்தர் - சமுத்திரகுப்தர் - அவர் படை எழுச்சிகள் - சந்திர குப்த விக்கிரமாதித்யர் - பாஹியான் - குப்தர்கள் ஆட்சியில் நாட்டின்முதன்மையான நிலை-கலை முன்னேற்றம்-ஹூணர்கள்-குப்த ராஜ்யத்தின் சிதைவு-ஹர்ஷவர்த்தனர் ஆட்சி - யுவான்ச்சாங்.

11. குப்த சந்திரகுப்தரும் சமுத்திரகுப்தரும்

மௌரியர்களின் பரம்பரையைப்பற்றி நமக்கெவ்வளவு தெரியுமோ அவ்வளவு குப்தர்களைப்பற்றியும் தெரியும். குப்த அரசர்கள் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவரென்பது சிலரின் அபிப்பிராயம். இந்த ராஜ்யத்தை நிலையாக ஏற்படுத்தியவர் சந்திரகுப்தர்.

குப்த சந்திரகுப்தர் கி. பி. 320-330

அவர் ஆட்சி செய்ய ஆரம்பிப்பதற்கு முன் பாடலிபுத்திரம் வைசாலியின் ஆதிக்கத்திலிருந்தது. சந்திர குப்தர் லிச்சாவி வம்ச அரச குமாரியை மணம் புரிந்து கொண்டு அக்கூட்டத்தாரின் உதவியினால் முன்பு மகத ராஜ்யத்துக்கு வடக்கிலிருந்த கோசல ராஜ்யத்தை ஜயித்து பாடலி புத்திர நகரத்தைத் தலைநகரமாக்கிக் கொண்டு கி. பி. 320 முதல் ஆளத் தொடங்கினார். அது முதல் குப்த சகாப்தம் ஆரம்பமாயிற்று. இவருக்கு பிள்ளைகள் அநேகர் இருந்த போதிலும் அவர்

களுள் திறமை வாய்ந்தவர் சமுத்திரகுப்தரே என மதித்து அவரையே இளவரசராக்கினர்.

சமுத்திர குப்தர் கி. பி. 330-375.

சந்திரகுப்தருக்குப் பிறகு அவர் குமாரராகிய சமுத்திர குப்தர் பட்டத்துக்கு வந்தார். இவர் நம் நாட்டின் பிரபல சக்ரவர்த்திகளுள் ஒருவர்; பெயர் பெற்ற வீரர். இவர் ஆட்சி செய்த 45 வருஷ காலத்திற்குள் பல திசைகளிலும் படை எடுத்துச் சென்று வெற்றி யடைந்து அதன் அறிகுறியாக ஒரு அஸ்வமேத யாகம் செய்தார்.

வட இந்தியாவை ஜயித்தல்.

முதன் முதலாக சமுத்திர குப்தர் வட இந்தியா முழுவதையும் ஜயிக்க முயன்றார். அக்காலத்தில் வட இந்தியாவின் பெரும்பாகம் நாக வம்சத்து அரசர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. சமுத்திர குப்தர் அவர்களையும் இதர வட இந்திய அரசர்களையும் போர் புரிந்து தோற்கடித்து அவர்களின் நாடுகளைத் தம் ராஜ்யத்தோடு இணைத்துக்கொண்டனர். கி. பி. 340-க்குள் வட இந்தியா முழுவதையும் ஜயித்தது மாத்திரமன்றி அதன் ஓரங்களில் காட்டிலுள்ள சிற்றரசர்களும் தம் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்தார்.

வட இந்தியாவில் தன் ஆட்சியைப் பரவச் செய்த பிறகு ஒரு பெரும் படையுடன் தக்காணத்தின்மீது படை எடுத்தார். மகத நாட்டின் தெற்கிலுள்ள அடர்ந்த கானகத்தின் வழியாகச்சென்று மஹா நதி பிரதேசத்திலுள்ள மகாகோசல நாட்டை வென்று வெங்கிநாட்டை யடைந்து அவ்விடத்திலிருந்து பல்லவ நாட்டிற்குள் புகுந்து தெற்கே பாலக் காட்டைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. அங்கிருந்து திரும்பி தேசத்தின் மத்திய



சமுத்திர குப்தர் காலத்தில் இதர ராஜ்யங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்

பாகத்திலுள்ள வாகாடக ராஜ்யத்தின் எல்லையிலிருந்து கிழக்கு முகமாகத் திரும்பி பாடலிபுத்திரத்தை யடைந்தார். இப் படையெழுச்சியின் பயனாக பல அரசர்களை ஜயித்து அளவற்ற செல்வத்தை கப்பமாகவும் காணிக்கையாகவும் அடைந்தார். பாடலிபுத்திரம் சேர்ந்தவுடன் கௌசாம்பி நகரத்தில் அசோகர் நாட்டிய கல் தூணில் தன்னுடைய படையெழுச்சியின் வரலாற்றை ஹரிசேனர் என்னும் ராஜ சபை பண்டிதர் எழுதிய விதமாக கல்வெட்டாகச் செய்தார்.

சாம்ராஜ்யத்தின் எல்லைகள்.

சமுத்திர குப்தரின் படை எழுச்சிகளைப் பற்றி கேட்டவுடன் வெகு தூரத்திலுள்ள அரசர்களும் இவருக்கு பயந்து கப்பங் கட்டி இவருக்கு கீழ்படிந்து நடக்க ஒப்புக்கொண்டனர். கிழக்கில் அங்க தேசத்து அரசன், வடக்கில் காமரூப நேபாள அரசர்கள், மேற்கில் மாளவ மத்ர தேசத்து அரசர்கள் முதலியோர்கள் சமுத்திர குப்தரின் ஆதிக்கத்தை ஒத்துக்கொண்டனர். இந்திய அரசர்கள் மட்டுமல்லாமல் காபூலை ஆண்டு வந்த குஷான் அரசனும் ஸிந்துப் பிரதேசத்தில் ஆட்சி செய்த சாகசத்ரபதிகளும் (ராஜப் பிரதிநிதிகளும்) ஸிம்மள தேச அரசரான மேக வர்ணனும் சமுத்திர குப்தருக்கு காணிக்கைகள் செலுத்தினர். சமுத்திர குப்தரின் ராஜ்யம் வடக்கே ஹிமயமலை முதல் தெற்கே விந்தியமலைமரையிலும் மேற்கில் சீனுப் சம்பல் நதிகள்முதல் கிழக்கே பர்மாவரையிலும் விஸ்தரித்திருந்தது.

சமுத்திர குப்தர் போர் வீரர் மாத்திரமல்ல. கல்வியிலும் தேர்ந்தவர். அவர் சம்ஸ்கிருத பாஷையில் சில நூல்கள் எழுதியிருப்பதாகக் கருதுகின்றனர். வீணை வாசிப்ப

தில் கைதேர்ந்தவர். இவர் சபையில் பல கல்விமான்களைப் போற்றி வந்தார். சமுத்திர குப்தருக்கு பல மைந்தர்களிருந்த போதிலும் சந்திரகுப்தரையே இளவரசராகத் தேர்ந்தெடுத்தார்.

12. சந்திரகுப்த விக்கிரமாதித்யர்

சந்திர குப்த விக்கிர மாதித்யர் கி. பி. 375-415.

இரண்டாவது சந்திர குப்தர் மிகவும் வீரம் பொருந்தியவர். போர் புரிவதில் தேர்ந்தவர். சாக சத்ரபதிகள் (ராஜப் பிரதிநிதிகள்) ஆட்சி செய்து வந்த மாளவம், கூர்ஜ்ஜரம் (சௌராஷ்ட்ரம்) என்ற நாடுகளை ஜயித்து விக்ரம (வீரம்) ஆதித்யர் (சூரியன்) [வீரம் பொருந்தியவர்] என்னும் பட்டத்தை ஏற்றார். சமுத்திரகுப்தர் காலத்தில் அவர் அதிகாரத்தை ஒப்புக் கொண்ட சாகர், சந்திரகுப்தர் காலத்தில் எக்காரணத்தால் விரோதம் பாராட்டினாரென்பது தெரியவில்லை. சாகர்களை ஜயிப்பதற்கு தமக்கு வலிமை ஏற்படுவதற்காக தன் மகள் பிரபாவதியை வாகாடக அரசனுக்குக் கலியாணம் செய்வித்து அவ்வரசனின் ஒத்தாசையுடன் மேற் கூறிய சாகர் நாடுகளை ஜயித்து தம் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார்.



சந்திரகுப்த விக்கிரமாதித்யா நாணயம்

விக்கிரமாதித்யர் காலத்தில் குப்த ராஜ்யம் மிகவும் மேம்பட்ட நிலையிலிருந்து. அப்பொழுது பாஹியான்

என்னும் சீனதேசத்து யாத்ரீகர் பௌத்தமத நூல்களை சேகரித்துக்கொள்ள நம் நாட்டிற்கு வந்திருந்தார். அவர் அக்காலத்தில் நாடு இருந்த நிலைமையைக் குறிப்பிட்டிருக்கின்றனர். இரண்டாவது சந்திர குப்தர் காலத்தில் தலை நகரம் பாடலிபுத்திரமல்லவென்றும் அயோத்திதானென்றும் கூறிப்படுகிறது. மத்திய தேசத்திலுள்ள ஜனங்கள் சௌக்கியமாகவும் செல்வத்துடனும் இருந்தார்களென்றும், நற்குணமுள்ளவர்களென்றும் அக்காலத்தில் பிரயாணம் செய்வதற்கு பல அநுகூலங்கள் இருந்தன வென்றும் அரசாங்கம் ஒழுங்காக நடத்ததென்றும் பாஹியான் கூறியுள்ளார்.

பாஹியான்.

இரண்டாவது சந்திர குப்தருக்குப் பிறகு முறையே குமார குப்தரும் ஸ்கந்த குப்தரும் ஆட்சி செய்தனர். குமார குப்தரின் கடைசிக் காலத்தில் ராஜ்யத்திற்கு பல துன்பங்கள் ஏற்பட்டன. அக்கஷ்டங்களினால் ராஜ்யம் சிதைவுண்டு போகாமல் குமார குப்தர் காப்பாற்றினார். ஆனால் சில காலத்திற்கு பிறகு ஹூணர்கள் என்னும் ஒரு வகுப்பினர் ராஜ்யத்தின்மீது படை எடுத்து வந்து அதை நாசம் செய்தனர். ஆயினும் குப்த அரசர்கள் கி. பி. 647 வரையிலும் ஆட்சி செய்து வந்தனர். மாளவ தேசத்திலும் குப்தர் வம்சத்தைச் சேர்ந்த ஒரு அரசன் ஆண்டு வந்தான். மாளவமும் மகத ராஜ்யமும் ஹர்ஷர் காலத்தில் ஒன்றாக சேர்க்கப்பட்டன.

ஹூணர்கள்.

குப்தர்கள் ஆட்சி செய்த காலத்தில் பல விதங்களிலும் நாடு மேம்பாடு அடைந்திருந்தது. மத விஷயங்களில் பண்டைக்கால ஆரியமதம் மாறுபாடுகளடைந்து இக்காலத்திலுள்ள ஹிந்து மதத்தைப் போலாயிற்று. நான்கு

ஜாதிகளும் ஏற்பட்டன. கலியாண சம்பந்த விஷயங்களில் ஜாதிக்கட்டுபாடுகள் பல ஏற்பட்டன. ஹிந்து மதம் தழைத்திருந்த போதிலும் பௌத்த மதமும் நாட்டில் பரவியிருந்தது. குப்த அரசர்கள் பிர மத வாதிகளிடம் விரோதம் பாராட்டவில்லை. இரண்டாவது சந்திர குப்தர் விஷ்ணு பக்தராயினும் பௌத்த மதத்தைச் சேர்ந்த ஒருவரை சேனைத் தலைவராகவும், சைவ சமயத்தார் சிலரை அமைச்சர்களாகவும் அமர்த்திக் கொண்டார்.

குப்தர்கள் கால சமூக வாழ்க்கை-மதம்.

குப்தர்கள் காலத்தில் ஆட்சி முறை ஏறக்குறைய மௌரியர்கள் காலத்திலிருந்ததை ஒத்திருந்தது. இவர்கள் காலத்தில் கல்வியும் கலைகளும் மேம்பாடடைந்திருந்தன. சம்ஸ்கிருத கவிகளில் முதன்மை பெற்ற காளிதாஸர் இக்காலத்தில் வசித்தவர். அஜந்தா குகைகளில் முதலிரண்டிலுள்ள சித்திர, சில்பவேலைகள் குப்தர் கால மேம்பாட்டை விளக்குகின்றன. முறையே கணித வான கலை சாஸ்திரங்களில் பிரபல மடைந்த ஆர்யபட்டர், வராஹமிஹிரர் இக்காலத்திலேயே வசித்தவர்களென்று சிலரால் கருதப் படுகிறது. அயல் நாடுகளோடு வாணிபம் நடந்ததாக பல அத்தாக்ஷிகள் உள்ளன. பல ஜாதியாரும் வாணிபத்திற்காக கடல் பிரயாணம் செய்தனர். இவ்விதம் சென்ற கப்பல் ஒன்றில்தான் பாஹியான் தம்மூர்போய்ச் சேர்ந்தார்.

13. ஹர்ஷவர்த்தனர்

குப்த ராஜ்யம் சிதைவுண்டதற்கு முக்கிய காரணம் ஹூணர்களின் படை எழுச்சி. குரூரமும் அநாகரிகமும் பொருந்திய அவர்கள் நாட்டின் பலபாகங்களை தீக்கிரை

யாக்கினர். இவர்கள் பாரஸீக அரசனைக் கொன்று அந்த ராஜ்யம் முழுவதையும் தம் வசப்படுத்திக்கொண்டு பிறகு கூட்டங் கூட்டமாக நம் நாட்டிற்குள் புகுந்து குப்த ராஜ்யத்தை அழித்து மாளவதேசம் வரையிலும் தம் வசப்படுத்திக்கொண்டனர். இத் துஷ்டர்கள் ஆண்ட காலத்தில் மக்களைப் பலவிதமாக துன்புறுத்தினர்.

ஹூணர்கள்.

வட இந்தியாவில் ஹூணர்களை எதிர்த்துச்சண்டையிட்டவர்களுக்குள் மத்திய தேசத்தை ஆண்ட மௌகாரி அரசர்கள் முக்கியமானவர்கள். அவர்கள் தலைநகரம் கன்னோசி (இக்கால கனௌஜ்). மாளவதேசத்தை ஆண்டு வந்த யசோதர்மனுக்குப் பிறகு மௌகாரி வம்சத்தைச் சேர்ந்த ஈஸ்வர வர்மா, ஈசானவர்மா என்பவர்களே வட இந்தியாவில் திறமையுடன் ஆண்ட அரசர்கள்.

மௌகாரியர்.

மௌகாரியருக்குப்பிறகு வடஇந்தியாவில் தானேஸ்வரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள் வர்த்தனர்கள். இவர்கள் வைசியர்கள் ; இவ்வம்சத்தை ஏற்படுத்தியவர் புஷ்பபூபதி. இவருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தவர்கள் நாட்டைத் திறமையுடன் ஆட்சி செய்தது மாத்திரமல்லாமல் தம் தேசத்தைச் சுற்றிலுமுள்ள முக்கிய ராஜ குடும்பத்தாரோடு கலியாண சம்பந்தங்கள் செய்து கொண்டனர். வர்த்தனர்களுள் முதலாவது முக்கிய அரசர் பிரபாகர வர்த்தனர். அவர் ஹூணர்களுடன் பலமுறை சண்டை செய்து தன் ராஜ்யத்துக்குச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களிலிருந்து அவர்களைத் துரத்தி விட்டார். அவருக்கு ராஜ்யவர்த்தனர், ஹர்ஷவர்த்தனர்

வர்த்தனர்கள்.

என்ற இரண்டு குமாரர்களும் ராஜ்யஸ்ரீ என்ற மகளும் இருந்தனர். ராஜ்யஸ்ரீயை கன்னேசி அரசனுக்கு மணஞ் செய்து வைத்தனர்.

ராஜ்ய வர்த்தனர்.

பிரபாகர வர்த்தனருக்குப் பிறகு அவருடைய மூத்த குமாரரான ராஜ்யவர்த்தனர் அரசரானர். அவர் அதிக காலம் ஆளவில்லை. அவர் பட்டத்துக்கு வந்ததும் மாளவ அரசனும் (வங்காளத்தை ஆண்டுவந்த) கௌடர்களும் கூடி, கன்னேசி நகரத்தைத் தாக்கி, ராஜ்யஸ்ரீயின் புருஷனை கிருஹவர்மனை தோற்கடித்துக் கொன்று ராஜ்யஸ்ரீயை சிறைப்படுத்தினர். இவ்விஷயத்தை அறிந்த ராஜ்யவர்த்தனர் ஒரு பெரிய குதிரைப் படையுடன் சென்று கன்னேசி நகரத்துக்கருகில் கிரஹவர்மனின் பகைவர்களைத் தோற்கடித்தனர். பிறகு கௌட அரசனை சசங்கனின் சூழ்ச்சியினல் ராஜ்ய வர்த்தனரே கொல்லப்பட்டார்.

ராஜ்யவர்த்தனர் கொல்லப்பட்ட விஷயம் தானேஸ்வரத்துக்குத் தெரிந்தவுடன் அமைச்சர்கள் ஒன்றுகூடி ஹர்ஷ வர்த்தனருக்கு முடி சூட்டினர்கள். கால தாமதம் செய்யாமல் ஹர்ஷர் தமது சகோதரியை சிறையினின்றும் மீட்க ஆயத்தமானர். ஆனல் அவர் கன்னேசியை அடைவதற்குள் ராஜ்யஸ்ரீ சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டதாக தெரிந்ததனல் அவளைத் தேடுவதற்காகப் புறப்பட்டார். கடைசியில் தீக்குளித்து உயிர் துறக்கும் தருவாயிலிருந்த சகோதரியை ஹர்ஷர் கண்டு பிடித்துக் காப்பாற்றி தலைநகரத்துக்கு கூட்டிக்கொண்டு போனர். அதுமுதல் தன் வாழ்நாள் முழுவதும் தன் சகோதரியின் ராஜ்யத்தையும் சேர்த்து ஆண்டு வந்தார்.

14. ஹர்ஷவர்த்தனரின் ராஜ்யம்

ஹர்ஷரின் படையெழுச்சி.

ஹர்ஷ ராஜனுக்கு தன் சகோதரியை காப்பாற்றியதால் மனவமைதி ஏற்படவில்லை. ஹூணர் முதலிய துஷ்டர்களால் துன்பங்களுக்குள்ளான நாட்டைக் காப்பாற்றும் பொருட்டு தம் ராஜ்யம் விஸ்தரிக்கும்படி யத்தனித்தார். தன் சகோதரியின் நாடும் தன் ஆட்சியின் கீழ் இருந்ததால் வெகு சீக்கிரத்தில் ஒரு பெரும்படையைத் திரட்டிக்கொண்டு அதிக பிரதேசங்களைவெல்லத் தயாரானர். ஆறு வருஷ காலத்திற்குள்ளாக மாளவம், சௌராஷ்டிரம், வங்கதேசம், காமரூபம் முதலிய நாடுகள் இவர் வசமாயின. வங்க தேசத்து அரசனை சசாங்கனை நாட்டிலிருந்து துரத்தினர். இவ்விதமாக ராஜ்யவர்த்தனனைக் கொன்றதற்காக சசாங்கனை தண்டித்தார். சசாங்கனை தண்டிப்பதற்காக அவனைத் துரத்திக்கொண்டு போகும் சமயத்தில் கலிங்க தேசத்துக்குள் (ஒரிஸ்ஸா) புகுந்து இக்காலத்திய கஞ்சம் ஜில்லாவரையில் வந்ததாக சொல்லப்படுகிறது. கி. பி. 612-ம் வருஷத்திற்குள்ளாக மேற்கூறிய பிரதேசங்களையெல்லாம் ஹர்ஷர் ஜயித்தார்.

வட இந்தியா முழுவதையும் ஜயித்த பிறகு தென் இந்தியாவையும் வெல்ல வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அக்காலத்தில் தக்காணத்தின் பெரும்பாகம் மேற்கு சளுக்கிய அரசனை இரண்டாம் புலிகேசன் ஆட்சிக் குட்பட்டிருந்தது. புலிகேசன் அதிக சாமர்த்தியசாலி. அவரிடம் ஒரு பெரும் படை இருந்தது. அவர் ஹர்ஷவர்த்தனர் தெற்கே படை எடுத்து வந்தபோது அவரை நர்மதைக் கரையில் எதிர்த்துத்



ஹர்ஷர் ராஜ்யத்தின் எல்லைகளை கவனிக்கவும்

தோற்கடித்தார். அத்தோல்வியுடன் ஹர்ஷவர்த்தனர் தென் இந்தியாவை ஜயிக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கைவிட்டார்.

ஹர்ஷரின் ஆட்சி முறை.

இவ்விதம் ஏற்படுத்திய பெரிய அரசாங்கத்தை காலத்துக்குத் தக்கவாறு வேண்டிய மாறுபாடுகளைச் செய்து மௌரிய குப்த அரசர்களைப் போலவே ஹர்ஷர் ஆளத் தொடங்கினர். ஹர்ஷர் அசோகரைப் போலவே தம் ஜனங்களுக்காக மிகவும் கஷ்டப் பட்டு வேலை செய்தார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளையும் மூன்று பாகங்களாகப் பகிர்ந்து முதல் பாகத்தை அரசாங்க விஷயத்திற்காகவும் இரண்டாம் பாகத்தை கல்வி விஷயத்தை கவனிக்கவும் மூன்றும் பாகத்தை மத விஷயத்தை கவனிக்கவும் உபயோகப்படுத்தி வந்தார். எப்பொழுதும் தன் ராஜ்யத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து ஜனங்களுடைய கஷ்டங்களை கவனித்து அவைகளை நீக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார். ஐந்து வருஷத்திற் கொருமுறை பிரயாகையில் ஒரு மகா நாட்டைக் கூட்டி அந்த சபைக்கு கல்வி கேள்விகளில் தேர்ச்சிபெற்ற பண்டிதர்களையும் மத குருமார்களையும் வரவழைத்து அதிகமாகக் கொடைகளைச் செய்தார். அவர்களுக்கு மாத்திரமல்லாமல் ஏழைகளுக்கும் கூட முன் ஐந்து வருஷங்களில்தான் சேகரித்த பொருள்களை (படைகளையும் அவைகளுக்கு வேண்டிய முஸ்திப்புகளையும் தவிர) தனக்காக ஒன்றும் வைத்துக்கொள்ளாமல் எல்லாருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். அசோகருக்குப் பிறகு இவ்விதம் ஆண்ட அரசர் இவரைத் தவிர ஒருவரும் இல்லை யென்று சொல்லலாம்.

கல்வி.

ஆட்சி முறையில் மாத்திரமன்றி கல்வி அபிவிருத்தியைப் பற்றியும் ஹர்ஷர் அதிக ஊக்கங் கொண்டார். இவர் சம்ஸ்கிருத பாஷையை நன்ருகக் கற்றவர். நாகாநந்தம், பிரியதர்சிகை, ரத்னவளி என்ற நாடகங்களை இயற்றினர். ஹர்ஷரின் சபையில் இருந்த பாணர் ஹர்ஷ சரிதம், காதம்பரி என்னும் நூல்களை இயற்றியிருக்கிருர். ஹர்ஷவர்த்தனர் நலந்தா, தக்ஷசிலம் முதலிய விடங்களிலிருந்த பல்கலைக் கழகங்களுக்கு அதிகமாகப் பொருளுதவி செய்தார்.

மதம்.

ஹர்ஷர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர். அவர் காலத்தில் பௌத்த மதம் மறுபடியும் தழைத்தோங்கியது. ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை கூட்டும் மகா நாட்டில் புத்தரை தொழுவதற்காக ஏற்பாடுகளும் செய்வதுண்டு. ஹர்ஷருக்கு முன்பு பௌத்த மதத்தில் ஹீனயானம், மஹாயானம் என இரு பிரிவுகள் ஏற்பட்டிருந்தன. புத்தர் ஏற்படுத்தியபடி நடந்து வந்தவர்களுக்கு ஹீனயானர் என்று பெயர். அவர்களுக்கு பௌத்த தர்மம் தவருமல் நடப்பதுதான் மோக்ஷ சாதனம் என்பது கொள்கை. மஹாயானர்கள் அதனுடன் திருப்தியடையாமல் புத்தரை ஒரு கடவுளாகக் கருதி அவர் ஜீவிய சரித்திரத்தைப்பற்றி புராணங்கள் எழுதி பாரஸீக கிரேக்க சில்ப சாஸ்திரங்களின் பிரகாரம் அவர் உருவங்களையும் இதர பௌத்த குருக்களின் உருவங்களையும் செய்து அவைகளைத் தொழ ஆரம்பித்தனர். ஹர்ஷருடைய காலத்தில் மஹாயான மதம் அதிகமாகப் பரவிற்று.

யுவான்ச்சாங் வட இந்தியாவில் ஹர்ஷவர்த்தனர் ஆட்சி செய்யும் போது மிகவும் பிரபல மடைந்த சீன யாத்ரீகர் யுவான்ச்சாங் நம் தேசத்தில் பௌத்தமத சம்பந்தமான நூல்களை சேகரிக்கவும், ஸ்தலங்களை கண்டு களிக்கவும் வந்தார். அவர் மஹாயான பௌத்த மத குருக்களுள் ஒருவர். அவர் கி. பி. 629-முதல் 645-வரையில் நம் தேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து தென் இந்தியாவில் காஞ்சிபுரம் முதல் சளுக்கிய ராஜ்யத்தின் வழியாக பிரயாணம் செய்து கடைசியாக வட இந்தியாவை அடைந்தார். வெகுகாலம் நலந்தா பல்கலைக் கழகத்தில் இருந்து பௌத்த நூல்களை சேகரித்தார். அவருடைய ஊக்கம், மதப்பற்று, கல்வித்திறம் முதலியவைகளைக் கண்ட ஹர்ஷர் அவரைத் தம் சபைக்கு வரவழைத்து ஏராளமான வெகுமதிகளைச் செய்தார். அவருடைய தலைமையின் கீழ் மத சம்பந்தமான மகாநாடுகள் பல கூடின. மத விஷயமான சம்வாதங்களில் யுவான்ச்சாங் அடிக்கடி ஜய மடைவதைக் கண்டு ஹர்ஷர் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அவர் திரும்பி தம் தேசத்துக்குப் போகும்போது ஏராளமாக பொருளைக் கொடுத்து உதவி செய்து அனுப்பினார். நமது தேசத்தின் அக்கால நிலையைப் பற்றி யுவான்ச்சாங் எழுதிவைத்திருக்கும் விஷயங்கள் மிகவும் உபயோகமாயுள்ளன. அவர் இந்தியாவில் இருந்தநாடுகளின் பெயரையும் அவைகளை ஆட்சி செய்த அரசரின் பெயரையும், மக்களின் நிலையையும் நாகரிகத்தையும் பற்றி எழுதியிருக்கிறார்.

அத்தியாயம் 6

ஹர்ஷர் காலத்துக்குப்பின் இந்தியாவின் நிலை

முக்கிய விஷயங்கள் :—ராஜபுத்திரர் - அவர்களுடைய ராஜ்யங்கள்-இந்தியாவின்மேல் அரபியர் படையெழுச்சி - பல்லவ, சளுக்கிய, சோழ ராஜ்யங்கள்.

15. ராஜபுத்திரர்கள்

ஹர்ஷ வர்த்தனர் மரண மடைந்த பிறகு அவர் ராஜ்யம் சிதைவுண்டு பல சிறு ராஜ்யங்களாக ஏற்பட்டது. அது முதல் சுமார் கி.பி. 1000 வரையில் வட இந்தியாவில் என்ன நடந்ததென்று சொல்வதற்கு விசேஷமான ஆதாரங்கள் கிடையா. ஆனால் இந்த நான்கு நூற்றுண்டுகளிலும் நம் நாட்டில் பெரும்பாகம் ராஜ புத்திரர்கள் வசமாக இருந்தது.

ராஜ புத்திரர்கள் ஆதிகால க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்தவர்களின் சந்ததியார் என்பது ஒரு சாரார் கொள்கை. மற்றும் சிலர் இவர்கள் சாக ஹூண வகையார்களின் சந்ததியார் எனக் கொள்வர். அவர்கள் யாரான போதிலும் மிக்க தைரியமும் வீரமும் பொருந்தியவர் என்று சொல்வதற்கு ஒரு சந்தேகமும் இல்லை. 8,9, 10-ம் நூற்றுண்டுகளில் ஹிந்து தேசத்தின் சரித்திரத்தில் அவர்களே முக்கிய மானவர்கள். வட இந்தியாவில் எவ்விடத்திலும் அவர்களால் ஏற்படுத்தப் பட்ட ராஜ்யங்கள் இருந்தன. பௌத்த மதம் குன்றி ஹிந்து மதம் ஓங்குவதற்கு ராஜ புத்திரர்கள் பிற்கூறிய மதத்திற்கு அளித்த ஆதரவே காரணம். நாட்டிலெங்கும் கோவில்களைக் கட்டி விக்கிரஹங்களை ஸ்தாபனம் செய்து பூஜைகளும்

திரு விழாக்களும் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்தது அவர்கள் தான். மகம்மதியர்கள் ஸிந்து தேசத்தை ஜயித்து தார் பாலைவனத்தைக் கடந்து மற்ற தேசங்களை ஜயிக்க பிரயத்தனம் செய்தபொழுது அவர் களைத் தடுத்ததும் ராஜபுத்திரர்களே. அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஜனங்கள் மத ஒழுக்கம் தவறாமலும் செல்வம் உள்ளவர்களாகவும் இருந்தார்களென்று அக்காலத்தில் நம் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்த அரபியர்கள் தங்கள் அபிப்ராயங்களைத் தெரிவித்திருக்கின்றனர். கி. பி. 1000 வரையில் இவ்வித நிலையே வட இந்தியாவில் பரவி யிருந்தது.

கட்ச் பிரதேசம் முதல் ரோஹில்கண்ட் வரையிலும் ராஜபுத்திர ராஜ்யங்கள் பரவி யிருந்தன. குஜராத் கத்தி யவார் நாடுகளில் சோலங்கா ராஜ புத்திரர்கள் அன்ஹில் வாரா பட்டணத்தைத் தலை நகராக்கிக் கொண்டு ஆட்சி செய்து வந்தனர். அந்த வம்சத்தை ஏற்படுத்தியவரின் பெயர் பிரமுகர். மாளவத்தில் பிரதிஹாரா வகுப்பைச் சேர்ந்த ராஜ புத்திரர்கள் தாரா பட்டணத்தைத் தலை நகராக்கிக்கொண்டு ஆண்டனர். அவர்களுக்குள் முக் கிய மானவர் போஜராஜா. மீவாரில் குஹிலாட்டுகள் ஆண்டனர். அவர்களுக்கு அப்பெயர் வரக்காரணம் அவர்களின் மூல புருஷர் ஒரு குகையில் பிறந்தவர். அவருடைய தலை நகரம் சித்தூர். இவ்வம்ச அரசர்களுள் முக்கியமானவர் பப்ப ராஜா. சாம்பார் ஏரிக்கருகில் சௌஹான் வகுப்பைச் சேர்ந்த ராஜபுத்திரர்களும் குவாலியரில் கச்சவர்களும் டில்லியில் தோமரர்களும் இருந்தனர். இவர்கள் மாத்திரமல்லாமல் காலஞ்சரில் சண்டேல்களும், கன்னோசியில் கஹத்வார்களும் வசித்து வந்தனர். இவர்களெல்லோரும் பிரசித்தி பெற்றவர்.



ராஜபுத்திர வம்சத்தினர் எங்கெங்கு ஆட்சி செய்தனரென்பதை கவனிக்கவும்.

மகம்மதியர்களுடன் எதிர்த்துச் சண்டை செய்தது இவர்களே யாவர்.

16. அரபியர் படை யெழுச்சி

அரபியர்கள் ஆசியா கண்டத்திலுள்ள அரேபியா தேசத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மகம்மதியர்கள்; தைரியமும், ஊக்கமும் உள்ளவர்கள்.

முகம்மது நபி கி. பி. 570-ல் அரேபியா தேசத்தில் மெக்கா நகரத்தில் பிறந்தார். அக்காலத்தில் அரபியர்கள் நாகரிக மற்றவர்களாய் ஒருவரோடொருவர் சண்டை யிட்டு வந்தனர். சிறு வயதிலிருந்தே முகம்மது உலக இயல்புகளைப்பற்றி ஆழ்ந்த யோசனை செய்வதுண்டு. சில காலத்திற்குப்பிறகு அவருக்கு கடவுளின் அருள் ஏற்பட்டது. அது முதல் அவர் தம் புதிய மதக் கொள்கைகளை அரபியருக்குப் போதனை செய்தார். ஆனால் மெக்காவிலிருந்த அரபியர்கள் அவருடைய உபதேசங்களை அங்கீகரிக்காமல் அவரைத் துன்புறுத்தினர். 622-ம் வருஷத்தில் அவர் தம் முக்கிய சிஷ்யர்களுடன் மெடினா பட்டணத்திற்கு ஓடி ஒளிந்து கொண்டார். இவ்வோட்டத்திற்கு ஹிஜிரா என்று பெயர். இவ் வருஷ முதலே மகம்மதிய சகாப்தமான ஹிஜிரா ஆரம்பமாகிறது. மெடினாவில் முகம்மது தம் புதிய மதத்தைப் போதித்தபோது அங்குள்ள ஜனங்கள் அதை ஒப்புக்கொண்டனர். பிறகு ஒரு சேனையைத் திரட்டிக் கொண்டு, அவர் மெக்காவின் மேல் படை எடுத்துச் சென்று அப்பட்டணத்திலுள்ளவர்களைத் தோற்கடித்து தன் அதிகாரத்தை நிலை நாட்டினார். அவர் போதித்த மதத்திற்கு மகம்மதிய மதம் எனப் பெயர் வந்தது.

முகம்மது நபி 570-632.

அதன் முக்கிய கொள்கைகள்; கடவுள் ஒருவரே, முகம்மதுவே மதத்தின் முக்கிய குரு, ஜனங்கள் விக்ரஹ ஆராதனை செய்யலாகாது மக்களெல்லோரும் ஒரே குடும்பத்தினரைப்போல் ஒத்து வாழவேண்டும். குரான் என்பது மகம்மதியரின் முக்கிய மதப் புஸ்தகம்.

அரபியர்கள்.

முகம்மது நபி மகம்மதிய மதத்தை ஏற்படுத்தினர். அவர் 632-ம் வருஷத்தில் மரணமடைந்தார். அதற்குப் பிறகு நூறு வருஷத்திற்குள் மதப்பற்றும் போர்செய்வதில் திறமையும் அதிகமாகயிருந்த அரபியர்கள் தங்கள்தேசத்தைச் சுற்றியுள்ள நாடுகளை ஜயித்து கிழக்கில் கிர்தார் சுலைமான் மலைகளிலிருந்து மேற்கில் ஜிப்ரால்டர் வரையிலும், வடக்கில் காஸ்பியன் கடல் முதல்தெற்கே சூடான் வரையிலும் ஓர் பேரரசை நாட்டினர்.

பரந்த மகம்மதியப் பேரரசின் அதிபதிக்குக் கலீப் என்று பட்டம். இந்த விசாலமான ராஜ்யத்தை ஆள்வதற்காக அதை பல பிரிவுகளாக்கி ஒவ்வொன்றிலும் ஓர் ராஜப்பிரதிநிதியை ஏற்படுத்தி அவர்களின்கீழ் பல உத்தியோகஸ்தர்களை நியமித்து ராஜ்யத்தை ஆண்டு வந்தார். அகன்ற மகம்மதிய ராஜ்யத்தின் கிழக்குப்பிரிவில் ஹஜாஜ் என்பவர் அதிபதியாக இருந்தார். அவர் 712-ம் வருஷத்தில் ஓர் அரபிய படையை நம் நாட்டை ஜயிப்பதற்காக அனுப்பினர்.

அரபியர் படை எழுச்சிக்குக் காரணம்.

அக்காலத்தில் ஸிந்துப் பிரதேசத்தில் தாஹிர் என்பவர் தேபால் பட்டிணத்தில் ஆட்சி செய்து வந்தார். ஸிந்துநதியின் முகத்துவாரத்தில் ஓர் துறைமுகமும் ஓர் கோயிலும் இருந்தன. ஸிம்மளத் தீவிலிருந்து அரபிய கன்னிகைகள் சிலரைக் கொண்டு

போகும் கப்பல் ஒன்று துறைமுகத்துக் கருகிலுள்ள கோவிலில் இருந்தபோது, சில திருடர்கள் அவர்களுடைய பொருள்களைக் கொள்ளையிட்டனர். இவ்விஷயம் கலீபுக்குத் தெரிந்தவுடன் அவர் கொள்ளைக்காரரை தண்டனை செய்ய வேண்டுமென்று தாஹிருக்குத் தெரிவித்தார். அப்போது தாஹிர் விஷயம் தனக்கொன்றும் தெரியாதென்று அசட்டையாக இருந்து விட்டார். அதனல் கலீபுக்குக் கோபம் ஏற்பட்டு அக் கோவிலைப் பிடித்துக் கொள்வதற்காக இருமுறை கப்பற்படைகளை அனுப்பினர். ஆனல் அவைகளைத் தாஹிர் தோற்கடித்தார். அதற்குப் பிறகு கலீப் தாஹிரை தண்டிப்பதற்காக ஒரு பெரும் படையை அனுப்பும்படி ஹஜாஜுக்குக் கட்டளையிட்டார். ஆதலால் ஹஜாஜ் மகமத் பின் காஸிம் என்பவரின் தலைமையின் கீழ் ஒரு பெரும் படையை அனுப்பினர்.

ஸிந்துப் பிரதேசத்தை ஜயித்தல்.

மகமத் பின் காஸிம் ஸிந்து நாட்டிற்குள் புகுந்து தாஹிருடன் கடும்போர் புரிந்து அவரைத் தோற்கடித்துக் கொன்றார். பிறகு மகம்மதியர்கள் ஸிந்துப் பிரதேசத்திலிருந்த ஒவ்வோர் பட்டணத்தையும் கைப்பற்றிக்கொண்டு அவ்வவ்விடங்களில் இருந்த கோவில்களை அழித்தது மாத்திரமன்றி பல ஜனங்களையும் வெட்டிக் கொன்றனர். பத்து வருஷ காலத்திற்குள், ஸிந்து ராஜ்யம் முழுவதையும் மகமத் பின் காஸிம் ஜயித்து அதை மகம்மதியப் பேரரசின் ஓர் பாகமாக்கினர். இந்நாடு சுமார் 1,000 வருஷ காலம் மகம்மதியர் ஆட்சியில் இருந்து வந்தது.

மகம்மதியர் கைப்பற்றிய பிரதேசத்துக்கருகில் பாலைநிலமாக இருந்ததாலும், மகம்மதிய அதிபதிகள் இந்தியாவிற்கு வந்த மகம்மதியருக்கு உதவி அனுப்பாததனலும்,

ராஜபுத்திரர்கள் தங்கள் நாட்டையும் ஹிந்து மதத்தை யும் காப்பாற்ற வீரத்துடன் போர் புரிந்ததாலும் மகம் மதியர்கள் வட இந்தியாவில் தங்கள் அதிகாரத்தை பெருக்க முடியாமலிருந்தது.

17. பல்லவர்கள், சளுக்கியர்கள், சோழர்கள்

ஆந்திரர் ராஜ்யத்தின் பலம் குன்றிய பிறகு தக்கா ணத்தில் பல சிற்றரசுகள் ஏற்பட்டன. இக்காலத்தில் மஹாராஷ்டிர பிரதேசம் உள்ளவிடத்தில் ராஷ்ட்ரகூடர் களும் மத்திய பாகத்தில் இக்ஷவாகுகளும் தென்கிழக்கில் பல்லவர்களும் ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு ஆளத் தொடங்கினர். இவர்களெல்லோரும் ஆந்திர மன்னரின் ஆதிக்கத்துக்குக் கீழ்பட்டிருந்தனர். இவர்களுக்குள் பல்லவர் வலிமையடைந்து ஆந்திர தேசத்தில் ஓர் பெரிய ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொண்டு ஆளத் தொடங்கினர்.

பல்லவர்கள். பல்லவர்கள் சுதேச ஜனங்களின் வம்சத்தைச் சேர்ந் தவரா அல்லது அயல் நாடுகளிலிருந்து படையெடுத்து வந்தவர்களின் சந்ததி யாரா என்பது நிலையாகச் சொல்ல முடியாது. ஆனால் இவர்கள் புராதன ஜனக்கூட்டத்தா ரான நாக வம்சத்தைச் சேர்ந்தவரென்று நினைக்கக் காரணங்கள் உள்ளன. முதலில் பல்லவ அரசர்கள் அமராவதி (கிருஷ்ணா நதிக்கருகில்) பட்டணத்தைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்ததாகத் தெரிகிறது. தொண்டைமண்டலத்தில் சில பாகங்களை ஜயித்தபிறகு காஞ்சிபுரத்தை தலைநகராக்கிக் கொண்டு ஆளத் தொடங் கினர். பல்லவ ராஜாக்கள் ஹிந்து மதத்தை ஆதரித்து பிராம்மணர்கள் வசிக்க கிராமங்களை ஏற்படுத்தினார்கள். சமுத்திர குப்தர் தக்ஷிணத்தின்பேரில் படை எடுத்து

வந்தபோது கி. பி. 350-ம் வருஷத்தில் கிருஷ்ண நதி தீரத்தில் அவரை எதிர்த்துச் சண்டை செய்த பல்லவ அரசர் விஷ்ணுகோபர்.

காஞ்சிபுர பல்லவ அரசர்கள்.

காஞ்சிபுரத்தில் ஆண்ட பல்லவ அரசர்களுள் அநேகர் பிரபலமடைந்தனர். அவர்களுக்குள் முதல் அரசர் சிம்மவிஷ்ணு (575-600). அவருக்குப்பின் அவருடைய குமாரன் மஹேந்திர வர்மனும் பேரனை நரசிம்ம வர்மனும் பராக்கிரமத்துடன் செங்கோல் செலுத்தி வந்தனர். பல்லவர்களுக்கும் சளுக்கியர்களுக்கும் எப்பொழுதும் சண்டை நடந்து வந்தது. சில சமயங்களில் பல்லவர்களும் மற்றும் சில சமயங்களில் சளுக்கியர்களும் ஜயமடைந்து வந்தனர். ஏழாம் நூற்றாண்டில் சளுக்கிய அரசரான இரண்டாவது புலிகேசன் வெங்கி நாட்டின்பேரில் படையெடுத்துச் சென்று பல்லவ அரசனை மஹேந்திர வர்மனைத் தோற்கடித்து, பல்லவ ராஜ்யத்தில் கிருஷ்ண நதிக்கு வடக்கில் இருந்த பிரதேசங்களைத் தம் வசமாக்கிக்கொண்டார். அதன் பிறகு பல்லவர்களுக்கும் சளுக்கியர்களுக்கும் விரோதம் அதிகமாயிற்று.

சளுக்கியர்கள்.

சளுக்கிய அரச வம்சத்தைச் சேர்ந்த முதல் அரசர் ஜயசிம்மர். அவர் பேரனை முதல் புலிகேசன் 550-ம் வருஷத்தில் பட்டத்துக்கு வந்தார்; அரசரான சிறிது காலத்திற்குள் ராஷ்ட்ரகூடர்களைத் தோற்கடித்து அவர் ராஜ்யத்தை வசப்படுத்திக்கொண்டு வாதாபி (பாதாமி) நகரத்தைத் தலைநகராக்கிக் கொண்டனர். கடைசியாக கதம்பர்களையும் பல்லவர்களையும் வென்று தன் ராஜ்யத்தைப் பெருக்கினர். அவருக்குப் பிறகு கீர்த்தி வர்மன்

அரசராகி சளுக்கிய ராஜ்யத்தைத் தெற்கே மைசூர் வரையிலும் விஸ்தரிக்கும்படி செய்தார். அவர் 591-ம் வருஷம் மரணமடைந்தார். அப்பொழுது அவர் குமாரர் புலிகேசன் உரிய பிராயம் அடையாதவராய் இருந்ததனால் அவருக்காக நாட்டை ஆள தன் இளைய சகோதரரான மங்களேசனை நியமித்தார். மங்களேசர் கிழக்கு முகமாகப் படையெடுத்துச் சென்று சில பிரதேசங்களைக் கைப்பற்றினார். பிறகு சளுக்கிய ராஜ்யம் முழுவதையும் தாமே ஆள பிரயத்தனம் செய்ததால் சிறு வயதினரான புலிகேசனுக்குக் கோபம் ஏற்பட்டு தன் சிற்றப்பனுடன் சண்டை செய்து அவரைக் கொன்று ராஜ்யத்தைத் தாமே ஆள ஆரம்பித்தார்.

இரண்டாவது புலிகேசன்.

இரண்டாம் புலிகேசன் மிகவும் வீரம் பொருந்தியவர். அவர் பட்டத்துக்கு வந்த 23 வருஷத்திற்குள்ளாக தன் ராஜ்யத்தை எல்லா திசைகளிலும் பரவச் செய்து ஓர் பேரரசாக ஆக்கினார். ராஷ்ட்ரகூடர்களையும் கதம்பர்களையும் கூட தோற்கடித்து தம் ஆதிக்கத்தை ஒத்துக்கொள்ளும்படி செய்தார். மேற்கில் கொங்கணத்திலுள்ள மௌரியர்களைத் துரத்திவிட்டு அப் பிரதேசத்தையும் தன் ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டார்.

ராஜ்யம்.

பிறகு வெங்கி, கலிங்க நாடுகளையும் வென்று தன் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். இவை மாத்திரமன்றி தெற்கு முகமாகவும் படைகளுடன் சென்று காவிரியாற்றைக் கடந்து சோழ, சேர பாண்டிய மன்னர்களை தம் துணைவர்களாக்கிக் கொண்டார். அவர் ராஜ்யம் மிகவும் விஸ்தாரமாக இருந்ததால் 610-611 வருஷங்களில்

வெங்கி நாட்டை ஆள்வதற்கு தம் இளைய சகோதரரான குப்ஜ விஷ்ணுவர்த்தனரை நியமனம் செய்தார். ஹர்ஷர் புலிகேசனின் மீது படை எடுத்து வந்தபோதிலும், தாமே 620-ம் வருஷத்தில் தோல்வியடைந்தார். ஆதலால் அந்தக் காலத்தில் இந்தியா தேசத்தில் புலிகேசனைப் போன்ற வீரம் பொருந்தியவர் மற்றெவருமில்லை என்று சொல்லலாம்.

புகழ்.

அவர் ராஜ்யம் வடக்கே விந்திய மலை முதல் தெற்கே காவிரி வரையிலும் மேற்கிலும் கிழக்கிலும் கடல் வரையிலும் பரவி இருந்ததாகச் சொல்லலாம். இவருடைய புகழைக்கேட்டு பாரஸீக மன்னனான குஸ்ரு என்பவர் 625-ம் வருஷத்தில் ஓர் தூதுவரை புலிகேசன் ராஜசபைக்கு அனுப்பினார்.

மக்கள் நிலை.

யுவன்ச்சாங் என்னும் சீன யாத்ரீகரும் இவருடைய ராஜசபைக்கு வந்தார். ஜனங்கள் நீதி தவறாமல் நடந்து வந்ததாகவும் புலிகேசன் அதிகமாக அறம் செய்பவரென்றும் மக்களை தம் குழந்தைகளைப்போல பாவித்து வந்ததாகவும் அவரிடத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு பெரும் படையிருந்ததாகவும் யுவன்ச்சாங் எழுதியிருக்கிறார்.

புலிகேசன் காஞ்சிபுரத்தின்பேரில் படை எடுத்ததை பல்லவர்கள் மறக்கவில்லை. பல்லவ அரசனாகிய நரசிம்மவர்மன் ஒரு பெரும் படையுடன் சென்று 642-ம் வருஷத்தில் வாதாபி நகரத்தை முற்றுகையிட்டு சண்டையில் புலிகேசனைக் கொன்று அவர் தலைநகரத்தை அழித்தார்.

இரண்டாம் புலிகேசனுக்குப் பிறகு முறையே விக்ரமாதித்யர், வினயாதித்யர், விஜயாதித்யர், இரண்டாவது விக்ரமாதித்யர், கீர்த்திவர்மன் என்னும் அரசர்கள் ஆட்சி செய்தனர். இவர்களுள் முதல்வரும் கடைசியில்

சொல்லியவரும் பல்லவர்களோடு சண்டை யிட்டுக் கொண்டு காஞ்சிபுரம் வரையில் சென்றனர்.

ராஷ்ட்ர கூடர்கள்.

சளுக்கிய ராஜ்யத்தின் சிற்றரசர்களுள் ஒருவரான ராஷ்ட்ரகூட வம்சத்தைச் சேர்ந்த தந்திதுர்க்கர் 754-ம் வருஷத்தில் இரண்டாவது கீர்த்தி வர்மனை பட்டத்தினின்றும் விலக்கி தாமே அரசரானார். அவருக்குப் பின் ஆண்ட முதலாவது கிருஷ்ணன் காலத்தில் (நிஜாம் ராஜ்யத்திலுள்ள) எல்லோராவில் மலைப் பாறையைக் குடைந்து கைலாசநாதர் கோவில் கட்டப் பட்டது.

சோழ ராஜாக்கள்.

தக்காணத்தில் சளுக்கியர்களும் ராஷ்ட்ரகூடர்களும் ஆட்சி செய்த காலத்தில், தென் இந்தியாவில் சோழ ராஜாக்கள் முதன்மை பெற்றிருந்தனர். வெகு காலமாக தெற்கே சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்கள் இருந்து வந்தன. இவைகளுக்குள் சோழ ராஜ்யம் மிகவும் பெயர்பெற்றது. இது காவிரி பிரதேசத்திலிருந்தது. முதன் முதலாக சோழ ராஜ்யத்தை ஆட்சி செய்தவர்களுக்குள் முக்கியமானவர் கரிகால் சோழர் (சுமார் கி. பி 100-123). இவர் பெயர் பெற்ற வீரர். இவர் பாண்டிய அரசர்களைத் தோற்கடித்து தன் ராஜ்யத்தை விஸ்தரிக்கச் செய்தார். தன் தலை நகரை திருச்சினாப் பள்ளிக் கருகிலிருந்த உரையூரிலிருந்து காவிரி நதியின்

கரிகால் சோழர்.

முகத்துவாரத்தில் காவிரிப்பூம் பட்டினத்துக்கு மாற்றினார். காவிரி நதியின் வெள்ளத்தைத் தடுப்பதற்காக இரு கரையிலும் 100 மைல் நீளம் உயர்ந்த கரைகள் கட்டினார். சில கால்வாய்களும் வெட்டி ஆற்றின்

ஜலத்தை விவசாயத்துக்கு உபயோகப்படும்படி செய்தார். இவருக்கு பிறகு சோழ ராஜ்யம் பலம் குன்றியது.

பல்லவ ராஜாக்களின் ஆதிக்கம் குறைந்த பிறகு மறுபடியும் சோழ ராஜாக்கள் முன்னேற்ற மடைந்தனர். இவர்கள் பத்தாவது நூற்றாண்டு முதல் பனிரண்டாவது நூற்றாண்டு வரையில் ஒரு பெரிய ராஜ்யத்தை ஆண்டு வந்தனர். அவர்களுக்குள் 985-முதல் 1013-வரையில் ஆண்ட ராஜ ராஜர் முக்கிய மானவர். அவர் வெங்கி நாடு, குடகு, கலிங்கம், லக்ஷத்தீவு, மல்லத்தீவு, மேற்கு சளுக்கிய ராஜ்யம் முதலிய பிரதேசங்களை வென்று தன் ராஜ்யத்தோடு இணைத்துக் கொண்டார். இது மாத்திர மன்றி இவருக்குப்பின் இவருடைய குமாரர் கங்கை கொண்ட சோழன் எனப்புகழை அடைந்த ராஜேந்திரன் (1013—1042) பட்டத்துக்கு வந்தார். இவர் கிழக்கில் பர்மா தேசத்திலுள்ள பெரு பிரதேசத்தையும் கிழக்கிந்தியா தீவுகளில் ஒன்றாகிய சுமத்ராவில் ஸ்ரீ விஜயர் என்பவர் ராஜ்யத்தையும் வென்றார். இவருடைய கப்பற் படையை தடுக்க முயன்ற வங்காள அரசனைத் தாக்கித் தோற்கடித்தார். கங்கா நதிவரையில் சென்றதற்காக கங்கை கொண்டான் என்ற பட்டத்தை ஏற்றுக் கொண்டார். கங்கை கொண்ட சோழபுரம் என்னும் நகரத்தைக் கட்டி அதையே தன் தலை நகரமாக்கிக் கொண்டார். அவருக்குப்பின் ராஜாதி ராஜர் அரசனாய் 1054-ம் வருஷம் வரையில் ஆட்சி செய்தார். இவ்விதம் மேன்மையடைந்த சோழ ராஜ்யம் 1120-ம் வருஷம் வரையில் உன்னத நிலையிலிருந்தது.

ராஜ்யத்தை ஒழுங்காக நடத்துவதற்காக சோழ அரசர்கள் தம் ராஜ்யத்தை மண்டலங்களாகவும் (மாகாணங்கள்) மண்டலங்களை கோட்டங்களாகவும் வளநாடுக

ளாகவும் (மாகாண உட் பிரிவுகள்) கோட்டங்களை நாடுகளாகவும் (ஜில்லாக்கள்) பிரித்தனர். ஒவ்வொரு நாடும் சில கிராமங்கள் சேர்ந்த பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. கிராமங்களின் கூட்டத்துக்கு கூற்றம் என்று பெயர். தலைநகரிலிருந்து நெடுந்தூரத்திலிருந்த மண்டலங்களுக்கு ராஜ குடும்பத்தினரே ராஜப்பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டனர். அவர்களின் கீழ் வேலை செய்ய பல உத்தியோகஸ்தர்களிருந்தனர். சோழர்கள் ஆட்சியில் நாட்டின் ஆட்சிக்கு கிராம பரிபாலனமே அடிப்படையாக விருந்தது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மகா சபை இருந்தது. இச்சபையின் அங்கத்தினர்கள் கிராமத்தாராலே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அச்சபையினர் தேர்ந்தெடுத்த பஞ்சாயத்தார்கள் நியாய விசாரணை, சமுதாய தோட்டங்கள், நிலங்கள், நீர்பாசன வசதிகள், சத்திரங்கள், கல்வி, வைத்தியசாலை முதலியவற்றை மேல் பார்வையிட்டு வந்தனர். விவசாய அபிவிருத்திக்காக சோழ அரசர்கள் காவிரி நதியில் அணைகள் கட்டி நீர்பாசன வசதிகளை ஏற்படுத்தினர். அவர்கள் கோவில்களை யுடைய பல பட்டணங்களையும் கட்டினார்கள். சோழ அரசர்களின் தலை நகரமாகிய தஞ்சாவூரில் பிரஹதீஸ்வர ஆலயத்தை ராஜ ராஜர் கட்டினார். இக்கோவில்கள் ஆலயங்களாக மாத்திரமன்றி, கல்விச்சாலைகளாகவும் நாட்டிய சாலைகளாகவும் உபயோகப்பட்டன. பட்டணங்களில் முக்கிய விஷயங்களைத் தீர்மானம் செய்ய ஒரு சபை இருந்தது. யாத்திரை செய்வோரின் நன்மைக்காக அரசர்களும் பணக்காரர்களும் சத்திரங்களை கட்டி வைத்தனர். வைஷ்ணவ மத ஆசாரியரான ராமானுஜர் பதினோரும் நூற்றுண்டில் வசித்தனர்.

சோழர் ஆட்சி முறை.

அத்தியாயம் 7

மகம்மதிய ஆட்சியின் ஆரம்பம்

முக்கிய விஷயங்கள் :—கஜினி மாமூத் படை எழுச்சி - கோரி முகம்மது படை எழுச்சி - வெற்றிகள் - டில்லி சுல்தான்கள் - அடிமை, கில்ஜி, துக்ளக், சையத், லோடி வம்சங்கள் - முதலாவது பானிபட் சண்டை 1526 - மகம்மதிய ஆட்சி முறை - ஆப்கானிய மகம்மதிய ராஜ்ய சிதைவுக்குக் காரணங்கள்.

18. கஜினி மாமூத் : கோரி முகம்மது

கி. பி. 1000 முதல் நம் நாட்டின் வரலாற்றில் பல பெரிய மாறுபாடுகள் ஏற்பட்டன. அவைகளுக்கு மகம்மதியர்களின் படை எழுச்சிகளே காரணம். அவைகளினால் நம் நாட்டின் பெரும் பாகம் மகம்மதிய ஆட்சிக்குட்பட்டது. ஆகையால் நாகரிகத்திலும் ஆட்சி முறையிலும் சமூக வாழ்க்கையிலும் மதவிஷயத்திலும் சில்பகலைகளிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன.

கஜினி மாமூத் 998—1030.

அரபியருக்குப் பிறகு இந்தியாவின் பேரில் படை எடுத்து வந்த மகம்மதியர்களில் கஜினி மாமூத் முக்கியமானவர். இவர் கஜினி நகரத்தைத் தலை நகராகக்கொண்டு ஆப்கானிஸ்தானத்தின் ஓர் பாகத்தை ஆண்டு வந்தார். மாமூதுக்கு மதப்பற்றும் பண ஆசையும் அதிகம். விக்ரஹ ஆராதனை செய்யும் ஹிந்துக்களை தண்டிக்க வேண்டுமென்றும், ஆலயங்களை இடித்து அவைகளின் பணத்தை சேகரிக்க வேண்டுமென்றும் அவர்

பல முறை இந்தியாவின் பேரில் படை எடுத்து வந்தார். மாமூத் குளிர் காலத்தில் நாட்டை விட்டுப் புறப்பட்டு கோடை காலம் வரையில் நம் தேசத்திலிருந்து ஆயிரக்கணக்கான ஹிந்துக்களை வதைத்தும் கொன்றும் சிறைப் பிடித்தும் துன்புறுத்தி அளவற்ற பொருள்களுடன் தம்மூர் போய்ச் சேருவார். அவர் குறைந்தது பதினேழு முறை நம் நாட்டின் மீது படையெடுத்து வந்தார். இந்தியாவில் ராஜ்யம் ஏற்படுத்த வேண்டுமென்பது அவருடைய எண்ணமல்லவாதலால் அவர் பஞ்சாபின் ஒரு சிறு பாகத்தை மாத்திரமே தன் ராஜ்யத்தோடு இணைத்துக் கொண்டார்.

அவர் படை எழுச்சிகள். 1001 - 1024.

நம் நாட்டுக்குப் பலவிதமாகத் தீங்கிழைத்த மாமூத் 1030-ம் வருஷத்தில் மரணமடைந்தார். மரணத்தருவாயில் தாம் சேகரித்த திரவியத்தை யெல்லாம் ஓர் குவியலாகச் செய்யும்படி ஏற்பாடு செய்து அவ்வளவையும் விட்டு தாம் மரண மடையும்படி நேரிட்டதைப் பற்றி விசனமடைந்தார். அவர் ஹிந்துக்களை துன்புறுத்திய போதிலும் மகம்மதியர்கள் அவரை ஒரு புண்ணியவான் என்றே கருதினர். அவரைப்போல் மதப்பற்று, நற்குணம், நியாயம் செய்ய வேண்டுமென்ற விருப்பம் முதலியன உள்ளவர்கள் மிகவும் குறைவு என்றே சொல்லலாம். சில்ப கலையில் அவருக்கு ஊக்கமதிகமாதலால் கஜினி பட்டணத்தில் பல அழகிய கட்டடங்களைக் கட்டினார். கல்வி அபிவிருத்திக்காக அவர் கஜினிப் பட்டணத்தில் ஓர் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தினர்; கல்விமான்களை ஆதரித்து வந்தார். அவருடைய ராஜசபையில் பர்டௌஸி என்னும் பாரஸீக

மாமூதின் குண விசேஷம்.

கவி ஆதரவு பெற்றார். அவர் நம் தேசத்தில் ராஜ புத்திரர்களோடு போர் புரிந்து அவர்களைத் தோற்கடித்ததனால் கஜினி மாமூத் வீரம் பொருந்தியவர் என்று சொல்வதற்கு ஆதாரம் உண்டு.

கோரி முகம்மது

கஜினி மாமூத் மரண மடைந்த சுமார் 100 வருஷங்களுக்குப் பிறகு கஜினி பட்டணம் கோரி சுல்தான்கள் வசமாயிற்று. அவர்களுக்குள் முக்கியமானவர் முகம்மது கோரி. இவரும் கஜினி மாமூதைப் போலவே மதப் பற்றுள்ளவர். இவரும் சிறந்த வீரரே. ஆனால் கோரி முகம்மது சூழ்ச்சிகள் செய்வதிலும் கைதேர்ந்தவர். இவருக்கும் அளவற்ற பொருள் சம்பாதிக்க ஆசையுண்டு. இவர் அதனுடன் திருப்தியடையாமல் இந்தியாவில் ராஜ்யமும் சம்பாதிக்கவேண்டும் என்று நினைத்தார். கோரிமுகம்மதினிடத்தில் பராக்கிரமசாலிகளான சேனைத்தலைவர்கள் இருந்து வந்தமையால் அவர் எண்ணம் நிறைவேறியது.

படை எழுச்சிகள்.

கோரி முகம்மது முதலில் பஞ்சாபின் பேரில் படை எடுத்து வந்து, அவ்விடத்தில் ஆட்சி செய்து வந்த மகம்மதிய வீரர்களைத் தோற்கடித்து 1186-ம் வருஷத்தில் அதைத் தம் வசமாக்கிக் கொண்டார். பிறகு பஞ்சாபுக்கு கிழக்கிலுள்ள ராஜ்யங்களை ஜயிக்க படை எடுத்து வந்தார். அங்கு வீரம் மிக்க ராஜபுத்திரர்கள் ஆண்டு வந்தனர். இவர்களுக்குள் டில்லி, ஆஜ்மீர் ராஜ்யங்களை ஆண்டு வந்த பிரிதிவி ராஜன் மிக்க பராக்கிரமசாலி. அவர் தான், முதல் முதல் முகம்மது கோரியை எதிர்க்க பிரயத்தனங்கள் செய்தார். கன்னோசி அரசரான ஜயசந்திரனைத் தவிர மற்ற ராஜபுத்திரர்கள் எல்லோரும் தங்கள் சேனைகளோடு பிரிதிவி

ராஜனுக்கு உதவி புரிந்தனர். 1191-ம் வருஷத்தில் ஹிந்து மகம்மதிய சேனைகள் குருக்ஷேத்திரத்துக்கு அருகில் தானேசுவரத்திலுள்ள மைதானத்தில் சந்தித்தன. அந்தச் சண்டையில் மகம்மதியர்கள் தோல்வியடைந்து புறங்காட்டி ஓடினார்கள். இத்தோல்வியினால் மகம்மதுவுக்கு ஹிந்துக்களை ஜயிக்க வேண்டுமென்னும் எண்ணம் அதிகரித்தது. அடுத்த வருஷத்தில் கோரி மகம்மது ஓர் பெருத்த சேனையுடன் இந்தியாவின் மீது படை எடுத்து வந்து முன்புபோலவே தானேசுவரத்தில் பிரிதிவி ராஜனை இரண்டாவது முறை எதிர்த்து ஹிந்துக்களைத் தோற்கடித்தார். இச்சண்டையில் பிரிதிவி ராஜன் கொலையுண்டான். உடனே மகம்மது டில்லி ஆஜ்மீர் நகரங்களைத் தம் வசப்படுத்திக் கொண்டு தாம் ஹிந்து தேசத்தில் ஜயித்த நாடுகளுக்கெல்லாம் தம் சேனைத் தலைவனான குத்புதீனை தமக்குப் பிரதிநிதியாக நியமித்து தம் ஊர்போய்ச் சேர்ந்தார். குத்புதீன் டில்லியை தலைநகராக்கிக் கொண்டு ஆளத் தொடங்கினார்.

1193-ம் வருஷத்தில் மகம்மது கோரி கன்னோசி அரசனான ஜயசந்திரன்பேரில் படையெடுத்துச் சென்றார். பிரிதிவிராஜன் தனக்குதவி செய்யுமாறு கேட்டபோது அவ்விதம் செய்யாமலிருந்ததற்குப் பலனை ஜயசந்திரன் உடனே அடைந்தார். மகம்மது கோரி அவரை சாண்ட்வார் என்ற இடத்தில் தோற்கடித்து காசி வரையுள்ள நாடு முழுவதையும் தம் நாட்டோடு சேர்த்துக் கொண்டார். அப்பிரதேசத்திலுள்ள கோவில்களை எல்லாம் இடித்து அளவற்ற பொருளைக் கைப்பற்றிக்கொண்டார். பிறகு குவாலியரையும் குஜராத்தையும் ஜயித்தார். 1197-ல் மகம்மது கோரியின் சேனைத்தலைவரில் ஒருவராகிய மகம்மது கில்ஜி (பக்தியார் கில்ஜியின் மகன்)

பீஹாரின்மேல் படை எடுத்துச் சென்று அங்குள்ள பௌத்த ஆலயங்களையும் மடங்களையும் அங்கிருந்த புத்தகசாலைகளோடு தீயிட்டு நாசஞ்செய்தார். இதற்கிரண்டு வருஷங்களுக்குப் பிறகு வங்காளமும் கோரி மகம்மதின் வசமாயிற்று. கோரி 1206-ம் வருஷம் மரணமடைவதற்குள் வட இந்தியாவில் பெரும்பாகம் அவர் ஆட்சிக்குட்பட்டு விட்டது.

19. டில்லி சுல்தான்கள்: ராஜ்யத்தின் வளர்ச்சி

மகம்மதிய வம்சங்கள்.

1200-ம் வருஷம் முதல் சுமார் 500 வருஷ காலம் டில்லியில் மகம்மதியர்கள் ஆண்டு வந்தனர். முதல் 300 வருஷ காலம் ஆண்டவர்களுக்கு பட்டப்பெயர் சுல்தான். பிறகு ஆட்சி செய்தவர்கள் தங்களுக்கு பாதுஷா (சக்ரவர்த்தி) என்ற பட்டத்தை ஏற்றுக்கொண்டனர். இவர்களெல்லாம் மகம்மதியரான போதிலும் ஒரே ஜனவர்க்கத்தைச் சேர்ந்தவரல்ல. சுல்தான்கள் அநேகமாக ஆப்கானியர்கள். அவர்களுள் அடிமை வம்சம், கில்ஜி வம்சம், துக்ளக் வம்சம், சையத் வம்சம், லோடி வம்சம் என்ற ஐந்து வம்சத்தார் இருந்தனர். இவர்களுக்குப் பிறகு 1526-ம் வருஷம் முதல் முகலாய பாதுஷாக்கள் ஆளத்தொடங்கினர்.

அடிமை சுல்தான்கள்.
1206 - 1290

இந்தியாவில் மகம்மதிய ஆட்சியை நிலைநாட்டினவர்கள் அடிமை சுல்தான்கள். அடிமை வம்ச சுல்தான்கள் இழிவான ஊழியம் செய்யும் மூடர்களல்ல. அவர்களின் அழகு, குணம், திறமை முதலியவற்றைக் கண்டு தயாளமான செல்வவந்தர்கள் ஆசியாவில் நடந்த அடிமைச் சந்தைகளில்

விசேஷமான விலை கொடுத்து வாங்கி அவர்களைத் தங்கள் குழந்தைகள்போல் கல்வி கற்பித்து வளர்த்துவந்தனர். இவ்விதமிருந்ததனால் அவர்களில் சிலர் பட்டம் ஏற்று திறமையுடன் ஆட்சி செய்தனர். அடிமை வம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் பத்துபேர் இருந்தபோதிலும் அவர்களுள் புகழ் பெற்றவர்கள் குத்புதீன் ஐபெக், இல்டுட்மிஷ் (ஆல்டமிஷ்) கியாஸ்உத்தீன் பால்பன் என்பவர்கள்தான்.

குத்புதீன் 1206 - 1210.

குத்புதீன் மகம்மது கோரியின் அடிமைகளுள் ஒருவர். அவர் 1192-ம் வருஷ முதல் டில்லியில் ராஜப் பிரதிநிதியாக இருந்து, மகம்மது 1206-ம் வருஷம் இறந்தவுடன் அடிமை வம்சத்தை ஸ்தாபித்து தாமே முதல் சுல்தான் ஆனார். அவர் காலத்தில் மகம்மதிய ராஜ்யம் மாளவம் தவிர வட இந்தியா முழுவதும் பரவி இருந்தது. அவர் திறமையுடன் நான்கு வருஷம் ஆட்சி செய்தார். அவர் 1210-ம் வருஷத்தில் போலோ ஆடுகையில் குதிரைமேலிருந்து விழுந்து மரணமடைந்தார்.

இல்டுட்மிஷ் 1211 - 1236.

குத்புதீனுக்குப் பிறகு அவரது மகன் ஆராம்ஷா சுல்தானானார். அவர் திறமையற்றவர். ஆதலால் சிற்றரசர்கள் சுயேச்சையடைந்தனர். அச்சமயத்தில் குத்புதீனின் மருமகனான இல்டுட்மிஷ், ஆராம்ஷாவை அரச பதவியினின்றும் நீக்கித் தாமே சுல்தானானார். அவருக்கு அப்போது கிடைத்த ராஜ்யம் டில்லியும் அதைச் சுற்றியிருந்த பிரதேசமுமே யாகும். கிழக்கில் வங்காளமும் மேற்கில் பஞ்சாப் ஸிந்து மாகாணங்களும் வடமேற்கில் ஆப்கானிஸ்தானமும் சுதந்திரம் அடைந்தன. இல்டுட்மிஷ் திறமையுடனும்

ஊக்கத்துடனும் ஆண்டு தம் ஆயுட் காலத்துக்குள் குத்பு தீன் காலத்திலிருந்த பிரதேசங்களை எல்லாம் வசப்படுத்திக் கொண்ட தல்லாமல் தெற்கேகூட ராஜ்யத்தைப் பெருக்கினார். இவர் காலத்தில் மங்கோலியர் என்னும் குரூரமான மத்திய ஆசியமக்கள் ஸிந்து நதி வரையில் படை எடுத்து வந்த போதிலும், அதிர்ஷ்டவசமாக டில்லி ராஜ்யத்தைத் தாக்காமல் திரும்பி விட்டனர். நாம் இக்காலத்தில் வழங்கி வரும் ரூபாயை பெரிதும் ஒத்த டங்கா என்னும் வெள்ளி நாணயத்தை இவர் வெளியிட்டார். குத்புதீன் காலத்தில் துவக்கப்பட்ட குதுப்மினார் என்னும் 250 அடி உயரமான ஒரு கட்டடத்தைக் கட்டி முடித்தார்.

கியாஸுத்தின் பால்பன். 1266 - 1287.

இல்டுட்மிஷுக்குப் பிறகு அவர் குமாரன் சுல்தானானார். திறமையற்றவராதலால் அவரை பட்டத்தினின்றும் நீக்கி இல்டுட்மிஷின் மகள் ரஜியா நான்கு வருஷம் ஆட்சி செய்தாள். அவளுக்குப்பின் பட்டத்துக்கு வந்த அரசர்களுள் முக்கிய மானவர் நாஸிருதீன். அவர் 1246 முதல் 1265-ம் வருஷம் வரையில் சுல்தானாகவிருந்தார். அவர் காலத்தில் கியாஸுத்தீன் பால்பன் என்னும் அடிமை, அமைச்சராக விருந்து, திறமையுடன் அரசாங்கத்தை நடத்தினார். நாஸிருதீன் மரணமடைந்தவுடன் பால்பன் சுல்தானானார். அவர் 1287-ம் வருஷம் வரையில் ஆண்டார். அடிமை அரசர்களுக்குள் அவர் மிகவும் சாமர்த்தியசாலி. சுல்தானாக விருந்த காலத்தில் டில்லிப்பட்டணத்தைச் சுற்றியிருந்த காடுகளில் ஒளிந்து வழிப்போக்கர்களையும் டில்லி ஜனங்களையும் கொள்ளை யடித்து வந்த திருடர்களைப் பிடித்து வதை செய்து ஜனங்களின் கஷ்டத்தை

நீக்கினர். வடமேற்குக் கணவாய்களின் மூலமாய் கூட்டங் கூட்டமாக நம் நாட்டின் மேல் படை எடுத்து வந்து ஜனங்களைக் கொன்று நூற்றுக் கணக்கான ஊர்களை தீக்கிரையாக்கிவந்த மங்கோலியர்களை பால்பன் தோற்கடித்து மறுபடியும் அவர்கள் வராமலிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்.)

ராஜபுதனம்.

அடிமை அரசர்களின் குரூர ஆட்சியைத் தாங்கமுடியாமலோ அவர்களுடன் ஒத்துழைப்பதற்கு சம்மத மில்லாலோ கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியிலிருந்த பிரதேசத்தில் வசித்த ராஜபுத்திரர்கள் அவ்விடத்தைவிட்டு அரவல்லி மலைப் பிரதேசத்துக்குச் சென்று அங்கே புதிய ராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டனர். இப்பிரதேசமே தற்காலத்தில் ராஜபுதனம் என வழங்கி வருகிறது.

கில்ஜி வம்சம் 1290—1320

அலாவுதீன் 1296 - 1316.

அடிமை யரசர்களுக்குப் பிறகு ஆப்கானிய இனத்தைச் சேர்ந்த கில்ஜி வம்சத்தார் சுல்தான்களானர்கள். ஜலாலுதீன், அலாவுதீன், முபாரக் ஷா என அவ்வம்சத்து மூன்று அரசர்கள் டில்லியை ஆண்டனர். அவர்களுக்குள் அலாவுதீனே மிகவும் முக்கிய மானவர். திறமை வாய்ந்த அலாவுதீன் ஜலாலுதீனின் அண்ணன் மகன். அது வரையில் ராஜபுத்திரர்களோடு சண்டைக்குப் போகாமலிருந்த சுல்தான்களைப் போலல்லாமல் அலாவுதீன் அவர்களோடு சண்டை செய்ய ஆரம்பித்தார். (1302-03-ம் வருஷத்தில் சித்தூரை முற்றுகை யிட்டு அதைத் தம் வசமாக்கிக் கொண்டார்.) இவர் காலத்தில் டில்லி ராஜ்யம் தெற்கே மதுரை வரை



அலாவுதீன் ராஜ்யத்தின் தெற்கு எல்லை மதுரை வரையில் வியாபித்திருந்தது.

யில் விஸ்தரித்திருந்தது. இவரிடம் மாலிக் காபுர் என்னும் தேர்ச்சி பெற்ற சேனைத் தலைவர் இருந்தார். அவர் 1306-13-க்குள் மூன்று முறை தக்ஷிணத்தின்பேரில் படையெடுத்து தேவகிரியை ஆண்டுவந்த யாதவர்களையும், வாரங்கலில் இருந்த காகதீயர்களையும், துவாரசமுத்திலிருந்த ஹோயசாலர்களையும், தோற்கடித்து ஏராளமான பொருள் சம்பாதித்து சுல்தானுக்கு கொடுத்தார். மற்றெந்த சுல்தான் காலத்திலும் டில்லி ராஜ்யம் இவ்வளவு அதிகமாக பரவியிருக்கவில்லை.

மங்கோலியர்கள் படையெழுச்சி.

இவர் காலத்திலும் மங்கோலியர்கள் பலமுறை கூட்டங் கூட்டமாக இந்தியாவின்மேல் படை எடுத்து வந்தனர். ஒருசமயம் டில்லிக்கு அருகிலும் வந்தனர். அலாவுதீன் சண்டையில் வல்லவராகையால் அவர்களை சண்டையில் தோற்கடித்து நாட்டைவிட்டுத் துரத்தினர். பால்பனைப்போலவே அலாவுதீனும் ராஜ்யத்தின் வடமேற்கு எல்லையில் பல கோட்டைகளைக் கட்டி அவைகளில் வீரர்களை நிறுத்தி மங்கோலியர்கள் படை எடுத்து வராமல் நாட்டை காப்பாற்றினர். அலாவுதீன் போர் புரிவதில் மாத்திரமேயன்றி நாட்டு ஆட்சியிலும் மிகவும் திறமைசாலி. நாட்டில் ஆங்காங்கே குழப்பங்கள் ஏற்படுவதைக் கண்டு

ஆட்சி முறை.

அவ்விதம் ஏற்படாமல் தடை செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். ஒற்றர்களை நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பி அவர்கள் மூலமாய் நடக்கும் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டார். எவரும் மது பானம் செய்யலாகாதென்று திட்டம் செய்தார். ஹிந்துக்களை மிகவும் குரூரமாக நடத்தினர்.

இவர் கடைசிக் காலத்தில் ஏற்பட்ட கலகங்களினுலும் தேக பலம் குன்றி நோயாளியானதாலும் கஷ்டப்பட்டு 1316-ம் வருஷத்தில் இறந்தார். அவருக்குப் பின் அவர் குமாரன் முபாரக்ஷா சுல்தானுனர். இவருக்கு குஸ்ரு என்னும் கீழ் வகுப்பினன் நேசத்தினுல் சிற்றின்பத்தில் மூழ்கும் பழக்கமேற்பட்டது. கடைசியாக குஸ்ருவாலேயே கொல்லப்பட்டார். பிறகு குஸ்ருவே பட்டத்தை அடைந்தான். இதைக்கண்ட மகம்மதிய பிரபுக்கள் வெறுப்புற்றுர்கள். அக்காலத்தில் பஞ்சாப் அதிபதியாக விருந்த துக்ளக் வம்சத்து கியாஸுத்தீன், குஸ்ருவைக் கொன்று பட்டத்தை அடைந்தார்.

குஸ்ரு 1316 - 1320.

20. துக்ளக் சுல்தான்கள் : ராஜ்யத்தின் சிதைவு

கியாஸுதீன் துக்ளக் துருக்கிய வகுப்பைச் சேர்ந்த மகம்மதியர். இவர் சாமர்த்தியசாலியாகையால் சிறிது காலத்திற்குள் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களை அடக்கினுர். அவர் குமாரர் ஜுஞு மகம்மது தம் தகப்பனைக் கொன்று 1325-ம் வருஷத்தில் மகம்மது பின் துக்ளக் என்ற பட்டத்துடன் சுல்தான் ஆனுர்.

மகம்மது பின் துக்ளக்கை பயித்தியக்காரத் துக்ளக் என்று சொல்வார்கள். ஆனுல் அது சரியானதல்ல. அவர் செய்ய முயன்ற காரியங்களின் நுட்பத்தை அக்காலத்து ஜனங்கள் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. அவர் சில சமயங்களில் மிகவும் தயாளமாகவும் மற்றும் சில சமயங்களில் அதிக குரூரமாகவும் நடந்துகொண்டார்.

மகம்மது பின் துக்ளக். 1325 - 1351.

கலகம் செய்த பிரபுக்களை சுல்தான் தண்டிக்க வேண்டியது நியாயமான போதிலும், மகம்மது பின் துக்ளக் தன் உறவினரான மாலிக் பஹா-தீன் கர்ஷாப் என்பவரை கலகம் செய்த காரணத்திற்காக வதை செய்து கொன்றது மிகவும் கொடுமையாக விருந்தது. தலை நகரம் ராஜ்யத்தின் நடுவிலிருக்க வேண்டு மென்பது சரியான எண்ணம். டில்லி பட்டணம் துக்ளக் ராஜ்யத்துக்கு நடுவிலில்லாமலிருந்தது தவறென நினைத்து மகம்மது பின் துக்ளக் தக்காணத்திலுள்ள தேவகிரிக்கு, தௌலதாபாத் எனப் பெயரிட்டு அதைத் தன் தலை நகரமாகச் செய்து கொள்ள எண்ணினர். இதில் ஒரு தவறும் இல்லை. ஆனால் இதை மாற்றிய விதம் தான் தவறு. டில்லி பட்டணத்து ஜனங்களை யெல்லாம் தேவகிரிக்குப் போகுமாறு துன்புறுத்தி பிறகு அவர்களை மறுபடியும் டில்லிக்கே திரும்பும்படி செய்ததுதான் தவறு. அதனல் நஷ்டங்கள் ஏற்பட்டன.

அவர் செய்த காரியங்கள்.

அரசாங்கத்தை நடத்த பணம் அவசியம் வேண்டும். மகம்மது பாரஸீகத்தின் பேரில் படை எடுத்துச் சென்றதனலும், மங்கோலியர் படை எழுச்சியை தடை செய்வதற்கு ஏராளமாக லஞ்சம் கொடுத்ததனலும், தலை நகர மாறுதலினல் ஏற்பட்ட நஷ்டத்தினலும் அரசர் பொக்கிஷத்திலுள்ள பணம் மிகவும் குறைந்தது. அப்பொழுது தங்க, வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாக செப்பு நாணயங்கள் அடித்து ஜனங்களை உபயோகிக்கும் படியாகச் சொன்னர். ஜனங்கள் நியாயமாக நடக்காததனல் இந்த ஏற்பாடு சரிவர நடக்கவில்லை. கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலுள்ள பிரதேசம் செழிப்பானது. ஆகையால் அப்பிரதேசத்துக்கு அதிக வரி விதித்தார். ஆனல் அடுத்த வருஷத்

தில் பஞ்சம் ஏற்பட்ட படியால் ஜனங்கள் வரியை செலுத்த முடியாமல் நாட்டை விட்டோடினர். சுல்தான் கோபங்கொண்டு அவர்களை மிருகங்களை வேட்டை யாடு வதைப்போல் துன்புறுத்தும்படி உத்தரவிட்டார்.)

ராஜ்யத்தில் கலக்ங்கள்.

மேற் கூறிய விஷயங்களிலிருந்து மகம்மது மிகவும் முற்போக்கானவர் என்றும் ஜனங்கள் அவர் குணங்களை அறிந்து கொள்ள வில்லை என்றும் சொல்லலாமே ஒழிய சுல்தான் பயித்தியம்பிடித்தவர் என்று சொல்வது தவறு. அவர் புத்திமான், கல்விமான், தத்துவ ஞானி, கணித சாஸ்திரத்திலும் வான சாஸ்திரத்திலும் வல்லவர். இவ்விதமிருந்த போதிலும் இவர் செய்த குரூர மான செய்கைகளால் அரசாங்கத்தின் பல பாகங்களில் (சிந்து பிரதேசம், வங்காளம், குஜராத்) கலகங்கள் ஏற் பட்டன. தக்காணத்தில் அலாவுதீன் ஹாஸன் கங்கு பாமினி என்பவர் சுயேச்சையாக குல்பர்காவை தலைநக ராகக்கொண்டு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினர். ஸிந்து நாட்டில் ஏற்பட்ட கலகத்தை அடக்கச் சென்ற போது மகம்மது பின் துக்ளக் நோய்கண்டு இறந்தார்.

பிரோஸ் ஷா துக்ளக். 1351 - 1388.

மகம்மது பின் துக்ளக் மரண மடைந்தவுடன் பிரோஸ் ஷா துக்ளக் சுல்தானுனர். அவர் நற்குணமுள்ளவரான போதிலும் போர்புரிவதில் திறமை யுள்ளவரல்ல. சுயேச்சை யடைந்த மாகாணங்களை ஜயிக்க முயன்றும் அது முடியாமல் போய்விட்டது. பிரோஸ் மதப்பற்று அதிகமாக உள்ளவ ராதலால் ஹிந்துக்களுக்கு சில கொடுமைகளைச் செய்தார். ஜிஸியா வரியை விதித்தார். (புதிய ஹிந்து ஆலயங் கள் கட்டக் கூடாதென்றும் உத்தரவிட்டார்.) ஆன

போதிலும் இவர் பொதுவாக எல்லா ஜனங்களுக்கும் சில அநுகூலங்களைச் செய்தார். நிலவரியைக் குறைத்தார்; அநேக வரிகளை எடுத்துவிட்டார்; யமுனை ஸட்லெஜ் நதிகளிலிருந்து கால்வாய்களை வெட்டி நீர்பாசன வசதிகள் ஏற்படுத்தி விவசாயத்தை விருத்தி செய்தார். அநேக பட்டணங்களில் அரண்மனைகளும் மசூதிகளும் சத்திரங்களும் வைத்தியசாலைகளும் கலாசாலைகளும் இவரால் கட்டப்பட்டன.

தைமூர் படை எழுச்சி, 1398.

பிரோஸ்ஷாவுக்குப்பிறகு வந்த சுல்தான்கள் வலிமை யற்றவர்களாதலால் நாட்டில் சூழ்ச்சிகளும் கலகங்களும் உண்டாகி அமைதி இல்லாமல் போய் விட்டது. இச்சமயத்தில் உலகத்தை துன்புறுத்துவதற்காகவே பிறந்தவரெனக்கூடிய தைமூர் என்னும் மங்கோலிய கொள்ளைக் கூட்டத்தலைவர் நமது நாட்டின் மீது படை யெடுத்து வந்தார். அவர் டில்லி சுல்தானை தோற்கடித்து, பட்டணத்தைத் தன் வசமாக்கிக் கொண்டு அதை ஐந்து நாட்கள் கொள்ளை யிட்டார். அவர் இழைத்த தீங்கிலிருந்து தேசம் 150 வருஷகாலம் வரையில் முன்னேற்ற மடையவே யில்லை.

சையதுகள் 1414 - 1450.

தைமூர் படை எழுச்சியினால் ஏற்பட்ட கஷ்டங்களைப் போக்கியவர், அவரால் பிரதிநிதியாக நியமிக்கப் பட்ட பஞ்சாப் அதிபதியான சையத் கிஸிர்கான். இவர் சையத் வம்சத்தை ஆரம்பித்தவர்; அரபிய இனத்தைச் சேர்ந்த மகம்மதியர். அவர் சுல்தானானபோது (கி. பி. 1414) டில்லியைச் சுற்றிலுமுள்ள சிறு பிரதேசம்தான் சுல்தான் ஆட்சியிலிருந்தது. சையது வம்சத்தைச் சேர்ந்த கடைசி சுல்தான் வலிமை

குறைந்தவராக இருந்தமையால் பஞ்சாப் அதிபதியாக பஹ்லால்லோடி என்பவர் அவரை பட்டத்தினின்றும் நீக்கி தாமே சுல்தான் ஆனார்.

லோடி சுல்தான்கள் ஆப்கானிய மகம்மதியர்கள்.

லோடி வம்சம் 1450-1525. சாமர்த்தியசாலியாகிய பஹ்லால் லோடி கிழக்கில் காசிவரையிலும் தெற்கில் பண்டில்கண்ட் பிரதேசம் வரையிலும் ஜயித்து ராஜ்யத்தைப் பரவச் செய்தார். அவருக்குப் பிறகு சிகந்தர் லோடி என்பவர் பட்டத்தை அடைந்தார். அவர் மிகவும் திறமை வாய்ந்தவர். டில்லி ராஜ்யத்தை அதிகமாகப் பரவச் செய்தார். அவருக்குப் பிறகு அவர் குமாரர் இப்ராஹீம் லோடி சுல்தானானர். அவர் குரூரமும் அகங்காரமும் உள்ளவர். தம் ஆப்கன் பிரபுக்களை துன்புறுத்தினர். ஆதலால் கோபங் கொண்ட அவர்கள் சுல்தானை எதிர்த்தனர். அவர்களுக்குள் முக்கிய மானவர் பஞ்சாபுக்கு அதிபதியாக விருந்த தௌலத்கான் லோடி என்பவர். அவர் தனித்து சுல்தானை எதிர்க்க முடியாமல் அக்காலத்தில் ஆப்கானிஸ்தானத்தை ஆட்சி செய்து வந்த முகலாய அரசரான பாபரை தமக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டார். இதுவே தக்க சமயமென்று பாபர் பெருத்த படையுடன் 1526-ம் வருஷத்தில் இந்தியாவின் மேல் படை எடுத்து வந்து, இப்ராஹீம் லோடியை சண்டையில் தோற்கடித்துக் கொன்று டில்லியைத் தம் வசப்படுத்திக்கொண்டு முகலாய ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.

டில்லி சுல்தான்கள் தம் இஷ்டப்பிரகாரம் ஆட்சி செய்த வல்லரசர்கள். அநேகமாக எல்லாரும் குரூரமும் மதப்பற்றும் உள்ளவர்களாக விருந்து ஹிந்துக்களை கஷ்டப் படுத்தி வந்தனர். ஆதலால் ஹிந்துக்கள் மகம்

மதியசுல்தான்களிடம் விரோதம் பாராட்டினர். சுல்தான்கள் ஆட்சி செய்த காலத்தில் மூன்று வித நன்மைகள் ஏற்பட்டன. சில்பகலையும் சித்திரகலையும் முன்னேற்ற மடைந்தன. அரபிய சில்ப முறைகள் சில, ஹிந்து முறைகளோடு சேர்ந்து உபயோகப்பட ஆரம்பித்தன. கடவுள் ஒருவரே என்னும் கொள்கை மகம்மதியருக்கு இருந்ததனுல் ஹிந்துக்களும் பக்தி மார்க்கத்தை அதிகமாக அநுசரிக்க ஆரம்பித்தனர். போர் முறையில் ஹிந்துக்கள் மகம்மதியர்களிடமிருந்து பல விஷயங்களைத் தெரிந்து கொண்டனர். 1526-ம் வருஷத்தில் நடந்த முதல் பானிபட் சண்டையோடு சுல்தான்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. டில்லி ராஜ்யம் சிதைவடைவதற்கு பல காரணங்கள் உண்டு. சுல்தான்கள் எல்லா ஜனங்களுடைய முழு மனதான ஆதரவைப் பெறவில்லை. ஆதலால் சமயம் ஏற்பட்டபோது கலகங்கள் செய்து சுல்தான்களுக்கு கஷ்டங்களை ஏற்படுத்தினர். அப்பொழுது சுல்தான்கள் மகம்மதிய வீரர்களின் உதவியையே நாடினர். வெகு காலம் உஷ்ண நாட்டில் வசித்ததால் பலம் குன்றினர். குளிர் பிரதேசங்களிலிருந்து மங்கோலியர்கள் படை எடுத்தபோது சண்டையில் தோல்வி யடைந்தனர். மகம்மதியர்களுக்குள் பட்டத்துக்கு யார் வருவது என்பதைப் பற்றி நிலையான நியமங்கள் இல்லாததனுல் புஜ பலம் உள்ளவனே அரசனுகும் முறை ஏற்பட்டு அரச குடும்பத்தில் சூழ்ச்சிகளும் சண்டைகளும் அதிகமாகி, சுல்தான்களின் பலம் குறைந்தது. மாகாண அதிபதிகளுள் பல முள்ளவர்கள் சமயம் ஏற்பட்டபோது கலகம் செய்து சுயேச்சை யடைந்தனர்.

சுல்தான்கள் ஆட்சியால் ஹிந்துக்களுக்கு ஏற்பட்ட பயன்கள்.

அத்தியாயம் 8

பாமினி விஜயநகர ராஜ்யங்கள்

முக்கிய விஷயங்கள்.—பாமினி ராஜ்யம் - ஐந்து சிறிய மகம்மதிய ராஜ்யங்களும் அவைகளின் வரலாறும் - விஜயநகர சாம்ராஜ்யம் - சங்கம, சாளுவ, துளுவ வம்சங்கள் - கிருஷ்ண தேவராயர் - சில்ப கலை அபிவிருத்தி - தலைக்கோட்டை சண்டை - சாம்ராஜ்யத்தின் சிதைவு - விஜயநகர அரசர்கள் மக்களுக்குச் செய்த நன்மைகள்.

21. பாமினி ராஜ்யம் 1347—1490

பாமினி ராஜ்ய ஸ்தாபனம் 1347. டில்லி சுல்தான்கள் ஆண்ட காலத்தில் திறமை வாய்ந்த மாகாண அதிபதிகள் சுயேச்சையடைந்ததைப் பற்றி நாம் தெரிந்து கொண்டோம். அதற்கு பாமினி ராஜ்யம் ஏற்பட்டதையே உதாரணமாகக் கொள்ளலாம். மகம்மது பின் துக்ளக் காலத்தில் அலாவுதீன் ஹாஸன் கங்கு பாமினி என்பவர் தக்காணத்தில் மாகாண அதிபதிகளுள் ஒருவராக இருந்தார். சுல்தானின் குரூர ஆட்சியைப் பொருக்க முடியாமல் சுயேச்சையான ராஜ்யத்தை ஏற்படுத்த எண்ணங்கொண்டு 1347-ல் குல்பர்காவை தலைநகரமாக வைத்துக்கொண்டு பாமினி ராஜ்யத்தை ஏற்படுத்தினர். அலாவுதீன் பாரஸீக அரச வம்சமாகிய பாமினி வம்சத்தைச் சேர்ந்தவராகையால் அவர் பாமினி என்ற பட்டப்பெயரை ஏற்றுக்கொண்டு தாம் ஏற்படுத்திய ராஜ்யத்துக்கு பாமினி ராஜ்யமெனப் பெயரிட்டார்.

ஹஸன் கங்கு தன் ராஜ்யத்தைப் பல திசைகளி லும் விஸ்தரிக்கும்படி செய்தார். அவர் ஆட்சி செய்த பதினோரு வருஷ காலத்திற்குள் ராஜ்யத்தின் எல்லைகளை வடக்கே கோதாவரியின் உபநதியாகிய வெயின் கங்கா, தெற்கே கிருஷ்ணா நதி, மேற்கே அரபிக்கடல், கிழக்கில் புவனகிரி கோட்டை வரையில் பரவச்செய்தார்.

ஹஸன் கங்கு பாமினிக்குப் பிறகு பாமினி ராஜ்யத் தில் ஒருவருக்குப் பின் ஒருவராக 12 சுல்தான்கள் ஆட்சி செய்தனர். இவர்களுக்குள் இரண்டாவது மகம் மது என்பவர்தான் முக்கியமானவர். மற்றவர்களெல் லாம் குரூரகுணமும் ஹிந்துக்களோடு சண்டை செய்ய வேண்டுமென்ற ஆசையுமுள்ளவர்கள். இவர்களெல்லாம் சிற்றின்பப் பிரியர்கள். 1358 முதல் 1375-ம் வருஷம் வரையில் ஆண்ட முதல் மகம்மதுஷா ஒருநாள் மதுபான மயக்கத்தில் சில ராஜசமஸ்தான பாடகர்களுக்கு விஜய நகர ராஜ்ய பொக்கிஷத்திலிருந்து பணம் கொடுக்கும்படி கட்டளையிட்டார். இவ்விதம் ஹிந்து அரசரை அவமதித்த தற்காக இரு ராஜ்யங்களுக்கும் போர் மூண்டது. ஹஸன் கங்குவின் கடைசி குமாரராகிய இரண்டாவது மகம்மது (1377—1397) அமைதியை விரும்பியவர்; தம் தகப்பனைப்போலவே ஜனங்களின் நன்மைக்காக மிகவும் கஷ்டப்பட்டு அவர்களுக்கு வேண்டிய சௌகர்யங்களை ஏற்பாடு செய்தார். நாட்டில் ஒருகாலம் பஞ்சம் ஏற்பட்ட போது அதிக தூரத்திலுள்ள நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களைத் தருவித்து ஜனங்களுக்குக் குறைந்த விலை யில் விற்று உபகாரம் செய்தார். தாய் தகப்பனற்ற குழந்தைகளுக்கு தர்மத்திற்கு சாப்பாடு போடும்படியாக ஏற்பாடுகள் செய்தார். கல்வி அபிவிருத்திக்காகக் கல்விச்

சாலைகளை ஏற்படுத்தினர். கல்வியில் வல்லவர்களையும் மத குருக்களையும் பெரிதும் போற்றி வந்தார்.

பாமினி சுல்தான்கள்.

பிரோஸ் ஷா (1397—1422) என்ற எட்டாவது பாமினி அரசர் காலத்தில் ராஜ்யம் அதிக புகழ்பெற்றது. அவர் ஆட்சி முறை, கல்வி, போர் புரிதல் முதலியவற்றில் இணையற்றவர். விஜயநகரத்தோடு சண்டை செய்து பல ஹிந்துக்களைக் கொன்றார். இவருக்குப்பின் ஆமத்ஷா (1422—1435) பட்டத்துக்கு வந்து பரம்பரையாக விஜயநகரத்தோடு நடந்துவந்த சண்டையைத் தீவிரமாக நடத்தி பல ஹிந்துக்களைக் கொன்று, தலைநகரைச்சுற்றியுள்ள பிரதேசங்களிலிருந்த பல கட்டிடங்களை இடித்து நாசம் செய்தார். இவரே குல்பர்காவிலிருந்து பாமினி ராஜ்யத்தின் தலைநகரத்தை பீடருக்கு மாற்றினர். மூன்றாவது மகம்மதுஷா 1463 முதல் 1482-ம் வருஷம் வரையில் ஆட்சி செய்தார்; இவரை மிகவும் அன்புடன் வளர்த்துவந்த மகம்மது கவான் என்ற அமைச்சரை தகுந்த காரணமில்லாமல் கொலை செய்யுமாறு உத்தரவிட்டார். தன்னை வளர்த்த மந்திரியையே கொன்றுவிடும்படி உத்தரவிட்ட சுல்தான் காலத்தில் மக்கள் எவ்வாறு கஷ்டப்பட்டிருப்பாரென்று ஊகிக்கலாம்.

சண்டைக்கு காரணங்கள்.

ஹாசன் கங்கு, இரண்டாவது மகம்மது, மகம்மது கவான் என்ற அமைச்சர் இவர்களைத் தவிர மற்ற எந்த சுல்தானும் ஜனங்களின் சவுக்கியத்திற்காக ஆட்சிசெய்யவில்லை. அவர்களெல்லாம் ஹிந்து மதத்தினரோடு விரோதம் பாராட்டி விஜயநகர ராஜ்யத்தோடு எப்போதும் சண்டை செய்தனர். இச்சண்

டைக்கு மதவிஷயம் மாத்திரமன்றி கிருஷ்ணு துங்க பத்திரா நதிகளுக்கிடையிலுள்ள ராய்ச்சூர் தோஆப் திலங்களை அடையவேணுமென்பது மற்ருெரு காரணம். பாமினி சுல்தான்கள் தங்கள் ஆட்சியின் பெரும் பாகத்தை சண்டையிலேயே கழித்தனர். மகம்மது கவானைப்போன்ற சிலர் சில கட்டிடங்களையும் கல்விச் சாலைகளையும் கட்டிவைத்து நாட்டின் முன்னேற்றத்துக் காக உழைத்தனர்.

பாமினிராஜ்யத்தின் சிதைவு.

பாமினி சுல்தான்களின் குரூர ஆட்சிமுறை ஜனங்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்கியது. மகம்மதியர்களுக்குள் உள் நாட்டார் என்றும் அந்நியர் என்றும் இரு பிரிவுகள் ஏற்பட்டு ஒருவர்க்கொருவர் விரோதம் பாராட்டி வந்தனர். இப்பிரிவுகளின் சூழ்ச்சியினுல்தான் மகம்மது கவான் காரணமில்லாமல் கொல்லப்பட்டார். ஜனங்களைப்போலவே கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த மாகாண அதிபதிகளும் தக்க சமயம் வாய்த்த போது சுயேச்சையடையத் தயாராகவிருந்தனர். 1490-ம் வருஷத்தில் பீஜபூரை ஆண்டுவந்த யூசுப் அதில்ஷா சுயேச்சை ஆனுர். அவருக்குப்பின் ஒவ்வொருவராக நிஜாம்ஷா (அஹமத் நகர்) குடுப்ஷா (கோலகொண்டா) இமாத்ஷா (பேரார்) பரீத்ஷா (பீடர்) என்னும் வம்சத்தினர்கள் அங்கங்கே சுயேச்சையை அடைந்தனர். பரீத்ஷா கடைசி பாமினி சுல்தானை சிறைப்படுத்தி தம் வசத்தில் வைத்துக்கொண்டார். இவ்விதம் பாமினி ராஜ்யம் ஐந்து சிறு பிரிவுகளாயின.

பாமினி ராஜ்யம் சிதைவுண்டதனுல் ஏற்பட்ட ஐந்து ராஜ்யங்களுள் பீடர், பேரார் மிகவும் சிறியவை. மற்ற மூன்று ராஜ்யங்களும் இவ்விரண்டையும் ஜயித்துக்

கொள்வதற்காக அடிக்கடி போர் புரிந்துவந்தன. இவர்களெல்லாம் ஒன்றுகூடினுல் தங்களுக்கு ஆபத்து நேரிடுமென்று விஜய நகர அரசர்கள் இவர்களுக்குள் இருந்த விரோதத்தை அதிகப்படுத்தி வந்தனர். கடைசியாக அஹமத்நகர் பேராரையும், பீஜபூர் பீடரையும் ஜயித்ததால் மூன்று ராஜ்யங்கள் மாத்திரமிருந்தன.

சிறு ராஜ்யங்களின் வரலாறு:

22. விஜயநகர ராஜ்ய சரித்திரம்-முற்பகுதி: 1336—1493

விஜயநகரஸ்தாபனம், 1336.

அலாவுதீன் கில்ஜி, மாலிக் காபுர் படை எழுச்சிகளாலும் மகம்மது பின் துக்ளக்கின் குரூர செய்கைகளாலும் ஹிந்துக்கள் கஷ்டமடைந்தனர். அவர்களில் சிலர் இக்கஷ்டங்களை நீக்கிக்கொள்ள ஒரு ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபிக்க முயன்றனர். அவர்கள் துங்கபத்திரா நதிக்கரையில் தவம் செய்துகொண்டிருந்த வித்யாரண்ய ஸ்வாமியின் கட்டளையின்படி 1336-ம் வருஷத்தில் வித்தியாநகரம் என்னும் பட்டணத்தை ஏற்படுத்திஞர்கள். நாளடைவில் இதற்கே விஜயநகரம் என்ற பெயர் ஏற்பட்டது. இந்த ராஜ்யத்தை ஏற்படுத்தியவர்கள் ஹரிஹரர், புக்கர் என்னும் சகோதரர்கள்.

விஜய நகர ராஜ்யத்தை முறையே சங்கம, சாளுவ, துளுவ வம்சத்தரசர்கள் 1565-ம் வருஷம் வரையில் ஆட்சி செய்தனர். அந்த ராஜ்யம் சிதைவுற்ற பிறகு அரவீடு வம்சத்தவர்கள் ஆட்சி செய்தனர். ஆனுல் பிற்கூறியவர்களுக்கு தலை நகரம் விஜயநகரமல்ல. ஹரிஹரரும் புக்கரும் சங்கம வம்சத்தவர்கள். அவர்களும் அவர்களுக்குப்பின் வந்தவர்களும் தெற்கு நோக்கிச் சென்று மதுரையில் ஆண்டுவந்த சுல்தானை தோற்கடித்தனர்.

பிறகு தம் ராஜ்யத்தை வடக்கில் கிருஷ்ணு நதி வரையில் பரவச் செய்தனர். அவ்வம்சத்தின் கடைசி யரசர்கள் வலிமை குன்றியவர்களாகவும் சிற்றின்பப் பிரியர்களாகவும் இருந்ததால் ராஜ்யத்தின் சில பாகங்களை விரோதிகள் தம் வசமாக்கிக்கொண்டனர். அப்போது அவருக்குக்கீழ்பட்டிருந்த சாளுவ நரசிம்மர் என்பவர் அரசராகி மறுபடியும் ராஜ்யத்தைப் பெருக்க முயன்றார். அவர் எண்ணம் நிறைவேறுவதற்கு முன்பே அவர் குமாரர்கள் கொல்லப்பட்டனர். அப்போது அவர் சிற்றரசர்களுள் ஒருவராகிய துளுவ நரச நாயகர் அரசரானார். அவர் குமாரர் தான் கீர்த்தி பெற்ற கிருஷ்ண தேவராயர். கிருஷ்ண தேவராயர் தம் வலிமையினாலும் புத்திமானான அமைச்சர் திம்மரசுவின் உதவியினாலும் விரோதிகளைத் தோற்கடித்து முன்போலவே ராஜ்யத்தை கிருஷ்ணு நதி வரையிலும் பெருக்கினதல்லாமல், ஒரிஸ்ஸாவையும் மகம்மதியர்களையும் ஜயித்து தம் வசப்படுத்திக் கொண்டார். பிறகு பீஜபூர் சுல்தானை தோற்கடித்து அவர் தலை நகரத்தைத் தீக்கிரையாக்கி விரோதிகள் தம்மைக்கண்டு நடுங்கும்படி செய்தார். அவருக்குப் பின் வந்தவர்கள் வலிமை யற்றவர்களாதலால் அரவீடு வம்சத்தை சேர்ந்த ராமராயர் அமைச்சராக விருந்து அரசாங்க வேலை முழுவதையும் நடத்தி வந்தார். அவர் பெரிய போர் வீரர். இதற்கு முன்பு மகம்மதியர்கள் ஹிந்துகளுக்குச் செய்த குரூர செயல்களுக்காகப் பழிவாங்கத் தீர்மானித்து அவர்களை அவமானப் படுத்தினர். இதை சகியாமல் மகம்மதிய சுல்தான்களெல்லாம் ஒன்று கூடி 1565-ம் வருஷத்தில் தலைக்கோட்டையில் விஜய நகர சேனைகளை எதிர்த்து முறியடித்து தலை நகரையும் நாசம்

ஆண்ட வம்சங்கள்.



ராய்ச்சூர் தோஆப் எவ்விதம் முக்கியமானது என்பதை கவனியுங்கள்

செய்தனர். அதற்குப் பின் விஜய நகரம் சிதைவுற்றது. சுமார் 200 வருஷ காலம் விஜய நகர அரசர்கள் தென் இந்தியாவில் ஹிந்து மதத்தையும் ஹிந்துக்களையும் மகம்மதியர் அழிக்காமல் காப்பாற்றினர்.

சங்கம வம்சத்து அரசர்கள்.

சங்கம வம்சத்தில் புக்கராயர், இரண்டாவது ஹரி ஹரர், இரண்டாவது தேவராயர் முக்கிய அரசர்கள். புக்கராயர் ராஜ்யத்தை ஏற்படுத்தியவர்களில் ஒருவர். இவர் காலத்தில் இவர் குமாரர் கம்பனர் மதுரையில் ஆண்ட சுல்தானை தோற்கடித்தார். இரண்டாவது ஹரி ஹரர் (1379-1404) ராஜ்யத்தை விஸ்தரிக்கும்படி செய்தார். தலை நகரத்திற்கு விஜய நகரம் என்று பெயரிட்டார். சக்ரவர்த்தி என்னும் பட்டத்தை ஏற்றுக் கொண்டார். இரண்டாவது தேவராயர் (1421-1448) சங்கம அரசர்களுக்குள் மிகவும் திறமை வாய்ந்தவர்; கிருஷ்ணா நதியை ராஜ்யத்தின் வடக்கு எல்லை ஆக்கினார்; கோட்டைகளைக் கட்டி தலை நகரத்தை பலப்படுத்தினார். துங்கபத்திரா நதியில் அணையைக் கட்டி கால்வாய்கள் மூலம் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தினார். மகம்மதியர்களைத் தோற்கடித்து அவர்கள் பலத்தைக் குறைத்தார். அக்காலத்தில் நம் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்த நிகாலோ காண்டி என்ற இட்டாலியரும், அப்துர் ரஸாக் என்னும் அரபியரும் அக்காலத்திய ராஜ்யம், தலை நகரம் இவற்றின் பெருமைகளை விரிவாக உரைத்துள்ளனர்.

சாளுவ வம்சத்தில் நரசிம்ம ராயர் (1487-1493) ஒருவர் தான் முக்கிய மானவர். கடைசி சங்கம அரசர் கொடுமையாக ஆட்சி செய்ததால் அவரைக்கொன்று சாளுவ நரசிம்மர் பட்டத்துக்கு வந்தார். அவர், நாட்டில்

குழப்பத்தை அடக்கி அமைதியை உண்டாக்கினர். அவருக்குப் பின் வந்த சாளுவ வம்ச அரசர்கள் சிறு பிராயத்திலேயே மரண மடைந்தனர்.

23. விஜயநகர ராஜ்ய சரித்திரம்-பிற்பகுதி: 1493-1565

கிருஷ்ணதேவ ராயர்: ராஜ்ய வளர்ச்சி.

நரச நாயக்கரால் ஏற்படுத்தப்பட்ட துளுவ வம்சத்தில் கிருஷ்ணதேவராயர் (1509-30) முக்கிய அரசர். இவர் பட்டத்துக்கு வந்தபோது ராஜ்யம் சீர் கெட்டிருந்தது. நாட்டில் கலகங்களும் அதைச் சுற்றிலும் விரோதிகளும் இருந்ததனல் ராஜ்யத்தின் நிலை தாழ்ந்திருந்தது. முதலில் பெனுகொண்டா, உம்மத்தூர், சிவ சமுத்திரம் முதலிய இடங்களில் ஏற்பட்ட கலகங்களை பட்டத்திற்கு வந்த மூன்று வருஷங்களுக்குள்ளாக அடக்கினர். அக்காலத்தில் கிழக்கு கடற்கரை சமவெளி பிரதேசத்தில் நெல்லூர் வரையிலும் ஆண்டு வந்த கஜபதி வம்ச அரசர்களை போரில் தோற்கடித்து 1517-க்குள் உதயகிரி, கொண்டவீடு, கொண்டபல்லி, கம்பம், மெட்டு முதலிய கோட்டைகளைப் பிடித்துக்கொண்டு தன் ராஜ்யத்தை கிருஷ்ணு நதிவரையிலும் பரவச் செய்தார். பிறகு கிருஷ்ணு நதியைக் கிருஷ்ண தேவராயர் கடந்து கிழக்குக் கடற்கரை சமவெளி வழியாகச் சென்று ராஜ மஹேந்திரவரத்தையும், சிம்மாசலத்தையும் தம் வசப்படுத்திக் கொண்டார். ஒரிஸ்ஸா அரசனுகிய கணபதியைத் தோற்கடித்து அவர் தலை நகரமாகிய கடகம் (கட்டாக்) நகரைத் தீக்கிரையாக்கி அவ்வரசனின் குமாரியை விவாகம்செய்துகொண்டு திரும்பினர். 1520-ம் வருஷத்தில் பீஜபூர் சுல்தான் பேரில் படைஎடுத்துச்சென்று அவரை ராய்ச்சூர் என்னு

மிடத்தில் தோற்கடித்தார். பிறகு திடீரென்று சென்று அஹமத் நகரை நாசம் செய்ததோடு பீஜப்பூரையும் தீ யிட்டு நாசம் செய்தார். கிருஷ்ணதேவ ராயர் காலத்தில் விஜய நகர ராஜ்யம் வட கிழக்கில் கட்டாக் வரையிலும் வட மேற்கில் பம்பாய் வரையிலும் தெற்கில் கன்னியாகுமரி முனை வரையிலும் பரவியிருந்தது.



கிருஷ்ணதேவராயர்

கிருஷ்ணதேவ ராயரின் பெருமை நாடுகளை வெல்வதில் மாத்திர மல்லாமல் சில்பகலையை அபிவிருத்தி செய்ததாலும் தெரிகிறது. அவரை சந்திரகுப்த விக்ரமாதித்யரோடும், தாரா நகரத்தை ஆட்சி செய்த போஜ ராஜரோடும் ஒப்பிடலாம். அரசர் கல்வியில் தேர்ந்தவர்; இவர் ராஜ சபையில் கல்வியில் தேர்ந்த பலர் ஆதரவு அடைந்தனர். அவர்களுள் முக்கியமானவர் அல்லசானி பெத்தன்ன, முக்கு திம்மன்ன. விகட கவியான தெனாலிராமரும் இவர் சபையில் இருந்தார். தெலுங்கு பாஷையை மாத்திரமல்லாமல் இதர

கல்வி, கலை நிலை.

பாஷைகளேயும் போற்றி வந்ததற்கு அத்தாக்ஷிகள் உள்ளன. இவர் சில்ப சித்திர கலைகளைப் போற்றியது தற்கால விஜயநகர அழிவுகளைப் பார்த்தால் தெரியும். அவர் பல கோயில்களேயும் கட்டினர்.

ராம ராயர். கிருஷ்ணதேவராயர் மரண மடைந்த பிறகு அச்சுத ராயர் பட்டத்துக்கு வந்தார். இவர் திறமை வாய்ந்தவரான போதிலும் அதிகாரத்தை யெல்லாம் தன் மைத்துனனை திம்மன்ன என்பவரிடம் ஒப்பு வித்தார். அவர் நல்லவரல்ல. வயது முதிர்ந்த போது பயித்தியக்காரனாய் அச்சுத ராயரின் ராஜ்யத்தைக் கொள்ளை கொள்ள நினைத்தார். இதைக் கண்ட கிருஷ்ணதேவராயரின் மறுமகன் அரவீடு ராமராயர் கிருஷ்ணதேவராயரின் தம்பி மகனை சதாசிவ ராயரை அரசராக்கினர். சதாசிவ ராயர் வலிமை யற்றவராதலால் ராமராயரே ஆட்சி செய்து வந்தார். அவர் வடக்கிலிருந்த மகம்மதிய சுல்தான்கள் ஒருவரோடொருவர் சண்டை செய்யும்படி தூண்டிக் கொண்டிருந்தார். அச்சண்டைகளில் தாம் தலையிட்டுக் கொண்டு விரோதிகளைத் தோற்கடித்து ஏராளமான பொருளை சேகரித்தார். (மகம்மதியர்கள் ஹிந்துகளுக்கு தீங்கிழைத்தற்காக பழிவாங்க அவருக்கு எண்ணம் ஏற்பட்டது. ஆதலால் ராமராயர் மகம்மதியர்களை மிக்க அவமானப்படும்படி செய்துவந்தார். கடைசியாக சுல்தான்கள்

தலைக் கோட்டை சண்டை. எல்லோரும் ஒன்றுகூடி விஜயநகர சேனையைத் தலைக்கோட்டை என்னுமிடத்தில் 1565ம் வருஷத்தில் எதிர்த்து போர்புரிந்து ராமராயரை தோற்கடித்துக்கொன்று விட்டனர்.) பிறகு தலைநகரத்தின் பேரில் படை எடுத்துச் சென்று ஆறு மாதம் நகரத்தைக்

கொள்ளையடித்து அதை நாசம் செய்தனர். விஜயநகர பட்டணத்தின் அழிவுகளை ஹம்பி என்றவிடத்தில் இக் காலத்திலும் காணலாம்.

மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள்.

விஜயநகர அரசர்கள் ஆட்சியினால் மக்களுக்கு பல நன்மைகள் ஏற்பட்டன. (சுமார் 200 வருஷ காலம் மகம்மதியர்களை கிருஷ்ணா நதிக்குத் தெற்கில் வராமல் தடை செய்து ஹிந்து தர்மத்தையும் ஆலயங்களையும் காப்பாற்றினார்கள். (அவ்வரசர்கள் கல்வியையும் கலைகளையும் போற்றி வந்தனர். தங்களுக்கு வேண்டிய துப்பாக்கி வெடி மருந்து, குதிரைகள் முதலியனவற்றை பெறுவதற்கு மேற்கு கரையில் வியாபாரம் செய்ய பண்டகசாலைகள் ஏற்படுத்திக்கொண்ட போர்ச்சுகீசியரோடு நேசம் பாராட்டி தம் ராஜ்யத்தின் வியாபாரத்தைப் பெருக்கினர். மழையும் செழிப்புமற்ற வறண்ட பிரதேசங்களில் நீர்ப்பாசன கால்வாய்களை ஏற்படுத்தி விவசாயத்தை விருத்தி செய்தனர். நாட்டில் பல கட்டிடங்களையும் கோயில்களையும் புதிதாகக் கட்டினது மாத்திரமன்றி பழைய ஆலயங்களையும் செப்பனிட்டனர். புதிய ஆலயங்கள் சரிவர நடப்பதற்காக ஏராளமாக நிலங்களைக் கொடுத்தனர்.|

ஜனங்களுக்குச் செய்த நன்மையைக் கருதி விஜயநகர ராஜ்யத்தை மௌரிய, ஆந்திர, குப்த ராஜ்யங்களோடு ஒப்பிடலாம்.

அத்தியாயம் 9

முதலில் ஆண்ட முகலாயர்கள்

முக்கிய விஷயங்கள் :—பாபர் - முதல் பானிபட் சண்டை 1526 - கான்வாஹா, கோக்ரா சண்டைகள் - ஹுமாயூன் - ஷேர்ஷா - ஆட்சிமுறை - அக்பர் சக்ரவர்த்தி - இரண்டாவது பானிபட் சண்டை 1556 - அக்பர் ராஜ்யத்தின் வளர்ச்சி - ஆட்சிமுறை - சீர்திருத்தங்கள் - கல்வி விஷயங்கள்.

24. பாபர் 1526—1530

பாபரின் முன்னோர்கள்.

1526-ம் வருஷத்தில் நடந்த முதல் பானிபட் சண்டையில் இப்ராஹீம் லோடி தோல்வியடைந்து கொலையுண்ட பிறகு டில்லியில் முகலாய ஜனக்கூட்டத்தைச் சேர்ந்த பாபரால் ராஜ்யம் ஏற்படுத்தப் பட்டது. முகலாயர்கள் மத்திய ஆசியாவிலிருந்த தார்த்தரி, மங்கோலிய ஜனங்கள் சேர்க்கையினுல் ஏற்பட்டவர்கள். (பாபரின் தகப்பனுர் மங்கோலியரான தைமூரின் சந்ததியைச் சேர்ந்தவர் ; ஆனுல் தாயாரோ தார்த்தரியரான செங்கிஸ்கான் வம்சத்தைச் சேர்ந்தவர். ஆகையால் பாபர் பெயர்பெற்ற இரு வீரர்களின் சந்ததியைச் சேர்ந்தவர்)

பாபரின் இளமைப் பருவம்.

(பாபர் தம் பனிரண்டாவது வயதிலேயே பர்காணு பிரதேசத்தின் தலைவரானுர். வீரமும் தைரியமும் பொருந்தியவராதலால் இளம் பிராயத்திலேயே தம் நாட்டை விஸ்தரிக்க எண்ணினுர். ஆனுல் தம் உறவினரும் விரோதிகளும் இவரிடம் பகை

மை கொண்டமையால் பாபர் தம் நாட்டையே விட்டு ஓடும்படி நேர்ந்தது. அப்பொழுது தம் நாட்டுக்குத் தெற்கிலிருந்த ஆப்கானிஸ்தானம் சீர் கேடான நிலையிலிருந்தது. அந்நிலையில் அங்கு படையெடுத்துச் சென்று அந்நாட்டைத் தம் வசமாக்கிக் கொண்டார். பாபர் ஆசை மிக்கவராகையால் ஆப்கானிஸ்தானத்தின் தென் கிழக்கிலிருந்த ஹிந்துஸ்தான சம வெளியையும் ஜயிக்க எண்ணங்கொண்டார். அப்பொழுது டில்லியில் இப்ராஹீம் லோடி ஆண்டு வந்தார்.



பாபர்

முதல் பானிபட் சண்டை 1526.

இவர் ஜனங்களை மிகவும் குரூரமாக நடத்தினமையால் பாபர் பானிபட் சண்டையில் (21–4–1526) ஜயமடைவது சுலபமான காரியமாயிற்று. (78-ம் பக்கம் பார்க்கவும்) முதல் பானிபட் சண்டையில்தான் முதன்முதலாக இந்தியாவில் பீரங்கிகள் உபயோகப்படுத்தப்பட்டன.

பாபரின் கஷ்டங்கள்.

முதல் பானிபட் சண்டையுடன் இப்ராஹீம் லோடியின் ராஜ்யம் முழுவதும் பாபரின் வசமாயிற்று என்று நினைக்கலாகாது. இன்னும் நாட்டில் அங்காங்கு பாபரை எதிர்த்துச் சண்டை செய்யக்கூடிய ஆப்கன் மாகாண அதிபதிகள் இருந்தனர். அவர்களுக்கு

அந்நிய நாட்டினரான பாபர் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பது வெறுப்பை உண்டாக்கியது. ஆதலால் அவர்களெல்லோரும் ஒன்றுகூடி படை திரட்டி அலஹாபாத்துக் கருகில் பாபருடன் சண்டை செய்யத் தயாரானார்கள். டில்லிக்குத்தென்புறத்தில் ராஜபுத்திர வீரர்களிருந்தனர். அவர்கள் மகம்மதிய ராஜ்யத்தை ஒழிக்கவேண்டுமென்ற தீர்மானத்துடனிருந்தனர். அவர்களின் தலைவர் ராணு சங்கர். அவரும் பாபர் முகலாய ராஜ்யத்தை ஏற்படுத்துவதை அங்கீகரிக்கவில்லை. ஆதலால் ராஜபுத்திரர்களெல்லாரும் ஒன்றுகூடி பாபரை எதிர்க்கத் தயாரானார்கள். ஆதலால் பாபர் ஆப்கானிய மாகாண அதிபதிகளையும் ராஜபுத்திர வீரர்களையும் தோற்கடித்தால்தான் முகலாய ராஜ்யத்தை நிலையாக ஏற்படுத்த முடியும்போல் தோன்றியது.

கான்வாஹா சண்டை 1527.

ராஜபுத்திரர்கள் வீரம் பொருந்தியவர்களாதலால் பாபர் முதலில் அவர்களோடு சண்டை செய்யத் தீர்மானித்தார். 1527-ம் வருஷம் தம் படையுடன் தெற்கு நோக்கிச் சென்ற பாபர் கான்வாஹா (சிக்ரி) என்னுமிடத்தில் ராஜபுத்திரர்களை சந்தித்தனர். வீராவேசத்துடன் ராஜபுத்திரர்கள் சண்டையிட்டபோதிலும் பாபரின் பீரங்கிகளின் முன்னர் அவர்கள் நிற்க முடியவில்லை. ஆதலால் பாபர் ஜயமடைந்தார். உயிர் தப்பி ஓடிய ராணுசங்கர் சிலகாலம் கழித்து இறந்தார்.

கோக்ரா சண்டை 1529.

ராஜபுத்திரர்களைத் தோற்கடித்த மறு வருஷம் பாபர் ஒரு பெருத்த படையுடன் ஆப்கானியரோடு சண்டை செய்ய கிழக்கு நோக்கிச் சென்றார். அவர்களை 1529-ம் வருஷத்தில் கோக்ரா நதிக்கரையில் தோற்கடித்தார். ஆப்கானிய பிரபுக்களுக்கு உதவி



பாபர், ஹுமாயூன் செய்த சண்டைகளையும் ஜயித்த நாடுகளையும் கவனியுங்கள்

செய்ய வந்த வங்காள நவாபுடன் சமாதானம் செய்து கொண்டு அவரிடமிருந்து பீஹாரின் மேற்கு பாகத்தைப் பெற்றார்.

மேற்கூறிய இரு சண்டைகளால் பாபரின் ராஜ்யம் ஹிமயமலை முதல் சற்றேறக்குறைய விந்தியமலை வரையிலும், கிழக்கே பீஹார்வரையிலும் பரவியது. கோக்ரா சண்டை நடந்த ஒரு வருஷத்திற்குள் பாபர் மரணமடைந்தமையால் நாட்டின் ஆட்சியைப்பற்றி நிலையான ஏற்பாடு ஒன்றும் செய்யவில்லை.

25. ஹுமாயூன் (1530-40; 1555) ஷேர்ஷா (1540-1544)

ஹுமாயூன்

பாபருக்குப் பிறகு அவர் குமாரராகிய ஹுமாயூன் பட்டத்துக்கு வந்தார். அவர் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்; போர்வீரர்; ஆனால் சுறுசுறுப்பற்றவர். ஆகையால் தகப்பனார் சம்பாதித்த ராஜ்யத்தை நீடித்து ஆட்சி செய்ய முடியாமல் போய்விட்டது.

அவர் கஷ்டங்கள்

அவர் பட்டத்துக்கு வந்தபோது அவருக்கு அநேக கஷ்டங்கள் ஏற்பட்டன. (அவர் சகோதரராகிய காம்ரான் காபூலிலிருந்து கஷ்டத்தை உண்டாக்கினார். குஜராத்தில் பஹதூர்ஷாவும் வங்காளத்தில் ஆண்ட ஆப்கன் அதிபதியும் கலகம் செய்தனர்.)

ஹுமாயூன் தம் சகோதரரை அடக்காமல் முதலில் வங்காளத்தில் ஆண்டுவந்த ஆப்கன் அதிபதியின்மேல் படை எடுத்துச்சென்று அவரைத் தோற்கடித்தார். பிறகு குஜராத்தை ஆண்டு வந்த பஹதூர்பேரில் படை எடுத்து அவர் தலைநகரை கைவசப்படுத்திக்கொண்டு தம் சகோதரனை அஸ்காரியை அவ்விடத்துக்கு அதிபதியாக்கினார்.

ஆனால் அபினி என்னும் மயக்கம்தரும் வஸ்துவை உண்ணும் பழக்கத்தினால் ஹுமாயூன் சுறுசுறுப்பாக இல்லை. ஆதலால் பஹதூர்ஷா திரும்பவும் குஜராத்தைத் தம் வசப்படுத்திக்கொண்டார். (இந்த சமயத்தில் பீஹார் அதிபதியான ஷேர்கான் என்பவர் வங்காளத்தைத் தம் வசமாக்கிக்கொண்டார்) என்ற விஷயம் ஹுமாயூனுக்குத் தெரிந்தது. அவரை அடக்காவிட்டால் மிக்க பலமுள்ளவராகிவிடுவாரென்று வங்காளத்தின் மீது படையெடுத்துச் சென்றார். சண்டை செய்யும் முறையில் வல்லவரான ஷேர்கான் ஹுமாயூனை தடைசெய்யாமல் நேராக வங்காளம் போகும்படி செய்தார். ஹுமாயூன் வங்காளத்தின் தலைநகரம் சேர்ந்தவுடன் சவுக்கியமாக காலம் கழிக்கலானார். ஆனால் ஷேர்கான், முகலாய சக்ரவர்த்தி வங்காளத்தினின்றும் டில்லிக்கு போக்கு வரவு செய்வதைத் தடைசெய்தார். இவ்விஷயத்தை ஹுமாயூன் அறிந்தவுடன் ஒரு படையுடன் ஷேர்கானை தாக்கி 1539-ல் சௌஸா என்னுமிடத்தில் தோல்வியடைந்தார்.

நாட்டை விட்டு ஓடுதல்

(டில்லிக்குச் சென்று மற்றொருமுறை படையைத் திரட்டிக்கொண்டு ஹுமாயூன் 1540-ல் கனௌஜ் என்னுமிடத்தில் ஷேர்கானோடு சண்டை செய்தார். ஆனால் மறுபடியும் தோல்வியடைந்ததால் உயிர் பிழைப்பதற்காக நாட்டைவிட்டு ஓடவேண்டி யிருந்தது) பாரஸீக அரசரின் சபையில் இவருக்கு பாதுகாப்பு கிடைத்தது. பிறகு அவருடைய உதவியினால் 1545-ல் காண்டஹாரையும் 1547-ல் காபூலையும் தம் வசப்படுத்திக் கொண்டு ஆப்கானிஸ்தானத்தை ஆண்டுவந்தார்.

ஹுமாயூன் நாட்டைவிட்டு ஓடினவுடன் ஷேர்கான் டில்லியைத் தன் வசமாக்கிக்கொண்டு அரசரானார். அவர்

ஒரு ஆப்கானிய குதிரை வியாபாரியின் குமாரர். அவ் வியாபாரி பீஹார் மாகாணத்தில் ஒரு சிறு ஜாகீரை சம்பாதித்து அதற்கு அதிபதியானார். ஷேர் சிறு வயதிலேயே தன் தாயை இழந்தார்; மாற்றாந் தாயிடம் அதிக துன்புற்றார். ஜாகீரை நடத்துவது மிகவும் கஷ்டமாக விருந்ததால் அவ்வேலை ஷேர்கானுக்கு இடப்பட்டது. அவ்வேலையை நடத்திவரும்போது ஷேர் நாட்டை ஆளும் திறமையை அடைந்தார். 1527-31 வரையில் ஷேர் முகலாய ராஜசபையில் வேலையில் அமர்ந்தார். அதற்குபின் ஷேர்கான் பீஹாரை அடைந்தார். 1536-ம் வருஷத்தில் வங்காளத்தின்மீது படை எடுத்துச் சென்று ஜயித்து சுயேச்சையடைந்தார். 1539, 1540-ம் வருஷங்களில் ஹுமாயூனைத் தோற்கடித்து டில்லிக்கு அரசரானார். பிறகு பஞ்சாபை ஜயித்துத் தம் வசமாக்கிக் கொண்டார். 1542-ம் வருஷத்தில் மாளவத்திலுள்ள குவாலியர் கோட்டையைப் பிடித்துக்கொண்டார். 1545-ல் பண்டல்கண்ட் பிரதேசத்தில் காலஞ்சர் கோட்டையை முற்றுகை செய்த சமயத்தில் அடிபட்டு உயிர் துறந்தார்.

ஷேர்ஷாவின் வரலாறு.

ஷேர் ஷாவின் ஜயங்கள்.

ஷேர்ஷா ஆட்சி புரிவதில் திறமை வாய்ந்தவர். அவர் ஆண்ட ஐந்து வருஷங்களுக்குள் ராஜ்யத்தைப் பெருக்கியது மாத்திரமல்லாமல் ஆட்சி முறையில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். தன் ராஜ்யத்தை சர்க்கார்களாகவும் (ஜில்லாக்கள்) பர்க்காணங்களாகவும் (தாலூக்காக்கள்) பிரித்து அவை ஒவ்வொன்றிலும் தகுந்த அதிகாரிகளை நியமித்தார். படைகளை அதிகரிக்

ஷேர் ஷாவின் சீர்திருத்தங்கள்.

கும்படி செய்து ஜாகீர்தாரர்களின் அதிகாரத்தைக் குறைத்தார். (வியாபாரம் அதிகரிப்பதற்காக ஷேர் ஷா சாலைகளைப் போட்டுவைத்தார். இவற்றுள் முக்கியமானது 2,000 மைல் நீளமுள்ளது; வங்காளத்தில் கௌரிலிருந்து பஞ்சாபில் பெஷா வருக்குப் போடப்பட்டது. இவர் பாதைகளின் இருபுறத்திலும் வழிப்போக்கர்களுக்கு நிழல் தருவதற்காக மரங்களை நட்டுப் பயிராக்கினர். ஆங்காங்கு வழியில் சத்திரங்களைக்கட்டி பிரயாணம் செய்வோர் தங்குவதற்கு வசதிகள் ஏற்படுத்தினர். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கடிதங்களைத் துரிதமாகக் கொண்டுபோக குதிரை சவாரி செய்து கடிதங்களைக் கொண்டுபோகும் முறையை ஆரம்பித்தார்.) (நிலங்களை அளந்து அவைகளின் வருமானத்திற்கு தக்கவாறு வரி விதித்து அதை பணமாகவோ பண்டமாகவோ செலுத்தலாம் என்று ஏற்பாடு செய்தார்.) நாணயங்களையும் சீர் திருத்தம் செய்து ரூபாய் நாணயங்களை வெளியிட்டார். சட்டவரம்பு மீறி நடப்பவர்களையும், கள்வர்களையும் மிகவும் கடுமையாக தண்டித்தார்.

ஷேர் ஷாவுக்குப் பிறகு ஆண்ட ஆப்கன் வம்ச அரசர்கள் திறமை யற்றவர்கள். பத்து வருஷ காலத்திற்குள் நான்கு அரசர்கள் ஆண்டனர். அவர்களுள் கடைசியாக ஆட்சி செய்தவர் மகம்மது ஆதில்ஷா. அவர் மிக்க குரூர குணம் வாய்ந்தவர். அவரிடத்தில் ஹீமு என்னும் ஹிந்து மந்திரியாக விருந்தார். ஒரு ஹிந்துவை அமைச்சராகக் கொண்டிருந்ததால் டில்லி, பஞ்சாப், மாளவத்திலிருந்த ஆப்கன் பிரபுக்கள் ஆதில்ஷாவுக்கு விரோதமாகக் கலகம் செய்தனர். ஹீமு ஒரு சிறந்த சேனைத்தலைவராதலால் மகம்மது ஆதில்ஷாவின் ஆட்சி சிலகாலம் ஒழுங்காக நடந்தது. காபூலிலிருந்து ஹிந்துஸ்தானத்தில் நடக்

கும் விஷயங்களை கவனித்து வந்த ஹுமாயூன் இது தக்க சமயமென்று நினைத்து 1555-ல் இந்தியாவின்மேல் படை யெடுத்து அப்போது பஞ்சாப் மாகாண அதிபதியை தோற்கடித்து டில்லி ஆக்ராவைக் கைப்பற்றி, மறுபடியும் டில்லி அரசரானார். இச்சமயத்தில் மகம்மது ஆதில் ஷாவும் ஹீமுவும் வங்காளத்திலிருந்தனர். அரசரான ஆறுமாதத்திற்குள் ஒரு நாள் ஹுமாயூன் தம் அரண்மனை மாடியிலிருந்து தவறி விழுந்து மரண மடைந்தார்.

26. அக்பர் சக்ரவர்த்தி 1556-1605

அக்பர் அரசரானது.

ஹுமாயூன் இறந்தபோது அவர் குமாரரான அக்பர் முகலாய சேனைத்தலைவரான பைராம்கானுடன் பஞ்சாபில் இருந்தார். ஹுமாயூன் மரணமடைந்ததைக் கேட்டவுடன் பைராம்கான் அக்பருக்கு சக்ரவர்த்தியாக முடிசூட்டி அக்பர் இளம் பிராய மானவராதலால் தான் ரக்ஷக பிரபுவாகயிருந்து நாட்டை ஆளத்தொடங்கினார்.

டில்லியில் இவ்விஷயங்கள் நடந்த சமயத்தில் மகம்மது ஆதில்ஷா வங்காளத்தில் ஏற்பட்ட ஒரு கலகத்தில் கொல்லப்பட்டார். ஹுமாயூன் மரண மடைந்ததைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் ஹீமு விக்கிரமாதித்யர் என்றபட்டத்துடன் டில்லிக்குச் சென்று அதைத் தம் வசமாக்கிக்கொண்டு வடக்கில் பைராம் கானை நோக்கிச் சென்றார். இவ்விரண்டு சேனைகளுக்கும் பானிபட் மைதானத்தில் 1556-ம் வருஷத்தில் ஓர் கடும்போர் நடந்தது. வீரத்துடன் சண்டைசெய்த போதிலும் ஹீமு அடிபட்டு விரோதிகளிடம் அகப்பட்

இரண்டாவது பானிபட் சண்டை 1556.

டுக்கொண்டதால் கொல்லப்பட்டார். ஹீமுவின் மரணத்துடன் அக்பர் ராஜ்யம் ஸ்திரமாக நிலைநாட்டப்பட்டது.

அக்பர் அரசரானபோது அவருக்கு ஆப்கானிஸ்தானமும் பஞ்சாபில் சில பாகங்களும் மாத்திரமும்தான் இருந்தன. அச்சிறு ராஜ்யத்தை 1601 - க்குள்ளாக அதிகமாக பரவச்செய்தார். இவ்விதம் பரவச்செய்ததற்கு சண்டை செய்து வெற்றி பெற்றது மாத்திரம் காரணமல்ல. ராஜ தந்திர முறைகளை உபயோகித்தும் சில பாகங்களை ராஜ்யத்தில் இணைத்தார். ஹீமு கொல்லப்பட்ட நான்கு வருஷத்திற்குள் பைராம்



அக்பர் சக்ரவர்த்தி

கான் கிழக்கில் ஜான்பூர் முதல் தெற்கில் குவாலியர் வரையிலுமுள்ள பிரதேசங்களை ஜயித்தார். அவருக்குப் பின் சில சேனைத் தலைவர்கள் மாளவத்தையும் ஜயித்தனர். 1564-ல் அக்பர் தாமே ஆட்சிசெய்ய ஆரம்பித்தார். அவ்வருஷத்திலேயே அவர் காண்ட்வானா பிரதேசத்தை ஆண்டுவந்த ராணி துர்க்காவதியை தோற்கடித்து அப்பிரதேசத்தை முகலாய ராஜ்யத்தோடு இணைத்துக்

கொண்டார். இதற்கு பின் மூன்று வருஷத்திற்குள் வேண்டிய போர் வீரர்கள், வெடிமருந்து, பீரங்கிகள் முதலியனவற்றைச் சேர்த்துக்கொண்டு ராஜபுதனித்தின்மேல் படை எடுத்து மீவார் சமஸ்தானத்தின் தலைநகராகிய சித்தூரை முற்றுகையிட்டார். அப்பொழுது ஆண்டுவந்த உதயசிங் என்னும் ராணு, கோட்டையை விட்டு ஓடி ராஜபுதனத்தின் வேறொருபாகத்தில் உதயபுரி என்னும் புதிய பட்டணத்தை ஏற்படுத்திக் கொண்டு அங்கே ஆளத்தொடங்கினுர். ஆனுல் அரச குடும்பத்தைச் சேர்ந்த இதரர்கள் அக்பரை இரண்டுவருஷம் எதிர்த்துச் சண்டையிட்டு போர்க்களத்தில் மாண்டனர். பெண்மக்களெல்லாரும் ஜோஹர் என்னும் முறைப்படி தாம் வளர்த்த தீயில் விழுந்து உயிர் துறந்தனர். இதற்குப் பிறகுதான் சித்தூர் அக்பர் வசமாயிற்று. 1669-ம் வருஷத்தில் காலிஞ்சர், ரணதம்புரம் கோட்டைகளை அக்பர் வென்று ராஜ்யத்தைப் பரவச் செய்தார். சித்தூர் ராணு உதயசிங்கின் குமாரன் பிரதாப்சிங் மாத்திரம் அக்பரின் அதிகாரத்தை ஒத்துக்கொள்ளாமல் தான் ஜீவித்திருந்தவரையில் அரவல்லிக்குன்றுகளில் ஒளிந்துகொண்டு முகலாயர்களுடன் சண்டையிட்டு வந்தார். 1572-ம் வருஷத்தில் அக்பர் குஜராத்தையும் 1576-ம் வருஷத்தில் காஷ்மீரத்தையும் வென்று தம் வசமாக்கிக் கொண்டார். சாமர்த்தியமுள்ள தன் சேனைத் தலைவர்களை வங்காளத்துக்கனுப்பி அந்த மாகாணத்தையும் ஜயித்து முகலாய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். 1591-ம் வருஷம் ஸிந்து பிரதேசத்தில் ஆண்டுவந்த நவாபை தோற்கடித்தபிறகு அதுவும் முகலாய ராஜ்யத்தோடு சேர்ந்தது.

அக்பர் ஜயித்த நாடுகள்.

வட இந்தியாவை ஜயித்ததோடு திருப்தியடையாமல் தென் இந்தியாவிலும் தம் ஆதிக்கம் பரவ வேண்டுமென்று அக்பர் விரும்பினர். ஆதலால் தக்காணத்தில் ஆண்டுவந்த சுல்தான்களிடம் சில தூதர்களை அனுப்பி தம் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ளும்படி தெரிவித்தார். இதைக் கேட்டவர்களுள் காண்டேஷ் சுல்தான் மாத்திரம் அக்பர் ஆதிக்கத்தை ஒத்துக்கொண்டார். தம் ஆதிக்கத்தை ஒத்துக்கொள்ளாததையே காரணமாகக்கொண்டு அஹமத் நகரோடு சண்டை செய்ய படையொன்றை அனுப்பினர். அக்காலத்தில் அந்த நகரத்தை சாண்ட் பீபி என்னும் வீர ராணி ஆண்டு வந்தாள். அவள் வீரன் போல் ஆயுதங்களைக் கொண்டு தைரியமாக சண்டையிட்டாள். ஆயினும் கடைசியாக பேரார் மாகாணத்தை முகலாயருக்குக் கொடுத்து சமாதானம் செய்துகொண்டாள். 1601-ம் வருஷத்தில் அக்பர் ராஜ்யம் வடக்கே ஹிமயமலை முதல் தெற்கில் பேரார் வரையிலும், தென் கிழக்கில் ராஜ்மஹல் குன்றுகள் முதல் வங்காளம் ஒரிஸ்ஸா முதலிய பிரதேசங்கள் வரையில் பரவியிருந்தது.

மாகாண ஆட்சி. மேற்கூறிய விதம் அக்பர் தாம் சம்பாதித்த ராஜ்யத்தை பதினைந்து சுபா (மாகாணங்கள்) க்களாகப் பிரித்தார். ஒவ்வொரு சுபாவையும் சர்க்கார் (ஜில்லாக்)களாகவும், ஒவ்வொரு சர்க்காரையும் பர்காணு (தாலுகா)க்களாகவும் பிரித்தார். ஒவ்வொரு சுபாவுக்கும் ஒரு சுபேதார் என்ற அதிகாரியை நியமித்தார். சர்க்கார்களுக்கும் பர்க்காணுக்களுக்கும் தனித்தனி அதிகாரிகளை ஏற்படுத்தினர்.

அக்பர் தன் பேரரசை ஆட்சி செய்ய ஏற்படுத்திய முறைக்கும் அவருக்கு முன் ஆப்கானிய மன்னர்கள்



அக்பர் ராஜ்யத்தின் எல்லையையும் அதிலிருந்த மாகாணங்களையும் கவனியுங்கள்

உபயோகித்த முறைக்கும் வித்தியாசங்கள் உண்டு. அவர்கள் ஹிந்துக்களிடம் விரோதம் பாராட்டி அவர்கள் மதத்தை அழித்து மகம்மதிய மதத்தை பரவச்செய்யும் நோக்கமுள்ளவர்களாக விருந்தனர். ஆனால் அக்பர் ஹிந்துக்களையும் ராஜபுத்திரர்களையும் விரும்பி அவர்களை அன்புடன் ஆதரித்து வந்தார். ஹிந்துக்களின்பேரில் விதித்திருந்த ஜிஸியா என்னும் வரியையும், யாத்ரிகர் பேரில் வரியையும் நீக்கிவிட்டார். ஹிந்து கல்விமான்களையும் கவிகளையும் பொருளுதவி செய்து போற்றினார். ஹிந்துக்களுக்கும் ராஜபுத்திரர்களுக்கும் அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை அளித்தார். தாமும் தம் ராஜசபையில் பலரும்ராஜபுத்திர பெண்களை மணந்தனர். ஹிந்துக்களுக்கும் ராஜபுத்திரர்களுக்கும் இவர் செய்த உதவி மகம்மதியர்களை வெறுத்ததுபோல் தோன்றியது.

நிலவரி வசூலிக்கும் விதத்தில் அக்பர் ஷேர்ஷா செய்த ஏற்பாடுகளை திருத்தியும் பெருக்கியும் அமைத்தார். இந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஒத்தாசை செய்தவர் ராஜா தோடர்மல் என்னும் அமைச்சர். இதன்படி நிலங்களை யளந்து, அவற்றின் வளத்திற்குத் தகுந்தவாறு தரவாரியாகப் பிரித்து வருமானத்திற்குத் தகுந்தவாறு வரியை விதித்தார்.

புதிய மதம். அக்பர் தம் குடிகளனைவரும் ஒரே மதத்தைத் தழுவ வேண்டுமென்று நினைத்து எல்லா மதங்களிலுமுள்ள முக்கியமான நல்ல விஷயங்களைத் திரட்டி தீன் இலாஹி என்னும் புதிய மதத்தை வெளியிட்டார். அதன்படி தெய்வம் ஒருவரே; அக்பரே முக்கிய குரு. அக்பர் ஏற்படுத்திய மதம் அவர் காலத்துக்குப்பின் விரைவில் மறைந்தது.

சில்ப கலையும் கல்விமான்களும்.

அக்பர் காலத்தில் சில்ப விஷயங்களிலும் அபிவிருத்தி ஏற்பட்டது. இவர் நிர்மாணம் செய்த பாத்பூர் (**Fatehpur**) ஸிக்ரி என்னும் பட்டணம் இப்பொழுது சீர்குலைந்திருந்தபோதிலும் அங்குள்ள கட்டிடங்கள் அக்பர் காலத்தில் சில்பகலை எவ்வளவு மேன்மை பெற்றிருந்தது என்பதை விளக்குகின்றன. இவர் காலத்தில் சங்கீதத்தில் பெயர்பெற்ற தான்சென், சரித்திர ஆசிரியரான அபுல்பாஸல், பாரஸிக பாஷையில் கவி செய்யும் பெய்ஸி, விகட கவியாகிய ராஜா பிர்பால் முதலியோர் அரசசபையிலிருந்து வந்தனர்.

எவ்விதத்தில் சோதனை செய்தபோதிலும் அக்பர் ஒரு மஹா சக்ரவர்த்தி என்பதற்கு ஐயமே இல்லை. அவர் ஏற்படுத்திய முறைகளைப் பின்பற்றி வந்தவரையிலும் முகலாய ராஜ்யம் நிலையாக இருந்தது. அம்முறையை மாற்றிய சிறிது காலத்திற்குள்ளாகவே முகலாய ராஜ்யம் சிதைவுண்டது.

அத்தியாயம் 10.

புகழ் பெற்ற முகலாய சக்ரவர்த்திகள்

முக்கிய விஷயங்கள் :—ஜஹாங்கீர் - அஹமத் நகரத்தோடும் மீவாரோடும் செய்த சண்டைகள் - குர்ரம் இளவரசன் மஹாபத்கான் செய்த கலகங்கள் - ராஜசபையில் ஆங்கில தூதர்கள் - ஷாஜஹான் - உள்நாட்டு விஷயங்கள் - மும்தாஜ்மஹால் - வார்ஸு சண்டை - ஔரங்கசீப் சக்ரவர்த்தி - ராஜநீதி - அதனால் ஏற்பட்ட பயன்கள் - ஔரங்கசீப் செய்த சண்டைகள்.

27. ஜஹாங்கீர் 1605—1627

ஜஹாங்கீரின் குணம்.

அக்பர் மரண மடைந்தவுடன் அவர் குமாரனை சலீம், ஜஹாங்கீர் என்ற பட்டத்துடன் சக்ரவர்த்தியானார். அவர் கல்வியில் தேர்ந்தவர்; புத்தி கூர்மைவாய்ந்தவர்; ஆனால் சிற்றின்பப் பிரியர். அழகு பொருந்திய நூர்ஜஹானை மணஞ் செய்துகொண்ட பின் அரசாங்கத்தை நடத்தும் விஷயங்களை அவளிடம் ஒப்புவித்துவிட்டு, தான் கவலையின்றி வாழ்ந்து வந்தார்.

ஜஹாங்கீர் ஆட்சிக் காலமெல்லாம் அஹமத் நகருடனும் மீவார் ராஜ புத்திரர்களுடனும், குர்ரம் மஹாபத் கான்களுடனும் சண்டை செய்து கழிக்கவேண்டியதாயிற்று. அதனால் நாட்டின் அமைதி குறைந்து ஜனங்களுக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டன. அக்பர் சக்ரவர்த்தி நாட்டை ஆள்வதற்கு கையாண்ட முறைகளையே உபயோகித்து வந்ததால் நாட்டில் அரசாங்கம் ஒழுங்காக நடந்து வந்தது.

குஸ்ருவின் கலகம்

ஜஹாங்கீர் அரசரான சிறிது காலத்திற்குள் அவரது மூத்த குமாரரான குஸ்ரு அவருக்கு விரோதமாகக் கலகம் செய்தார். அப்போது சக்ரவர்த்தி குஸ்ருவுக்கெதிராக ஒரு படையை அனுப்பி அவரைத் தோற்கடித்துக் கைதியாக்கி குர்ரம் இளவரசரிடம் ஒப்புவித்தார். குர்ரம் தன் சகோதரனை வஞ்சனைசெய்து கொலை செய்தார்.



ஜஹாங்கீர்

அஹமத் நகரத்திலிருந்த ஜனங்களுக்கு, பேரார் மாகாணத்தை முகலாயருக்குக் கொடுத்து அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டது, அதிருப்தியை உண்டாக்கியது. அவர்கள் மாலிக் ஆம்பர் என்னும் புத்திவாய்ந்த அடிமையின் தலைமையின் கீழ் ஒன்றுய்க்கூடி, தலை நகரத்தைத் தம்வசப்படுத்திக்கொண்டு முகலாயரோடு சண்டையிட்டனர். 1620-ம் வருஷம் வரையிலும் அந்த நகரம் முகலாய சக்ரவர்த்திக்குள்படவில்லை. அவ்வருஷத்தில் ஜஹாங்கீர் தம் குமாரரான குர்ரத்தை மாலிக் ஆம்பரை எதிர்க்க அனுப்பினர். அவர் அஹமத் நகர கோட்டையை வசப்

அஹமத் நகரோடுசண்டை.

படுத்திக்கொண்டார். ஆனபோதிலும் 1629-ம் வருஷத்தில் மாலிக் ஆம்பர் மரணமடையும் வரையிலும் அவர் முகலாயரோடு சண்டை யிட்டுக்கொண்டே யிருந்தார். ராணு பிரதாப்சிங் 1597-ல் மரணமடைந்தார். அது முதல், அக்பர் சக்ரவர்த்தி உயிருடன் இருந்தவரையில் பிரதாப் சிங்கிடம் கொண்டிருந்த நன்மதிப்பினுல் அவர் குமாரரான அமர்சிங்கின்மீது சண்டை செய்யாம லிருந்தார். ஜஹாங்கீரோ அவ்விதமின்றி மஹபத்கான் என்னும் சேனைத் தலைவரை அமர்சிங்கோடு சண்டை செய்வதற்காக அனுப்பினுர். அவராலும் ராஜ புத்திரர்களை ஜயிக்க முடியவில்லை. கடைசியாக 1614-ம் வருஷத்தில் ஜஹாங்கீர் தம் மகன் குர்ரத்தை மீவாரின் மீது சண்டையிட அனுப்பினுர். குர்ரம் சில ராஜபுத்திரர்கள் உதவியினுல் மிக்க திறமையுடன் சண்டை செய்ததினுல், அமர்சிங் ஜஹாங்கீரிடம் சமாதானம் செய்துகொள்ளும்படி நேர்ந்தது. அதன்படி மீவார் ராஜ்யத்தை அமர்சிங்கே ஆளும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டது. அமர்சிங்கிடம் இருந்த நன்மதிப்பினுல் ஜஹாங்கீர் அவர் நேரில் ராஜசபைக்கு வந்து பாதுஷாவுக்கு மரியாதை செய்யவேண்டியதில்லை என உத்தரவிட்டார். இச்சண்டையில் ஜயமடைந்ததற்காக குர்ரத்திற்கு ஷாஜஹான் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது.

மீவார்மீது படை எழுச்சி.

ஜஹாங்கீரின் குமாரர்களுள் மூன்றுமவரான குர்ரம் இளவரசரே திறமைவாய்ந்தவர். குர்ரமே தகப்பனுக்குப் பின் பட்டத்தை அடைவாரென்று எல்லாரும் எதிர்பார்த்தனர். ஆனுல் குர்ரம் பட்டத்தை யடைவது நூர்ஜஹானுக்கு விருப்பமில்லை. குர்ரம் நூர்

குர்ரம் செய்த கலகம்.

ஜஹானுடைய மருமகளை மணஞ்செய்து கொண்டிருந்த போதிலும், அவள் தன் முதல் கணவனின் பெண்ணை ஜஹாங்கீரின் நான்காவது குமாரனான ஷஹாரியருக்கு மணஞ் செய்வித்திருந்தாள். ஆகையால் தன் மருமகனான ஷஹாரியரே பட்டத்தை யடைய வேண்டுமென்று பிரயத்தனம் செய்தாள். இவ் விஷயத்தைத் தெரிந்துகொண்ட ஷாஜஹான் தம் தகப்பனுக்கு விரோதமாகக் கலகம் செய்தார். எப்பொழுதும் தலைநகரை விட்டு வெளியே செல்லாத ஜஹாங்கீர் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு சென்று ஷாஜஹானைத் தோற்கடித்தார். புறங்காட்டி ஓடிய குமாரனைப் பிடிக்க படைத் தலைவரான மஹாபத்கானை அனுப்பினார். மஹாபத்கான் குர்ரத்தைப் பிடித்தார்.

மஹாபத்கான் செய்த கலகம்.

நூர்ஜஹான் சூழ்ச்சிகளை அறிந்த மஹாபத்கான் இரண்டாவது இளவரசரான பார்விசை அரசராக்க முயன்றார். நூர்ஜஹான் அதைத் தெரிந்து கொண்டதால் மஹாபத்கானை கைதியாக்க எண்ணி, உடனே தன் கணவனை மஹாபத்கானை நேரில் வரும்படி உத்தரவிடச் சொன்னாள். ஒற்றர்களிட மிருந்து விஷயத்தைத் தெரிந்துகொண்ட மஹாபத்கான் ஒரு படையுடன் ஜீலம் நதிக்கரையி லிருந்த ஜஹாங்கீரிடம் சென்றார். உடனே அவர் ஜஹாங்கீரைச் சிறைப் பிடித்துக்கொண்டார். கணவனை விடுவிக்க நூர்ஜஹான் சண்டையிட்டபொழுது அவளையும் தோற்கடித்தார். சண்டை செய்து ஜயமடைய முடியாதென்று நினைத்த நூர்ஜஹான் தன் கணவனோடு சிறைபுகுந்தாள். சூழ்ச்சி செய்து இருவரும் சிறையினின்று தப்பித்துக் கொண்டு உடனே தங்கள் படையுடன் சேருவதைக்கண்ட

மஹபத்கான் ஓடிப்போய் ஷாஜஹானுடன் சேர்ந்து கொண்டார். ஜஹாங்கீர் 1627-ல் மரண மடைந்தார்.

ஆங்கில தூதர்கள். முகலாயருக்குப் பிறகு நம் நாட்டில் ஆண்டுவரும் ஆங்கிலேயர்கள் முதன் முதலாக ஜஹாங்கீர் காலத்தில்தான் இந்தியாவிற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் வர்த்தக விஷயமாக சில அநுகூலங்கள் அடைவதற்காக இரு தூதர்களை ஜஹாங்கீரிடம் அனுப்பினார்கள். அவர்களுள் முதல் வந்தவர் ஹாகின்ஸ் என்பவர். ஜஹாங்கீர் அவருக்கு மரியாதைகள் செய்து கவனித்தாரே ஒழிய அவர் வந்த காரியத்தை மாத்திரம் கவனிக்கவில்லை. இரண்டாவது தூதர் ஸர் தாமஸ் ரோ என்பவர். இவர் வந்ததனால் கம்பெனியாருக்கு சில அநுகூலங்கள் ஏற்பட்டன. தாமஸ் ரோவுக்கும் ஜஹாங்கீருக்கும் நேசம் அதிகரித்ததால் ஆங்கிலேயர்கள் சூரத்நகரத்தில் பண்டக சாலைகள் கட்டிக்கொள்ளலாமென்று உத்தரவிட்டார்.

28. ஷாஜஹான் 1628—1656

ஷாஜஹானின் குண விசேஷம். ஜஹாங்கீர் மரண மடைந்ததை தக்காணத்திலிருந்த ஷாஜஹான் கேட்டவுடன் மிகவும் வேகமாக வட இந்தியாவுக்குச் சென்றார். அவர் குஸ்ருவின் குமாரனைத் தவிர ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஆண்மக்கள் எல்லாரையும் கொன்று தாமே மகுடம் தரித்துக்கொண்டார். குஸ்ருவின் குமாரன் பாரஸீகத்துக்கு ஓடிவிட்டான். பட்டத்துக்கு வரும்போது ஷாஜஹான் இவ்விதம் குரூரமாக விருந்தார். குரூரம் மாத்திர மல்லாமல் திரவியத்தை ஏராளமாக செலவு செய்பவரென்றும், மதப்பற்று உடையவரென்றும், தகப்பனைப்போல் சிற்றின்பப் பிரிய

ரென்றும் பிறர் சொல்லும் தூஷணை வார்த்தைகளை நம்பு பவ ரென்றும் அவர் ஆட்சியால் தெளிவாக விளங்கு கிறது.

உள்நாட்டு விஷயங்கள்.

1630 முதல் 1632-வரையில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அக் கஷ்டத்தைப் பொருக்க முடியாமல் ஜனங்கள் அதிகமாகக் கஷ்டப்பட்டனர். ஜனங்கள் கஷ்டத்தை நீக்காமல் ஒரு கோடி ரூபாய் செலவு செய்து தமக்கு மயில் சிம்மாசனம் ஒன்று செய்து கொண்டார். ஆக்ராவில் 70 அடி சதுரமும் 30 அடி உயரமுமுள்ள இரண்டு அறைகள் கட்டி அவைகளை வெள்ளி தங்க தகடுகளால் அலங்கரித்தார். தம் நடன மாதுகளில் சிலரை போர்ச்சுகீசியர் பிடித்துக் கொண்டனர் என்று கேள்விப்பட்டு ஹூக்லி நதிக் கரையிலிருந்த அவர்கள் பண்டகசாலையை நாசஞ் செய்து அவர்களில் அநேகர்களை கைதிகளாகப் பிடித்துக் கொண்டுவந்து சிலரை மகம்மதியராக்கி மற்றும் சிலரைக் கொல்லும்படியாக உத்தரவிட்டார்.



ஷாஜஹான்


அயல் நாடுகளின்மேல் படையெடுத்துச் சென்றதனல் ஷாஜஹானுக்கு விசேஷமான பலன்கள் ஒன்றும் ஏற்படவில்லை. முகலாய அரசர்களின் முன்னோர்கள்

ஆட்சி செய்துவந்த பாக், பதாக்ஷன் என்னும் பிரதேசங்களை ஜயிக்க வேண்டுமென்னும் எண்ணங்கொண்டு 1645-ம் வருஷத்தில் ஷாஜஹான் தன் மூன்றுவது குமாரனை ஔரங்கசீப்பை ஒரு படையுடன் அனுப்பினர். ஆனல் அவர் ஜயமடையவில்லை. மறு வருஷத்தில் ஒரு படையை அனுப்பினர். அவ்விடத்தில் வசித்த ஜனங்கள் மிக்க வீரர்களாக விருந்ததினுல் சக்ரவர்த்தியின் படைகளை புறங்காட்டியோடும்படி செய்தனர். 1648-ம் வருஷத்தில் முகலாய ராஜ்யத்தின் ஒரு பாகமாகவிருந்த காண்டஹாரை பாரஸீக அரசர் கைப்பற்றிக் கொண்டார். அதைத் திரும்பவும் தம் வசமாக்கிக் கொள்வதற்காக மும்முறை படைகளை அனுப்பியபோதிலும் காண்டஹாரை திரும்பவும் பிடிக்க முடியவில்லை. இதற்காக இரண்டு கோடி ரூபாய் செலவழிந்ததே மிச்சமாயிற்று.

அந்நிய நாடுகளின்மேல் படை எழுச்சி

ஷாஜஹானுக்கு தக்காண ராஜ்யங்களை ஜயிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. ஆதலால் அவர் 1632-ம் வருஷத்தில் அஹமத் நகரின்பேரில் ஒரு படையை அனுப்பி அந்தப் பிரதேசத்தின் துர்நடத்தையுள்ள மந்திரிக்கு லஞ்சத்தைக் கொடுத்து அவருடைய உதவியினுல் சுல்தானே சிறைப்பிடித்து அஹமத் நகரை தம் வசமாக்கிக் கொண்டார். 1635-ல் பீஜபூர் சுல்தான், தன் கீழ் சிற்றரசனுக விருக்கவேண்டுமென்று ஷாஜஹான் ஒரு தூதரை அனுப்பினுர். ஆனல் அதை அவ்வரசர் ஒப்புக்கொள்ளவில்லை. அப்பொழுது ஷாஜஹான் தன் படையை பீஜபூரின்பேரில் அனுப்பினர். அவ்வரசன் முகலாயரின் ஆதிக்கத்தை ஒத்துக்கொண்டார். 1657-ல்

தக்காணபடை எழுச்சிகள்.



தாஜ்மஹால்

பீஜபூரில் புதிய நவாப் பட்டத்துக்கு வந்தபொழுது முகலாயர்கள் மற்றொருமுறை அந்த ராஜ்யத்தைத் தாக்கி சில பாகங்களைத் தம்வசமாக்கிக் கொண்டனர். அதே வருஷத்தில் தக்காணத்தில் அதிபதியாகவிருந்த ஔரங்கசீப் காரணமின்றி கோல்கொண்டா நகரத்தின் மீது படை யெடுத்துச்சென்று அந்த நவாபைத் தமக்குக் கீழ்ப்படியும்படி செய்தார். கோல்கொண்டா நவாப் ஔரங்கசீபுக்கு ஏராளமான பணமும் சில பிரதேசங்களையும் கொடுத்து சமாதானம் செய்துகொண்டார்.

மும்தாஜ் மஹல்.

ஷாஜஹானின் மனைவிக்கு மும்தாஜ்மஹல் என்று பெயர். அவருக்கு பதினான்கு குழந்தைகள் பிறந்தன. தன் மரணத்தருவாயில் அவள் ஷாஜஹானை தன் ஞாபகார்த்தமாக நிலையாக ஏதாவது செய்யவேண்டுமென்று வேண்டினாள். அவள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக ஏராளமான பொருளை செலவிட்டு ஆக்ரா நகரத்தில் தாஜ்மஹல் என்னும் மிகவழகிய கட்டிடத்தைக் கட்டி அதையே மும்தாஜ்மஹலின் கல்லறை ஆக்கினார்.

ஷாஜஹானுக்கு தாரா, ஷுஜா, ஔரங்கசீப், மூரத் என நான்கு பிள்ளைகள் இருந்தனர். இவர்களுள் முதலிருவருக்கு பிற மத கண்டனம் கிடையாது. மூரத் மதுபானப் பிரியன். ஔரங்கசீப் புனித வாழ்க்கையுள்ளவர். மிகவும் வைதீகமும் மதப்பற்றும் உள்ளவர். அதிக திறமைசாலி. அதிக கபடம் வாய்ந்தவர். ஷாஜஹானுக்கு தாராவின் பேரில் அதிக ஆசை. ஆகையால் அவரைத் தம் சபையிலேயே வேலையிலமர்த்திக் கொண்டார். ஷுஜாவை வங்காளத்திற்கும் மூரதை குஜாரத்துக்கும், ஔரங்கசீப்பை தக்காணத்துக்கும் மாகாண அதிபதிகளாக நியமித்து அனுப்பினார். தாராவின் பேச்சைக்கேட்டு ஷா ஜஹானுக்கு

ஔரங்கசீபினிடத்தில் வெறுப்பு உண்டாயிற்று. டில்லி யில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் தெரிந்துகொண் டிருந்த ஔரங்கசீப் தாமே அரசராவதற்கு தகுந்த சம யம் எப்போது வருமென்று காத்துக்கொண்டிருந்தார்.

1657-ம் வருஷத்தில் ஷாஜஹான் ஒரு கொடிய நோய் கொண்டார். இவ்விஷயம் தெரிந்தவுடன் ஷூஜா வும் மூரதும் தாமே சக்ரவர்த்தி என பிரசுரம் செய்து கொண்டனர். ஔரங்கசீப் மூரதிடம் சென்று தமக்கு அரசாங்கம் செய்ய பிரியமில்லையென்றும், மதவிரோதி யான தாரா பட்டத்துக்கு வராமலிருக்க வேண்டுமென் றும், மூரதுக்கு பட்டத்தைக் கட்டுவித்து தாம் ஒரு சந்யா சியாய் காலங்கழிக்க விரும்புவதாகவும் சொன்னார். பிறகு தம் படைகளையும் மூரதுடன் சேர்த்துக்கொண்டு இருவரும் ஆக்ராவை நோக்கிச் சென்றனர். நர்மதைக் கரையில் தர்மத் என்னுமிடத்தில் முகலாய சேனையைத் தோற்கடித்தனர் (1658). அங்கிருந்து சென்று அடுத்த வருஷத்தில் சமூகர் என்னுமிடத்தில் படையுடன் தாமே வந்த தாராவை தோற்கடித்தார். பிறகு ஆக்ராவுக்குச் சென்று வயது முதிர்ந்த சக்ரவர்த்தியை சிறைப்படுத்தி னார். உடனே ஔரங்கசீப் மூரதை கைதி செய்து சில நாட்களுக்குப் பிறகு கொன்றுவிடும்படி கட்டளையிட்டார். சமூகர் சண்டையில் தோல்வியடைந்து ஓடிய தாராவைப் பிடித்து அவமானப்படுத்தி குரூரமாக கொலை செய்தார். 1659-ல் வங்காளத்திலிருந்து பட்டத் துக்காகச் சண்டை செய்யவந்த ஷூஜாவை சண்டையில் தோற்கடித்து நாட்டைவிட்டு ஓடும்படி செய்தார். தகப்பனைக் கைதி செய்ததுமுதல் ஔரங்கசீப் அலம்கீர் என்னும் பட்டத்துடன் சக்ரவர்த்தியானார்.

பட்டத்துக்காக நடந்த சண்டை.

29. ஔரங்கசீப் சக்ரவர்த்தி (அலம்கீர்) 1659—1707

ஔரங்கசீபின் மரணம்.

ஔரங்கசீப் சக்ரவர்த்தி, குரானில் சொல்லியுள்ள விதிகளின்படி அரசாங்கத்தை நடத்தினார். உலகத்தில் மகம்மதிய மதத்தை விட உத்தமமானது வேறொன்றுமில்லையென்றும், அந்நியர்கள் அம்மதத்தை தழுவவேண்டுமென்றும் நினைத்து பிறமதங்களை நாசம் செய்வது நியாயம் என்னும் எண்ணத்தை வெளியிட்டார். தம் எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு மிகவும் கஷ்டப் பட்டு வேலை செய்தார். அக்பரினால் ஏற்படுத்தப்பட்டு ஜஹாங்கீர், ஷாஜஹான் மன்னர்களால் அனுசரிக்கப் பட்ட முறைகள் இவர் காலத்தில் அடியோடு மாறி விட்டன.

மதச் சண்டை.

ஔரங்கசீப் ஹிந்துக்களையும் ஹிந்து மதத்தையும் வெறுத்தார். ஆதலால் வட இந்தியாவில் ராஜ புத்திரர்கள், சீக்கியர்கள், தக்காணத்தில் மஹாராஷ்டிரர்கள் இவர்கள் எல்லாரும் ஔரங்கசீப்பை வெறுத்து அவரிடம் சண்டை செய்யலாயினர். இவர்களை யெல்லாம் அடக்குவதிலேயே ஔரங்கசீபின் 49 வருஷ கால ஆட்சியும் முடிவடைந்தது.

ராஜ புத்திரர்களோடு விரோதம்.

ஔரங்கசீபினிடம் ஜயசிங் என்னும் ராஜபுத்திர தலைவர் இருந்த வரையில் ஹிந்துக்களை அதிக கொடுமையாக நடத்தவில்லை. 1669-ம் வருஷத்தில் ஜயசிங் மரணமடைந்தார். அதற்குப் பின் ஔரங்கசீப் ஹிந்து ஆலயங்களையும் பள்ளிக்கூடங்களையும் இடிக்கும் படி உத்தரவிட்டார். ஐந்து மாத காலத்துக்குள் அவ் வுத்தரவு நிறைவேற்றப்பட்டது. இதனால் ராஜபுத்திரர்

களுக்கு அரசனிடத்தில் கோபம் மிகவுமதிகரித்தது. அவர்களுக்கு கோபம் அதிகமாக மற்றொரு காரணமும் உண்டு. ராஜாபுத்திர அரசனான ஜஸ்வந்த் சிங் என்பவர் ஔரங்கசீபின் சேனைத்தலைவர்களுள் ஒருவர். அவர் வட மேற்கிலுள்ள கைபர் கணவாயைக் காப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்தார். அவர் இறந்த பிறகு ஔரங்கசீப் அவர் ராஜ்யத்தை வசப்படுத்திக்கொண்டு ஜஸ்வந்த் ஸிங்கின் குடும்பத்தாரை சிறைப்படுத்தி மகம்மதியராக்குவதற்கு டத்தனித்தார்.



ஔரங்கசீப்

ஆனால் ஜஸ்வந்த் சிங்கின் சிநேகிதர் ஒருவரான துர்க்க தாஸின் தந்திரத்தினாலும், சாமர்த்தியத்தினாலும் ஔரங்கசீபின் எண்ணம் நிறைவேறாமல் போயிற்று. ஆதலால் ஔரங்கசீப் ஜோதிபுரத்தின்மேல் படை எடுத்துச் சென்றார். அப்பொழுது ஜோதிபுர ராணி மற்ற ராஜ புத்திர அரசர்களின் உதவியை வேண்டினாள். ராஜபுதனமெல்லாம் தமக்கு விரோதமாகுமென்ற பயமில்லாமல் 1678 - ல் ஜிஸியா என்னும் வரியையும் ஹிந்துக்களின் மேல் விதித்தார்.



ஔரங்கசீப் ஆண்டகாலத்தில் சிவாஜியின் வசத்திலிருந்த பிர தேசங்களை கவனியுங்கள்

இதைக் கண்ட ராஜபுத்திரர்கள் உதயபுர ராணுவாகிய ராஜசிங் என்பவர் தலைமையின் கீழ் சண்டை செய்ய ஆரம்பித்தனர்.

ராஜ புத்திரர்களோடு சண்டை.

1678-முதல் 1709-ம் வருஷம் வரையில் ராஜ புத்திரர்கள் முகலாயர்களோடு பின் வாங்காமல் சண்டை யிட்டனர். சக்ரவர்த்தி ராஜ புத்திரர்களோடு சண்டையிட தன் மகனை அக்பரை அனுப்பினுர். அக்பர் ராஜபுத்திரர்களோடு நேசம் பாராட்டிய விஷயத்தைத் தெரிந்து கொண்டவுடன் ஔரங்கசீப் தாமே நேரில் சண்டை செய்யத் தொடங்கினுர். கடைசியாக 1681-ல் ராஜசிங் சண்டையில் வெறுப்படைந்து ஜிஸியா வரி செலுத்துவதற்கு பதிலாக சில கிராமங்களை கொடுத்து சமாதானத்துக்கு ஒத்துக்கொண்டார். ஜஸ்வந்த் சிங்கின் குமாரரான அஜித் சிங் மாத்திரம் 1709 வரையில் சண்டைசெய்து ஔரங்கசீபுக்கு பின்வந்த அரசரான பஹதூர்ஷா விடமிருந்து தாம் ஜோதிபுர அரசன் என்று அங்கீகாரம் பெற்றுர். இந்தச் சண்டையினுல் பல கோவில்கள் நாசம் செய்யப்பட்டன. அளவற்ற பொருள் வீணுயிற்று, ராஜபுத்திரர்கள் சக்ரவர்த்திக்கு உதவி செய்ய மறுத்தார்கள். இக்காரணங்களினுல் ஔரங்கசீப் மஹாராஷ்டிரர்களை அடக்க முடியால் போய் விட்டது.

ஹிந்து மதத்தை விரோதித்ததனுல் ஔரங்கசீப் ராஜ புத்திரர்களோடு மாத்திரமல்லாமல் மஹாராஷ்டிரர்களோடும் சிக்கியர்களோடும் கூட சண்டை செய்ய வேண்டியதாயிற்று.

ஔரங்கசீபின் சுன்னி மதப்பற்று அவர் தக்காண ஷீயா நவாபுகளின்மீது செய்த சண்டையினுலும் தெரி

கிறது. ஔரங்கசீப் தம் முன்னோர்களைப் போல ராஜ்ய விஸ்தீர்ணத்தை பெருக்கவும் ஆவல்கொண்டார். இக் காரணங்களாலும் தமக்கு விரோதிகளாகிய மஹாராஷ்டிரர்களுக்கு உதவி செய்ததனாலும், ஔரங்கசீப் தக்காணநவாபுகள் பேரில் படை எடுத்துச் செல்லத் தீர்மானித்தார்.

பீஜபூர் சண்டை

1686-ம் வருஷத்தில் பீஜபூரை முற்றுகையிட்டு அக் கோட்டையைப் பிடித்துக்கொண்டு நவாபை கைதி செய்தவுடன் ராஜ்யத்தைத் தம்வசப்படுத்திக்கொண்டார்.

கோல்கொண்டா சண்டை.

அடுத்த வருஷத்தில் கோல்கொண்டாவின்மீது படை எடுத்துச் சென்றார். அவ்விடத்திலுள்ள கோட்டை மிகவும் பலமானது. அந்நகர சேனைத்தலைவர் அப்துர் ரசாக் மிகவும் வீரமும் எஜமானனிடம் அன்பும் பொருந்தியவர். ஆதலால் கோட்டையை முகலாயர் சீக்கிரம் வசப்படுத்திக்கொள்ள முடியவில்லை. அப்பொழுது ஔரங்கசீப் சூழ்ச்சிசெய்து லஞ்சம் கொடுத்து கோட்டைக் கதவுகளை திறக்கும்படி செய்து அதைத் தம் வசப்படுத்திக் கொண்டார். பிறகு நவாபை கைதி செய்து தௌலதாபாத்திற்கு அனுப்பிவிட்டார். அப்துர் ரசாக் முகலாயர்களின் உத்தியோகத்தில் சில காலம் அமர்ந்திருந்தார். கோல்கொண்டா ராஜ்யம் முகலாய ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டது. அதனால் முகலாய ராஜ்யம் தெற்கில் தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி வரையில் பரவியது. ஔரங்கசீப் தக்காணத்திலிருந்த இரண்டு மகம்மதிய ராஜ்யங்களையும் ஜயித்தது தவறு என்று சொல்லலாம். இவ்விராஜ்யங்கள் சுயேச்சையாக விருந்த வரையில் முகலாய ராஜ்யத்துக்கு அதிக கஷ்டம் ஏற்படவில்லை. ஆனால் அவைகளை அழித்த பிறகு மஹாராஷ்

டிரர்கள் எவ்வித தடையுமின்றி முகலாய ராஜ்யத்தைத் தாக்க ஆரம்பித்தனர்.

ஔரங்கசீப் தன் ஆட்சிகாலம் முழுவதும் ஹிந்துக்களோடு சண்டை செய்து கடைசியாக 1707-ல் மரணமடைந்தார். அவர் ஆட்சிமுறை எவ்வளவு கடுமையாகவிருந்ததோ அவ்வளவு அவர் ஜீவிய சரித்திரம் மெச்சத்தக்கதாக விருந்தது. அரசாங்கத்தில் ஒவ்வொரு விஷயத்தையும் தாமே பார்த்துவந்தார். உத்தியோக விஷயத்தில் ஒழுங்கீனமாய் இருந்தவர்களை கடுமையாக தண்டித்தார். இவ்வளவு சாமர்த்தியம் வாய்ந்தபோதிலும், சமயோசித புத்தியுடன் ஆளாமல் இருந்ததால் அவருடைய காலத்திலேயே தாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த ராஜ்யம் சின்னு பின்னமாவதற்கு ஆரம்பித்தது.

அத்தியாயம் 11

மஹாராஷ்டிரர்கள் வரலாறு

முக்கிய விஷயங்கள்: —மஹாராஷ்டிரர்கள் - சிவாஜியின் இளமைப் பருவம் - பீஜபூரோடும் முகலாயரோடும் பகை - அரசராதல் - சிவாஜி செய்த நன்மைகள் - சிவாஜிக்குப் பின் மஹாராஷ்டிர ராஜ்யம் - பீஷ்வாக்கள் - பாலாஜி விஸ்வநாத் - முதல் பாஜிராவ் - பாலாஜி பாஜிராவ் - மூன்றும் பானிபட் சண்டை 1761.

30. சிவாஜி அரசர் 1627—1680

மஹாராஷ்டிரம். வடக்கில் சாத்புரா குன்றுகள், தெற்கில் கோவா பட்டணமும், கோதாவரி நதியின் உபநதியாகிய வர்தா நதிக்கரையிலுள்ள சந்தாபுரம் பட்டணம்; இவைகளே மஹாராஷ்டிர பிரதேசத்தின் எல்லைகளாகும். அப்பிரதேசம் முழுவதும் மலைகளும் பள்ளத்தாக்குகளும் உள்ளன. அம்மலைச் சிகரங்களில் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு விரோதிகளிடமிருந்து தப்பி வசிப்பதற்கு தகுதியாகவிருக்கும்.

மஹாராஷ்டிரர்கள். மேற்கூறிய மலைப்பிரதேசத்தில் வசித்து வந்தவர்களுக்கு மஹாராஷ்டிரர்கள் என்று பெயர். அவர் வசிக்கும் பிரதேசம் கற்பாங்கானதால் விவசாயத்திற்குத் தகுதியானதல்ல. ஆதலால் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்துதான் உயிர் வாழவேண்டி

யிருந்தது. அவ்விதம் உழைத்து வேலை செய்யும் ஜனங்கள் தேக வலிமையும் பொறுமையும் உள்ளவர்களாயினர். மேற்கு சளுக்கியர்கள் ஆட்சி செய்வதற்குமுன்



சிவாஜி அரசர்

மஹாராஷ்டிரர்கள் அப்பிரதேசத்தில் முதன்மை பெற்றிருந்தனர். பிறகு ஏதோ கஷ்டங்களினால் சளுக்கியர்களுக்கு உட்பட்டு அவர்கள் ஆதிக்கத்தை ஒத்துக்கொள்ள நேரிட்டது. திறமை வாய்ந்த தலைவர்கள்

இல்லாமலிருந்ததனால் மஹாராஷ்டிரர்கள் முன்னேற்ற மடையவில்லை. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிவாஜி என்னும் வீரர் தோன்றிய பிறகு தான் மஹாராஷ்டிரர்கள் ஒற்றுமைப்பட்டு புகழ் பெற்றனர்.

சிவாஜி மஹாராஷ்டிர வீரரான ஷாஜியின் மகன். அவர் அன்னையின் பெயர் ஜிஜாபாய். ஷாஜி சிலகாலம் முகலாயரிடம் வேலையில் அமர்ந்திருந்தார். அவர்கள் ஷாஜியை ஒழுங்கீனமாக நடத்தியதால் அவ்வேலையை விட்டு பீஜபூர் சுல்தானிடம் சேனைத் தலைவராக வேலை ஒத்துக்கொண்டார். ஷாஜிக்கு இரண்டாவது மனைவியிடம் ஆசை அதிகமாதலால் முதல் மனைவியாகிய ஜிஜாபாயையும் அவள் குமாரனை சிவாஜியையும் தாதோஜி கொண்டதேவ் என்பவரின் பாதுகாப்பில் புனவிக்கருகிலிருக்கும்படி ஒப்புவித்தார். அவ்விதமே சிவாஜி தம் இளமையைக் கழித்தார். தாயின் புத்திமதியாலும், தாதோஜியின் பயிற்சியினாலும், பாரத ராமாயண கதைகளைக் கேட்டதாலும், சிவாஜிக்கு இளமையி லிருந்தே ஹிந்து மதத்தையும் பசுக்களையும் விரோதிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்னும் கொள்கை நிலையாக ஏற்பட்டது. அக்காலத்திலேயே சிவாஜிக்கு மத குருவாகிய ராமதாஸரின் அருள் கிடைத்தது. ஆதலால் ஹிந்து மதத்தை நாசம் செய்யவேண்டு மென்றிருந்த மகம்மதியர்களை, சிவாஜி அதிகமாகப் பகைக்க ஆரம்பித்தார். இதனால் தான் தம் சிறு பிராயத்தி லிருந்தே தம் எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானார். தமக்கு சம வயதினரான மஹாராஷ்டிரர்களைச் சேர்த்துக் கொண்டு, தாம் தாதோஜியிடம் அறிந்து கொண்ட சண்டைப் பயிற்சியை அவர்களுக்கும் கற்பித்து

சீவாஜியின் இளமைப் பிராயம்.

தம் 19-ம் வயதிலேயே மகம்மதியர்களோடு சண்டையிட ஆரம்பித்தார்.

பீஜபூரோடு சண்டை. 1646 முதல் 1656 வரையில் பீஜபூர் ராஜ்யத்திலுள்ள பல கோட்டைகளைத் தம் வசப்படுத்திக் கொண்டார். இவ்விதம் செய்வதற்கு அனுகூலமாக விருந்தது, பீஜபூர் ராஜ்யத்தின் சீர்குலைந்த நிலையே யாகும். அவர் முதலாக பிடித்துக்கொண்ட கோட்டை தோரணு (1646). அங்கு அவருக்கு ஏராளமான பணம் கிடைத்தது. 1657-ம் வருஷத்தில் புதிய பீஜபூர் சுல்தான் சிவாஜியின் செயல்களைக் கண்டு சினந்து அப்ஸல்கான் என்னும் சேனைத் தலைவரை சிவாஜியை தண்டிப்பதற்காக அனுப்பினார். சிவாஜி அவரை பிரதாப்கர் கோட்டைக்கெதிரில் சந்தித்துக் கொன்று பீஜபூர் சேனையையும் முறியடித்து துரத்திவிட்டார்.

உடன்படிக்கை. இதற்குப் பின் சிவாஜியுடன் சண்டை செய்து வெற்றி பெருவது கஷ்டமென அறிந்து 1662-ம் வருஷத்தில் பீஜபூர் சுல்தான் சிவாஜி ஜயித்த பிரதேசத்தை யெல்லாம் அவருக்கே கொடுத்துவிட்டு நேசமாக இருப்பதற்கு உடன்படிக்கை செய்து கொண்டார். இதனால் கொங்கணப் பிரதேசம் முழுவதும் சிவாஜிக்குச் சேர்ந்தது.

ஷயிஸ்த கான். மேற்கூறிய விதமாக வெற்றி பெற்ற சிவாஜி தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளலா மென்ற திடமான நம்பிக்கையைக் கொண்டார். அது முதல் சிவாஜி முகலாய ராஜ்யத்திற்குள் புகுந்து பல கிராமங்களைக் கொள்ளையிட ஆரம்பித்தார். அப்பொழுது முகலாய சக்ரவர்த்தி ஔரங்கசீப். அவர் சிவாஜியின் செயல்

களைத் தடுப்பதற்காக தன் சேனைத் தலைவர்களில் ஒருவராகிய ஷயிஸ்த கான் என்பவரை அனுப்பினார். அவர் தம் சேனையுடன் புனா பட்டணத்திலிருக்கும்போது சிவாஜி அந்நகரில் புகுந்து சூழ்ச்சியினால் ஷயிஸ்தகானையும் அவர் சேனையையும் துரத்திவிட்டார். பிறகு சக்ரவர்த்தி சிவாஜியை அடக்கும் பொருட்டு தம் குமாரரான முவாஸிமையும் ராஜபுதன வீரர் ராஜா ஜயசிங்கையும் அனுப்பினார். பிற் கூறியவர் சிவாஜியுடன் நேசம் பாராட்டி எவ்வாறாவது சிவாஜிக்கும் முகலாயர்களுக்கும் நேசம் உண்டாக்கவேண்டுமெனக்கருதி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். சிவாஜியும் அந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக்கொண்டு 1665-ம் வருஷத்தில் முகலாய சக்ரவர்த்தியை பார்ப்பதற்காக டில்லிக்குச் சென்றார். தன்னை ஔரங்கசீப் அவமதித்தார் என்று கோபம் கொண்டபொழுது சிவாஜி முகலாயரால் சிறையிலிடப்பட்டார். தந்திரமாக சிவாஜி சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு 1666-ம் வருஷத்தில் தன் தலை நகருக்குச் சென்று, 1670 வரையிலும் மறுபடியும் முகலாயருடன் சண்டையிட்டு வந்தார். அவர் முகலாய ராஜ்யத்திலுள்ள காண்டேஷ் பிரதேசத்தினுள் புகுந்து அங்குள்ளவர்களைத் தனக்கு சௌத (வருமானத்தில் நான்கி லொருபங்கு) வரியை செலுத்தும் படியாகவும் அவ்விதம் செய்யத் தவறினால் ஊர்களை கொள்ளையிட்டும் தீயிட்டும் நாசம் செய்வதாக பயப்படுத்தி அங்குள்ள ஜனங்களை இந்த ஏற்பாடுகளை ஒத்துக்கொள்ளும்படி செய்தார். இவ்விதமாக முகலாய மாகாணங்களிலிருந்துகூட சிவாஜி சௌத்வரியை வசூல் செய்யலானார்.

டில்லிக்குச் செல்லுதல்.

சௌத் வரி.

சிவாஜி முடி சூடுதல்.

தமக்குக் கிடைத்த ஜயங்களால் சிவாஜி திருப்தி அடையவில்லை. அவருக்கு அரசனுக முடிசூட்டிக்கொள்ள வேண்டுமென்னும் அவா அதிகமாக விருந்தது. 1674-ல் அளவற்ற பணச்செலவு செய்து மிக்க வைபவத்துடன் தம் ராஜதானியாகிய ராய்கர் கோட்டையில் 'சத்ரபதி' என்னும் பிருதுடன் சிவாஜி தமக்கு முடி சூட்டிக்கொண்டார். இவ்விழாவினுல் பணம் அதிகமாக செலவானதால் மறுபடியும் பணத்தைச் சேகரிக்க தெற்குநோக்கி படைகளுடன் சென்றார். கர்ணுடக பிரதேசத்தில் பல்லாரி முதல் மேற்குபாகமெல்லாவற்றையும் ஜயித்தார். அங்கிருந்து தஞ்சாவூருக்குச் சென்று தன் இளைய சகோதரன் வெங்கோஜியிடமிருந்து தனக்குச் சேரவேண்டிய பகுதியை பங்கிட்டுக்கொண்டு செஞ்சி, வேலூர் முதலிய கோட்டைகளையும் தம் வசப்படுத்திக்கொண்டார். தம் கடைசிக் காலத்தில் முகலாயர்களை பீஜபூரிலிருந்து துரத்துவதற்கு ஒத்தாசை செய்தார். சிவாஜி 1680-ம் வருஷத்தில் மரணமடைந்தார்.

சிவாஜி நாட்டுக்குச் செய்த நன்மைகள்.

சிவாஜி மரண மடைந்தபோது அவருடைய ராஜ்யம் 100 மைல் அகலமும் 250 மைல் நீளமுமுள்ளதாக விருந்தது. சிவாஜி ராஜ்யத்தை பரவச்செய்ய வேண்டுமென்னும் எண்ணங்கொண்டு கஷ்டப்படவில்லை. தம் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆங்காங்கு தனித்திருப்பவர்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு மஹாராஷ்ட்ர இன அபிமானத்தை ஏற்படுத்தி, அவர்களை முன்னேற்ற மடையும்படி செய்ததே சிவாஜி செய்த முக்கிய காரியம். இதுவரையில் எவ்வித இடையூறுமின்றி விஸ்தரித்து வந்த முகலாய ராஜ்யம்

சிவாஜியால் தடை செய்யப்பட்டது. ஹிந்துக்களுக்கு மத அபிமானம் உண்டாக்கியதால் அது எவ்விதம் முகலாய அரசாட்சியை பாதித்தது என்பதை இனி படிப்போம்.

31. மஹாராஷ்டிர ராஜ்யம்—சிவாஜியின் சந்ததியார்.

சாம்பாஜி 1680-89.

சிவாஜிக்குப் பிறகு அவர் மூத்த குமாரராகிய சாம்பாஜி பட்டத்துக்கு வந்தார். அவர் தகப்பனைப் போலவே சண்டை செய்வதில் வல்லமை பெற்றவர். ஆனால் 1689-ம் வருஷத்தில் நடந்த சண்டையில் ஔரங்கசீப் அவரை சிறைப்பிடித்தார். சாம்பாஜியை மகம்மதியராகும்படி ஔரங்கசீப் வேண்டிய பொழுது மகாராஷ்டிர ராஜா முகலாயரை அவமதித்துப் பேசினர். அதனல் கோபங்கொண்ட ஔரங்கசீப் சாம்பாஜியை குரூரமாக வதைத்துக் கொல்லும்படி உத்தரவிட்டார். சாம்பாஜியின் குமாரரான சாஹுவும் கைதியாக டில்லிக்கு கொண்டு போகப்பட்டார்.

ராஜாராம்.

சாம்பாஜியைக் கொலை செய்ததாலும், சாஹுவைச் சிறையிலிட்டதாலும், மஹாராஷ்டிரர்கள் மிகவும் கோபங்கொண்டு முகலாயர்களின் ஆதிக்கத்தை அடியோடு ஒழிக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டனர். சாஹுவின் சிறிய தகப்பனை ராஜாராம் என்பவர் அரசாங்கத்தை நடத்தி முகலாயர்களோடு சண்டை செய்ய ஆரம்பித்தார். ஔரங்கசீபும் மஹாராஷ்டிரர்களோடு கடும் போர்புரிய முன்வந்தார். ஒருசமயம் ராஜாராம் தோல்வியடைந்து செஞ்சிக்கோட்டைக்கு ஓடி ஒளிந்து கொள்ள வேண்டியதாயிற்று. ஔரங்கசீபின் படைகள்

அரையும் முற்றுகை செய்தன. மஹாராஷ்டிர வீரர்கள் முகலாயர்களுடன் வீரத்துடன் சண்டையிட்டு தங்களுடைய நாடுகளையும் கோட்டைகளையும் ஜயித்துக் கொண்டு முகலாய சேனையை மஹாராஷ்டிர பிரதேசத்திலிருந்து துரத்திவிட்டனர். இவ்விதமிருந்த பொழுது 1707-ம் வருஷத்தில் ஔரங்கசீப் உயிர் நீத்தார்.

முகலாயர்கள் தோல்வியின் காரணங்கள்.

திறமை வாய்ந்தவரும் சண்டையில் ஊக்கமுள்ளவரும் பெருத்த சேனைத்தலைவருமாகிய ஔரங்கசீப், புதிதாக ஏற்படுத்தப் பட்ட மஹாராஷ்டிர ராஜ்யத்தை அடக்க முடியாமல் போனதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றுள் முதலாவது மஹாராஷ்டிர பிரதேசத்தின் மலைப்பாங்கான இயற்கையமைப்பேயாகும். அம்மலை நாட்டின் மூலம் செல்வதற்கு மஹாராஷ்டிரர்களால் முடியுமே யல்லாது அந்நியர்களால் முடியாது. ஆதலால்தான் சுதேசியர்கள் முகலாயர்கள் ஜயித்த கோட்டைகளை கூட தம்வசமாக்கிக்கொள்ள முடிந்தது. சிவாஜி ஏற்படுத்திய போர்முறை மஹாராஷ்டிர நாட்டுக்குத் தகுதியானதாக விருந்தது. மஹாராஷ்டிரர்கள் நேராக சமவெளிகளில் எதிர்த்துச் சண்டை செய்யாமல் முகலாயர்களைத் தம் நாட்டில் புகும்படி செய்து பின்புறத்திலிருந்து அவர்களைத் தாக்கி அவர்களுக்காக வரும் உணவுப் பொருள்களை கொள்ளையிட்டுத் துன்புறுத்தினர். முகலாய ராஜ்யம் சீர்குலைந்த நிலையிலிருந்தது மூன்றாவது காரணம். ஔரங்கசீபின் மந்திரிகள் அவரைப்போல் அரசாட்சியில் ஊக்கமும் திறமையும் வாய்ந்தவர்களல்ல. அவர்களெல்லோரும் சுயநலத்தையே கருதியதால் மஹாராஷ்டிரர்களோடு ஊக்கத்துடன் சண்டை செய்யவில்லை.

இது மாத்திரமன்றி முகலாயப்படைகள் அதிகமான செளகர்யங்களுடன் வாழ்ந்து வந்தமையால் நெடு நாட்கள் தக்காணத்திலிருந்து கஷ்டப்பட்டு சண்டை செய்ய முடியாமல் போய்விட்டது. ஔரங்கசீப், தன் அமைச்சர்களை நம்பாம லிருந்ததனால் அவர்கள் யாவரும் அரசரிடம் உள்ளன்பு பாராட்டாமல் இருந்தனர். மஹாராஷ்டிரர்களின் தேச, மத அபிமானங்கள் நான்காவது காரணம். மஹாராஷ்டிரர்களுக்கு சிவாஜி ஊக்கத்தையும், ஒற்றுமையையும், வீரத்தையும் உண்டாக்கியதால் அவர்கள் முகலாயர்களோடு மும்மரமாய் சண்டையிட்டு முகலாயர்களைத் தோற்கடித்தனர்.

சாஹு அரசராதல் 1710.

1700-ம் வருஷத்தில் மஹாராஷ்டிரத்தில் ராஜாராம் இறந்தார். உடனே அப்பட்டத்தை அடைவதற்கு பலர் முன்வந்தனர். ஔரங்கசீப் இறந்தவுடன் அவர் மகன் பஹதூர்ஷா என்ற பட்டத்துடன் சக்ரவர்த்தியானார். அவர் பட்டத்துக்கு வந்தவுடன் மஹாராஷ்டிரத்திலிருந்து தமக்கு ஏற்படும் கஷ்டங்களைக் குறைக்க எண்ணி சாம்பாஜியின் குமாரரான சாஹுவை சிறையினின்றும் வெளியே அனுப்பினார். சிவாஜியின் பேரன் வந்த விஷயத்தை அறிந்தவுடன் மஹாராஷ்டிர வீரர் பலர் முன்வந்து சாஹுவை அரசராக்கினார்.

பீஷ்வா அதிகாரமடைதல்.

சாஹு வீரம் பொருந்திய மஹாராஷ்டிரர்களுக்கு தகுதியான அரசரல்ல. மகம்மதிய அரண்மனையில் சுகமாக வாழ்ந்தவராகையால் அவரிடம் வீரத்தன்மையில்லாம லிருந்தது. சாதாரணமாக சாஹு சோம்பேறியாக விருந்தார். ஆதலால் நாட்டாட்சியை தன் முதல் மந்திரியாகிய பீஷ்வாவிடம்

ஒப்புவித்தார். அது முதல் பீஷ்வாக்கள் திறமையுடன் ஆண்டு தாமே அதிகாரம் முழுவதையும் அடைந்தனர். பேருக்கு மாத்திரமே சாஹு அரசராகவிருந்தார். அவருக்கு பீஷ்வாவாக இருந்தவர் பாலாஜி விஸ்வநாத்.

பாலாஜி விஸ்வநாத் 1714-1720.

பாலாஜி விஸ்வநாத் மிகவும் புத்திசாலி. அவர் தம் திறமையினால் பீஷ்வா பதவி தம் சந்ததியார்களுக்கு உரிமையாக இருக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தார். அக்காலத்தில் சக்ரவர்த்தியாக இருந்த மகம்மதுஷாவுக்கு தூதர்களை அனுப்பி தக்காண முழுவதிலிருந்தும் மஹாராஷ்டிரர்கள் சௌத் வரிவசூலிக்கும் உரிமையைப் பெற்றார். சௌத் வசூலிக்கும் முறைகளை மிகவும் நுட்பமாக செய்து எப்பொழுதும் செலுத்திய துகையில் குறைவிருப்பதாகவும் அதற்கு தொடர் வட்டி (**compound interest**) செலுத்தும்படியாக பலவித மாறுதல் செய்தார். இவ்விதம் செய்ததால் மஹாராஷ்டிரர்கள் கிராமங்களில் வசித்தவர்களோடு நெருங்கிப் பழக சமயம் வாய்த்தது.

32. மஹாராஷ்டிர ராஜ்யம்—பீஷ்வாக்கள் 1720–1761

முதல் பாஜிராவ் 1720-1740.

பாலாஜி விஸ்வநாத்திற்கு பிறகு அவர் குமாரர் முதல் பாஜிராவ் பீஷ்வா ஆனார். அவர் பீஷ்வாக்களுள் மிகவும் திறமை வாய்ந்தவர்; சிறந்த படை வீரர். அவர்காலத்தில் மஹாராஷ்டிர ராஜ்யம் வட இந்தியாவிலும் பரவியது. அவர் ஒரு பெருத்த படையுடன் ஹிந்துஸ்தானத்தின் பேரில் சென்று குஜரத், மாளவம், பண்டல் கண்ட் முதலிய ராஜ்யங்களை

தம் வசப்படுத்திக்கொண்டார். அவர் காலத்தில்தான் கெய்க்வார், ஹோல்கார், ஸிந்தியா என்னும் மஹாராஷ்டிர சேனைத் தலைவர்கள் புதிதாக சிறு ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டனர். 1737-ம் வருஷத்தில் முகலாய சக்ரவர்த்தியின்பேரில் பாஜிராவ் படையெடுத்துச் சென்று டில்லிவரையிலும் போய் மஹாராஷ்டிரர்களின் வீரத் தன்மையை வெளிப்படுத்தினார். டில்லியை மாத்திரம் பிடித்துக்கொள்ள வில்லையே ஒழிய டில்லி ராஜ்யத்தின் பெரும் பாகத்தைக் கைப்பற்றிக் கொண்டார். இவ்விதம் முகலாய ராஜ்யம் சீர்குலைந்த நிலையை அடைந்தது.

நாதிர்ஷா படை எழுச்சி. 1739.

முகலாய ராஜ்யம் சீர்குலைந்திருந்த இந்நிலையில், பாரஸீக அரசனை நாதிர்ஷா 1739-ல் டில்லியின்பேரில் படை எடுத்து வந்தார். அவர் டில்லியில் புகுந்து அநேகர்களைக் கொன்று பட்டணத்தைக் கொள்ளையிட்டு அளவற்ற பொருளைத் திரட்டிக்கொண்டு தம் ஊருக்குச் சென்றார். இந்தப் படை எழுச்சியும் டில்லி ராஜ்யம் முன்பைவிட சீர்குலைவதற்கு ஒரு காரணமாக விருந்தது. நாதிர்ஷா இறந்த பிறகு அவர் சேனைத் தலைவர்களில் ஒருவராகிய ஆமத்ஷா துரானி என்பவர்

ஆமத்ஷா துரானி.

ஆப்கானிஸ்தானத்துக்கு அரசரானார். அவர் நம் நாட்டின்பேரில் 1754-ல் படை எடுத்து வந்து பஞ்சாபைத் தம் வசமாக்கிக் கொண்டார். மறுபடியும் 1756-1757-ல் நம் நாட்டின்மேல் படை எடுத்து வடமதுரை வரையில் உள்ள பிரதேசத்தைக் கொள்ளையடித்து டில்லிப் பட்டணத்தைப் பிடித்துக் கொண்டார். அடுத்த வருஷத்தில் தம் ஊருக்குத் திரும்பினார்.

பாலாஜி பாஜிராவ் 1740-1761.

ஆமத்ஷா துரானி நம் நாட்டின்பேரில் படை எடுத்து வந்தபோது முதல் பாஜிராவின் குமாரர் பாலாஜி பாஜிராவ் (1740-1761) பீஷ்வாவாக இருந்தனர். பீஷ்வாக்கள் வசித்து வந்த புனா நகரமே மஹாராஷ்டிரத் தலைநகரமாயிற்று. அவர் காலத்தில் ஒரிஸ்ஸா ராஜ்யமும் தெற்கில் சில பாகங்களும் மஹாராஷ்டிர ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டன. மேலும், மஹாராஷ்டிர ராஜ்யத்திற்கு மேற்கில் சிந்து, வடக்கில் ஹிமயமலை, கிழக்கில் வங்காளம் தெற்கே தீபகற்ப பாகத்தில் வெகுதூரம்; இவைகளே எல்லைகளாக விருந்தன. போர் வலிமையும் ராஜ்ய விஸ்தீரணமுமுள்ள மஹாராஷ்டிரர்களுக்கு நம் தேசத்தின்மேல் ஆமத்ஷா துரானி படை எடுத்து வருவது கோபத்தை உண்டாக்கியது. ஆகையால் பீஷ்வாவின் சகோதரனாகிய ரகுநாதராவ் என்னும் போர் வீரர் 1758-ல் ஒரு பெரிய படையுடன் பஞ்சாபுக்குச் சென்று அங்குள்ள ஆப்கானியர்களை நாட்டினின்றும் துரத்தி மஹாராஷ்டிரக் கொடியை அங்கே நாட்டினார். அவ்விஷயத்தைக் கேட்ட ஆமத்ஷா 1759-ல் பஞ்சாபின்மேல் படை எடுத்துவந்து மறுமுறை அதை தம் வசப் படுத்திக்கொண்டார்.

மூன்றும் பானிபட் சண்டை 1761.

மஹாராஷ்டிரர்கள் ஆமத்ஷாவை எதிர்த்துச் சண்டைசெய்ய வேண்டிய ஏற்பாடுகளை செய்தனர். பீஷ்வாவுக்கு ஆட்சி முறையில் அதிகமான ஒத்தாசை செய்ததனால் செல்வாக்குள்ளவராக விருந்தவர் சதாசிவ ராவ் என்பவர். பீஷ்வாவின் தம்பியாகிய ரகுநாத ராவ் சதாசிவராவைக்கண்டு பொறாமை கொண்டிருந்ததால் ஆமத்ஷாவை எதிர்க்க சேனைத் தலைவரின்

பதவியை ஒப்புக்கொள்ள மறுத்தார். அப்பொழுது சதாசிவ ராவ் தாமே சேனைத் தலைவராய் ஒரு பெரும் படையுடன் பானிபட் என்னுமிடத்திற்குச் சென்று அங்கு ஆமத்ஷாவோடு கடும்போர் புரிந்தார். இச்சண்டையில் மஹாராஷ்டிரர்கள் தோல்வியடைந்தனர். நூற்றுக்கணக்கான வீரர்கள் போர்க்களத்தில் மாண்டனர். இவ்விதச் செய்தியைக் கேட்டவுடன் மனமுடைந்து பீஷ்வா மாண்டார்.

மூன்றும் பானிபட் சண்டையின் பலன்கள்,

கஜினி, கோரி படை எழுச்சிகளுக்குப் பின் மூன்றும் பானிபட் சண்டையில் ஹிந்துக்கள் தோல்வி யடைந்தமாதிரி, அதற்குமுன் தோல்வியடைந்ததில்லை. அது முதல் பீஷ்வாக்களின் அதிகாரம் குறைவடைய ஆரம்பித்தது. குஜராத் மாளவம் பண்டல்கண்ட், பேரார் முதலிய பிரதேசங்களில் மஹாராஷ்டிர தலைவர்கள் ஏற்படுத்திய ராஜ்யங்கள் நாளடைவில் சுயேச்சையடைய ஆரம்பித்தன. சிவாஜியினுல் ஏற்படுத்தப்பட்ட மஹாராஷ்டிர ராஜ்யம் முதலில் விஸ்தரித்து முகலாய ராஜ்யம் சிதைவடைவதற்கு ஒரு காரணமாக விருந்தது. மூன்றுவது பானிபட் சண்டைக்குப் பிறகு, மஹாராஷ்டிர ராஜ்யமே சிதைவடைய ஆரம்பித்தது. இச்சண்டையின் பயனுக பீஷ்வாக்களின் அதிகாரம் குறைந்தது. மஹாராஷ்டிர ராஜ்யம் சிறு அரசுகளாகப் பிரிந்தது. இந்த அரசர்களுக்குள் ஒற்றுமை குறைந்திருந்ததால் ஆங்கிலேயர்கள் நம்நாட்டில் தம் அதிகாரத்தை நிலைநாட்ட சமயம் வாய்த்தது.

அத்தியாயம் 12.

சீக்கியர்கள்; கடைசி முகலாயர்கள்

முக்கிய விஷயங்கள்:—சீக் மதத் தோற்றம் - குரு நானக் - சீக்கியர்களின் வரலாறு - குரு கோவிந்தர் - பந்தாவின் எதிர்ப்பு - சீக்கியர்களின் பிற்கால சரித்திரம் - கடைசி முகலாய சக்ரவர்த்திகள் - நாதர்ஷாவின் படையெழுச்சி - முகலாயப் பேரரசு சிதைவடையக் காரணங்கள்.

33. சீக்கியர்கள்

சீக் மதத்தோற்றம்: குருநானக். ஔரங்கசீப்பின் ஆட்சிமுறையினால் கோபங்கொண்டு முகலாயர்களை எதிர்த்தவர்களுக்குள் சீக்கியர் என்னும் வகுப்பைச் சேர்ந்தவர் ஒருவர். சீக்கியர் ஹிந்து மதத்திலிருந்து பிரிந்து வேறு மதத்தைச் சேர்ந்தவர். சீக்கிய மதத்தை ஏற்படுத்தியவர் நானக். அவர் 1469 முதல் 1539 வரையில் வாழ்ந்திருந்தார். அவர் காலத்தில் மகம்மதிய மதத்தினால் ஹிந்து மதக் கொள்கைகளில்கூட பல மாறுதல்கள் ஏற்பட்டன. அவைகளினால் கடவுள் ஒருவரே என்றும், ஜாதி பேதம், வேதங்களின் முதன்மை, பிராம்மணர்களின் முதன்மை, இவையெல்லாம் பாராட்ட வேண்டாம் என்னும் எண்ணங்கள் அதிகமாக வெளியிடப்பட்டன. இவைகளையும் இன்னும் பல கொள்கைகளையும் சேர்த்து நானக் சீக் மதம் என்னும் புதிய மதத்தை ஏற்படுத்தினார். சீக்

என்றால் சிஷ்யர் என்று பொருள். சீக்கியர்கள் நானக்கின் சிஷ்யர்கள்.

குரு அர்ஜுன். குரு நானக்குக்குப் பிறகு அந்த மதம் சீக் குருக்களின் ஆதரவினால் விருத்தியடைந்தது. அக்பர் காலத்தில் சீக் மதத்தினரை கௌரவப்படுத்தினார். இக் காலத்தில் அமிர்தஸரஸிலுள்ள பொன் ஆலயமும் குளமும் உள்ள பிரதேசத்தை அக்பர் சீக்கியர்களுக்கு இனமாகக் கொடுத்தார். ஐந்தாவது சீக் குரு அர்ஜுன் என்பவர். அவர் தனக்கு முன் இருந்த குருக்களின் உபதேசங்களைச் சேர்த்துத் தொகுத்து ஆதி கிரந்தம் என்னும் சீக்கியர்களின் வேத புத்தகத்தை எழுதினார். குரு அர்ஜுன் ஜஹாங்கீருக்கு விரோதமாக குஸ்ருவுக்கு உபகாரம் செய்ததற்காக சக்ரவர்த்தி கோபங்கொண்டு அர்ஜுன் சிங்கைக் குரூரமாக வதைத்துக்கொன்று விடுமாறு உத்தரவிட்டார்.



குரு நானக்

ஹரிகோவிந்தர். ஆறாவது குருவாகிய ஹரிகோவிந்தர், மகம்மதியர் சீக்கியருக்குச் செய்த குரூரங்களைக் கண்டு, அதைத் தடுக்க தன் சிஷ்யர்களுக்கு போர்ப் பயிற்சிகள் அளிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அவர்களுக்கு அவ்

விதப் பயிற்சியை அளிக்க ஆரம்பித்தார். சீக்கியர்கள் போர்ப் பயிற்சி அடைவதைக் கண்டு ஜஹாங்கீர் கோபங் கொண்டு அவர்களின் குரு ஹரிகோவிந்தரை பனிரண்டு வருஷம் சிறையிலிட உத்தரவிட்டார். சிறையினின்றும் வெளிவந்த பிறகு, தாம் உயிருடனிருந்த வரையில் ஹரி கோவிந்தர், ஷாஜஹானேடு சண்டையிட்டு வந்தார்.

டேஜ் பஹதூர். ஔரங்கசீப் பட்டத்துக்கு வந்தபோது சீக் குரு டேஜ் பஹதூர் என்னும் ஒன்பதாவது குரு. மத வைராக்கியம் கொண்ட ஔரங்கசீப் டேஜ்பஹதூரை மகம்மதிய மதத்தைத் தழுவுமாறு வற்புறுத்தினர். அதை சீக் குரு ஒப்புக் கொள்ளாததனல் அவரைக் குரூரமாக கொல்லும்படி உத்தரவிட்டார்.

குரு கோவிந்தர். டேஜ் பஹதூருக்குப் பிறகு குரு கோவிந்தர் என்பவர் சீக்கியர்களுக்கு பத்தாவது குருவானர். அவர்தான் கடைசி குரு. அவர் புத்தி வாய்ந்தவர். அவர் செய்த ஏற்பாடுகளினல் சீக்கியர்கள் மிகவும் வீரம் பொருந்தியவர்களானர்கள். அவர்களுக்குள் அதிக ஒற்றுமை ஏற்பட்டது. அவர் சீக்கியர்கள் வெளிப்படையான ஐந்து விஷயங்களை உபயோகப்படுத்துமாறு கட்டளையிட்டார். அவைகள் (1) தலைமயிரை வெட்டாதிருத்தல்; (2) குட்டையான கால் சட்டை, (Short drawers) (3) குட்டையான கத்தி, (4) தலைவாரும் சீப்பு, (5) இரும்பினல் செய்த காப்பு முதலியவைகளை அணிதல். சீக்கியர் ஒருவரையொருவர் சந்தித்தால் குருவுக்கு ஜய முண்டாகட்டும் என்று சொல்லவேண்டும். எவரும் மதுபானம் செய்யக் கூடாது. இவ்வித ஏற்பாடுகள் செய்ததனல் சீக்கியர்கள் ஐக்கியமடைந்து யுத்த பயிற்சிகளை அடைந்தனர். சீக்கியர்கள் சங்கத்திற்கு கால்ஸா என்னும் பெயர் ஏற்

பட்டது. இவ்வாறு சீக்கியர்கள் போர்வன்மை அடைந்த தால் குரு கோவிந்தர் தாம் உயிருடனிருக்கும் வரையில் முகலாயரோடு சண்டையிடலாயினர். ஔரங்கசீப் உயிருடனிருக்கும் வரையிலும் சீக்கியர்களை அடக்க முயன்றும் பயன்படாமல் போயிற்று. ஔரங்கசீப்புக்குப் பிறகு பட்டத்துக்காக நடந்த போரில் குரு கோவிந்தர் பஹதூர்ஷாவிற்கு உதவி செய்தார். இந்த உதவிக்காக குருகோவிந்தர் தக்காணத்தில் சேனைத்தலைவராக நியமிக் கப்பட்டார். அவர் 1708-ம் வருஷத்தில் தக்காணத்தி லிருக்கும்போது ஓர் ஆப்கானியர் அவரைக் கொன்று விட்டார். மரணமடையும்போது தனக்குபின் குருக்கள் எவரும் வேண்டியதில்லை யென்றும், ஐந்து சீக்கியர்கள் கூடுமிடத்தில் குருவின் அனுக்கிரகம் ஏற்படும் என்றும் கூறினர். தனக்குப் பிறகு பந்தா என்னும் சிஷ்யரை சீக்கியருக்குத் தலைவராக நியமித்தார்.

பந்தா.

பஞ்சாபில், சர்ஹிந்து மாகாணத்திற்கு அதிபதி யாக விருந்தவர் குரு கோவிந்தரின் குமாரர்களை குரூரமாக கொலை செய் தார். அதனல் சீக்கியர்களெல்லோ ரும் முகலாயரிடம் பகைமை கொண்டு பந்தாவின் தலைமையின்கீழ் முகலாயரோடு சண்டையிடலாயினர். பந்தா மிகவும் வீரர். அவர் ஸர்ஹிந்து பிரதேசத்தை கொள்ளையிட்டு மகம்மதியரின் பேரில் குரூரமாக பழிக்குப் பழி வாங்கினர். அப்பொழுது பஹதூர்ஷா தாமே நேரில் படையெடுத்துச் சென்று பந்தாவோடு சண்டை செய்தார். அவருக்குப் பின் பருக்ஸியர் சக்ரவர்த்தி யானபோது பந்தா மற்றொரு முறை முகலாயர்களுக்குத் தீமையிழைத்தார். அப்பொழுது முகலாயர்கள் அவரைத் தாக்கி, பந்தாவைத் தோற்கடித்து சிறையிலடைத்து குரூர

மாகக் கொலை செய்தனர். 1715-ல் பந்தாவுக்கு உதவி செய்த சீக்கியர்களில் கூடபலர் கொலைசெய்யப்பட்டனர்.

பந்தா கொல்லப்பட்ட பிறகு சிலகாலம் வரையிலும் சீக்கியர்கள் அடங்கி இருந்தனர். நாதிர்ஷாவின் படை எழுச்சியினால் முகலாய ராஜ்யம் சீர்குலைந்தது; இதனால் சீக்கியர்கள் கொஞ்சம் முன்னேற்ற மடைவதற்கு அனுகூலமாயிற்று. இக்காலத்தில் சீக்கியர்கள் சிறு சிறு கூட்டத்தினராகப் பிரிந்து நாளடைவில் பஞ்சாப் முழுவதையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டனர். நாதிர்ஷாவுக்குப் பிறகு பஞ்சாபை உள்படுத்திக்கொண்ட ஆமத்ஷா துரானிக்கு சீக்கியர்கள் பஞ்சாபை தம் வசப்படுத்திக்கொண்டது இஷ்டமில்லாமலிருந்ததால் இவ்விரு வகுப்பினருக்கும் நடந்த சண்டைகளில் சீக்கியர்கள் தோல்வி யடைந்தனர். 1761-க்குப் பிறகு சீக்கியர்கள் மறுமுறை பல மடைந்து பஞ்சாபிலுள்ள ஆப்கானிய அதிபதிகளைத் துரத்தி மறுபடியும் நாட்டைத் தம் வசமாக்கிக் கொண்டனர். சில காலத்திற்கு பிறகு (1789) ரஞ்சிட் சிங் என்னும் சீக் வீரர் சட்லெஜ் நதிக்கு மேற்கு பாகத்திலிருந்த சீக்கியர்களை ஒன்று சேர்த்து ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினர்.

24. கடைசி முகலாய சக்ரவர்த்திகள் 1707-1758 ராஜ்யத்தின் சிதைவு

ராஜ்யத்தின் நிலை.

ஔரங்கசிபிற்கு பிறகு பட்டத்துக்கு வந்தவர்களுக்குள் திறமை வாய்ந்தவர்கள் ஒருவருமில்லை. ஆதலால் அக்கால ராஜ்ய வரலாற்றில் சூழ்ச்சிகளும் கொலைகளுமதிகம். அரசாங்க முறை வலிமைகுன்றி இருந்ததனால் மாகாண அதிபதிகளுக்கு சுயேச்சையடைய

அனுகூலங்கள் ஏற்பட்டன. இந் நிலையில் அயல் நாட்டினரும் தேசத்தின் பேரில் படை யெடுத்துவந்து தீங்கிழைக்க ஆரம்பித்தனர். இதற்கு முன்பே ராஜபுத்திரர்களும் மஹாராஷ்டிரர்களும் முகலாய ராஜ்யத்தைத் தாக்க ஆரம்பித்து விட்டனர். இக் காரணங்களால் முகலாய ராஜ்யம் சிதைவடைய ஆரம்பித்தது.

பஹதூர்ஷா 1707-1712.

ஔரங்கசீப்பிற்கு பிறகு அவர் குமாரர்களுள் திறமை வாய்ந்தவரான பஹதூர்ஷா பட்டத்தை அடைந்தார். அவர் மஹாராஷ்டிரர்களால் ஏற்பட்ட கஷ்டத்தை குறைப்பதற்காக சாஹுவை சிறையினின்றும் வெளி விட்டதைப்பற்றி நாம் முன்னமே தெரிந்து கொண்டோம். (131-ம் பக்கம் பார்க்கவும்) அவர் சீக்கியர்களை தோற்கடித்தார். 1712-ம் வருஷத்தில் பஹதூர்ஷா மரண மடைந்தார்.

ஜலந்தர்ஷா 1712-1713.

பஹதூர்ஷாவுக்குப் பிறகு அவர் நான்கு குமாரர்களும் பட்டத்திற்காக சண்டை யிட்டனர். ஆனால் திறமையற்ற ஜலந்தர்ஷா என்பவரே பட்டத்துக்கு வந்தார். சிறிது காலத்திற்குள் அவர் அண்ணன் மகனுகிய பருக்ஸியர் என்பவர் ஜலந்தரைக் கொன்று பட்டத்தை அடைந்தார்.

பருக்ஸியர் 1713-1719.

பருக்ஸியர் தம் உறவினர்களிலும் உத்தியோகஸ்தர்களிலும் பலரைக் கொன்று தன் பட்டத்தை நிலைநாட்டிக்கொண்டார். அவர் மிகவும் குரூரகுண முள்ளவர். பருக்ஸியர் காலத்தில் சையத் சகோதரர்கள் இருவர் அரசாங்கத்தில் அதிக செல்வாக்கையும் அதிகாரத்தையும் பெற்றனர். அவர்கள் பருக்ஸியரைக்

கொன்று ஒரு வருஷத்திற்குள் ஒருவற்குப்பின் ஒருவராக நான்கு பேரை பட்டத்துக்கு வரும்படி செய்தனர். அதனுல் இச்சகோதரர்கள் அரசராக்குவோர் எனப் பெயர் பெற்றனர். சடைசியாக மகம்மதுஷா என்பவர் 1719-ல் பட்டத்தை அடைந்தார்.

முகலாய ராஜ்ய வீழ்ச்சி ஆரம்பம்.

மகம்மதுஷாவின் காலத்தில் முகலாய ராஜ்யம் சின்ன பின்னமாயிற்று. 1723-ம் வருஷத்தில் தக்காண சுபாதாராக விருந்த அசப் ஜா என்பவர் நிஜாமுல்முல்க் என்னும் பட்டத்துடன் சுயேச்சையானுர். அதே வருஷத்தில் அயோத்தியில் ஆண்ட சாதத்கானும் தாம் சுயேச்சை மன்னர் என்று விளம்பரப் படுத்திஞர். 1740-ல் வங்காள அதிபதியான அலிவர்த்திகானும் சுயேச்சை மன்னரானுர். அக்காலத்தில் ரோஹில்லர் என்னும் ஆப்கானிய மகம்மதியர்கள் ரோஹில்கண்ட் என்னும் பிரதேசத்தில் சுயேச்சை யடைந்து விட்டனர். டில்லிப் பட்டணத்தில் சூழ்ச்சிகள் அதிகப்பட்டன. இந் நிலேயில் மஹாராஷ்டிரரும் பாரஸீக நாட்டினரும் படை எடுத்து ராஜ்யத்துக்கும் தலேநகருக்கும் அநேக தீமைகளே விளேவித்தனர்.

நாதிர் ஷா படை எழுச்சி 1739.

நாதிர்ஷா ஆசியாவில் தோன்றிய பெரிய சேனேத் தலேவர்களுள் ஒருவர். அவர் பாரஸீக பட்டத்தைக் கைப்பற்றி, ஆப்கானிஸ்தானத்தையும் தம் வசப்படுத்திக் கொண்டு கைபர் கணவாய் மூலமாக நமது நாட்டினுள் புகுந்தார். அதிக சீக்கிரமாக யமுனே நதி பாயும் பிரதேசத்தில் கார்னல் என்னு மிடத்திற்கு வந்து சேர்ந்தார். அப்போது மகம்ம

துஷா ஒரு படையைத் திரட்டிக்கொண்டு நாதிர்ஷாவை எதிர்த்தார். சிறிது காலத்திற்குள் முகலாய மன்னர் தோல்வியடைந்தார். நாதிர்ஷாவிடம் சரண மடைந்து அவருடன் டில்லியில் புகுந்தார். ஒரு நாள் நாதிர்ஷா மரண மடைந்தார் என்று பொய்யான வார்த்தையைக் கேட்ட டில்லி ஜனங்கள் நாதிர்ஷாவின் படைகளைத் தாக்கினர். இதனால் கோப மடைந்த பாரஸீகர் டில்லி ஜனங்களை கத்திக் கிரையாக்கும்படி உத்தரவிட்டார். ஒரு வித கருணையு மின்றி மக்கள் யாவரையும் நாதிர்ஷாவின் படைகள் கொலை செய்தன. பிறகு மகம்மதுஷாவின் வேண்டுகோளுக்கிரங்கி படுகொலை நிறுத்தப்பட்டது. டில்லியிலுள்ள பணம் முழுவதும் பாரஸீகர்களின் வசமாயிற்று. ஷாஜஹான் செய்த மயிலாசனமும், கோஹினூர் வைரமடங்கிய மகுடமும், அளவற்ற பொருளும், ஸிந்துநதிக்கு மேற்கிலுள்ள பிரதேசமும் நாதிர்ஷாவுக்குச் சொந்தமாயின. இவைகளைப் பெற்றுக்கொண்டு நாதிர்ஷா தம் ஊர்போய்ச் சேர்ந்தார். இக்கஷ்டத்திலிருந்து நாடு முன்னேற்ற மடைவதற்கு வெகுகாலமாயிற்று. 1748-ல் மகம்மதுஷா மரண மடைந்தார்.


நாதிர்ஷா

மகம்மதுஷாவுக்கு பிறகு ஆமத்ஷா சக்ரவர்த்தி யானார். பாரஸீகத்தில் 1747-ம் வருஷத்தில் நாதிர்ஷா கொலை செய்யப்பட்டார். அவருக்குப் பின் அவர் சேனைத் தலைவர்களுள் ஒருவராகிய ஆமத்ஷா துரானி என்பவர் ஆப்கானிஸ்தானத்தை தம் வசப்படுத்திக்கொண்டார். பிறகு அவர் இந்தியாவின்மேல் படை எடுத்து வந்தார். அப்போது டில்லி சக்ரவர்த்தியான ஆமத்ஷா அவருக்கு பஞ்சாபை கொடுத்து அவருடன் சமாதானம் செய்து கொண்டார்.

ஆமத்ஷா 1748-1754.

1754-ம் வருஷத்தில் ஆமத்ஷாவின் அமைச்சரான கியாஸுதீன் தம் அரசரின் கண்களைப் பிடுங்கி அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை இரண்டாவது அலம்கீர் என்னும் பட்டத்துடன் சக்ரவர்த்தியாக்கினார். 1756-57ல் ஆமத்ஷா துரானி நம் நாட்டின்பேரில் படை எடுத்து வடமதுரை வரையிலுள்ள பிரதேசங்களை கொள்ளையடித்து டில்லியையும் வசப்படுத்திக்கொண்டு தம் ஊருக்குத்திரும்பினார்.

இரண்டாவது அலம்கீர் 1754-1757.

1759-ம் வருஷத்தில் இரண்டாவது அலம்கீரைக் கொன்று ஷாஆலம் என்பவர் பட்டத்துக்கு வந்தார். அவர் சிறிது காலம் சுயேச்சையாக ஆட்சி செய்தார். ஆனால் 1765-ம் வருஷத்திற்கு பிறகு ஆங்கிலேயரின் ரக்ஷணையிலும் பிறகு மகாராஷ்டிரர் ரக்ஷணையிலும் இருந்தார். அதுமுதல் முகலாய ராஜ்யம் பேருக்கு மாத்திரமிருந்ததே ஒழிய அவ்வரசர்களுக்கு ஒருவித அதிகாரமுமில்லை. நூறு வருஷ காலத்திற்கு பிறகு கடைசி முகலாய சக்ரவர்த்தியை ஆங்கிலேய

ஷா ஆலம் 1759-1806.

ருக்கு விரோதமாக சிப்பாய்க்கலகத்தில் கலந்துகொண்ட தாக குற்றம் சாட்டி, சுட்டுக் கொன்றுவிட்டனர்.

முகலாய ராஜ்ய சிதைவுக்கு காரணங்கள்.

முகலாயர்களிடம் பெரும் பான்மையான ஜனங்களுக்கு அதிக அன்பு ஏற்படவில்லை. ஔரங்கசீப், அக்பர் ஏற்படுத்திய முறைகளை மாற்றி ஹிந்துக்களின் பேரில் ஜிஸியா வரியை விதித்ததால், சீக்கியர்கள், ராஜபுத்திரர்கள், மஹாராஷ்டிரர்கள் முதலியோர் முகலாயர்களிடத்தில் அதிகமாக வெறுப்புக் கொண்டனர். அந்நிய நாட்டினர் நமது தேசத்தின்மீது படை எடுத்து வந்து பொருளைக் கொள்ளையடித்து ராஜ்யத்தை முன்பிருந்ததைவிட அதிகமாக சீர்குலையும்படி செய்தனர். ஔரங்கசீபுக்கு பிறகு வந்த அரசர்கள் வலிமையற்றவர்கள். அவர்களின் ஆட்சியில் சூழ்ச்சிகளும் கலகங்களும் அதிகமாக விருந்தன; அமைச்சர்களும் ராஜ்யத்தைபலப்படுத்துவதற்கு உழைக்காமல் சுயேச்சையாக அதிகாரம் பெற முயற்சி செய்தனர். இவைகள் மாத்திரமல்லாமல் முகலாயப் படைகளின் வீரமும் வலிமையும் குறைந்துவிட்டன. ஆகையால் மகம்மதியர்கள் தேச அபிமானத்துடனும் மத ஆவேசத்துடனும் சண்டையிடும் சீக்கியர்களோடும் மஹாராஷ்டிரர்களோடும் சண்டையிட்டு ஜயமடைய முடியாமல் போய்விட்டது. ஜனங்களின் உள்ளன்பு இல்லாததனு லும், பிரபுக்கள் வலிமையற்றவர்களானதாலும், படைகள் வீரத்தன்மையை இழந்ததனுலும், சுதேசஜனங்கள் தங்கள் மதத்தை காப்பதற்காக ஆவேசத்துடன் சண்டை செய்ததனுலும், வீரம் மிக்க அயல்நாட்டு அரசர்கள் படை யெடுத்து வந்ததனுலும் முகலாய ராஜ்யம் சிதைவுண்டது.

அத்தியாயம் 13

ஐரோப்பியர்களின் வருகை

முக்கிய விஷயங்கள்:—வர்த்தக வழிகள் - போர்ச்சுகீசியர்கள் - டச்சுக் காரர்கள் - ஆங்கிலேயர்கள் - பிரெஞ்சுச்காரர்கள் - இவர்களின் வர்த்தக சங்கங்கள் - ஐரோப்பிய வியாபாரமுறை - பண்டக சாலேகள் - காஞடகப் போர்கள் - ஆங்கிலேயரின் ஜயம் - டூப்ளே, கிளேவ் - திவானியை அடைதல்.

35. ஐரோப்பிய வர்த்தக சங்கங்கள்

வியாபார வழிகள்.

பண்டைக்காலமுதல் நம் தேசத்திற்கும் ஐரோப்பிய தேசங்களுக்கும் சாப்பாட்டு வாசனே திரவியங்களில் வியாபாரம் அதிகமாக நடந்து வந்தது. ஒரு காலத்தில் இவ் வர்த்தகத்திஞல் ஏராளமான செல்வம் நம் நாட்டிற்கு கிடைத்தது என்று ஒரு ரோமானிய சரித்திர நூலாசிரியர் எழுதியுள்ளார். அவ் வியாபாரம் மூன்று வழிகள் மூலமாக நடைபெற்று வந்தது. அவற்றுள் ஒன்று கைபர்கணவாயின் வழியாக பாக் நகரத்தைச் சேர்ந்து, அங்கிருந்து காஸ்பியன் கருங்கடல்கள் வழியாக கான்ஸ்டாண்டிநோபில் சேறுவது. இரண்டாவது போலன் கணவாயின் வழியாக காண்டஹாருக்குச் சென்று அவ்விடத்திலிருந்து பாரஸீகத்தின் வழியாக பாலஸ்தீன் ஸிரியா தேசங்களின் துறைமுகப்பட்டணங்களேச் சேறுவது. மூன்ருவது கடல் நிலம் இரண்டிலும் செல்வது; அரேபியாவின் தெற்கில் பிரயாணம் செய்து வடக்கு

நோக்கி செங்கடல் மூலம் சென்று சூயஸ் பட்டணத்தின் மூலமாக அலெக்ஸாண்டிரியாவை அடைவதாகும். இத் துறைமுகங்களிலிருந்து சாமான்கள் ஐரோப்பிய தேசங் களுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

வியாபாரத்துக்கு ஏற்பட்ட இடையூறு.

14, 15 - ம் நூற்றாண்டுகளில் இவ்வித வியாபாரத் துக்கு இடையூறுகள் எற்பட்டன. அக் காலத்தில் பாரஸீகம், எகிப்து, பாலஸ் தீன் முதலிய தேசங்கள் அரபியர்கள் கையில் சிக்கிக்கொண்டன. அவர்க ளுக்கு கிறிஸ்தவர்களிடம் உண்டான வெறுப்பினால், அவர்கள் வியாபாரச் சரக்குகளின்பேரில் அதிக வரிகளை விதித்து, அவர்கள் தொழிலுக்கு அதிக கஷ்டங்களை விளைவித்தனர். இனி நிலவழியாக வியா பாரம் நடப்பது கஷ்டமென்றுநினைத்து ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு கடலின் மூலம் வழி யொன்று கண்டு பிடிக்க முயன்றனர். அப் பிரயத்தினத்தில் முத லில் ஜயம் பெற்றவர்கள் போர்ச்சுகீசியர். போர்ச்சு கீசிய மாலுமியாகிய வாஸ்கோட காமா 1498 - ம் வரு ஷத்தில் நமது நாட்டின் மேற்கு கடற்கரையிலுள்ள கள்ளிக்கோட்டைக்கு, ஆப்ரிக்காவின் தென்மேற்கு கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு வந்து சேர்ந்தார். அதற்கு பின் வெகுகாலம் இக் கடல்வழி மிகவும் உபயோகப்பட்டு வந்தது.

போர்ச்சுகீசியர்.

நன்னம்பிக்கை முனையை சுற்றிக்கொண்டு கிழக்கு நாடுகளோடு வியாபாரம் செய்வதற் காக ஐரோப்பாவிலிருந்து நான்கு தேசத்தினர் வந்தனர். மேலேதெரிந்து கொண்ட மாதிரி முதல் வந்தவர் போர்ச்சுகீசியர். அவ ருக்குப்பிறகு முறையே டச்சுக்காரர், ஆங்கிலேயர்,

பிரெஞ்சுக்காரர் வந்தனர். வாஸ்கோடகாமா போர்ச்சுகீசிய மாலுமி. அவர் கண்டுபிடித்த கடல் வழிகள் தங்களுக்குதான் உரித்தானவை என்று போர்ச்சுகீசியர் வாதாடி அவ்வழியே (பிறரைத் தடைசெய்து) தாம் மாத்திரம் கிழக்கு நாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்து, அதிக லாபத்தை அடைய நினைத்தனர். தங்கள் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக அக்காலத்தில் கிறிஸ்துவர்களுக்கு தலைமை மடாதிபதியும் ரோம் பட்டணத்தில் வசித்தவருமான பாப்பாண்டவரை (Pope) வர்ட் முனை தீவுகளுக்குக் கிழக்கிலுள்ள பிரதேசங்களெல்லாம் தங்களுக்கே உரியது என்று உத்தரவளிக்குமாறு வேண்டினர். அதேவிதம் ஓர் உத்தரவு பிறப்பித்ததனால் அயல் நாட்டினர் கிழக்கு நாடுகளோடு வியாபாரம செய்வதைத் தடை செய்தனர்.

டச்சுக்காரர்; ஆங்கிலேயர்.

போர்ச்சுகீசியர் ரோமன் கத்தோலிக் மதத்தைச் சேர்ந்தவர்கள். அக்காலத்தில் ஐரோப்பாவில் வலிமை பெற்ற தேசமாக விருந்த ஸ்பெயின் தேசத்தாரும் அதே மதத்தைச் சேர்ந்தவர்கள். பாப்பாண்டவர் போர்ச்சுகீசியருக்கு வர்ட் முனை தீவுகளுக்கு கிழக்கிலிருந்த நாடுகளைக் கொடுத்தபோது, அதற்கு மேற்கிலிருந்த பாகங்களையெல்லாம் ஸ்பெயின் தேசத்தவருக்குக் கொடுத்தார். அக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்குள் பிராடெஸ்டெண்டுகள் என்றும் கத்தோலிக்குகள் என்றும் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டுவிட்டன. இவ்விரு பிரிவினருக்கும் அதிக பகை இருந்தது. ஆதலால் பிராடெஸ்டெண்ட் பிரிவைச்சேர்ந்த டச்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும், ஸ்பெயின் தேசத்தோடு பகை அதிகரித்து வந்தது. ஆதலால் அவர்கள் கத்தோலிக் முக்கிய மத

குருவாகிய பாப்பாண்டவர் இட்ட உத்தரவை ஒத்துக் கொள்ளாமல் நன்னம்பிக்கை முனை வழியாக கிழக்கு நாடுகளோடு வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர். அவர்களுள் முதலில் டச்சுக்காரரும் பிறகு ஆங்கிலேயர்களும் கப்பற்படையுடன் நமது தேசத்திற்கு வரத்தொடங்கினர்.

பிரெஞ்சுக் காரர். போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் மூவரும் நமது தேசத்தோடும் இதர கிழக்கு நாடுகளோடும் வியாபாரஞ் செய்து அதிக லாபத்தை அடைந்தனர். அக்காலத்தில் ஐரோப்பாவில் முதன்மையடைந்துவந்த பிரான்ஸ் தேசத்தினர் இதைக்கண்டு தாங்களும் லாபமடைய நினைத்து கிழக்கு நாடுகளுடன் வியாபாரஞ்செய்ய ஆரம்பித்தனர். கிழக்கு நாடுகளுக்கு வந்த ஐரோப்பியர்கள் முதலில் வியாபாரம் செய்து லாபமடையவே வந்தனர். நாளடைவில் இவர்களுக்குள் போட்டி ஏற்பட்டு ஒருவரோடொருவர் சண்டையிடலாயினர். சில தேசத்தவர் திறமையில்லாமல் நடந்துகொண்டதனுல் உள்ள பணத்தையும் இழந்தனர். ஆனுல் ஜாக்கிரதையாக வேலையை கவனித்தவர்கள் நாளடைவில் பெரிய சாம்ராஜ்யத்தை நிலை நாட்டினர்.

36. ஐரோப்பியரின் பண்டக சாலைகள்

பண்டக சாலைகளின் தோற்றம். ஐரோப்பியர்கள் சுதேச அரசர்களை நாடி, அவர்களிடமிருந்து முதலில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி பெற்றுர்கள். பிறகு தங்கள் பண்டங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பண்டக சாலைகளைச் சுற்றிலும் கோட்டைகளைக் கட்டிக்கொண்டனர். அக் கோட்டைப்பிரதேசம் முழுவதிலும் தங்கள் நாட்டு

சட்டங்களையே அமுலுக்குக்கொண்டு வருவதற்கு உத்தரவு பெற்றுக்கொண்டனர். அப் பிரதேசங்களிலிருந்து நம் நாட்டு சாமான்களை வாங்கி தம் நாட்டுக்கு கப்பல் மூலமாக ஏற்றுமதிசெய்து வந்தனர். வியாபாரம் அதிகரித்தசனுல் நாளடைவில் இப்பட்டணங்கள் பெரிய நகரங்களாயின. மதராஸ், கல்கத்தா, பம்பாய் இவ்விதமே ஏற்பட்டன.

போர்ச்சுகீசியரின் வியாபாரம்.

மேற்கூறியவிதமாக ஐரோப்பாவிலிருந்து வந்த நான்கு தேசத்தினரும் நம் தேசத்தின் பல பாகங்களில் பண்டக சாலைகளை ஏற்படுத்திக் கொண்டனர். முதலில் வந்த போர்ச்சுகீசியர்கள் கோவா, டையு, டாமன் என்னு மிடங்களில் பண்டக சாலைகளை கட்டிக்கொண்டனர். பாரவலீக வளைகுடாவிலும், ஆப்ரிக்காவின் கிழக்கு கரையிலும் சிம்மளத்தீவு முதலிய விடங்களிலும் பண்டக சாலைகளைக் கட்டிக்கொண்டு கப்பற்படையின் உதவியினுல் வியாபாரத்தை அதிகமாகப் பெருக்கினுர்கள். அதற்கு முன் இந்து மஹா சமுத்திரக் கரையோரத்தில் அதிகமாக வியாபாரம் செய்து வந்த அரபியர்களை அங்கிருந்து துரத்தி, அவர்கள் செய்துவந்த வியாபாரத்தைத் தம் வசமாக்கிக்கொண்டனர். அக்காலத்தில் செல்வம் மிகுந்திருந்த விஜயநகர ராஜ்யத்தின் வியாபாரமெல்லாம் போர்ச்சுகீசியர்களின் மூலமாகத்தான் நடந்து வந்தது.

போர்ச்சுகீசியரின் வீழ்ச்சி.

போர்ச்சுகீசியர் தங்களுடைய வர்த்தகத்தை ஒழுங்காக நடத்தாமல் இதர நாட்டினர் வியாபாரக் கப்பல்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தனர். அது மாத்திர மன்றி தாங்கள் வியாபாரம் செய்து வந்த பிரதேசங்களிலுள்ள கிறிஸ்தவரல்லாத பிற மதத்தினரை

துன்புறுத்தி கிறிஸ்துவ மதத்தைத் தழுவும்படி செய்தனர். நம் நாட்டினர் ஏதாவது குற்றம் செய்தால் அவர்களை மிகவும் குரூரமாகத் தண்டனை செய்தனர். இவ்வித செய்கைகளால், முதலில் அவர்களுக்கு உதவியாக இருந்த சுதேச அரசர்களைப் பகைவர்களாக மாற்றிக் கொண்டனர். இந்த சமயத்தில போர்ச்சுகல் தேசமே ஸ்பெயின் நாட்டினரால் கைப்பற்றப் பட்டது. ஸ்பெயின் தேசத்தவர் போர்ச்சுகீசியர் வியாபார அபிவிருத்தியைப்பற்றி கவனிக்கவில்லை. அது மாத்திரமன்றி அவர்கள் தலையிட்டபோரில் போர்ச்சுகீசியரும் சண்டை செய்யவேண்டி யிருந்ததனுல் போர்ச்சுகீசியருக்கு நஷ்டமே ஏற்பட்டது. மேலும், டச்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் போர்ச்சுகீசியருக்கும் பகை மூண்டது. 1612-ம் வருஷத்தில் ஸ்வாலி என்னுமிடத்திற் கருகில் நடந்த கடற்சண்டையில் ஆங்கிலேயர்களால் உதவிசெய்யப்பட்ட டச்சுக்காரர்கள் போர்ச்சுகீசியர்களை முறியடித்தனர். அதுமுதல் கிழக்குநாடுகளில் போர்ச்சுகீசியரின் பலம் குன்றியது. தற்காலத்தில் போர்ச்சுகீசியருக்கு இந்தியாவில் கோவா, டையு, டாமன் என்னும் மூன்று இடங்கள் தான் சொந்தமாக விருக்கின்றன.

டச்சுக்காரரின் வியாபார ஸ்தலங்கள்.

போர்ச்சுகீசியரின் வர்த்தக சங்கம் அந்நாட்டு அரசாங்கத்தாரின் செல்வாக்கைப் பெற்றிருந்தது. ஆதலால் போர்க்சுகீசியர் நம் நாட்டில் ஜயித்த பிரதேசங்களை ஆட்சிசெய்ய அவ் வரசாங்கத்தாரே உத்தியோகஸ்தர்களை நியமித்து வந்தனர். இவ்விதமாகவே டச்சுக்காரர்களும் தங்கள் அரசாங்கத்தின் உதவியைப் பெற்று கீழிந்தியத்தீவுகளோடு வியாபாரம் செய்யத் தொடங்கினர். அவர்கள் வியா

பாரப் பொருள்களுள் முதன்மையானது சாப்பாட்டு வாசனை திரவியங்கள். இப்பொருள்கள் மலேயாவைச் சேர்ந்த தீவுக் கூட்டத்தில் அதிகமாக கிடைத்தன. அப் பிரதேசத்தோடு வியாபாரம் செய்த ஐரோப்பியர் 16-ம் நூற்றாண்டின் முடிவில் டச்சுக்காரர்கள்; போர்ச்சுகீசியரோடு சண்டைசெய்து, அவர்களைக் கீழிந்தியத் தீவுகளினின்றும் துரத்தி, அங்கே தங்களுக்கே வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தினர். அங்கு மாத்திரமன்றி நம் தேசத்தில் நாகப்பட்டணம், மசூலிப்பட்டணம், சின்சுரா முதலிய விடங்களில் பண்டக சாலைகளை கட்டிக்கொண்டனர். டச்சுக்காரர்களின் முக்கிய நோக்கம் கீழிந்திய தீவுகளோடு வியாபாரமாக விருந்ததனால் நம் தேசத்தில் அவர்கள் வியாபாரமும், ராஜ்யமும் பெருகவில்லை. வியாபாரம் செய்வதற்கு மூன்றாவதாக வந்த ஐரோப்பிய நாட்டினர் ஆங்கிலேயர். இவர்கள் டச்சுக்காரர் கீழிந்திய தீவுகளில் வேறொருவரையும் வராமல் தடைசெய்வதைக் கண்டு, நம் தேசத்திலேயே தங்கள் வியாபாரத்தைப் பெருகச் செய்தனர்.

நமது தேசத்தோடு வியாபாரம் செய்யவந்த ஆங்கிலேயர்கள் 1600-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆங்கிலேய கீழிந்தியா வர்த்தக சங்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் 1612-ம் வருஷத்தில் டச்சுக்காரரோடு சேர்ந்து ஸ்வாலி என்னு மிடத்திற்கு அருகில் நடந்த கடல் சண்டையில் போர்ச்சுகீசியரைத் தோற்கடித்தனர். ஏற்கெனவே போர்ச்சுகீசியரை வெறுத்த ஜஹாங்கீர்சக்ரவர்த்தி ஆங்கிலேயரிடம் அன்பு பாராட்ட ஆரம்பித்தார். இதனால் தாமஸ் ஆல்ட்வொர்த் (**Aldworth**) என்னும் ஆங்கிலேயருக்கு மேற்கு கடற்கரையில் சூரத் என்னு மிடத்தில் ஒரு பண்டகசாலையை கட்டிக்கொள்ள உத்தர

வளித்தார். அதுமுதல் நாற்பது வருஷத்திற்குள்ளாக ஆங்கிலேயரின் பண்டகசாலைகள் நாடெங்கும் பரவியன.

1611-ல் மசுலிப்பட்டணத்தில் ஒரு வர்த்தக ஸ்தலம் ஏற்படுத்தப்பட்டது. இதர ஐரோப்பியர்களின் போட்டியினால் மசூலிப்பட்டண வியாபாரம் ஆங்கிலேயருக்கு அதிக லாபத்தைக் கொடுக்கவில்லை. ஆதலால் கிழக்கு கடற்கரையிலேயே மற்றொரு இடத்தைப் பார்த்து வியாபாரம் செய்ய ஏற்பாடுகள் நடத்த வேண்டியதாயிற்று.

ஆங்கிலேய வியாபார ஸ்தலங்கள்.

1639-ம் வருஷத்தில் பிரான்சிஸ் டே என்பவர் விஜயநகர அரசர்களுக்குக் கீழ்பட்ட சந்திரகிரிஅதிபதியினிடத்திலிருந்து சென்னைப்பட்டணத்தில் ஒரு பண்டகசாலை ஏற்படுத்திக் கொள்வதற்கு உத்தரவு பெற்று அவ்விடத்தில் ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டை என்று ஒரு பண்டக சாலையைக் கட்டிக் கொண்டனர். இதைச் சுற்றி வளர்ந்துள்ள நகரத்துக்கே மதராஸ் என்று பெயர். 1650-ம் வருஷத்தில் வங்காள சுபாதார், ஹூக்லி நதிக்கரையில் ஒரு பண்டக சாலையைக் கட்டிக்கொள்ள ஆங்கிலேயருக்கு அனுமதி யளித்தார். நாற்பது வருஷங்களுக்குப் பிறகு ஆங்கிலேய வர்த்தகர்கள் காளிகாட் என்னு மிடத்தில் வில்லியம் கோட்டையைக் கட்டிக்கொண்டு வியாபாரம் செய்யவாரம்பித்தனர். இதுவே தற்காலத்தில் கல்கத்தா நகரமாக வளர்ந்துள்ளது. 1668-ம் வருஷத்தில் ஆங்கில அரசனான இரண்டாவது சார்லஸ் ஆங்கிலேய கீழிந்திய வர்த்தக சங்கத்தாருக்கு பம்பாய் தீவை வருஷம் ஒன்றுக்கு பத்து பவுன் வரிக்கு கொடுத்தார். அவர் போர்ச்சுகீசிய ராஜ கன்னிகையை மணந்து கொண்டபோது அவளுக்கு அத் தீவு ஸ்திரீதனமாக கொடுக்கப்பட்டது. அத் தீவும் அதற்

கருகிலுள்ள சிறு தீவுகளும் சேர்ந்து தற்காலத்தில் பம்பாய் பட்டணமெனவழங்கி வருகின்றன.

பிரெஞ்சுக்காரர் வியாபார ஸ்தலங்கள்.

போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் கீழிந்திய நாடுகளோடு வியாபாரஞ் செய்து அதிக லாபத்தை அடைந்தனர் என்று தெரிந்துகொண்ட பிரெஞ்சு அரசாங்கத்தார், 1664-ல் தாங்களே ஒரு பிரஞ்சு கீழிந்தியா வர்த்தக சங்கத்தை ஏற்படுத்தினர். இவ் வர்த்தக சங்கத்தினர் நம் தேசத்துக்கு வந்து வியாபாரம் செய்வதற்காக 1668-ல் சூரத்திலும், 1669-ல் மசுலிப்பட்டணத்திலும், 1674-ல் புதுச்சேரியிலும், 1690-ல் சந்திர நகரிலும் பண்டக சாலைகளைக் கட்டிக் கொண்டனர். இவைகளுக்குள் புதுச்சேரி முதன்மை பெற்று இந்தியாவில் பிரெஞ்சு வர்த்தகசாலைகளுக்குத் தலைநகரமாயிற்று.

37. ஆங்கிலேயரின் ஜயம்

வர்த்தக சங்கங்களும் சுதேச ராஜாக்களும்.

நமது நாட்டில் பண்டக சாலைகளைக் கட்டிக்கொண்டு வியாபாரம் செய்யத்தொடங்கிய ஆங்கிலேய பிரெஞ்சு வர்த்தக சங்கத்தார்கள் குறைந்த விலைக்கு சாமான்களை வாங்கி ஐரோப்பாவிற்கு அனுப்பி, அவைகளை அங்கு, அதிக விலைக்கு விற்று லாபமடைவதோடு திருப்தி அடையவில்லை. அக் காலத்தில் ஐரோப்பாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் போர்கள் நடந்தபடியால் இங்குள்ள ஐரோப்பியர்களும் ஒருவரோடொருவர் விரோதம் பாராட்டி வந்தனர். துப்பாக்கி, பீரங்கி முதலியன உபயோகித்து சண்டை செய்வதில் ஐரோப்பியர் தேர்ச்சி பெற்றவர்கள் என்

பதை சுதேச ராஜாக்கள் அறிந்தனர். ஆதலால் தாங்கள் ஒருவர்க்கொருவர் சண்டையிடும்போது சுலபமாக ஜய மடைவதற்காக ஐரோப்பியர்களின் உதவியை நாடினர். அப்போது ஆங்கிலேயர் ஒரு பக்கமும் பிரெஞ்சுக்காரர் அதற்கு எதிர்புறமும் இருந்து சண்டையிடுவது வழக்கம். சில சமயங்களில் சுதேச ராஜாக்கள் விஷயத்தில் ஐரோப்பியர்கள் தாங்களே தலையிட்டுக் கொண்டு, சண்டையிடுவதும் உண்டு. இச்சண்டைகளின் பயனாக அவர்களுக்கு ஆங்காங்கு சில விடங்களும் கூட கிடைத்தன. அப்பிரதேசங்களை ஆட்சி செய்து, நாளடைவில் ஐரோப்பியர்கள் இந்தியாவில் ராஜ்யங்களை ஏற்படுத்தினர்.

பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயரும்.

முதன்முதலில் சுதேச ராஜாக்களின் விஷயத்தில் தலையிட்டுக் கொண்ட ஐரோப்பியர்கள் பிரெஞ்சுக்காரர்களே. அவர்களின் சிறு படையொன்று கர்னாடக நவாபின் பெருத்த படையை சென்னைக்குத் தெற்கில் அடையார் நதிக்கரையில் தோற்கடித்தது. அன்றுமுதல் இந்தியாவில் இருந்த பிரெஞ்சு சங்கத்தார் ஒரு பிரெஞ்சு ராஜ்யத்தை ஏற்படுத்துவதையே முக்கியமாக எண்ணினார்கள். அப்போது தென்னிந்தியாவின் நிலை அவர் எண்ணம் கைகூடும்போல் இருந்தது. கர்னாடக நவாப் பதவிக்கும், ஹைதராபாத் நிஜாம் பதவிக்கும் ஒவ்வொன்றுக்கும் இருவர் போட்டியாக வந்தனர். ஒரு கக்ஷிக்கு டூப்ளே உதவி செய்ய வாக்களித்தார். இவ்விதம் பிரெஞ்சுக்காரர் உதவி செய்து கர்னாடகத்திலும் ஹைதராபாத்திலும் அதிக செல்வாக்கடைந்தால் பிற்காலத்தில் தங்களுக்கு அதிக கஷ்டங்கள் ஏற்படும் என்று பயந்த ஆங்கிலேயர்கள பிரெஞ்சுக்காரருக்கு எதிர் கக்ஷி

யினருக்கு உதவி செய்வதற்கு முன்வந்தனர். இவ்விதமாக 1740 முதல் 1763-க்குள் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் கர்னாடகத்தில் நடந்த மூன்று யுத்தங்களுக்கு கர்னாடக யுத்தங்களென்று பெயர். அவைகளில் ஆரம்பத்தில் பிரெஞ்சுக்காரர் ஜயமடைந்தனர். இரண்டாவது கர்னாடக யுத்தத்தில் ஆங்கிலேயர் கர்னாடகத்திலும், பிரெஞ்சுக்காரர் ஹைதராபாத்திலும் செல்வாக்கடைந்தனர். அந்த யுத்தத்தின் பயனாக பிரெஞ்சுக்காரர்களுக்கு வடசர்க்கார் ஜில்லாக்கள் கிடைத்தன. 1760-ம் வருஷத்தில் நடந்த வந்தவாசி சண்டையில் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்தனர். அதோடு இந்தியாவில் பிரெஞ்சுக்காரரின் பலம் நசித்துவிட்டது. தற்காலத்தில் அவர்களுக்கு புதுச்சேரி, காரைக்கால், மாஹியேனும், சந்திரநகர் என்னும் இடங்களே சொந்தமாக உள்ளன.

ஆங்கிலேயர் நிலைபெற்றதற்கும் பிரெஞ்சுக்காரர் தோல்வியடைந்ததற்கும் பல காரணங்கள் உள்ளன. பிரெஞ்சு வார்த்தக சங்கம் செல்வத்திலும் சாமர்த்தியத்திலும் ஆங்கிலேய சங்கத்தவ்வளவு வலிமை பெற்றதல்ல. பிரெஞ்சு கீழிந்திய சங்கம் அரசாங்கத்தின் ஆதரவினால் நடத்தப்பட்டதால், அது ஒழுங்காக நடைபெறவில்லை. பிரெஞ்சு உத்தியோகஸ்தர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டு, ஒத்துழைக்கவில்லை. ஆங்கிலேய கம்பெனியோ பணக்காரர்களான வர்த்தகர்களால் ஏற்படுத்தப்பட்டதால் வர்த்தக விஷயத்தை மிகவும் ஜாக்கிரதையாக நடத்தி வந்தனர்; சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் அதன் மேம்பாட்டையே கருதி கஷ்டப்பட்டு உழைத்தனர். அது மாத்திரமன்றி பிரெஞ்சுக்காரரைவிட ஆங்கிலேயர் கப்பற் சண்டையில் திறமை வாய்ந்த

வர்களாகவிருந்தனர். ஆகையால் கப்பற் சண்டையில் ஜயமடைந்தது மாத்திரமன்றி பிரெஞ்சுக்காரருக்கு கடல் மூலமாக ஒருவித உதவியும் வராமல் தடை செய்தனர். மேலும் பிரெஞ்சு வர்த்தக சங்க உத்தியோகஸ்தர்கள் தம்மால் செய்ய முடியாத காரியத்தை (ராஜ்யத்தை சம்பாதித்தலை) நிறைவேற்ற எண்ணினர். அவர்களுக்குத் தாங்கள் ஏற்றுக்கொண்ட காரியத்தை செய்து முடிப்பதற்கு வேண்டிய சக்தி இல்லை. ஆதலால் அவர்கள் ராஜ்யத்தை ஏற்படுத்த முடியாமல், தேசத்தைவிட்டே செல்லவேண்டியதாயிற்று. ஆங்கிலேய வர்த்தக சங்கத்தார் அவ்வாறில்லாமல் குறைந்த லாபத்துடன் திருப்தியடைந்து, அதிக கஷ்டப்பட்டு வேலைசெய்து நாளடைவில் ஜயமடைந்தனர். இவ்விஷயங்கள் டூப்ளே, கிளைவ் சரித்திரங்களைப் படித்தால் தெளிவாகத் தெரியும்.

பிரெஞ்சுக்காரரின் தோல்விக்குக்காரணங்கள்.

38. டூப்ளே—கிளைவ்

டூப்ளே பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்தவர். அவர் முதலில் வங்காளத்தில் பிரெஞ்சு பண்டகசாலையான சந்திரநகரில் குமாஸ்தாவாக அமர்ந்தார். நாளடைவில் உயர்ந்த பதவிகளைப் பெற்று கடைசியாக இந்தியாவிலுள்ள பிரெஞ்சு பிரதேசங்களுக்கு அதிபதியானார்.

டூப்ளே பிரசித்தமடைந்தது அவர் செய்த காரியங்களால் அல்ல; அவர் எண்ணங்களினலேயே ஆகும். துப்பாக்கியும், நல்லபீரங்கி பயிற்சியும், ஒழுங்கும் உள்ள சிறிய ஐரோப்பிய படை கூட ஒரு பெருத்த இந்திய படையை தோற்கடிக்கலாம் என்னும் விஷயத்தை அறிந்த முதல் ஐரோப்பியர் அவரே. இது மாத்திரமன்றி ஒரு தேர்ச்சி

பெற்ற ஐரோப்பிய படையுடன், எப்பொழுதும் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் சுதேச அரசர்களுக்கு உதவிசெய்தோ, அவர்கள் ராஜ்ய விஷயங்களில் தலையிட்டுக்கொண்டோ ஐரோப்பியர் இந்தியாவில் ராஜ்யத்தை சம்பாதித்துக்கொள்ளலாம் என்னும் விஷயத்தை அவர் அறிந்து கொண்டார். தமக்குத் தோன்றிய இவ்வெண்ணங்களை அவர் நடவடிக்கையில் செய்து காண்பிக்க முயற்சி செய்தார்.


ராபர்ட் கிளைவ்

டூப்ளே தம் எண்ணத்தை நிறைவேற்ற செய்த முயற்சிகள் தான் முதலிரண்டு கர்னாடக யுத்தங்கள். அவற்றுள் முதலாவது (1740-1748) ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் ஆஸ்திரிய அரசுரிமைப் போர் நடந்த சமயத்தில் ஏற்பட்டது. அவ் விரோதத்தையே காரணமாகக் கொண்டு டூப்ளே 1746-ம் வருஷத்தில் மதராஸிலுள்ள ஆங்கிலேயக் கோட்டையைக் கைப்பற்றினர். 1748-ல் நடந்த சமாதானத்தின்படி அக் கோட்டையை ஆங்கிலேயருக்குத் திருப்பிக் கொடுத்து விட்டார். இரண்டாவது கர்னாடக யுத்தத்தை (1749-1755) டூப்ளே ஆரம்பித்ததற்கு காரணம், கர்னாடகத்திலும் ஹைதராபாத்திலும் தம் நண்பர்களான சந்தா சாகிபுவையும் முஸபர் ஜங்கையும் அதிபதிகளாக்குவதற்காகவே.

யுத்த ஆரம்பத்தில் டூப்ளே சந்தா சாகிபுவை கர்னாடக நவாபாக்கி சிறிது காலம் அவர் ராஜ சபையில் செல்வாக்கு அடைந்தார். அப்பொழுதே ஹைதராபாத்



கர்னாடக யுத்தங்களிலும் மைசூர் யுத்தங்களிலும் சண்டைகள் நடந்தவிடங்களைத் தெரிந்து கொள்ளவும்

பட்டத்திற்கு உரிமை பாராட்டிய முஸபர் ஜங்கும் டூப்ளேக்கு நண்பரானர். பிரெஞ்சுக்காரர்கள் செல்வாக்

கடைவதைக்கண்ட மதராஸிலிருந்த ஆங்கிலேயர்கள் டூப்ளே தங்களை நாட்டை விட்டுத் துரத்தி விடுவார் என்று அஞ்சி, பிரெஞ்சுக்காரரின் நண்பர்களுக்கு விரோதிகளாக விருந்த மகம்மது அலிக்கும், நாஸிர் ஜங்குக்கும் தங்கள் ஆதரவை அளிக்க முன்வந்தனர். இந்த யுத்தத்தின் முடிவில் ஆங்கிலேயரே ஜயம் பெற்றனர். இதன் பயனுக டூப்ளேயின் செல்வாக்கு அழிந்தது. இவ்விஷயம் ஐரோப்பாவில் தெரிந்தவுடன் ஆங்கிலேய பிரெஞ்சு அரசாங்கத்தினர்கள் தங்கள் தேசத்தினர் இந்தியாவில் செய்த விஷயங்கள் ஒழுங்கற்றவை என்று கண்டனம் செய்தனர். பிரெஞ்சு அரசாங்கத்தார் டூப்ளேயை உடனே பிரான்ஸுக்கு திரும்புமாறு உத்தரவிட்டனர். அவர் கடைசிக்காலத்தில் ஏழ்மைத்தன மடைந்து கஷ்டப்பட்டு மரண மடைந்தார். நம் தேச சரித்திரத்தில் திறமை வாய்ந்தவர்களுள், டூப்ளேயை ஒருவராகச் சொல்லலாம். அவர் எண்ணத்தைப் பின்பற்றிதான் ஆங்கிலேயர் நம் நாட்டில் ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தி யுள்ளனர். பிரெஞ்சு அரசாங்கத்தார் டூப்ளேக்கு தகுதியான சமயத்தில் பொருளையும் படையையும் உதவி யிருந்தால் நம் நாட்டு சரித்திரப் போக்கு எவ்வாறிருக்கும் என்று சொல்ல முடியாது.

டூப்ளேயின் செயல்கள்.

ராபர்ட் கிளைவ் இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்தவர். சிறு பிராயத்தில் மிகவும் துஷ்டராக விருந்தார்; அவரால் உண்டான கஷ்டங்களைப் பொருக்க முடியாமல் அவர் தாய் தந்தையர் அவரை கிழக்கிந்தியா கம்பெனியில் ஒரு குமாஸ்தாவாக மதராஸுக்கு அனுப்பினுர்கள். 1751-ம் வருஷத்தில் கிளைவ் முக்கிய மடைவதற்கு சமயம் வாய்த்தது. ஆங்கிலேயரின் நண்பனுன மகம்மது அலி

பிரெஞ்சுக்காரர்களின் நண்பராகிய சந்தா சாகிபினுல் தோற்கடிக்கப்பட்டு திருச்சிஞப்பள்ளி கோட்டைக்கு ஓடி ஒளிந்து கொண்டார். அக் கோட்டையைச் சந்தா சாகிபு பிடித்து விடுவாரென்று மதராஸிலுள்ள ஆங்கிலேய அதிகாரிகள் பயந்தனர். ஆதலால் அவர்கள் லாரென்ஸ் என்னும் சேனைத் தலைவரை ஒரு படையுடன் அனுப்பி சந்தா சாகிபை தாக்க ஏற்பாடு செய்தனர். அப் படை மிகவும் சிறிதாக விருந்தது. தமக்கு ஜயம் கிடைப்பது அரிது என நினைத்து லாரென்ஸ் தயங்கினர். அச் சமயத்தில் குமாஸ்தா வேலை பார்த்துவந்த கிளைவ், திருச்சிஞப்பள்ளியைத் தாக்குவதைவிட சரிவர காக்கப்படாமலிருந்த கர்னுடகத்தின் தலை நகரான ஆற்காட்டை கைப்பற்றுவது நலமென்று சொன்னர். இவ்விதம் செய்தால் சந்தா சாகிபு தன் தலை நகரைக் காக்க சில படையை அனுப்புவார். அப்பொழுது மகம்மது அலியைக் காப்பாற்றக் கூடும் என்று கூறினர். ஒரு சிறு படையுடன் சென்று அக் காரியத்தைத் தாமே செய்து முடிப்பதாகவும் முன் வந்தார். மதராஸி லிருந்த ஆங்கில அதிகாரிகள் கிளைவ் சொன்ன விஷயங்களை ஒத்துக் கொண்டனர். ஆதலால் கிளைவ் ஒரு சிறு படையுடன் ஆற்காட்டின்மேல் படையெடுத்துச் சென்று அதைப் பிடித்துக்கொண்டு சந்தா சாகிபு அனுப்பிய படையை முறியடித்தார். இச் செய்கையினுல் கிளைவ் சிறந்த படைத்தலைவராவார் என்பது தெரிந்தது.

இங்கிலாந்துக்கு சென்ற கிளைவ் 1756-ல் இந்தியாவுக்குத் திரும்பினர். அப்பொழுது வங்காளத்தி லிருந்த ஆங்கிலேயர்கள், வங்காள நவாபான ஸிராஜ் உத்தெளலாவின் கோபத்துக் காளானதால் மிகவும் நெருக்கடியான நிலையி லிருந்தனர். நவாப் ஆங்கிலேயருக்குச் சொந்த

மான வில்லியம் கோட்டையை பிடித்துக் கொண்டார். அங்கு தம் கையில் அகப்பட்டுக்கொண்ட ஆங்கிலேயர்களை நவாபின் சேவகர்கள் அவர் உத்தரவின்றி ஓர் இருட்டறையில் அடைத்ததனல், அடைக்கப்பட்டவரில் பலர் மாண்டனர். கிளைவ் இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும் இவ் விஷயத்தைதான் கேள்விப்பட்டார். மதராஸிலிருந்து கிளைவ் வங்காள நவாபை தண்டிப்பதற்காக அனுப்பப் பட்டார். கிளைவ் வங்காளத்திற்குசென்று கல்கத்தாவை தம் வசமாக்கிக்கொண்டு, ஸிராஜ் உத்தெளலாவின் சேனைத்தலைவரான மிர் ஜாபருடன் சூழ்ச்சிசெய்து 1757-ல் நவாபை பிளாசி சண்டையில் தோற்கடித்து, மிர் ஜாபரை நவாபாக்கினர். அதனல் ஆங்கிலேயருக்கு கீர்த்தி ஏற்பட்டது மாத்திர மன்றி இரண்டு கோடி ரூபாய் பணமும் கிடைத்தது. அடுத்த வருஷத்தில் போர்ட் என்னும் படைத்தலைவர் வட சர்க்காருக்குச் சென்று பிரெஞ்சுக் காரரின் வசத்திலிருந்த அப் பிரதேசத்தைக் கைப் பற்றினர். இப் பெருஞ்செயல்களைச் செய்துவிட்டு கிளைவ் இரண்டாந்தரம் இங்கிலாந்துக்கு சென்ருர்.

கிளைவ் சென்றவுடன் வங்காளத்தி லிருந்த ஆங்கிலேயர்கள் தங்கள் சுய நலத்தையே கருதி பல கெட்ட காரியங்களைச் செய்தனர். அவர்கள் மிர் ஜாபரை பட்டத்தினின்றும் நீக்கி மிர் காஸிம் என்பவரை நவாபாக்கினர். பிறகு அவரோடும் விரோதம் பாராட்டி சண்டையிடலாயினர். அச் சமயத்தில் மிர் காஸிமுக்கு உதவி செய்ய வந்த அயோத்தி நவாபையும் முகலாய சக்ரவர்த்தியான ஷா ஆலத்தையும் 1764-ல் பக்ஸார் என்னு மிடத்தில் நடந்த சண்டையில் தோற்கடித்தனர். இவ் விஷயங்களை ஒழுங்கு படுத்த கிளைவ் மறுபடியும் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். 1765-ல் கிளைவ் அலஹாபாத் என்னு



மஹாராஷ்டிர சிற்றரசர்களின் ராஜ்யங்களையும் ஆங்கிலேயருக்குச் சொந்தமான நாடுகளையும் தெரிந்து கொள்ளுங்கள்

மிடத்தில் முகலாய சக்ரவர்த்தியோடு சமாதானம்செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கையின்படி அயோத்தி நவாபின் வசமிருந்த காரா, அலஹாபாத் ஜில்லாக்கள் முகலாய சக்ரவர்த்திக்கு கொடுக்கப்பட்டன. ஷா ஆலம் ஆங்கில கம்பெனியாருக்கு வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா பிரதேசங்களில் வரி (திவானி) வசூலிக்கும் உரிமையை அளித்தார். இதற்காக வர்த்தக சங்கத்தினர் முகலாய சக்ரவர்த்திக்கு வருஷத்துக்கு 26 லக்ஷம் ரூபாய் கப்பங் கட்ட ஒத்துக்கொண்டனர். இவை மாத்திர மன்றி கம்பெனியார் வசத்தில் அப்பொழுதிருந்த பிரதேசங்களெல்லாம் அவர்களுக்கே சொந்தமானது என்றும் சக்ரவர்த்தி ஒப்புக் கொண்டார்.

கிளைவ் தென் இந்தியாவில் கர்னாடகமும், வடசர்க்கார் ஜில்லாக்களும் வடஇந்தியாவில் மூன்று மாகாணங்களில் திவானி வசூலிக்கும் அதிகாரமும்பெற்று நாட்டில் ஆங்கிலேயருக்கு அதிக புகழை ஏற்படுத்தினர். பிறகு கம்பெனி உத்தியோகஸ்தர்கள் ஒழுங்காக நடக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு கடைசியாக இங்கிலாந்துக்குச் சென்றார். கிளைவுக்கு இங்கிலாந்தில் பல பகைவர்களிருந்தனர். அவர்கள் கிளைவ் செய்த ஒழுங்கீனமான செயல்களைச் சொல்லி பார்லிமெண்ட் சபையில் வாதம் செய்தனர். பார்லிமெண்டார் கிளைவ் வர்த்தக சங்கத்துக்கு அதிகமான நன்மைகளை செய்தாரென்ற தீர்மானத்தையே அங்கீகரித்தார்கள். அடிக்கடி வியாதியால் வருந்தியதால் கிளைவ் 1774-ல் தற்கொலை செய்துகொண்டார். திறமை வாய்ந்த ஆங்கிலேய படைத் தலைவர்களுள் கிளைவ் ஒருவர். லஞ்சம் வாங்கியபோதிலும், சூழ்ச்சிகள் செய்த போதிலும், இந்தியாவில் ஆங்கில ராஜ்யத்தை ஏற்படுத்துவதற்கு அடிகோலி போட்டவர் அவரே.

அத்தியாயம் 14.

ஆங்கிலேய அதிகார வளர்ச்சி

முக்கிய விஷயங்கள் :—வாரன் ஹேஸ்டிங்ஸ் - ஒழுங்குமுறை சட்டம் - மஹாராஷ்டிர மைசூர் யுத்தங்கள் - ஹேஸ்டிங்ஸ் செய்கைகளால் ஏற்பட்ட பலன்கள் - வெல்லெஸ்லி பிரபு - பிரெஞ்சுக்காரரால் ஏற்பட்ட பயம் - நான்காவது மைசூர் யுத்தம்-இரண்டாவது மூன்ருவது மஹாராஷ்டிர யுத்தங்கள் - துணைமுறை உடன்படிக்கை - ஹேஸ்டிங்ஸ் பிரபு-நேபாள யுத்தம் - பிண்டாரிகள் - மஹாராஷ்டிர ராஜ்யத்தின் சிதைவு - டல்ஹௌஸி பிரபு - சீக்கிய யுத்தம் - பர்மா யுத்தம் - அரசுரிமை இழக்கும் கொள்கை.

39. வாரன் ஹேஸ்டிங்ஸ் 1772—1785

ஹேஸ்டிங்ஸ். கிளைவுக்குப் பிறகு இந்தியாவில் ஆங்கில ராஜ்யத்திலிருந்த குறைகளை நீக்கி ஒழுங்குபடுத்தியவர் வாரன் ஹேஸ்டிங்ஸ். அவரும் கிளைவ், டூப்ளேயைப் போலவே சிறு உத்தியோகத்திலமர்ந்து பிறகு உன்னத பதவியை அடைந்தார். முதலில் அவர் வர்த்தக சங்கத்தில் ஒரு குமாஸ்தாவாக கல்கத்தாவுக்கு வந்தார். பிறகு காசிம் பஸார் பட்டணத்தில் ஆங்கில அதிபதியாக விருந்தார். அதன்பின் முறையே வங்காள மாகாண நிர்வாக சபையிலும் சென்னை மாகாண நிர்வாக சபையிலும் ஓர் அங்கத்தினராக விருந்து 1772-ல் வங்காள அதிபதி (**Governor**) யாக நியமிக்கப்பட்டார். இரண்டு வருஷங்

களுக்குப் பிறகு இந்தியாவிலிருந்த ஆங்கிலேயருக்குச் சொந்தமான நாடுகளுக்கெல்லாம் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார்.

வங்காளத்தின் நிலை: சீர்திருத்தம்.

வாரன் ஹேஸ்டிங்ஸை வங்காள கவர்னராக நியமித்த போது வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா நாடுகளின் ஆட்சி ஒழுங்கீனமாக விருந்தது. ஆங்கிலேயர் வரி வசூல் செய்தலும் நவாபு மற்ற அரசாங்க விஷயங்களை கவனித்தலும் என்று ஏற்பட்ட இரு தலைப் பட்ட துரைத்தன முறை செவ்வனே நடைபெற வில்லை. ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் தங்கள் கடமையை செவ்வனே செய்யாமல் தங்கள் சொந்த லாபத்துக்காக வியாபாரம் செய்வதையே அதிகமாக கவனித்து வந்தனர். அது மாத்திரமன்றி வரிகளை சரியாக வசூல் செய்யாமல் போனதால், பொக்கிஷத்தில் செல்வம் குறைந்தது. நியாய தீர்மானத்தையும் ஒழுங்காக நடத்தாமையால் தேசத்தில் குற்றங்கள் அதிகரித்தன. ஹேஸ்டிங்ஸ் தன் கீழ் வேலை செய்பவர்களும், மேலதிகாரிகளும் என்ன செய்வார்களோ வென்பதை கவனியாமல் அரசாங்க நிலையை ஒழுங்கு படுத்த ஆரம்பித்தார். சரிவர வரியை வசூல் செய்ய ஜில்லா கலெக்டர்களை நியமித்தார். கல்கத்தாவில் வரி விஷயங்களை கவனிப்பதற்காக ரெவினியூ போர்ட் ஆபீஸ் என்னும் தலைமை உத்தியோகசாலையை ஏற்படுத்தினார். கிஸ்தி தொகையை முதலில் ஐந்து வருஷத்துக்கு ஒரு முறை ஏலம் போடும்படி ஏற்பாடு செய்தார். பிறகு அதை ஒவ்வொரு வருஷமும் ஏலம்போடும்படி ஹேஸ்டிங்ஸ் ஏற்படுத்தினார். ஒவ்வொரு ஜில்லாவிலும் சிவில் நியாய ஸ்தலத்தையும் கிரிமினில் நியாய ஸ்தலத்தையும் ஸ்தாபித்தது மாத்திரமன்றி

கல்கத்தாவில் தலைமை நியாய விசாரணை சபை ஒன்றும் ஏற்பாடு செய்தார்.

ஒழுங்கு முறை சட்டம்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் மேற்கூறிய சீர்திருத்தங்களை செய்த பொழுது இங்கிலாந்தில் பார்லிமெண்ட் சபையார் 1773-ல் ஒழுங்கு முறை சட்டம் **(Regulating Act)** ஒன்று ஏற்படுத்தி அதை அடுத்த வருஷத்தில் அமுலுக்குக் கொண்டு வந்தனர். இச்சட்டத்தின் படி வங்காள கவர்னருக்கு கவர்னர் ஜெனரல் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது. நிர்வாக விஷயத்தில் அவருக்கு உதவி செய்ய நான்கு அங்கத்தினர் கொண்ட ஒரு சபை ஏற்பாடு செய்யப்பட்டது. நான்கு நியாயாதிபதிகள் அடங்கிய சுப்ரீம் கோர்ட் என்னும் நியாய விசாரணை சபை கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. மதராஸ், பம்பாய் மாகாணங்கள் கவர்னர் ஜெனரிலின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டன. வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப் பட்டார்.

ஹேஸ்டிங்ஸூம் அவர் நிர்வாக சபையும்.

ஒழுங்கு முறை சட்டம் அமுலுக்கு வந்த இரண்டு வருஷம்வரையிலும்ஹேஸ்டிங்ஸூக்கும் அவருடைய நிர்வாக சபை யாருக்கும் அடிக்கடி அபிப்ராய பேதங்கள் ஏற்பட்டு வந்தன. அச்சபையின் அங்கத்தினர் ஒருவராகிய பிராங்சிஸ் என்பவருக்கும் ஹேஸ்டிங்ஸூக்கும் பகை அதிகமாகவிருந்தமையால் அவர் ஒவ்வொரு விஷயத்திலும் ஹேஸ்டிங்ஸை எதிர்த்து அவமானப் படுத்தி வந்தார். அதனல் ஹேஸ்டிங்ஸ் அதிக வெறுப்புற்று அவருடன் தனிப்போர் செய்து அவரைத் தோற்கடித்து இங்கிலாந்துக்கு திரும்

பும்படி செய்தார். அதற்குபின் கவர்னர்ஜெனரல் ஒரு வித கஷ்டமுமின்றி ஆட்சி செய்ய முடிந்தது.

ஹேஸ்டிங் ஸுக்கு எற்பட்ட கஷ்டங்கள்

வங்காளத்தில் இவ்வித கஷ்டங்களிருக்கையில் சுதேச அரசர்களோடும் கஷ்டங்கள் ஏற்பட ஆரம்பித்தன. மூன்றுவது பானிபட் சண்டையில் தோல்வியடைந்த மஹாராஷ்டிரர்கள் மறுபடியும் பலமடைந்தனர். அதுவரையில் ஆங்கிலேயருக்கு கீழ்ப்பட்டிருந்த முகலாய சக்ரவர்த்தி அவர்கள் ஆதரவை விட்டு, மஹாராஷ்டிர சிற்றரசர்களுள் ஒருவரான மஹதாஜி சிந்தியாவின் ரக்ஷகத்தை ஏற்றுக்கொண்டார். அக்காலத்தில் மஹாராஷ்டிரர்களுக்குள் முக்கியமானவரான நானா பர்ணவிஸ், ஆங்கிலேயரிடம் பகைமை கொண்டிருந்தார். அதே காலத்தில் தென் இந்தியாவில் ஹைதர் அலி என்னும் மகம்மதிய வீரர் மைசூர் ராஜ்யத்தை தம் வசப்படுத்திக்கொண்டு மதராஸிலுள்ள ஆங்கிலேயர்களுக்கு தீங்கிழைத்துவந்தார். அந்த சமயத்தில் மஹாராஷ்டிரரோடும் ஹைதரோடும் சண்டை செய்வதற்கு ஆங்கிலேயரிடம் பணமில்லை. ஆகையால் ஹேஸ்டிங்ஸ் ஒழுங்கீனமான வழியில் பணத்தை சம்பாதித்து ஊக்கத்துடன் சண்டைசெய்து ஆங்கிலேயரின் புகழை நிலைக்கச் செய்தார். அவர் பணம் சம்பாதித்த வழிகளில் ஒன்று பின்வருமாறு: அலஹாபாத் உடன்படிக்கையின்படி முகலாய சக்ரவர்த்திக்கு ஆங்கிலேயர் செலுத்த வேண்டிய வருஷ கப்பம் 26 லக்ஷம் ரூபாய். அவர் மஹாராஷ்டிரர்களின் ரக்ஷகத்திற்குப் போனபோது இத்தொகையை செலுத்தாமல் நிறுத்தி அவருக்கு கொடுத்திருந்த காரா, அலஹாபாத் ஜில்லாக்களை அயோத்தி நவாபுக்கு ஐம்பது லக்ஷம் ரூபாய்க்கு விற்றார்.

முதல் மஹாராஷ்டிர யுத்தத்தின் காரணங்கள்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் முதல் மஹாராஷ்டிர யுத்தம் நடந்தது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அப்பொழுது பாலாஜி பாஜிராவின் குமாரராகிய நாராயண ராவ் பீஷ்வாவானார். அவர் சிற்றப்பனாகிய ரகோபா என்னும் ராகுநாத ராவ் சூழ்ச்சி செய்து அவரைக் கொலை செய்துவிட்டார். இவ்விஷயம் முக்கியமான மஹாராஷ்டிரர்களுக்குத் தெரிந்தவுடன் நாராயண ராவின் குமாரனான ஒரு குழந்தையை பீஷ்வாவாக அமர்த்தி, நாநா பர்னவிஸை ரக்ஷகராக நியமித்தனர். இனி புனாவிலிருந்தால், தாம் உயிருடனிருப்பது கஷ்டம் என்று நினைத்து ரகோபா பம்பாய்க்கு ஓடி, அங்கு ஆங்கிலேயரின் உதவியைச் சம்பாதிக்க பிரயத்தனம் செய்தார். தன்னைப் பீஷ்வாவாக்கினால் ஆங்கிலேயருக்கு ஸால்ஸெட், பஸ்ஸீன் தீவுகளைக் கொடுப்பதாக ஒத்துக்கொண்டு ஓர் உடன்படிக்கை செய்துக்கொண்டார். ஆனால் கவர்னர் ஜெனரலான வாரன் ஹேஸ்டிங்ஸ் பம்பாய் அரசாங்கத்தார் ரகுநாத ராவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை ஆமோதிக்கவில்லை. இங்கிலாந்திலிருந்த கம்பெனியின் மேலதிகாரிகளோ பம்பாய் அரசாங்கத்



நாநா பர்னவிஸ்

தார் செய்த உடன்படிக்கையை ஒத்துக்கொண்டனர். ஆதலால் ஆங்கிலேயர்களுக்கும் மஹாராஷ்டிரர்களுக்கும் சண்டை ஆரம்பித்தது.

பம்பாய் அரசாங்கத்தார் சண்டையைத் தொடங்கினர். ரகுநாத ராவை பீஷ்வாவாக்க அனுப்பப்பட்ட பம்பாய் ஆங்கில சேனை, வார்காம் என்னுமிடத்தில் மஹாராஷ்டிரர்களிடம் தஞ்சம்புகுந்து அவமானத்தைத் தரும்படியான ஷரத்துகளை ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. இதைக் கேட்டதும் கவர்னர் ஜெனரலான ஹேஸ்டிங்ஸ் காடர்ட் என்னும் படைத் தலைவரை மஹாராஷ்டிரர்களோடு சண்டையிட அனுப்பினர். அவர் அஹமதாபாத் வரையிலும் சென்றார். போபாம் என்னும் மற்றொரு வீரரை மஹாதாஜி சிந்தியாவின் தலைநகரான குவாலியரை முற்றுகையிடும்படியாக அனுப்பினர். இதைக் கண்ட மஹாதாஜி ஆங்கிலேயருடன் சமாதானம் செய்து கொள்வதே நலமென்று நாநாபர்னவிஸுக்குச் சொன்னார். ஆதலால் சால்பை என்னுமிடத்தில் ஆங்கிலேயர்களுக்கும் மஹாராஷ்டிரர்களுக்கும் 1782-ம் வருஷத்தில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது.

சால்பை உடன்படிக்கை 1782.

அதன்படி மஹாராஷ்டிரர்கள் சால்செட் தீவை ஆங்கிலேயருக்குக் கொடுத்தனர். ரகுநாதராவுக்கு வருஷ உபசாரச் சம்பளமாக மூன்று லக்ஷம் ரூபாய் அளிக்கப்பட்டது.

வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் மைசூர் ராஜ்யத்தோடு இரண்டாவது யுத்தம் நடந்தது. இது மதராவிலிருந்த கம்பெனி அதிகாரிகளின் புத்தியின்மையால் ஆரம்பமாயிற்று. அவர்கள் தாங்கள் ஹைதர் அலிக்கு கொடுத்த வாக்குறுதியின்படி நடந்து கொள்ளவில்லை.

ஹைதர் மஹாராஷ்டிரர்களோடு சண்டைசெய்துகொண்டிருக்கும்போது அவருக்கு ஆங்கிலேயர் உதவிசெய்ய மறுத்ததால் கோபங்கொண்ட ஹைதர் அவர்களுடன் சண்டைக்குத் தயாரானார். அவர் 1780-ம் வருஷத்தில் சங்கம்மா கணவாயின் வழியாக கர்னாடகத்தில் பிரவேசித்து பல கிராமங்களை தீக்கிரையாக்கி, காஞ்சீபுரத்துக்கருகில் இருந்த பெய்லி என்னும் தளகர்த்தரை பளூர் என்னுமிடத்தில் தோற்கடித்தார். அப்பொழுது காஞ்சிபுரத்திலிருந்த ஹெக்டர் மன்ரோ என்னும் படைத் தலைவர் பயந்துகொண்டு தம்மிடமிருந்த பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் ஓர் ஏரியில் எறிந்துவிட்டு மதராஸுக்கு ஓடி



ஹைதர் அலி

ஒளிந்து கொண்டார். இச்செய்தி வங்காள கவர்னர் ஜெனரலுக்குத் தெரிந்தவுடன், அவர் 1781-ம் வருஷம் அயர் கூட் என்னும் படைவீரரை ஹைதருடன் சண்டை செய்வதற்கு அனுப்பினார். அவர் ஹைதரை பரங்கிப்பேட்டை என்னுமிடத்தில் தோற்கடித்தார். ஆயினும் ஹைதர் ஆங்கிலேயருக்குட்படவில்லை. ஆனால் ஹைதரின் மகனான திப்பு சுல்தான் ஆங்கிலேயரைச் சிலவிடங்களில் தோற்கடித்தார். 1783-ல் ஹைதர் மரணமடைந்தார். அதே சம

இரண்டாவது மைசூர் யுத்தம் 1780—1784.

யத்தில் அயர் கூட் என்பவரும் உயிர் நீத்தார். சண்டை செய்து லாபம் இல்லை என்று நினைத்து மதராஸிலிருந்த ஆங்கில கம்பெனி உத்தியோகஸ்தர்கள் (திப்புவுடன் மங்களூர் என்னுமிடத்தில் 1784-ல் சமாதானம் ஒன்று செய்துகொண்டனர். அதன்படி அவரவர் ஜயித்த பிரதேசங்களைத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது.)

ஹேஸ்டிங்ஸ் ஆட்சியின் பயன்கள்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னராகவும் கவர்னர் ஜெனரலாகவும் இருந்து கஷ்டப்பட்டு உழைத்து வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களின் பரிபாலன முறையை ஒழுங்கு படுத்தினர். ஆங்கிலேயரை நாட்டை விட்டுத் துரத்துவதே நோக்கமாகக் கொண்ட மைசூர், மஹாராஷ்டிர யுத்தங்களில் ஹேஸ்டிங்ஸ் ஜயம் பெற்று இந்தியாவில் ஆங்கில ராஜ்யத்தை நிலைநாட்டினர். சால்செட் தீவு ஆங்கிலேயருக்கு கிடைத்தது. இவ்விதம் கம்பெனியின் நன்மைக்காக உழைத்து 1785-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்குத் திரும்பினர்.

ஹேஸ்டிங்ஸ் குற்ற விசாரணை.

ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்துக்குச் செல்வதற்கு முன்னமேயே அவருக்கு விரோதியாகிய பிரான்சிஸ் இங்கிலாந்துக்குச் சென்று இவர் ஆட்சியில் செய்த குற்றங்களையெல்லாம் பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு எடுத்துக்காட்டி அவரை விசாரணைக்கு கொண்டு வந்தார். பர்க், ஷெரிடன், பாக்ஸ் முதலிய நியாயவாதிகள் ஹேஸ்டிங்ஸ் பணம் திரட்டுவதற்காக செய்த ஏற்பாடுகள் கண்டிக்கத்தக்கவை யென்று வாதித்தனர். இவ்விசாரணை ஏழு வருஷகாலம் நடந்தது. கடைசியில்

ஹேஸ்டிங்ஸ் குற்றவாளியல்லவென்று தீர்மானம் செய்யப்பட்டது.

40. வெல்லெஸ்லி பிரபு 1798—1805

கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் இருவருக்கும் பிறகு நமது நாட்டில் ஆங்கிலேயரின் ராஜ்யத்தைப் பெருக்கியவர் வெல்லெஸ்லி பிரபு. சில பிரதேசங்களை யுத்தத்தினுலும், சில பிரதேசங்களை துணைப்படை ஏற்பாட்டை **(Subsidiary system)** அனுசரித்தும், ஆங்கில ராஜ்யத்தில் சேர்த்தமையால் ஆங்கில அதிகாரம் அவர் காலத்தில் அதிகமாகப் பெருகியது.

பிரெஞ்சுக்காரரால் ஏற்பட்டபயம்.

வெல்லெஸ்லி கவர்னர் ஜெனரலாக வந்தபோது ஐரோப்பாவில் பிரெஞ்சு புரட்சியுத்தம், ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்து வந்தது. அதனுல் பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயருக்கு தீங்கிழைக்க வழிகளைத் தேடிக்கொண்டிருந்தனர். அதைச் செய்வதற்கு நம் நாட்டிலிருந்த சுதேச அரசர்கள் ஆங்கிலேயரை நாட்டைவிட்டுத் துரத்த எண்ணியது உதவியாக விருந்தது. அது மாத்திரமேயல்லாமல் சுதேச அரசர்கள் தங்கள் படைகளுக்கு பிரெஞ்சு சேனைத் தலைவர்கள் பயிற்சியளிக்குமாறு ஏற்பாடுகள் செய்தனர். பிரெஞ்சுக்காரரின் பலம் அதிகரித்தால் தங்கள் ஆதிக்கம் குறைந்துவிடுமென்று இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்கள் பயமடைந்தனர். கவர்னர் ஜெனரலான வெல்லெஸ்லிக்கு இவ்வித பயம் அதிகமாக விருந்தது. அவர் வருவதற்கு முன்பே 1790-1792-ல் ஆங்கிலேயருக்கும் திப்பு சுல்தானுக்கும் மூன்ருவது மைசூர் யுத்தம் நடந்தது. அதனுல் திப்பு மலையாளம், திண்டுக்கல், பாராமஹல் ஜில்லாக்

களை ஆங்கிலேயருக்குக் கொடுக்கும்படி நேரிட்டது. வெல்லெஸ்லி கவர்னர் ஜெனரலானபோது, திப்பு பிரெஞ்சு சேனைத் தலைவராகிய நெப்போலியனுடன் ஆங்கிலேயரை நாட்டைவிட்டு துரத்துவதைப்பற்றி சூழ்ச்சிகள் செய்து வந்தார். அவ்விஷயத்தைப்பற்றி வெல்லெஸ்லி திப்புவை விசாரித்தபொழுது, அவர் தகுதியான பதில் சொல்லவில்லை. அதையே காரணமாகக் கொண்டு வெல்லெஸ்லி ஒரு பெருத்த படையை திப்புவின்பேரில் அனுப்பி அவர் தலை நகரான ஸ்ரீரங்கபட்டணத்தை முற்றுகையிட்டார். திப்பு மும்மரமாக சண்டை செய்து போரில் மாண்டார். ஆதலால் மைசூர் ராஜ்யம் ஆங்கிலேயர் அதிகாரத்துக்கு உட்பட்டது. ஆங்கிலேயருக்கு தென் கன்னடம் ஜில்லா கிடைத்தது. கடப்பை, கர்நூல், அனந்தபுரம் ஜில்லாக்கள் நிஜாமுக்குக் கொடுக்கப்பட்டன. மைசூர் ராஜ்யத்தின் மிகுதியுள்ள பாகங்களை ஹைதருக்குமுன் ஆட்சி செய்துவந்த ஹிந்து அரசர்களின் சந்ததியைச் சேர்ந்த ஒருவருக்கு கொடுக்கப்பட்டது. இவ்வேற்பாட்டினால் மைசூர் ராஜ்யத்தைச் சுற்றி எல்லா பக்கங்களிலும் ஆங்கிலேயரின் அதிகாரம் பரவி யிருந்தது.

நான்காவது மைசூர் யுத்தம் 1799.



திப்பு சுல்தான்

துணைப்படை ஏற்பாடு.

பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு மைசூர் ராஜ்யத்தில் மாத்திரமே யல்லாது சிந்தியா, பான்ஸ்லே, நிஜாம் ராஜ்யங்களில்கூட பரவி யிருந்தது. அந்த சமயத்தில் நெப்போலியன் எகிப்தை தம் வசமாக்கிக் கொண்டிருந்தார். ஆதலால் மேற்கூறிய ராஜ்யங்களில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கை அழிக்காவிட்டால் ஆங்கிலேயரின் அதிகாரம் ஒழியுமென்று நினைத்து தங்கள் ஆதிக்கம் நிலைக்க ஓர் உபாயத்தைத் தேடினார். அதுவே துணைப்படை ஏற்பாடு என்பது. இவ் வேற்பாட்டை ஒத்துக்கொண்ட சுதேச அரசர்கள் ஓர் ஆங்கில படையை தங்கள் ராஜ்யத்தில் வைத்துக்கொண்டு அதற்கு வேண்டிய செலவைக் கொடுக்கவேண்டும். தங்கள் ராஜசபையில் ஓர் ஆங்கில ரெஸிடெண்டை வைத்துக்கொண்டு அவர் புத்திமதியின்படி ஆட்சிசெய்யவேண்டும். ஆங்கிலேயரைத் தவிர இதர ஐரோப்பியர்களைத் தங்கள் நாட்டில் வைத்துக் கொள்ளக் கூடாது. அயல் பிரதேசங்களோடு சம்பந்தங்களை ஆங்கிலேயர்கள் மூலமாக நடத்திக்கொள்ள வேண்டும். ஆங்கிலேயர், நாட்டைப் படையெழுச்சிகளிலிருந்தும் உள்நாட்டில் அமைதியுடனும் காப்பாற்ற ஒத்துக் கொண்டனர். இவ்விதம் துணைப்படை ஏற்பாட்டை ஒத்துக்கொண்ட சுதேச அரசர்கள் கொஞ்சம் சுயாதீனத்தை இழந்த போதிலும், தம் நாட்டில் அமைதியை நிலைநாட்ட முடிந்தது. இவ்வேற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவந்ததால், இந்தியாவில் ஆங்கில ராஜ்யம் பரவியது. இந்த ஏற்பாட்டை ஒத்துக்கொண்டு ஆங்கிலேயரின் நண்பர்களானவர்கள் மைசூர் ராஜா, ஹைதராபாத்து நிஜாம், அயோத்தி நவாப்.



மஹாராஷ்டிரர் ராஜ்யங்களையும் வெல்லெஸ்லி ஆங்கிலேயருக்குச் சேர்த்த நாடுகளையும் கவனியுங்கள்

இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தத்துக்கு காரணம்.

மஹாராஷ்டிரர்கள் துணைப்படை ஏற்பாட்டை ஒத்துக்கொண்ட போதிலும் அவர்கள் ஆரம்பத்திலேயே சமாதானமாக அதை ஒத்துக்கொள்ளவில்லை. அவர்கள் செய்த போருக்கு பல காரணங்கள் உண்டு. திறமைவாய்ந்த மஹாராஷ்டிர தலைவராகிய நானா பர்ஞவிஸ் 1800-ல் மரணமடைந்தார். அப்பொழுது பீஷ்வாவாக விருந்த இரண்டாவது பாஜிராவ் திறமை யற்றவராதலால் ராஜ்யத்தில் அதிகாரத்தை யெல்லாம் தம் வசப்படுத்திக் கொள்ள சிந்தியாவும் ஹோல்காரும் முன்வந்தனர். ஹோல்கார் பீஷ்வாவையும் சிந்தியாவையும் போரில் தோற்கடித்தார். பீஷ்வா பயந்து சிந்தியாவுடன் சொல்லாமல் பஸ்ஸீனுக்குச் சென்று 1803-ல் துணைப்படை ஏற்பாட்டை ஒத்துக்கொண்டு ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்டார். பஸ்ஸீன் உடன்படிக்கையைப்பற்றி கேள்விப்பட்டதும் தங்கள் சுயேச்சை அதிகாரம் தொலைந்து போகுமென்று பயந்து சிந்தியாவும் ஹோல்காரும் சேர்ந்து ஆங்கிலேயருடன் சண்டையிட ஆரம்பித்தனர்.

யுத்தத்தை சரிவர நடத்துவதற்கு வெல்லெஸ்லி ஒழுங்கான ஏற்பாடுகளை யெல்லாம் செய்தார். கவர்னர் ஜெனரல் ஆங்கிலேய படைகளை இரு பிரிவாக்கி வடக்கில் லேக் பிரபுவின் கீழும், தெற்கே தம் தம்பி ஸர் ஆர்தர் வெல்லெஸ்லியின் கீழும் அனுப்பினர். இரு படைகளும் மஹாராஷ்டிரர்களை பல இடங்களில் தோற்கடித்ததால் சிந்தியாவும் பான்ஸ்லேயும் ஆங்கிலேயரோடு சமாதானம் செய்துகொண்டனர். அதன்படி சிந்தியா டில்லியையும், கங்கை யமுனை நதிகளுக் கிடையிலுள்ள தோ ஆப் பிர

தேசத்தையும், தக்காணத்தில் தமக்கிருந்ததில் சில பிரதேசங்களையும் ஆங்கிலேயருக்கு கொடுத்தார். ஷா ஆலம் சக்ரவர்த்திகூட திரும்பவும் ஆங்கிலேயரின் ஆதரவை அடைந்தார். பான்ஸ்லே பாலசோர், கட்டாக் ஜில்லாக்களையும் பண்டில்கண்டிலும் குஜாராத்திலும் சில ஜில்லாக்களையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். இவ்விரு மஹாராஷ்டிர சிற்றரசர்களும் பஸ்ஸீன் சமாதானத்தை ஒத்துக்கொண்டனர்.

இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தம்.

ஆங்கிலேயருக்குப் பல பிரதேசங்கள் கிடைத்தமையால் 1804-ம் வருஷத்தில் அவர்களுடைய ராஜ்யத்தின் வடக்கு எல்லை யமுனை முதல் ஹிமயமலையடி வரையில் பரவியது.

சிந்தியாவின் பேரில் கோபங்கொண்டதால் இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தத்தில் கலந்துகொள்ளாத ஜஸ்வந்த் ராவ் ஹோல்கார், இப்பொழுது ஆங்கிலேயரோடு தனிப்பட்டு இரண்டு வருஷம் (1804—1805) யுத்தம் செய்யலாயினர். ஆரம்பத்தில் ஜயமடைந்த போதிலும் கடைசியில் தோல்வியடைந்தார். சண்டை நடந்துகொண்டிருக்கும் போதே வெல்லெஸ்லி ஊருக்குத்திரும்பினர். அவருக்குப் பின் வந்த கவர்னர் ஜெனரல் சம்பல் நதிவரையில் உள்ள பிரதேசத்தை ஹோல்காருக்குக் கொடுத்துவிட்டு பஸ்ஸீன் சமாதானத்தை ஒத்துக்கொள்ளும்படி செய்தார்.

மூன்ருவது மஹாராஷ்டிர யுத்தம்.

பொதுவாகப் பார்க்குமிடத்தில் வெல்லெஸ்லி பிரபு ஆங்கிலேயருக்கு நம்நாட்டில் செய்த உதவி மிகவும் அதிகமானது. ஏழு வருஷ காலத்திற்குள் திப்புவை தோற்கடித்து, நிஜாமை வசப்படுத்திக்கொண்டு, டில்லி வரையியிலுள்ள பிரதேசங்களை பிரிட்டிஷ் ராஜ்யத்தில் சேர்த்து

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் பெருகுவதற்கு துணைப்படை ஏற்பாட்டை செய்து, ஆங்கிலேயர் என்றால் சுதேச அரசர்கள் நடுங்கும்படி செய்த கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி பிரபுவே.

41. ஹேஸ்டிங்ஸ் பிரபு 1813—1823

இந்தியாவில் ஆங்கில ராஜ்யத்தை பெருக்கிய கவர்னர் ஜெனரல்களுக்குள் வெல்லெஸ்லி பிரபுவுக்கு பின் வந்தவர்களுள் முக்கியமானவர் ஹேஸ்டிங்ஸ் பிரபு. வெல்லெஸ்லியைப் போலவே இவரும் போர் புரிவதில் மிகவும் பிரியமுள்ளவர். கவர்னர் ஜெனரலாக விருந்த பத்து வருஷ காலத்துக்குள் ஹேஸ்டிங்ஸ் பிரபு இந்தியாவில் ஆங்கில ராஜ்யத்தை அதிகமாகப் பெருக்கினார்.

நேபாள யுத்தம் 1814-1816.

ஹேஸ்டிங்ஸ் புரிந்த போர்களுள் நேபாள யுத்தம் முதலாவது. நேபாளத்தில் வசிப்பவர்களுக்கு கூர்க்கர்கள் என்று பெயர். அவர்கள் வீரம் பொருந்தியவர்; தம் நாட்டில் ஜனங்கள் வாழ்வதற்கு இடம் போதாததனால் அதற்குத் தெற்கிலுள்ள வங்காளம் அயோத்தி மாகாணங்களின் வடக்கிலுள்ள ஜில்லாக்களை தங்கள் வசப்படுத்திக்கொண்டனர். அவைகள் ஆங்கிலேயருக்கு சேர்ந்திருந்ததால் ஹேஸ்டிங்ஸ் கூர்க்கர்களை அப்பிரதேசத்தைவிட்டு வெளியேறும்படி சொன்னார்கள். அவ்விதம் செய்ய மறுத்ததனால் போர்புரிய நேரிட்டது. நேபாளம் மலைநாடானதாலும், கூர்க்கர்கள் வீரர்களானதாலும் ஆரம்பத்தில் ஆங்கிலேயர் வெற்றியடையவில்லை. மேற்கு பிரிவில் ஆக்டர்லோனி என்னும் ஆங்கில படை வீரர் தவிர மற்றவிடங்களுக்குச் சென்ற சேனைகளெல்லாம் தோல்வியடைந்தன. ஆக்டர்லோனி

மிகவும் ஊக்கத்துடன் சண்டை செய்து 1816-ல் நேபாளத்தின் தலைநகராகிய காட்மாண்டுவை அடைந்தார். தலைநகரம் ஆங்கிலேயரின் வசமடைவதை விரும்பாமல் கூர்க்கர்கள் தங்கள் வசமிருந்த ஆங்கில ஜில்லாக்களை திருப்பிக் கொடுத்துவிட்டு அதோடு தங்கள் நாட்டைச் சேர்ந்த குமவான், கார்வால் ஜில்லாக்களை கொடுத்து ஆங்கிலேயரோடு 1816-ல் சிகௌளி என்னுமிடத்தில் உடன்படிக்கை செய்துகொண்டனர். அதுமுதல் கூர்க்கர்கள் ஆங்கிலேயரோடு நட்பு பாராட்டி வருகின்றனர்.

ஹேஸ்டிங்ஸ் பிண்டாரிகள் என்பவர்களோடு சண்டை தொடுத்தார். ஆனால் அதை நான்காவது மஹாராஷ்டிர யுத்தம் என்றே சொல்லலாம். பிண்டாரிகள் ஒரேவித ஜனக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களல்ல. அவர்கள் வீரம் மிக்க கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். சிவாஜி காலம் முதல் அரசர் படையின் ஆதரவைப் பெற்று, அதன்பின் சென்று பல ஊர்களைக் கொள்ளையடித்து பிழைத்து வந்தனர். அநேகமாக அவர்கள் சண்டை செய்வது வழக்கமில்லை. சமயம் வாய்த்தபோதெல்லாம் திக்கற்ற கிராமங்களில் புகுந்து கொள்ளையடித்து அவைகளைத் தீக்கிரையாக்கி ஜனங்களுக்கு பலவித கஷ்டங்களை உண்டாக்கி வந்தனர். மத்திய இந்தியா முழுவதிலும் திரிந்து பல விடங்களில் அவர்கள் தீங்கிழைத்து வந்தனர். 1815-1816-ம் வருஷங்களில் வட சர்க்கார் ஜில்லாக்களைக்கூட கொள்ளையடிக்க ஆரம்பித்தனர்.

பிண்டாரிகளின் கொடுமை

பிண்டாரிகளுக்கு மஹாராஷ்டிர தலைவர்கள் உதவி புரிந்தாரென்று ஹேஸ்டிங்ஸ் நினைத்து அவர்களை அடக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். பிண்டாரிகளை மாத்திர மல்லாமல் அவர்களுக்கு உதவி



ஹேஸ்டிங்ஸ் பிரபு சேர்த்த பிரதேசங்களை கவனிக்கவும்

புரிந்த மஹாராஷ்டிர தலைவர்களையும் அடக்கும் பொருட்டு இரண்டு படைகளைத் தயார் செய்து, சண்டை செய்யத் தாமே தலைமை வகித்தார்.

1816-ல் பீஷ்வாவாக இருந்த இரண்டாவது பாஜி ராவ் தாம் ஆங்கிலேயரிடம் தோல்வி யடைந்ததைப்பற்றி வருந்தி வந்தார். எப்படியாவது தம் அதிகாரத்தை திரும்பவும் சம்பாதிக்க நினைத்து படை யொன்று திரட்டிக்கொண்டு பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் வசித்த இடத்தை தீக்கிரையாக்கினார். பிறகு ஆங்கிலேயப் படை யொன்று அவரை கர்க்கீ என்னுமிடத்தில் தோற்கடித்தது. அதனால் பாஜி ராவ் தெற்கு நோக்கி ஓடி சதாராவில் வசித்து வந்த சிவாஜி சந்ததியைச் சேர்ந்த மஹாராஷ்டிர அரசரோடு சேர்ந்து கொண்டு இருவரும் வட இந்தியாவை நோக்கிச் சென்றனர். ஓர் ஆங்கிலப் படை அவரை துரத்திச் சென்றது. கடைசியில் படை வலிமை குறைந்த பாஜி ராவ் ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுந்தார். பிறகு அவர்கள் பாஜி ராவை கான்பூருக் கருகிலுள்ள பித்தூர் என்னுமிடத்திற்கனுப்பி அவருக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதாக ஏற்பாடு செய்தனர். மஹாராஷ்டிர அரசனை சதாரா பட்டணத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்துக்கு மாத்திரம் அரசராக்கினர். இந்த யுத்தத்தோடு மஹாராஷ்டிர ராஜ்யமும் அதன் ஆதிக்கமும் முடிவடைந்தது.

நான்காவது மஹாராஷ்டிர யுத்தம் 1816-1817.

பிண்டாரிகளை ஆதரித்து வந்த சிந்தியா, பான்ஸ்லே, ஹோல்கார் என்னும் மஹாராஷ்டிர தலைவர்களோடுகூட ஆங்கிலேயர் போர் புரிந்தனர். 1816-ல் பான்ஸ்லேயை துணைப்படை ஏற்பாட்டை ஒத்துக்கொள்ளும்படி செய்தனர். ஆனால் அடுத்த வருஷத்தில் அவர் ஆங்கிலேய

ரோடு சண்டை செய்ததால் அவரை சிதாபால்டி என்னுமிடத்தில் தோற்கடித்தனர். ஆதலால் அவர் தம் நாட்டைவிட்டு ஓடினர். அப்போது பேரார் ராஜ்யம் அவர் வம்சத்தைச் சேர்ந்த ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது. ஹோல்காரை 1817-ல் மாஹித்பூர் என்னுமிடத்தில் ஆங்கிலேயர் தோற்கடித்தனர். போர் ஆரம்பிக்கும் சமயத்திலேயே சிந்தியாவையும் தோற்கடித்து, பிண்டாரிகளோடு போர் புரியும்போது அவரை தங்களுக்கு உதவி செய்யும்படி ஏற்பாடு செய்து கொண்டனர். இவ்விதமாக மஹாராஷ்டிர தலைவர்களெல்லாம் சண்டையில் தோல்வி யடைந்ததனுல் ஆங்கிலேயருக்கு அடங்கி நடப்பதாக ஒத்துக் கொண்டனர்.

மஹாராஷ்டிரர்களின் சிதைவு.

பிண்டாரிகளெல்லாம் மஹாராஷ்டிரர்கள் அடக்கப்படுவதற்கு முன்பே அடக்கப்பட்டனர். ஆங்கிலபடைகள் அவர்களைச் சுற்றிக்கொண்டவுடன் பிண்டாரிகள் தஞ்சமடைந்தனர். அவர்களின் தலைவர்களுள் ஒருவராகிய அமீர்கான் என்பவருக்கு டாங்க் ராஜ்யத்தை கொடுத்தனர். பிண்டாரிகளுள் பலருக்கு கோரக்பூருக்கு அருகில் நிலங்களைக் கொடுத்து அவர்களை விவசாயிகளாக மாற்றினர். பிண்டாரி தலைவர்களுள் திறமை வாய்ந்த சிட்டு மாத்திரம் ஆங்கிலேயருக்கு உட்படவில்லை. அவர் தப்பித்துக்கொண்டு காட்டில் ஓடும்போது புலிக்கிரையானுர் என்று சொல்லப்படுகிறது.

பிண்டாரிகளை அடக்குதல்.

மஹாராஷ்டிர பிண்டாரி போர்களால் ஆங்கில அரசாட்சி முறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டு பீஷ்வா பதவியும் மஹாராஷ்டிர ராஜ்யமும் அழிவடைந்தது.

மஹாராஷ்டிர தலைவர்களுள் சிந்தியா ஆங்கிலேயருக்கு உட்பட்டார். ஹோல்கார் தம் ராஜ்யத்தில் பாதியை இழந்தார். பான்ஸ்லேயும் தம் நாட்டில் ஒரு பகுதியை ஆங்கிலேயருக்கு கொடுத்தார். இவ்விதம் மஹாராஷ்டிர சிற்றரசர்கள் தங்கள் ஆதிக்கத்தை இழந்தனர். ராஜபுத்திர அரசர்களுக்குள் பலர் மஹாராஷ்டிரர்களுக்கு பயந்து துணைப்படை ஏற்பாட்டை ஒத்துக்கொண்டு தம் சுயேச்சை அதிகாரத்தை இழந்தனர். ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்தில் பிரிட்டிஷ் ராஜ்யம் தெற்கில் கன்னியாகுமரி முனை முதல் வடக்கில் ஹிமயமலை வரையிலும், வடமேற்கில் ஸட்லெஜ் நதிவரையிலும் பரவியது.

ஹேஸ்டிங்ஸ் ஆட்சியில் ஏற்பட்ட லாபங்கள்.

42. டல்ஹௌஸி பிரபு 1848-1856

ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்குப் பிறகு ஆங்கிலேயரின் ராஜ்யத்தை அதிகமாக பெருக்கியவர் டல்ஹௌஸி பிரபு. ஹேஸ்டிங்ஸுக்கும் டல்ஹௌஸிக்கும் இடையில் கவர்னர் ஜெனரல்களாக விருந்தவர்களுக்குள் எல்லன்பரோ ஆம்ஹர்ஸ்ட் பிரபுக்களின் காலங்களில் முறையே ஸிந்து பிரதேசமும் அஸ்ஸாம், அரகான், டெனஸரீம் மாகாணங்களும் ஆங்கிலேயர் வசம் வந்தன. சுதேச அரசர்களெல்லோரும் துணைப்படை ஏற்பாட்டை ஒத்துக்கொண்டனர். ஆகையால் பஞ்சாப் மாகாணத்தைத் தவிர நமது நாட்டின் இதர பாகங்களெல்லாம் ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்குட்பட்டது. 1849-ல் பஞ்சாபையும், 1852-ல் பர்மாவிலுள்ள பெகு மாகாணத்தையும் டல்ஹௌஸி ஆங்கிலேய ராஜ்யத்தோடு

ஆங்கில ராஜ்ய வளர்ச்சி.

சேர்த்தார். இவை மாத்திர மன்றி, இன்னும் பல முக் கிய விஷயங்களையும் டல்ஹௌஸி செய்து முடித்தார்.

முதலில் பஞ்சாபில் சீக்கியர்கள் பல ஜனக் கூட்டங் களாக வசித்து வந்தனர். 19-ம் நூற்றாண்டின் ஆரம் பத்தில் ரஞ்சிட் சிங் என்பவரின் தலைமையின்கீழ் இக் கூட்டங்களெல்லாம் ஒற்றுமைப்பட்டன. ரஞ்சிட் சிங் பிரெஞ்சு படைவீரர்களைக் கொண்டு தம் வீரர்களுக்கு யுத்தப் பயிற்சி அளித்தார். அவர் 1839-ல் மரண மடைந்த பிறகு சீக்கிய படை ஆங்கிலேயரோடு யுத்தம் செய்ய முன் வந்தது. அவர்கள் சட்லெஜ் நதியை தாண்டியதால் ஆங்கிலேயர் சீக்கியர்களோடு சண் டையிட நேர்ந்தது. இதுவே முதல் சீக்கிய யுத்தம். ஆரம்பத்தில் சிக்கியர்கள் திறமையுடன் போர் புரிந்த போதிலும் கடைசியாக ஆங்கிலேயர்கள் சீக்கிய படைகளைத் தோற்கடித்தனர். ஆதலால் அவர்கள் ஆங்கிலேயர்களோடு சமாதானம் செய்ய ஒத்துக் கொண் டனர். அச்சமாதானத்தின்படி சீக்கியர்கள் லாஹூரில் ஆங்கில படை யொன்று வைத்துக் கொள்வதற்கும், ஒரு ரெஸிடெண்ட் வைத்துக் கொள்வதற்கும் ஒப்புக் கொண்டனர். இவ்விரு விஷயங்களும் சீக்கிய வீரர்களுக்கு அதிருப்தியை உண்டாக்கின. இச் சமயத்தில் டல்ஹௌஸி கவர்னர் ஜெனரலாக நியமிக் கப்பட்டார். சீக்கிய படைகள் மற்றொரு முறை ஆங்கி லேயரோடு சண்டை யிடுவதற்குத் தொடங்கின. டல் ஹௌஸி தகுதியான ஏற்பாடுகள் செய்து சீக்கியர்களைத் தோற்கடித்து சீக்கிய அரசருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து பஞ்சாப் முழுவதையும் ஆங்கிலேயர் வசப் படுத்திக் கொண்டார்.

சீக்கிய யுத்தங்கள்.



டல்ஹௌஸி ஆங்கில ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்ட பிரதேசங்களைக் கவனியுங்கள்

ஆம்ஹர்ஸ்ட் பிரபு காலத்தில் பர்மாவோடு முதல் யுத்தம் நடந்தது. அதனால் ஆங்கிலேயருக்கு சில பிரதேசங்கள் கிடைத்தன. அந் நாடுகளிலும் பர்மா தேசத்திலும் சில ஆங்கிலேயர் வியாபாரம் செய்து வந்தனர். அவர்களை பர்மா தேசத்து அரசாங்க உத்தியோகஸ்தர்கள் துன்புறுத்தி வந்தனர். ஆங்கில வியாபாரிகள் தங்கள் கஷ்டங்களை டல்ஹௌஸியிடம் முறையிட்டுக் கொண்டனர். ஆதலால் அவர் ஒரு தூதரை பர்மாவுக்கு அனுப்பினார். பர்மா அரசர் அவரை சட்டை செய்யவில்லை என்னும் காரணத்தைக்கொண்டு, டல்ஹௌஸி கோபம் கொண்டு ஒரு படையைத்திரட்டி ரங்கூனுக்கு அனுப்பினார். அப்படை ரங்கூனைப் பிடித்துக் கொண்டது. 1852-ல் பெகு மாகாணத்தை ஆங்கில ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டனர். இதனால் பர்மாதேச அரசருக்கு கடற்கரையைச் சேர்ந்த பிரதேசமே இல்லாமல் போய்விட்டது.

அரசுரிமை இழக்கும் கொள்கை.

டல்ஹௌஸி யுத்தங்களால் மாத்திரமே, ஆங்கில ராஜ்யத்தை பெருக்கவில்லை. இன்னும் சில முறைகளை உபயோகித்து சுதேச ராஜ்யங்களைச் சேர்த்துக் கொண்டார். அயோத்தி நவாப் ஒழுங்காக ஆட்சி செய்யவில்லையென்று அவருக்கு உபகாரச் சம்பளத்தைக் கொடுத்து அந்த ராஜ்யத்தை ஆங்கில ராஜ்யத்தின் ஒரு பகுதியாக்கினார். சில ராஜ்யங்களை அரசுரிமை இழக்கும் கொள்கையை உபயோகித்து தமதாக்கிக்கொண்டார். அதன்படி ஆண் சந்ததியற்ற அரசர்கள், பிள்ளைகளை ஸ்வீகாரம் செய்துகொண்டு அவர்களுக்கு தங்கள் ராஜ்யங்களைக் கொடுக்கக் கூடாது என்று கட்டளையிட்டார். இம் முறையை ஒட்டி 1849 முதல் 1853-க்குள்

ளாக சதாரா, சம்பல்பூர், ஜான்ஸி, நாகபுரி முதலிய ராஜ்யங்கள் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயின. டல்ஹௌஸி இவ்விதம் ராஜ்யத்தைப் பெருக்கியதற்குக் காரணம் சுதேச அரசர்களை விட ஆங்கிலேயர்கள் ஒழுங்காக ஆட்சி செய்ததால் அந்த ராஜ்யங்களை பிரிட்டிஷ் ராஜ்யத்தோடு சேர்த்தால், அங்குள்ள ஜனங்களுக்கு நல்லரசு ஏற்படுமென்றே அவ்விதம் செய்தார்.



டல்ஹௌஸி பிரபு

டல்ஹௌஸி இன்னும் சில நற்காரியங்களைச் செய்து நம் நாட்டை முன்னேற்றமடையும்படி செய்தார். முதன் முதலாக தந்தி,

சீர்திருத்தங்கள்.

இருப்புப்பாதை போடுவித்தது அவர் தான். இவர் காலத்திலேயே பப்ளிக் வொர்க்ஸ் இலாகா ஏற்படுத்தப்பட்டது. தபாலாபீஸ்களும் தபால் தலைகளும் இவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டன. அரசாங்க முறையில் ஒவ்வொரு விஷயத்தையும் மிகவும் கவனித்து நாட்டு ஜனங்களின் முன்னேற்றத்துக்காக டல்ஹௌஸி கஷ்டப்பட்டு உழைத்தார் என்பதில் ஒரு சந்தேகமுமில்லை.

அத்தியாயம் 15

இந்தியாவில் பிரிட்டிஷ் மன்னரின் ஆட்சி

முக்கிய விஷயங்கள் :—சிப்பாய்க் கலகம் - விக்டோரியா ராணியின் அறிக்கை - 1858-ல் இந்திய அரசாங்க சட்டம் - வர்த்தக சங்கத்தின் ஆட்சி முடிவும் பிரிட்டிஷ்மன்னர் ஆட்சியின் தோற்றமும் - பிரிட்டிஷ் ஆட்சியினுல் தேசத்தில் ஏற்பட்ட முன்னேற்றம்.

43. இந்தியாவில் பிரிட்டிஷ் மன்னர் ஆட்சியின் தோற்றம்

1858-ம் வருஷம் நம் நாட்டின் வரலாற்றில் மிகவும் முக்கியமானது. அவ்வருஷத்தில் ஆங்கிலேய அரசாங்கத்தார் நம் நாட்டை கம்பெனியாரின் ஆட்சியிலிருந்து நீக்கி, தாங்களே ஆட்சி செய்யத் தொடங்கினர். அரசுரிமை இழக்கும் கொள்கையின்படி டல்ஹௌஸி பிரபு சில சுதேச ராஜ்யங்களை பிரிட்டிஷ் ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டமையால், சுதேச அரசர்கள் பலர் ஆங்கிலேயர் சுதேச ராஜ்யங்களை அழிக்க முயற்சி செய்துகொண்டிருப்பதாகக் கருதி, தங்களுக்கும் அவ்வித நிலை ஏற்படுமென்று பயந்தனர். நிலவரி தீர்மானம் (ஜமாபந்தி) செய்யும்பொழுது குடியானவர்களுக்குள்ள உரிமைகளை மிகவும் நுட்பமாக ஆராய்ந்து தங்கள் உரிமையை நிரூபிக்க முடியாதவர்களிடமிருந்து நிலங்களைப் பிடுங்கிக் கொண்டனர். ஆதலால் நிலங்களையுடையவர்களுக்கெல்லாம் தாங்களும் நிலங்களை

சிப்பாய் கலகத்துக்குக் காரணங்கள் 1857.

இழக்க நேரிடுமோவென பயம் ஏற்பட்டது. மானிடரை பலி கொடுப்பதை நிறுத்துதல், சககமனம் செய்யக் கூடாது என்று கட்டளையிடுதல், கைம்பெண்கள் மறு முறை கலியாணம் செய்துகொள்ள அனுமதி யளித்தல் முதலிய சமூக சீர்திருத்தங்கள் ஜனங்களுக்கு ஆங்கிலேய ரிடம் வெறுப்பை யுண்டாக்கின. தேசம் இந்த நிலை யிலிருந்தபோது சிப்பாய்களை பசுக்கொழுப்பையும் பன் றிக் கொழுப்பையும் தடவிய தோட்டாக்களை உபயோ கிக்குமாறு அரசாங்கத்தார் கட்டளையிட்டனர். இந்துக் களுக்கு பசு புனிதமான பிராணி; பன்றியை மகம்மதியர் அசுத்தமான பிராணியாகக் கருதி பகைத்தனர். ஆதலால் சிப்பாய்களெல்லோரும் 1857-ல் கலகம் செய்தனர். அப் பொழுது கவர்னர் ஜெனரலாக விருந்தவர் கானிங் பிரபு.

கலகஞ் செய்த சிப்பாய்கள் செய்த குரூர செயல் களை அளவிட்டுச் சொல்லமுடியாது. அவர்கள் முதலில் டில்லியைப் பிடித்துக்கொண்டு முகலாய வம்சத்தைச் சேர்ந்த பஹதூர் ஷாவை சக்ரவர்த்தி என விளம்பரப் படுத்தினர். இதே சமயத்தில் பாஜிராவின் ஸ்வீகார பிள்ளையான நாநாசாகிப் தாம் இழந்த பதவியை அடைய எண்ணி ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளம்பி சில குரூர செயல்களைச் செய்தார். ஜான்ஸி பிரதேசத்து ராணி அர சுரிமை இழக்கும் கொள்கையினால் தனக் கேற்பட்ட அநியாயத்தை நினைத்து ஆங்கிலேயரிடம் சண்டையிட் டாள். கவர்னர் ஜெனரலான கானிங் தன்னுடைய நற்குணத்தினாலும், சீக்கியர்கள் கூர்க்கர்கள் உதவியினா லும், மதராஸ் பம்பாய் மாகாண ஜனங்கள் கிளர்ச்சிசெய் யாததனாலும், ஆங்கிலப் படைத்தலைவர்களின் திறமையினா லும் இக்கலகத்தை ஒரு வருஷத்திற்குள்ளாகவே அடக்கிவிட்டார்.

இந்திய அரசாங்க சட்டம் 1858.

சிப்பாய்களின் கலகம் ஏற்பட்டதனால், கிடைத்த ராஜ்யத்தை ஆட்சி செய்வதற்கு வர்த்தக சங்கத்தாருக்கு திறமை இல்லையென்று எண்ணி, அதைத் தாங்களே ஆட்சி செய்வது நலமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நினைத்தனர். ஆதலால் 1858-வது வருஷத்தில் இந்திய அரசாங்க சட்டத்தை பிறப்பித்து இந்திய ராஜ்யத்தின் ஆட்சியை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தாமே ஏற்றுக்கொண்டனர். அதோடு ஆங்கில கிழிந்தியா வர்த்தக சங்கத்தின் ஆட்சி முடிவடைந்தது. இந்தியா தேசத்தின ஆட்சியை மேல் பார்வை யிடுவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியா காரியதரிசி என்னும் அதிகாரியை நியமித்தனர். அவர் இங்கிலாந்தின் அரசாங்க நிர்வாக சபையின் அங்கத்தினர். அவருக்கு ஆலோசனை சொல்வதற்கு பதினைந்து அங்கத்தினர்கள் கொண்ட இந்தியா சபை என்ற ஒரு சபையும் ஏற்பாடு செய்யப்பட்டது. சுதேச அரசர்களை மேல் விசாரணை செய்வதற்காக கவர்னர் ஜெனரலுக்கு ராஜப்பிரதிநிதி என்னும் பட்டத்தை அளித்தனர். விக்டோரியா ராணியார் 1858-ம் வருஷத்தில் இந்தியா சக்ரவர்த்தினி என்று பிரகடனம் செய்யப்பட்டது.

ராணியின் அறிக்கை 1858

ஆட்சி செய்யும் அதிகாரிகளில் மாறுதல் ஏற்பட்டது மாத்திரமன்றி ஆட்சிமுறையும் ஜனங்கள் நன்மையையே நாடியிருக்குமென்று 1858-ல் விக்டோரியா ராணியார் ஓர் அறிக்கை வெளியிட்டனர். அவ்வறிக்கையில் தமக்கு ராஜ்யத்தை பெருக்கவேண்டுமென்ற எண்ணம் இல்லையென்றும், சுதேச அரசர்களின் அதிகாரத்தையும் உரிமைகளையும் கௌரவிப்போமென்

றும், நாட்டில் ஜாதிமத வித்தியாசங்களைப் பாராட்டாமல் தகுதியான எல்லாரும் உத்தியோகங்களுக்கு நியமிக்கப் படுவார்களென்றும், மத விஷயத்தில் தாம் தலையிட்டுக் கொள்வதில்லை எனவும், ஜனங்களின் முன்னேற்றமே தம் முக்கிய கோரிக்கை யென்றும் வெளியிட்டார்.

இவ்வறிக்கையில் சொல்லிய விஷயங்களால் சுதேச மன்னர்கள் திருப்தியடைய மாட்டார்களென்று எண்ணி, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அரசுரிமை இழக்கும் கொள்கையை இனி அமுலுக்குக் கொண்டுவருவதில்லை என்று பிரசுரம் செய்தனர். பிள்ளைகளில்லாத மன்னர்கள் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமென்று ஒவ்வொரு மன்னருக்கும் உரிமைப் பத்திரம் அளிக்கப்பட்டது. ராணியார் சுதேச ராஜ்யங்களை விரோதிகளிடமிருந்து காப்பாற்றுவதாகவும் வாக்களித்தார். ஆனால் சுதேச மன்னர்கள் பிரிட்டிஷ்காரரின் மூலமாகத் தவிர அயல் தேசத்தாரோடு எவ்வித சம்பந்தமும் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்று கண்டிப்பாய் திட்டம் செய்யப்பட்டது. இவ்வித அறிக்கையை வெளியிட்டதனால் சுதேச அரசர்களும் ஜனங்களும் ஒருவாறு தேறுதலடைந்தனர்.

44. பிரிட்டிஷ் ஆட்சியினால் தேச முன்னேற்றம்

பிரிட்டிஷ் மன்னரின் ஆட்சியினால் இந்தியா பல விதத்திலும் முன்னேற்றமடைந்துள்ளது. மதம், சமூகம், பொருளாதாரநிலை, அரசாங்க முறை முதலியவற்றில் பல புதிய அறிவுகள் ஏற்பட்டன. ஆங்கிலேயரின் ஆட்சியினால் முதலில் நம் நாட்டில் அமைதி ஏற்பட்டது. வெகு காலமாக நம் நாடு செழிமைவாய்ந்து செல்வம் நிறைந்ததால் அந்நிய நாட்டினர் பலமுறை வடமேற்கு கணவாய்களின் வழியாக படை எடுத்து வந்து ஜனங்களைத் துன்புறுத்திப்

பட்டணங்களைக் கொள்ளையடித்து அளவற்ற பொருளைக் கொண்டு போனார்களென்று தெரிந்து கொண்டோம். நாதிர் ஷா, ஆமத்ஷா அப்தலி என்னும் ஆமத்ஷா துரானி முதலியோர் செய்கைகளை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பாபர், அக்பர், ஜஹாங்கீர் முதலிய சக்ரவர்த்திகள் ஆட்சிசெய்த காலத்தில்கூட, நாட்டின் எல்லா பாகங்களிலும் நிலையாக அமைதி பரவி இருக்கவில்லை. ஔரங்கசீப் காலத்தில் மத வைராக்கியத்தினால் நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டு முகலாய ராஜ்யம் சிதைவுற்றதை நாம் கவனித்தோம். முகலாயர்களும் மஹாராஷ்டிரர்களும் பெருத்த ராஜ்யம் ஒன்றை ஏற்படுத்த முயற்சி செய்ததும் அது முடியாமல் போனதும் நமக்குத் தெரியும். பிறகு நாடெங்கும் சிறு ராஜ்யங்கள் ஏற்பட்டன. அவைகள் ஒன்றுக்கொன்று பகைமை பாராட்டி வந்தன. அச் சண்டைகளால் நாட்டில் ஜனங்கள் பட்ட கஷ்டங்களுக்கு அளவில்லை. இக்கஷ்டங்களிலிருந்து ஆங்கிலேயர் தேச ஜனங்களை போலீசாரின் உதவியினாலும் படைகளின் உதவியினாலும் காப்பாற்றி நிலையான அமைதியை உண்டாக்கியிருக்கின்றனர்.

அமைதி பரவுதல்.

மகம்மதியர்களோடு கலந்ததனால் ஹிந்து மதத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டதுபோல், கிறிஸ்தவர்களின் சேர்க்கையினால் ஹிந்துக்களின் பழக்கவழக்கங்களில் பல மாறுதல்கள் உண்டாயின. ஒவ்வொருவிஷயத்தையும் உண்மையென்று நம்புவதற்கு முன் காரணங்களைக் கேட்டு பரிசோதனை செய்ய ஆரம்பித்தனர். பலரும் தொழும் கடவுள் பல பெயர்களிட்டு அழைக்கப் பட்டபோதிலும், உண்மையில் கடவுள் ஒருவரே என்னும் எண்ணம் நிலையாக ஜனங்களின் மனதில் பதிந்தது. பூஜை முதலியன செய்து கடவு

ளைத் தொழுதலைவிட நல்ல நடத்தை, நல்ல எண்ணம் முத லியனவே முக்கியமென்று எல்லாரும் நினைக்கலாயினர்.

மதவிஷய மாறுபாடுகள். இவ்வெண்ணங்களின் படி ராஜா ராம் மோஹன்ராய் பிரம்ம சமாஜத்தை யும், ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி ஆர்ய சமாஜத்தையும் ஏற்படுத்தினர்கள். மஹாத்மா காந்தி உபதேசம் செய்யும் ஜீவ வதை விலக்கு முறையும், சத்யாக்ரஹ கொள்கையும் மேற் கூறிய எண்ணங்களின் பயனென்றே சொல்லலாம்.

வெகு காலமாக நமது நாட்டின் ஐக்கியத்திற்கு இடையூறாக விருந்த ஜாதி வித்தியாசங்கள் நாளடைவில் குறை வடைந்தன. ஜனங்களுக்குள் தேசீய உணர்ச்சி உதிக்கின்றது. சமூக வாழ்க்கையிலுள்ள சில கெட்ட

சமூக வாழ்க்கை. வழக்கங்கள் நீக்கப்பட்டன. சக கம னம், நரபலி, பால்ய விவாகம் முதலி யவைகளை அரசாங்கத்தார் சட்டங்கள் மூலமாக நீக்கி யுள்ளனர். கைம்பெண் விவாகம், அயல் ஜாதியினரோடு கல்யாண சம்பந்தம் முதலியன ஆதரிக்கப்படுகின்றன. ஹிந்துக்களில் தாழ்ந்த வகுப்பினரான ஹரி ஜனங்களின் முன்னேற்றத் திற்காக பலர் உழைத்து வருகின்றனர்.

இக்காலத்தில் உபயோகிக்கும் கல்வி முறையில் சில குறைகள் உள்ளன. ஆயினும் இக்கல்வியினால் தேசத் துக்கு பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. சுமார் நூறு

கல்வி வளர்ச்சி. வருஷங்களுக்கு முன்புதான் இந்தியர் களுக்கு ஆங்கில பாஷையை கற்பிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 1857-ல் கல்கத்தா, மதராஸ், பம்பாய் நகரங்களில் பல் கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. மேல் நாட்டுக்

கல்வி முறைகளை யொட்டிதான் கல்வி போதிக்கப்படு கிறது. இப்பொழுது நம் நாட்டில் சுமார் இருபது பல்கலைக் கழகங்களும், 3000-க்கு மேல் நடுத்தர கல்விச் சாலைகளும், இரண்டு லக்ஷத்துக்கு மேல் ஆரம்ப கல்விச் சாலைகளும் உள்ளன. இவைகளி லெல்லாமுள்ள மாணவ மாணவிகளின் எண்ணிக்கை இருபத்து ஐந்து லக்ஷத்துக் கும் மேல்படுகிறது. ஒவ்வொரு வருஷமும் கல்வி பரவு வதற்காக அரசாங்கத்தார் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவு செய்கின்றனர். இக்காலத்தில் நாட்டிலுள்ள சிறுவர் சிறுமிகளுக்கெல்லாம் கட்டாயக் கல்வி ஏற்பாடு செய்ய முயற்சிகள் நடந்து வருகின்றன.

நம் நாட்டிலுள்ளோரில் நூற்றுக்கு 75க்கு மேல் விவ சாயமே ஜீவனுதாரம். விவசாயம் சரிவர நடத்துவதற்கு சரியான பருவத்தில் மழை வேண்டும். மழை குறைந் தாலும், இல்லாமல் போனாலும் நாட்டில் பஞ்சம் ஏற் படும். ஆங்கிலேயர் வருவதற்குமுன்பு ஜனங்கள் பஞ் சத்தினால் மிகவும் வருந்தி வந்தனர். பிறகும் கூட 1865-67-ல் ஒரிஸ்ஸாவிலும் 1873-ல் பீஹாரிலும் 1876-ல் தக்காணத்திலும் கொடிய பஞ்சங்கள் ஏற்பட்டன. இவை களைக் கண்டு அரசாங்கத்தார் வருஷம் ஒன்றுக்கு ஒன்றரைகோடி ரூபாய் பஞ்சத்தடை செய்வ தற்கு தனியாக வைத்திருக்கின்றனர். அது மாத்திரமல் லாமல் பஞ்சத்தைத் தடுக்கும் வழிகளை கவனிக்க கமிட்டி களை ஏற்படுத்தி நன்றாக விளைந்த பிரதேசங்களிலிருந்து பஞ்சம் உண்டான பிரதேசங்களுக்கு அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர்.

பஞ்சத்தடை ஏற்பாடுகள்.

பஞ்சத்தினால் கஷ்டப்படாமல், ஜனங்கள் சௌக்கிய மாக இருக்க வேண்டுமென்றால் விவசாயம் விருத்தி

யடைய வேண்டும். 1868-லும் 1880-லும் ஏற்படுத்தப் பட்ட பஞ்சத்தடை கமிட்டியார் எழுதியபடி எல்லா மாகாணங்களிலும் அரசாங்கத்தார் விவசாய இலாகா ஸ்தாபித்தனர். விவசாய விஷயமாய் பரிசோதனைகளை செய்வதற்கு நம் மாகாணத்தில் கோயமுத்தூரிலும், இந்தியா முழுவதற்கும் டில்லியினருகிலும் பெரிய பண்ணைகளை ஏற்படுத்தியுள்ளனர். கால் நடைகளின் சௌக்கியத்தைப் பற்றியும் இவ்விடங்களில் பரிசோதனைகள் செய்து வருகின்றனர். இவ்விடங்களில் விவசாய விஷயமான பரிசோதனைகளைச் செய்து அவைகளை ஜனங்களுக்குத்தெரியும்படியாக சொல்லியும், கலாசாலைகளை ஏற்படுத்தியும், பல கிராமங்களில் மாதிரி பண்ணைகளை ஏற்படுத்தியும் விவசாய வளர்ச்சிக்கு உதவி செய்கின்றனர். புதிய விவசாய முறைகளின்படி 130 லக்ஷம் ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. சமீபத்தில் இந்தியா கவர்மெண்டார் விவசாய விஷயமாக இம்பீரியல் கௌன்ஸில் ஒன்று ஸ்தாபித்துள்ளனர். இதன்மூலம் விவசாயத்துக்கு உதவிபுரிகின்றனர்.

விவசாய வளர்ச்சி

இரண்டு இடங்களுக்கிடையில் எவ்வளவு தூரமிருந்தபோதிலும் சீக்கிரமாகவும் அதிக செலவில்லாமலும் கடிதம், பணம், புஸ்தகம், வர்த்தமான பத்திரிகை முதலியன அனுப்ப தகுதியான வசதிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் செய்துள்ளனர். இக்காலத்தில் சுமார் 24,000-க்கு மேல் தபாலாபீஸ்கள் இருக்கின்றன. தபாலாபீஸ்களோடுகூட தந்தி இலாகாவும் ஏற்பட்டிருக்கிறது. அவைகள் வழியாக வர்த்தமானங்களை அதிக

தபால் தந்தி இலாகா.

சீக்கிரமாக அனுப்பலாம். இவைகள் மாத்திரமன்றி டெலிபோன் ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

தேசீய உணர்ச்சியை வளர்ப்பதற்கும், போக்கு வரவுக்கும், வர்த்தக விருத்திக்கும், பஞ்சத்தைத் தடுப்பதற்கும், தகுதியான ரஸ்தாக்கள் நம் நாட்டில் போடப்பட்டுள்ளன. ரயில், கால்வாய், முக்கிய ரஸ்தாக்கள் நம் நாட்டின் பல பாகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கால்வாய்களால் நாடெங்கும் விவசாயம் அபிவிருத்தியடைகிறது. இவ்வசதிகளை கவனிப்பதற்கு அரசாங்கத்தார் பப்ளிக் வொர்க்ஸ் இலாகா ஏற்படுத்தியுள்ளார். மழை அதிகமாக உள்ள இடங்களில் வெள்ளம் வீணுகாமல் பெரிய ஏரிகளாக செய்யப்படுகிறது. அரசாங்கத்தார் இதுவரையிலும் பல கோடி ரூபாய் செலவு செய்து மேட்டூர், சக்கர் முதலிய விடங்களில் பெரிய அணைகளைக் கட்டி வயல்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தியுள்ளனர். இவ்வேற்பாடுகளால் முப்பது கோடி ஏக்கர் நிலத்துக்கு மேல் பயிரிடப்படுகிறது. நமது நாட்டில் 43,000 மைலுக்குமேல் இருப்புப்பாதை யுள்ளது. முக்கிய ரஸ்தாக்கள் ஆயிரக் கணக்கான மைல்கள் உள்ளன.

பப்ளிக் வொர்க்ஸ் இலாகா.

45. தேச முன்னேற்றம் (தொடர்ச்சி)

ஆங்கிலேயர் ஆட்சி செய்ததின் பயனுக தேசத்தை ஆளும் முறையில், பல மாறுதல்கள் ஏற்பட்டன. பண்டைக் காலத்தில் வல்லரசு நடந்து வந்தது. இக் காலத்தில் ஜனநாயக முறைதான் சரியென்று கருதப்படுவதால் கொஞ்சம் கொஞ்சமாக நமக்கு அம்முறைப்படி ஆங்கிலேயர் அதிகாரத்தைக் கொடுக்கின்றனர். ஸ்தல

சுயஆட்சி நடத்துவதால் நமக்கு ராஜ்யத்தை ஆள அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அதனால், அரசாங்கத்தார் சட்டங்கள் ஏற்படுத்தி கொஞ்சம் கொஞ்சமாக ஜனநாயக முறையை விருத்தி செய்யவேண்டிய ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். இதற்கு உதாரணமாக ஒவ்வொரு மாகாணத்திலும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களே அமைச்சர்களாக இருந்து வருகின்றனர். 1858-ம் வருஷத்திய இந்திய அரசாங்க சட்டத்தின்படி கவர்னர் ஜெனரலும் அவர் நிர்வாக சபை அங்கத்தினர்களும் பிரிட்டிஷ் அரசரால் நியமிக்கப்பட்டனர். 1861-ல் நிர்வாக சபைக்கு சட்டங்கள் நிர்மாணிப்பதில் புத்திமதி கூறுவதற்காக சில அங்கத்தினர்கள் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டனர். ஒவ்வொரு மாகாணத்திலும் சட்ட நிர்மாண சபை ஏற்படுத்தப்பட்டது. அதன் அங்கத்தினர்களை மாகாண கவர்னரே நியமித்து வந்தார். பிறகு 1892-ம் வருஷத்தில் சில அங்கத்தினர்கள் முனிஸிபாலிடிகளாலும், ஜில்லா போர்டுகளாலும், பல்கலைக்கழகங்களாலும் தேர்ந்தெடுத்து சட்ட சபைக்கு அனுப்பப்பட்டனர். 1909-ம் வருஷத்தில் மிண்டோ மார்லி சீர்திருத்தத்தை யொட்டி சட்ட நிர்மாண சபைக்கு சில அங்கத்தினர்கள் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சட்ட நிர்மாண சபை வளர்ச்சி.

1914-18-ல் நடந்த ஐரோப்பிய யுத்தத்தில் இந்தியர் அதிகமாக பிரிட்டிஷ் ஜனங்களுக்கு ஒத்தாசை செய்தனர். ஆதலால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நமது நாட்டுக்கு ஜ ன ந ா ய க முறை அளிப்பதாக வாக்களித்து 1919-ல் மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்

தங்களை ஏற்படுத்தி அரசாட்சி முறையில் சில மாறு பாடுகளைச் செய்தனர். அதையொட்டி டில்லியில் கௌன் சில் ஆவ் ஸ்டேட் என்றும் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் அஸெம்பிளி என்றும் இந்தியா சட்ட நிர்மாண சபைகளை ஏற்படுத்தினுர்கள். அவைகளில் முன் சொன்னதைவிட இரண்டாவது சொன்னதில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அங்கத்தினர்கள் அதிகம். மாகாணங்களில்கூட மாகாண சட்ட நிர்மாண சபைகள் அதிக அங்கத்தினர் கள் கொண்டதாயின. அவர்களுள் பெரும்பான்மை யோர் ஜனங்களாலேயே தேர்த்தெடுக்கப்பட்டனர். ஜனங் களினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களிலிருந்து சில மந்திரிகளை ஏற்படுத்தி அவர்களை ஸ்தல சுய ஆட்சி, கல்வி, ஜன ஆரோக்யம், கைத்தொழில் முதலிய இலாகாக் களை மேல் விசாரணை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. 1919-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் செய்த இந்திய அரசாங்க சட்டம் எவ்வாறு அமுலில் நடத்தப் பட்டு வருகிறது என்றும், இன்னும் இந்தியருக்கு எவ்வ ளவு அதிக உரிமைகளைக் கொடுக்கலாமென்றும் விசாரணை செய்வதற்கு ஸைமன் என்பவர் தலைமையின்கீழ் ஒரு கமிஷன் அனுப்பப்பட்டது. அக்கமிஷனில் இந்தியரெவ ரையும் அங்கத்தினராக நியமிக்காததனுல் இந்திய காங் கிரஸ் சபையைச்சேர்ந்தவர்கள் அதை பஹிஷ்காரம் செய் தனர். 1929-ம் வருஷம் அக்டோபர் மாதம் அப்போது ராஜப்பிரதிநிதியாகவிருந்த இர்வின்பிரபு இந்தியர்களுக்கு சுய ஆட்சி கொடுப்பதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் நோக்கமென்று வெளியிட்டு, இந்தியாவுக்கு எவ்வித ஆட்சி முறை தகுதியானது என்பதை தீர்மானிப்பதற்கு வட்ட மேஜை மகாநாடு இங்கிலாந்தில் நடக்குமென்று வெளி யிட்டார். அச் சபைக்கு நம் நாட்டிலிருந்து சிலர் பிரதி

நிதிகளாகச் சென்றனர். மஹாத்மா காந்தி, மோதிலால் நேரு முதலிய காங்கிரஸ் தலைவர்கள் இந்தியாவுக்கு பூர்ண ஸ்வராஜ்யம் கொடுப்பதைப்பற்றிதான் அங்கு விசாரணை செய்யப் போகிறார்களா என்று ராஜப்பிரதிநிதியைக் கேட்டனர். அவர் தகுதியான பதில் சொல்லாமையால் 1929-ம் வருஷம் டிசம்பர் 31-ம் தேதியில் காந்தியின் தலைமையின் கீழ் அரசாங்கத்தாரோடு ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதனால் காங்கிரஸ் தலைவர்கள் பலர் சிறையிலடைக்கப்பட்டனர். ஸைமன் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்ட பிறகு வட்டமேஜை மகாநாடொன்று நடந்தது. தேசத்திலுள்ள ஜனங்களை திருப்தி செய்வதற்காக இர்வின் பிரபுவும் பிரிட்டிஷ் மந்திரிமார்களும் பிரயத்தனங்கள் செய்தனர். அவ்விதம் செய்த முயற்சியினால் காந்தி இர்வின் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதற்குபின் நடந்த இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்கு காங்கிரஸ் முக்கிய தலைவராகிய காந்தியும் இன்னும் பல தலைவர்களும் சென்றனர். ஆனால், அதன் பயனாக ஒன்றும் நடக்கவில்லை. அரசாங்கத்தார் மூன்றாவது வட்டமேஜை மகாநாட்டைக் கூட்டிய போதிலும், அதில் காங்கிரஸ் தலைவர்கள் ஒருவரும் சேரவில்லை.

ஸைமன் விசாரணை: வட்டமேஜை மகாநாடு.



மஹாத்மா காந்தி

மூன்று வட்டமேஜை மகாநாடுகளின் பயனாக புதிய அரசாங்க அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. இவ்

வறிக்கையை பார்லிமெண்ட் கூட்டுக் கமிட்டியார் விசாரணை செய்து இந்திய அரசாங்க மசோதா என்று பார்லிமெண்டில் பிரேரேபித்தனர். அதையொட்டி பார்லிமெண்டு சில மாறுதல்களும் திருத்தங்களும் செய்து 1935-வது வருஷத்திய இந்திய அரசாங்கச் சட்டத்தை நிர்மாணித்தனர். அதன்படி மாகாண ஆட்சியில் இந்தியர்களுக்கு முழுப் பொறுப்பு அளிக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தில் (Central government) மாத்திரம் சமஷ்டி (federation) என்னும் பெயருடன் சுதேச சமஸ்தானங்கள், மாகாண சட்டசபை அங்கத்தினர்கள்- இவர்களின் பிரதிநிதிகள் கொண்ட சட்ட நிர்மாண சபையொன்று ஏற்பாடு செய்யப்படும். இதுவரையிலுள்ள மாகாணங்களோடு புதிதாக ஸிந்து, ஒரிஸ்ஸா தனிப்பட்ட மாகாணங்களாக செய்யப்பட்டுள்ளன. அன்றியும் மாகாணங்களிலுள்ள எல்லா விஷயங்களும் ஜனங்களின் பிரதிநிதிகளான அமைச்சர்களாலேயே மேல்பார்வை யிடப்பட்டு வருகின்றன. அமைதியை நிலைநாட்டுவதற்கும், குறைவுபட்ட ஜனத் தொகுதிகளின் (minorities) உரிமைகளை காப்பாற்றுவதற்கும், மாகாண கவர்னர்களுக்கு தனிப்பட்ட அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விந்தியா சட்டத்தை யொட்டியே இப்பொழுது (1939) மாகாணங்களில் அரசாங்கம் நடந்துவருகிறது. விஸ்தீர்ணம் மிக்க மாகாணங்களில் கௌன்ஸில் என்றும் அஸெம்பிளி என்றும் இரண்டு சட்ட நிர்மாண சபைகள் ஏற்பட்டுள்ளன. மதராஸ் மாகாணத்தில் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலில் 56 அங்கத்தினர்களும் அஸெம்பிளியில் 215 அங்கத்தினர்களும் உண்டு. வாக்காளர்களின்

இந்திய அரசாங்க சட்டம் 1935.



11 பெரிய மாகாணங்களும் 5 சிறிய மாகாணங்களும் பிரிட்டிஷ் ஆட்சியிலுள்ளன. சுதேச சமஸ்தானங்களின் பெயர்களைத் தெரிந்துகொள்ளவும்.

எண்ணிக்கை மூன்று சத விகிதத்திலிருந்து பதினன்கு சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது (1939) ராஜப் பிரதிநிதியாக வுள்ள லின்லித்கோ பிரபு சுதேச அரசர்களேயும் மாகாண அரசாங்கத்தின் பிரதிநிதிகளேயும் ஒன்று சேர்த்து சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்படுத்த முயற்சி செய்து வருவதால், சீக்கிரத்திலேயே அவ்வித ஆட்சிமுறை அமுலுக்கு வரலாம். ஸமஷ்டி சட்ட நிர்மாண சபைகள் இரண்டு உண்டு. கௌன்ஸில் ஆப் ஸ்டேட்டில் 260 அங்கத்தினர்கள் உண்டு. அதில் 104-பேர்கள் சுதேச சமஸ்தானங்களின்பிரதிநிதிகள்; மிகுதியே பிரிட்டிஷ் மாகாணங்களின் பிரதிநிதிகள். அஸெம்பிளியில் 375 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்களுள் 125 பேர் சுதேச சமஸ்தானங்களிலிருந்து வருவார்கள்.

மேற்கூறிய விதமான அரசாங்க முறை சட்டத்தை (உண்மையில் தேசத்துக்கு இவ்வித ஆட்சிமுறை நல்லதல்லவென்று) சிலர் வேண்டாமென்று தடை செய்கின்றனர். ஆனல் அவர்கள் கனடா, ஆஸ்திரேலியா, ஐக்கியப்பட்ட தென் ஆப்ரிக்கா முதலிய நாடுகளின் அரசாங்கத்தைப்போல் ஜனநாயகம் ஏற்படுவதற்கு வாக்குறுதி கொடுக்க வேண்டுமென்று சொல்கின்றனர். இவ்விதம் ஏற்பட கவர்னர்களின் விசேஷ அதிகாரத்தை நீக்கி, சமஸ்தானங்களில் உள்ள ஜனங்களுக்கு அங்கத்தினர்களே தேர்ந்தெடுக்கும் உரிமையளிக்க வேண்டுமென்றும், படை விஷயத்திலும், அயல் நாட்டு சம்பந்த விஷயத்திலும் இந்தியர்களுக்கு முழு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்கின்றனர்.

கேள்விகள்

அத்தியாயம் 1. சரித்திரத் தோடக்கம்

1. நம் நாட்டில் வசித்த பழங் குடிகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? ஒவ்வொரு வகையினரைப்பற்றியும் நமக்கு என்ன விஷயங்கள் தெரிந்துள்ளன?

2. திராவிடர்களின் நாகரிகத்தைப்பற்றி வர்ணித்து எழுதுக.

3. சிந்துநதி பிரதேசத்தில் பண்டைக் காலத்தில் வசித்தவர்களின் நாகரிகத்தைப்பற்றி சுருக்கமாக எழுதுக. இந்த நாகரிகத்தைப்பற்றி தெரிந்துகொள்ள ஆதாரம் என்ன?

4. ஆரியர்கள் எங்கிருந்து நமது நாட்டிற்கு வந்தார்கள்? எந்த புஸ்தகங்களிலிருந்து அவர்களின் வாழ்க்கையைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளலாம்? ஆரியர்களின் ஆட்சி முறையைப்பற்றியும் சமூக வாழ்க்கையைப்பற்றியும் குறிப்புகள் எழுதுக.

அத்தியாயம் 2. பண்டைக் கால ராஜ்யங்கள்

1. பண்டைக் காலத்தில் கங்காநதி சமவெளியில் ஏற்பட்ட ஆரியர் ராஜ்யங்கள் எவை? கைப்படம் வரைந்து விளக்குக.

2. மௌரியர்களுக்கு முன்பு மகத ராஜ்யத்தை எந்தெந்த ராஜ வம்சத்தினர் ஆண்டு வந்தனர்?

3. பிம்பிசாரர், அஜாதசத்ரு, மஹா பத்மநந்தர், அலெக்ஸாண்டர்—இவர்களைப்பற்றி குறிப்புகள் எழுதுக.

4. ஜைன, பௌத்த மதங்கள் ஏற்படுவதற்கு காரணங்கள் என்ன? மஹா வீரரும் புத்தரும் போதித்த முக்கியமான கொள்கைகள் எவை?

அத்தியாயம் 3. மௌரிய சாம்ராஜ்யம்

1. மௌரிய சந்திரகுப்தர் எவருடைய உதவியினால் ராஜ்யத்தை ஸ்தாபித்தார்? அவர் எந்தெந்த பிரதேசங்களை ஜயித்தார்?

2. மகாஸ்தனிஸ் என்பவர் யார்? எக்காரணத்தினால் அவர் பாடலிபுத்திரத்தில் வசித்துவந்தார்? அக்கால மகத ராஜ்ய மக்களைப்பற்றி அவர் எழுதியதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது?

3. கலிங்க தேசத்துடன் போர் புரிந்ததால் அசோகர் எண்ணத்தில் ஏற்பட்ட மாறுதல் என்ன? அவர் பௌத்த மதத்தைப் பரவச்செய்வதற்கு செய்த ஏற்பாடுகள் எவை?

4. இந்தியா படமொன்றில் அசோகர் ராஜ்யத்தின் எல்லைகளையும் ஆட்சி சம்பந்தமான முக்கிய விடங்களையும் குறிப்பிடுக.

5. மௌரிய வம்சம் பலங்குன்றுவதற்கு காரணங்கள் எவை? அவ்வம்சத்துக்குப் பிறகு மகத தேசத்தை ஆண்ட வம்சங்களெவை?

6. மௌரியர்கள் காலத்தில் நகர பரிபாலனத்தைப்பற்றியும், மாகாண ஆட்சியைப்பற்றியும் சுருக்கமாக எழுதுக.

அத்தியாயம் 4 மௌரிய சாம்ராஜ்யத்தின் சிதைவு

1. புஷ்யமித்திரர், மினண்டர்—இவர்களைப்பற்றி எந்த சம்பந்தமாக இந்திய சரித்திரத்தில் படிக்கிறோம்?

2. ஆந்திரர்கள் எந்த நூற்றாண்டில் எவ்விடத்தில் ஆட்சி செய்து வந்தனர்? அவர்கள் எந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள்? அவர்களுக்குத் தலைநகரங்கள் எவை?

3. குஷானர்கள் எந்த ஜனக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்? எக்காரணத்தால் அவர்கள் நம் நாட்டிற்குள் வந்தனர்? கனிஷ்கர் எப்போது எவ்வெவ்விடங்களை ஆட்சி செய்தார்? எக்காரணத்தினால் அவர் ஆட்சி முக்கியமானது?

4. அந்நிய நாட்டார் நம் தேசத்தில் குடியேறியதால் ஆரிய மதத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் யாவை?

அத்தியாயம் 5 குப்த ராஜ்யம்

1. குப்த ராஜ்யத்தை ஏற்படுத்தியவர் யார்? சமுத்திரகுப்தர் எவ்வாறு அந்த ராஜ்யத்தைப் பெருக்கினார்? அவர் ஜயித்த முக்கியமான பிரதேசங்களைக் குறிப்பிடுக.

2. இரண்டாவது சந்திரகுப்தர் என்ன பட்டப்பெயரை ஏற்றுக்கொண்டார்? ஏன்?

3. குப்த ராஜ்யத்தில் சில்ப கலை, கல்வி, வாணிபம்—இவை எவ்விதம் முன்னேற்றமடைந்தன ?

4. பாஹியான் என்பவர் யார்? எக்காரணத்தால் நம் தேசத்துக்கு வந்தார் ? அவர் நம் தேசத்தைப்பற்றிக் கூறியுள்ள விஷயங்கள் என்ன ?

5. குப்த ராஜ்யம் சிதைவடைய முக்கியமான காரணங்கள் என்ன ? ஹூணர்களை எதிர்த்த வட இந்திய அரச வம்சத்தினர் யார் ?

6. ஹர்ஷவர்த்தனர் எக்காரணத்தினால் பட்டத்தை அடைந்தார்? முதலில் அவர் தலைநகரம் எது ? பிறகு எப்பட்டணத்தை தலைநகரமாக்கிக்கொண்டார் ? ஏன் ?

7. ஹர்ஷர் ஆட்சி முறையைப்பற்றி யார் எழுதியிருக்கிறார் ? அவர் குறித்திருக்கும் விஷயங்கள் என்ன ?

8. ஹர்ஷர் பௌத்த மதத்தை எவ்விதம் போற்றி வந்தார் ?

அத்தியாயம் 6. ஹர்ஷர் காலத்துக்குப் பின் இந்தியாவின் நிலை

1. ராஜ புத்திரர்களின் முன்னோர்கள் யார் என்று கருதப்படுகிறது ? அவர்கள் ஹிந்து மதத்தை எவ்விதம் விருத்தி செய்தனர் ?

2. முக்கியமான ராஜபுத்திர வம்சங்களின் பெயரைச் சொல்லி அவர்கள் எவ்விடத்தில் ஆட்சி செய்தனரென்பதைக் குறிப்பிடுக. கைப்படம் வரைக.

3. முகம்மது நபி சரித்திரத்தையும் அவர் ஏற்படுத்திய மதத்தின் கொள்கைகளையும் பற்றி சுருக்கமாக எழுதுக.

4. எட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தேபால் பட்டணத்தை ஆட்சி செய்தவர் யார் ? எக்காரணத்தினால் அரபியர் நம் நாட்டின்மேல் படை எடுத்தனர் ? ஏன் இந்தியாவில் அரபியர் ஆட்சி நிலையாகவில்லை ?

5. முதலில் பல்லவர்கள் எப்பட்டணத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர் ? பிறகு எக்காரணத்தால் எவ்விடத்துக்கு தலைநகரை மாற்றினார்கள் ? சிம்ம விஷ்ணு, நரசிம்ம வர்மன்—இவர்களைப்பற்றி குறிப்புகள் எழுதுக.

6. சளுக்கிய அரசர்களுள் முக்கியமானவர் யார்? அவர் எந்த வட இந்திய அரசரை தோற்கடித்தார்? யுவான்ச்சாங் அவர் ராஜ்யத்தைப் பற்றி என்ன எழுதியிருக்கிறார்? இவருக்கு தூதுவர் அனுப்பிய அயல் நாட்டு மன்னர் யார்? எவ்விதமாக இரண்டாவது புலிகேசன் மரணமடைந்தார்?

7. ராஷ்ட்ரகூட அரச வம்சம் எப்போது ஸ்தாபிக்கப்பட்டது? அவர்கள் காலத்தில் சில்ப கலை அபிவிருத்தியை எதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்?

8. பூர்வீக சோழராஜாக்களுள் முக்கியமானவர் யார்? அவர் ஆண்ட காலம் எது? அவர் செய்த முக்கிய விஷயமென்ன?

9. ராஜ ராஜர், ராஜேந்திரன்—இவர்களைப்பற்றி குறிப்புகள் எழுதுக. சோழராஜ்யம் பிரபலமாக இருந்த காலத்தில் வசித்த வைஷ்ணவ மத ஆசாரியர் யார்?

10. சோழராஜாக்கள் ராஜ்யத்தை ஆட்சிசெய்வதற்கு கையாண்ட முறைகளை வர்ணித்து எழுதுக.

அத்தியாயம் 7. மகம்மதிய ஆட்சியின் ஆரம்பம்

1. கஜினி மாமூதின் படை எழுச்சிகளுக்குக் காரணங்கள் யாவை? அவர் குண விசேஷத்தைப்பற்றியும், அவர் கல்வி விருத்திக்காக செய்த ஏற்பாடுகளையும் எழுதுக.

2. கோரி முகம்மது நம் நாட்டின்மேல் படை எடுத்து வந்தபோது வட இந்தியாவின் நிலை எவ்வாறு இருந்தது? அவரை எதிர்த்தவர் யார்? கோரி முகம்மது ஜயித்த ராஜ்யங்கள் எவை? ஹிந்து அரசர்கள் தோல்வி யடைந்ததற்கு காரணங்கள் என்ன?

3. டில்லி சுல்தானாக ஆண்ட முதல் மகம்மதியர் யார்? அடிமை வம்சத்தார் என்னும் பெயர் எக்காரணத்தால் ஏற்பட்டது? பால்பன் ஆட்சியைப்பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

4. அலாவுதீன் கில்ஜி படை எழுச்சிகளைப்பற்றியும் அவர் ஜயித்த ராஜ்யங்களைப்பற்றியும் சுருக்கமாக எழுதுக. அவர் எவ்விதம் மக்களை அடக்கி நடத்தினார்?

5. மகம்மதுபின் துக்ளக்கின் முக்கிய முற்போக்கான எண்ணங்கள் எவை? அவரை பயித்தியக்காரர் என்று சொல்வது நியாயமா?

6. பிரோஸ் ஷா துக்ளக் ஜனங்களுக்குச் செய்த நன்மைகள் யாவை? அவர் ஹிந்துக்களுக்கு என்ன விரோதம் செய்தார்?

7. தைமூர் எந்த வருஷத்தில் நம் நாட்டின்மேல் படை எடுத்து வந்தார்? ஏன்? அதனால் நாட்டுக்கு ஏற்பட்ட தீமைகள் யாவை?

8. லோடி வம்ச முக்கிய அரசர்கள் யார்? அவர்களுள் கடைசி அரசர் காலத்தில் நடந்த முக்கிய விஷயம் என்ன?

9. டில்லியில் ஆப்கானிய மகம்மதியர் ஆட்சியால் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன? சுல்தான்கள் ஆட்சி முடிவடைவதற்கு காரணங்கள் என்ன?

அத்தியாயம் 8. பாமினி விஜயநகர ராஜ்யங்கள்

1. பாமினி ராஜ்யம் யாரால் எவ்வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது? அவ்வம்ச அரசர்களுள் பிரபலமானவர் எவர்? அந்த ராஜ்யம் அதிகம் பரந்திருந்த காலத்தில் அதன் எல்லைகள் என்ன?

2. பாமினி ராஜ்யம் எத்தனை சிறு ராஜ்யங்களாக சிதைவுண்டது? அவைகளின் பெயரைச் சொல்லுக.

3. விஜயநகர ராஜ்யம் யாரால் எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது? எந்தெந்த வம்சங்கள் அங்கு ஆட்சி செய்தனர்?

4. கிருஷ்ணதேவராயர் ஆட்சிமுறையைப்பற்றியும் ராஜ்ய விஸ்தீர்ணத்தைபபற்றியும் சுருக்கமாக எழுதுக.

5. தலைக்கோட்டை சண்டைக்கு காரணம் என்ன? அது எவ்வருஷத்தில் நடந்தது? அதன் பயன் என்ன?

6. விஜய நகர மன்னர்கள் ஆட்சியினால் மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் யாவை?

அத்தியாயம் 9. முதலில் ஆண்ட முகலாயர்கள்

1. பாபரின் முன்னோர்கள் யார்? 1526-க்கு முன் அவர் சரித்திரத்தைப்பற்றி சுருக்கமாக எழுதுக.

2. முதல் பானிபட் சண்டை எவ்வருஷத்தில் யார் யாருக்கு நடந்தது? அதில் ஜயமடைந்தவர் யார்?

3. 1526 முதல் 1530-க்குள்ளாக பாபர் எப்படி ராஜ்யத்தை விஸ்தரிக்கும்படி செய்தார்? அவர் மரணத்தருவாயில் பாபர் ராஜ்யத்தின் எல்லைகளைக் கூறுக.

4. பட்டத்துக்கு வந்தவுடன் ஹுமாயூனுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் என்ன? அவர் நாட்டைவிட்டு ஓடும்படியாக ஏன் ஏற்பட்டது?

5. அரசாங்கமுறையில் ஷேர் ஷா செய்த சீர்திருத்தங்கள் யாவை?

6. ஹுமாயூன் தம் ராஜ்யத்தை திரும்பவும் எந்த சந்தர்பத்தில் யார் உதவியால் அடைந்தார்?

7. இரண்டாவது பானிபட் சண்டை எவ்வருஷம் யார் யாருக்கு நடந்தது? அதில் ஜயமடைந்தவர் யார்?

8. அக்பர் ஜயித்த பிரதேசங்கள் எவை? அவைகளை ஆட்சி செய்ய எவ்வித ஏற்பாடுகளைச் செய்தார்?

9. ராஜபுத்திரர்களோடு எவ்விதம் அக்பர் நேசம் செய்து கொண்டார்? அவர் ஏற்படுத்திய புதிய மதத்தின் பெயர் என்ன? எக்காரணங்களால் அக்பரை ஒரு மகா சக்ரவர்த்தி என்று சொல்லலாம்?

அத்தியாயம் 10. புகழ்பெற்ற முகலாய சக்ரவர்த்திகள்

1. ஜஹாங்கீர் பட்டத்துக்கு வந்தவுடன் கலகம் செய்தது யார்? அது எவ்விதம் அடக்கப்பட்டது?

2. அஹமத் நகரோடும், மீவாரோடும் ஜஹாங்கீர் செய்த சண்டைகளைப்பற்றி குறிப்புகள் எழுதுக.

3. ஜஹாங்கீர் காலத்தில் வந்த ஆங்கில தூதர்கள் யாவர்? அவர்கள் அடைந்த லாபம் என்ன?

4, எக்காரணங்களால் ஷாஜஹான் ஆட்சி சிறப்பு வாய்ந்தது என்று சொல்லலாம்?

5. ஷாஜஹான் எந்தெந்த அயல் நாடுகளின்மேல் படையெடுத்துச் சென்றார்? ஏன்? அவை எவ்வாறு முடிவடைந்தன?

6. ஷாஜஹானின் தக்காண படையெழுச்சிகளைப்பற்றி சுருக்கமாக எழுதுக.

7. எந்த சந்தர்ப்பத்தில் ஔரங்கசீப் அரசரானார் என்பதை விளக்கிக் காட்டுக.

8. ஔரங்கசீப் ஹிந்துக்களையும் ராஜபுத்திரர்களையும் எவ்விதம் நடத்தினரென்பதை எழுதுக. அதனால் என்ன பலன் விளைந்தது?

9. எக்காரணங்களினுல் ஒளரங்கசீப் தக்காண நவாபுகளுடன் போர் தொடுத்தார்? அப்போர்களின் முக்கிய சம்பவங்களைக் கூறுக.

அத்தியாயம் 11. மஹாராஷ்டிரர்களின் வரலாறு

1. மஹாராஷ்டிர பிரதேசத்தின் இயற்கை யமைப்பு எவ்வாறுனது? அதனுல் அங்கு வசிக்கும் ஜனங்களின் வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப்படுகிறது?

2. சிவாஜியின் ஜீவிய சரித்திரத்தை சுருக்கமாக எழுதுக.

3. சிவாஜியை அடக்க யார் யார் அனுப்பப்பட்டார்கள்? அவர்கள் முயற்சி எவ்வாறு முடிவடைந்தது?

4. தென் இந்தியா படம் ஒன்றில் சிவாஜியின் ராஜ்யத்தை குறிப்பிட்டு முக்கியமான பட்டணங்களின் பெயர்களை எழுதுக.

5. சிவாஜி மஹாராஷ்டிரர்களுக்கு செய்த பெரிய உபகாரம் என்ன?

6. சிவாஜி இறந்தபிறகு மஹாராஷ்டிரர்களுக்கும் ஒளரங்கசீபுக்கும் நடந்த சண்டைகளைப்பற்றி சுருக்கி எழுதவும். முகலாயர்கள் தோல்வி யடைந்ததற்கு காரணங்கள் என்ன?

7. எக்காரணத்தினுல் பேஷ்வா பலமுள்ளவரானுர்? முதலாவது பேஷ்வா யார்? அவர் மஹாராஷ்டிர ஆதிக்கத்தை எவ்வாறு அதிகரிக்கும்படி செய்தார்?

8. முதல் பாஜிராவ் எவ்வருஷங்களில் அதிகாரம் வகித்தார்? அவர் எந்தெந்த பாகங்களைச் சேர்த்தார்?

9. மூன்ருவது பானிபட் சண்டைக்கு காரணம் என்ன? அது யார் யாருக்கு நடந்தது? அதில் யார் ஜயமடைந்தார்? அச்சண்டையின் பயன் என்ன?

அத்தியாயம் 12. சீக்கியர்கள் : கடைசி முகலாயர்கள்

1. சீக் மதத்தை ஏற்படுத்தியவர் யார்? அவர் போதித்த விஷயங்கள் என்ன? குரு அர்ஜுன் சிங் சீக் மதத்தை எவ்வாறு விருத்தி செய்தார்?

2. ஔரங்கசீபுக்கும் சீக்கியர்களுக்கும் சண்டை நடக்க காரணங்கள் என்ன? குரு கோவிந்தர் ஜீவிய சரித்திரத்தைப்பற்றி சுருக்கமாக எழுதுக.

3. சையது சகோதரர்கள் யார்? அவர்கள் செய்த விஷயங்கள் என்ன! அதனால் என்னபட்டத்தை யடைந்தார்?

4. மகம்மதுஷா டில்லி சக்ரவர்த்தியாக இருந்த காலத்தில் சுயேச்சை யடைந்த மாகாணங்கள் எவை? யார் தலைமையின்கீழ் சுயேச்சை யடைந்தன?

5. நாதிர் ஷா என்பவர் யார்? அவர் எவ்வருஷத்தில் இந்தியாவின்மீது படை எடுத்து வந்தார்? அப்படை யெழுச்சியின் பயன் என்ன?

6. மூகலாய ராஜ்யம் சிதைவடைவதற்கு காரணங்கள் என்ன?

அத்தியாயம் 13. ஐரோப்பியர்களின் வருகை

1. 14, 15-ம் நூற்றுண்டுகளில் இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் வியாபாரம் நடந்து வந்த வழிகளைக் குறிப்பிடுக.

2. எக்காரணத்தால் ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கு கடல் மார்க்கம் கண்டுபிடிக்க முயற்சிசெய்தனர்? அம்முயற்சியில் முதலில் ஜயமடைந்தவர் எத்தேசத்தவர்? முதன் முதலாக கடல் மார்க்கமாக வந்த ஐரோப்பியரின் பெயர் என்ன?

3. இந்தியாவில் போர்ச்சுகீசியரின் வியாபாரம் சிதைவடைவதற்கு காரணம் என்ன? தற்காலத்தில் போர்ச்சுகீசியருக்கு நம் நாட்டில் உள்ள பட்டணங்கள் எவை?

4. போர்ச்சுகீசியருக்குப் பிறகு வியாபாரத்திற்காக நம் நாட்டுக்கு வந்த ஐரோப்பியர் யார்?

5. ஆங்கில கீழிந்தியா வர்த்தக சங்கம் எவ்வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது? பதினேழாம் நூற்றுண்டின் முடிவுக்குள் ஆங்கிலேயர் நம் நாட்டில் ஏற்படுத்திய வியாபார ஸ்தலங்கள் எவை?

6. பிரெஞ்சு கிழக்கிந்தியா கம்பெனி எவ்வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது? இந்தியாவிலிருந்த பிரெஞ்சு கவர்னர்களுக்குள் முக்கியமடைந்தவர் யார்? அவருடைய முக்கிய எண்ணங்கள் என்ன?

7. ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் கர்னாடகத்தில்

நடந்த இரண்டாவது யுத்தத்துக்கு காரணங்கள் என்ன? அந்த யுத்தத்தின் முக்கிய சம்பவங்களைச் சொல்லுக.

8. பிரெஞ்சுக்காரர் இந்தியாவில் நிலையாக ராஜ்யம் சம்பாதிக்க முடியாமல் போனதற்கு காரணங்கள் யாவை?

9. ஆற்காட்டு முற்றுகை, பிளாசி சண்டை, அலஹாபாத் உடன்படிக்கை—இவற்றில் சம்பந்தப்பட்ட முக்கிய ஆங்கிலேயர் யார்? மேற்கூறிய ஒவ்வொன்றையும் பற்றி சிறு குறிப்புகள் எழுதுக.

10. கிளைவ் பிரபு ஆட்சிமுறையில் செய்த முக்கிய சீர்திருத்தங்கள் என்ன?

அத்தியாயம் 14. ஆங்கிலேய அதிகார வளர்ச்சி

1. வங்காள கவர்னராக விருந்தபோது வாரன் ஹேஸ்டிங்ஸ் வரி வசூல் விஷயத்தில் செய்த சீர்திருத்தங்கள் எவை?

2. ஒழுங்கு முறைச் சட்டம் எந்த வருஷத்தில் நிர்மாணிக்கப் பட்டது? அதன் முக்கிய ஷரத்துகள் யாவை? அச்சட்டத்திலிருந்த குறைகள் யாவை? அதனால் ஹேஸ்டிங்ஸுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் என்ன?

3. பொக்கிஷத்தை நிறப்புவதற்காக ஹேஸ்டிங்ஸ் தேடிய ஒரு வழியைக் கூறுக.

4. முதல் மஹாராஷ்டிர யுத்தத்தின் காரணங்கள், சம்பவங்கள், முடிவு; இவைகளைப்பற்றி சுருக்கமாக எழுதவும்.

5. இரண்டாவது மைசூர் யுத்தம் யார் யாருக்கு நடந்தது? அது ஏற்பட காரணமென்ன? மங்களூர் உடன்படிக்கையின் ஷரத்து என்ன?

6. துணைப்படை ஏற்பாடு என்றால் என்ன? இம்முறையை ஏற்படுத்தியவர் யார்? இதன் பிரகாரம் ஆங்கிலேயருக்குச் சேர்ந்த நாடுகள் எவை?

7. வெல்லெஸ்லி திப்பு சுல்தானோடு போர் தொடுப்பதற்கு காரணம் என்ன? அந்த யுத்தத்தின் பயனாக ஆங்கிலேயருக்கு கிடைத்த நாடுகள் எவை?

8. இரண்டாவது, மூன்றாவது மஹாராஷ்டிர யுத்தங்கள் எந்த வருஷங்களில் ஏற்பட்டன? ஏன்? அவைகள் எவ்விதம் முடிவடைந்தன?

9. நேபாள யுத்தம், பிண்டாரிகள்—இவைகளைப்பற்றி குறிப்புகள் எழுதுக.

10. தற்காலத்தில் பம்பாய் ராஜதானியாகவிருக்கும் பிரதேசங்கள் ஆங்கிலேயருக்கு எவ்விதம் கிடைத்தன ?

11. ரஞ்ஜிட் சிங் என்பவர் யார் ? அவர் திறமைசாலி என்பதை காரணத்துடன் விளக்குக.

12. பஞ்சாபும், கீழ் பர்மாவும் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எவ்விதமாகக் கொண்டு வரப்பட்டனவென்பதை விளக்கவும்.

13. அரசுரிமை இழக்கும் கொள்கையை அனுஷ்டித்தவர் யார் ? ஏன் ? அதன்படி ஆங்கிலேயருக்கு கிடைத்த நாடுகள் எவை ?

14. டல்ஹௌஸி நாட்டு ஆட்சிக்காக செய்த முக்கிய சீர்திருத்தங்கள் எவை ?

அத்தியாயம் 15 இந்தியாவில் பிரிட்டிஷ் மன்னரின் ஆட்சி

1. 1857-ல் சிப்பாய்கள் கலகம் செய்ய காரணங்கள் எவை ? அதனுல் இந்தியாவின் ஆட்சி முறையில் ஏற்பட்ட பலன் என்ன ?

2. விக்டோரியா ராணியின் அறிக்கையில் சொல்லிய முக்கிய விஷயங்களைக் கூறுக.

3. மத விஷயத்திலும், சமூக வாழ்க்கையிலும் ஆங்கில அரசாட்சியால் ஏற்பட்ட மாறுதல்கள் யாவை ?

4. பஞ்சம் ஏற்படாமல் தடுப்பதற்கும், விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும் அரசாங்கத்தார் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர் ?

5. 1858 முதல் 1935-ம் வருஷம் வரையில் சட்ட நிர்மாணத்தையும் ஆட்சியையும் ஒழுங்குபடுத்த என்ன சட்டங்கள் நிரூபித்துள்ளனர் ?

6. வட்டமேஜை மகாநாடுகள் ஏன் கூட்டப்பட்டன ? சமஷ்டி முறை என்றுல் என்ன ? ஏன் சிலர் 1935-ம் வருஷத்திய அரசாங்க சட்டப் பிரகாரம் சொல்லியுள்ள சமஷ்டியை எதிர்க்கின்றனர் ?

7. மகாத்மா காந்தி சமூக முன்னேற்றத்துக்காக ஆரம்பித்துள்ள முக்கியமான இயக்கத்தின் பெயர் என்ன ?

இந்திய சரித்திரத்தில் சில முக்கிய நிகழ்ச்சிகள்

சுமார் கி. மு.	
5000	ஸிந்து பிரதேச நாகரிக காலம்.
2000	ஆரியர்களின் வருகை.
1400—600	ஆரியர்கள் கங்கை சமவெளியில் பரவுதல்.
563—483	கௌதம புத்தர் ஜீவிய காலம்.
554—527	அஜாத சத்ருவின் ஆட்சி.
550—447	வர்த்தமான மஹா வீரர் ஜீவிய காலம்.
516	உதயணன் அரசரானது.
500	பாரஸீகர் பஞ்சாபின்மேல் படை எடுத்து வந்தது.
326	கிரேக்க அலெக்ஸாண்டரின் படை எழுச்சி.
321—298	மௌரிய சந்திரகுப்தர் ஆட்சி.
305	ஸெல்யூக்கஸ் நிக்கேட்டார் படை எழுச்சி.
298—273	பிந்துசாரர் ஆட்சி.
273—232	அசோக சக்ரவர்த்தியின் ஆட்சி.
262—261	கலிங்க நாட்டுடன் போர்.
200	பஞ்சாபில் யவனர்கள் ராஜ்யம் ஏற்படுத்துதல்.
200	ஆந்திரர் ராஜ்யம் பலமடைய ஆரம்பித்தல்.
185	மௌரியர் ஆட்சியின் முடிவு.
185—73	சுங்க வம்சத்தினர் ஆட்சி.
165	மினண்டர் படை எழுச்சி.
73—28	கண்வ வம்சத்தினர் ஆட்சி.
சுமார் கி. பி.	
15—48	குஜால காட்பைஸஸ் ஆட்சி.
55—78	வீமா காட்பைஸஸ் ஆட்சி.
78—123	கனிஷ்கர் ஆட்சி.
கி. பி.	
100—123	கரிகால் சோழர் ஆட்சி.
220	ஆந்திர ராஜ்யமும், குஷானர் ராஜ்யமும் சிதைவடைதல்.

320—330	குப்த சந்திரகுப்தர் ஆட்சி.
330—375	சமுத்திரகுப்தர் ஆட்சி.
375—415	இரண்டாவது சந்திரகுப்தர் என்னும் விக்ரமாதித்யர் ஆட்சி.
405—410	பாஹியான் இந்தியாவில் சுற்றுபிரயாணம் செய்த காலம்.
500—542	ஹூணர்களின் படை எழுச்சி.
570—632	முகம்மது நபி வசித்த காலம்.
606—647	ஹர்ஷவர்த்தனர் ஆட்சி.
620	ஹர்ஷ வர்த்தனர் இரண்டாவது புலிகேசனுல் தோற்கடிக்கப் படுதல்.
622	ஹிஜிரா (மகம்மதிய சகாப்த ஆரம்பம்)
629—645	யுவான்ச்சாங் இந்தியாவில் சுற்றுபிரயாணம் செய்த காலம்.
608—642	சளுக்கிய இரண்டாம் புலிகேசன் ஆட்சி.
630—668	பல்லவ நரசிம்ம வர்மன் ஆட்சி.
சுமார் 700-1000	ராஜ புத்திரர்களின் ஆதிக்கம்.
712	மகம்மது பின் காசிம் படை எழுச்சி.
754	ராஷ்ட்ரகூட வம்ச ஸ்தாபனம்.
907—955	பராந்தக சோழர் ஆட்சி.
985—1013	ராஜ ராஜ சோழர் ஆட்சி.
998—1030	கஜினி மாமூத் ஆட்சி.
1013—1042	ராஜேந்திர சோழர் ஆட்சி.
1024	கஜினி மாமூத் சோமநாதபுரத்தைத் தாக்குதல்.
1070—1118	குலோத்துங்க சோழர் ஆட்சி.
1191,1193	தானேஸ்வர சண்டைகள்.
1197	பக்தியார் கில்ஜி வங்காளத்தைக் கைப்பற்றுதல்.
1206	கோரி முகம்மதின் மரணம்.
1206—1290	அடிமை வம்ச அரசர்கள் ஆட்சி.
1206—1210	குத்புதீன் ஐபெக் ஆட்சி.
1290—1320	கில்ஜி வம்சம்.
1296—1316	அலாவுதீன் கில்ஜி ஆட்சி.
1303	சித்தூர் முற்றுகை.
1306—1313	மாலிக் காபுரின் தக்காண படை எழுச்சி

1321—1414 துக்ளக் வம்ச ஆட்சி.
1325—1351 மகம்மது பின் துக்ளக் ஆட்சி.
1336 விஜயநகர ராஜ்ய ஸ்தாபனம்.
1347 பாமினி ராஜ்ய ஸ்தாபனம்.
1351—1388 பிரோஸ்ஷா துக்ளக் ஆட்சி.
1398 தைமூரின் படை யெழுச்சி.
1414—1450 சையது வம்சத்தாரின் ஆட்சி.
1450—1526 லோடி வம்சத்தாரின் ஆட்சி.
1469—1539 குரு நானக் ஜீவியகாலம்.
1490 பாமினி ராஜ்யம் சிதைவுண்டது.
1498 வாஸ்கோட காமா கள்ளிக்கோட்டைக்கு வந்து சேர்ந்தது
1509—1530 கிருஷ்ணதேவராயர் ஆட்சி.
1526 பானிபட்டில் நடந்த முதல் சண்டை.
1526—30 பாபர் ஆட்சி.
1527 கான்வாஹா சண்டை.
1529 கோக்ரா சண்டை.
1530-40 ; 1555 ஹுமாயூன் ஆட்சி.
1539 சௌஸா சண்டை.
1540 கனௌஜ் சண்டை, ஹுமாயூனின் ஓட்டம்.
1540—45 ஷேர் ஷாவின் ஆட்சி.
1556 பானிபட்டில் நடந்த இரண்டாவது சண்டை.
1556—1605 அக்பர் ஆட்சி.
1565 தலைக்கோட்டை சண்டை.
1595 அஹமத் நகரத்தோடு சண்டை ; சாண்ட்பீபி
1600 ஆங்கில கிழக்கிந்தியா கம்பெனி ஸ்தாபனம்.
1602 டச்சு கிழக்கிந்தியா கம்பெனி ஸ்தாபனம்.
1605—1627 ஜஹாங்கீரின் ஆட்சி.
1628—1658 ஷாஜஹான் ஆட்சி.
1627—1680 சிவாஜியின் ஜீவியகாலம்.
1659—1707 ஔரங்க சீபின் ஆட்சி.
1664 பிரெஞ்சு கிழக்கிந்தியா கம்பெனி ஸ்தாபனம்.
1674 சிவாஜி முடி சூடுதல்.
1686 முகலாயர்கள் பீஜபூரை ஜயித்தது.

1687	கோல்கொண்டாவை ஜயித்தது.
1707—1712	பஹதூர் ஷாவின் ஆட்சி.
1714—1720	பாலாஜி விஸ்வநாத் பேஷ்வா.
1720—1740	முதல் பாஜிராவ் பேஷ்வா.
1739	நாதிர்ஷாவின் படையெழுச்சி.
1740—1761	பாலாஜி பாஜிராவ் பேஷ்வா.
1751	ஆற்காட்டு முற்றுகை.
1757	பிளாசி சண்டை.
1760	வந்தவாசி சண்டை.
1761	பானிபட்டில் நடந்த மூன்றுவது சண்டை.
1764	பக்ஸார் சண்டை.
1765	அலஹபாத் உடன்படிக்கை.
1772—1774	வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னர்.
1774—1785	வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரல்.
1773	ஒழுங்கு முறைச் சட்டம்.
1780—1839	ரஞ்சிட் சிங் ஜீவியகாலம்.
1782	சால்பை உடன்படிக்கை.
1784	மங்களூர் உடன்படிக்கை.
1798—1805	வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரல்.
1799	திப்பு சுல்தானின் மரணம்.
1801	கர்நாடகத்தை ஆங்கிலேயர் சேர்த்துக்கொண்டது.
1813—1823	ஹேஸ்டிங்ஸ் பிரபு கவர்னர் ஜெனரல்.
1816	சிகௌலி உடன்படிக்கை.
1848—1856	டல்ஹௌஸி பிரபு கவர்னர் ஜெனரல்.
1852	பெகு, டெனசரீம் ஆங்கிலேயர் அடைதல்.
1856	அயோத்தியை ஆங்கிலேயர் அடைதல்.
1857	சிப்பாய் கலகம்.
1858	இந்தியா ஆங்கில மன்னரின் ஆட்சிக்குட்படுதல்.
1892,1919,1935	இந்திய அரசாங்க சட்டங்கள்.
1914—18	ஐரோப்பிய மகா யுத்தம்.
1937	மாகாணங்களில் ஜனநாயக ஆட்சி ஆரம்பம்.

கடைசி முகலாயர்களின் வம்சாவளி

- பஹதூர்ஷா அல்லது ஷாஆலம் 1707—1712
  - ஜகந்தர்ஷா 1712—1713
    - இரண்டாவது அலம்கீர் 1754—1759
      - இரண்டாவது ஷா ஆலம் 1759—1805
        - மகம்மது அக்பர் 1805—1837
          - இரண்டாவது பஹதூர் ஷா 1837—1857
  - அஸிமுஷ்ஷான்
    - பருக்ஸியர் 1713—1719
  - ரபியுஷ்ஷான்
    - ரபியுட் டரஜத் 1719
    - ரபியுட் டௌலா 1719
  - ஜஹான்ஷா
    - மகம்மது ஷா 1719—1748
      - அமதுஷா 1748—1754

பீஷ்வாக்களின் வம்சாவளி

- பாலாஜி விஸ்வநாத் 1714—1720
  - முதல்பாஜி ராவ் 1720—1740
    - பாலாஜி பாஜிராவ் 1740—1761
      - முதல் மாதவ ராவ் 1761—1772
      - நாராயண ராவ் 1772—1773
        - இரண்டாவது மாதவராவ் (மாதவராவ் நாராயணன்) 1773—1795
    - ரகுநாத ராவ் (ரகோபா)
      - இரண்டாவது பாஜிராவ் 1795—1818
        - நாநா சாகிப் (ஸ்வீகார பிள்ளை)
  - சிம்ஞஜி. அப்பா
    - சதாசிவ ராவ்